
# நூற்றாண்டு விழா மலர்




## கரவெட்டி
## மாணிக்கவாசகர் வித்தியாலயம்

# நூற்றாண்டு விழா மலர்

# 1901-2001

கரவெட்டி

## மாணிக்கவாசகர் வித்தியாலயம்

ஸ்தாபிதம்

**1901**

உ

சிவமயம்




திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருச்சிற்றம்பலம்

# மலரினுள் பொதிந்திருப்பவை


☞ பஞ்ச புராணம்
☞ பாடசாலைக் கீதம்
☞ பாடசாலை அமைப்பு
☞ ஆசிச் செய்தி - பிரமஸ்ரீ கணேசசபாபதி சர்மா
☞ வாழ்த்துச் செய்திகள்
திரு. மு. சிவசிதம்பரம்
பேராசிரியர். கா. சிவத்தம்பி
திரு. க. கந்தசாமி - முன்னாள் மாகாணக் கல்விப்பணிப்பாளர்
திரு. சி. சிவராசா - மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
திரு. வே. தி. செல்வரட்ணம் - வலயக் கல்விப்பணிப்பாளர்
திரு. க. அம்பலவாணர் - கோட்டக் கல்விப் பணிப்பாளர்
☞ வாழிய வாசகர்பள்ளி - சிலேடைக்கவிமணி 12
☞ விளங்குக வித்தியாலயம் - மன்னவன் மு. கந்தப்பு 13
☞ மண்ணிலிருந்து நாங்கள் மனிதர்கள் ஆக்கப்பட்டோம் -
பேராசிரியர் கா. சிவத்தம்பி 14
☞ அதிபர் அறிக்கை 18
☞ பசுமை நிறைந்த பள்ளி நினைவுகள் - வ. சிவராசசிங்கம் 21
☞ மாணிக்கவாசகர் வித்தியாலயம் -
ஓர் வரலாற்றுப்பார்வை - இளையதம்பி இராகவன் 24
☞ கரவையின் இலக்கிய புலமைப் பாரம்பரியம் -
திருமதி. நாளினி கணபதிப்பிள்ளை 31
☞ சிந்தனைக் களஞ்சியம் கவீ - செல்வி. ந. கல்யாணி 55
☞ கரவெட்டியில் தலைமைத்துவம் - ஆறுமுகம் சுப்பிரமணியம் 99
☞ கூட்டுறவு - திரு. த. சிதம்பரப்பிள்ளை 106
☞ கரவைப் பண்பாட்டின் சின்னம் - திரு. ச. விநாயகமூர்த்தி 110
☞ மாணவர் கல்வியில் விழுமியங்களின் அவசியம் - செல்வி. ம. சண்முகநாதன் 112
☞ வழக்கிழந்துவரும் கரவெட்டி வட்டார வழக்குச் சொற்கள் -
திரு. ச. இராகவன் 119
☞ தெய்வீகக் கலைக்கோயில் நீடுவாழி - பிள்ளைக்கவி 124
☞ சிவசிதம்பரம் அவர்கட்கு - பேராசிரியர் கா. சிவத்தம்பி 129
☞ விழுமியம் - மறுவார்ப்புப் பற்றிய சிந்தனை - எம். சிறீபதி 133
☞ எமது கிராமத்தில் மரபுவழிச்சீர்மியம் - கலாநிதி எசி. சிவலிங்கராஜா 138
☞ நூற்றாண்டு விழாக்குழுவின் செயலாளர் அறிக்கை - வே. குணசிங்கம் 142
☞ நூற்றாண்டு நிகழ்வு அன்பளிப்பு-கரவை ஒன்றியம் பெற்றார், பழைய மாணவர் 144
☞ எமது வித்தியாலயத்தின் நூற்றாண்டு கால ஆசிரியர்கள் 147

# தேவாரம்

**மூன்றாந்திருமுறை** **காந்தாரபஞ்சம்**

**ஞானசம்பந்தர்**

இடரினுந் தளரினும் எனது றுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின்னருள் ஆவடுதுறை அரனே.

# திருவாசகம்

உடையாள உந்தன் நடவு இருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் ~ பொன்னம்பலத்து எம்
முடியா முதலே என் கருத்து
முடியும் வண்ணம் முன்நின்றே.

# திருவிசைப்பா

**ஒன்பதாந்திருமுறை** **பஞ்சமம்**

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

# திருப்பல்லாண்டு

**ஒன்பதாம் திருமுறை** **பஞ்சமம்**

சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழறஉழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

மண்ணில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணெலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்
உண்மையா மெனில் உலர்கர் முன் வருகென உரைப்பர்.

# பாடசாலைக் கீதம்

வாழுக வாழுக வாழுக கல்வி
சூழுக நன்மை துலங்கியே என்றும்
(வாழுக)

மாணிக்க வாசகர் வித்தியாலயமே
மாணவர் நாடும் நற்கலையகமே
ஆணிப் பொன் கல்வி பயில் பேரிடமே
ஐங்கரன் தச்சை அருள் சேரிடமே
(வாழுக)


எண்ணெழுத்திலக்கிய இலக்கணம் அறிவோம்
இசைமலி நடனம் நாட்டியம் அறிவோம்
பண்மைப் பாடல் ஆடல்கள் தெரிவோம்
பரவிடும் சமயப் பெருமைகள் அறிவோம் (வாழுக)

வளரும் விஞ்ஞான வழிகளும் அறிவோம்
வேண்டிய கைப்பணி சித்திரம் அறிவோம்
எழிலுறு தையல் மனையியல் பயில்வோம்
இனி விளையாட்டுப் பயிற்சிகள் பெறுவோம்.
(வாழுக)

வாழுக வாழுக வாழுக கல்வி
சூழுக நன்மை துலங்கியே என்றும்
வாழுக வாழுக வாழுக கல்வி.

ஆக்கம்:-
**மன்னவன் கந்தப்பு**

வித்தியாலயத்தின் ஸ்தாபகர்



# ஸ்ரீமான்

# சி. நல்லதம்பி

# பெரியார்

(வாழையப்பா வீடு நல்லவர்)

## நூற்றாண்டு விழாக்குழு

| | |
|---|---|
| தலைவர்:- | திரு. இ. இராகவன் |
| உபதலைவர்:- | திரு. ச. செவ்வந்திநாதர் |
| செயலாளர்:- | திரு. வே. குணசிங்கம் |
| பொருளாளர்:- | செல்வி. சு. விமலரதி |
| செயற்குழு:- | திரு. க. பூபாலசிங்கம் |
| | திரு. சி. கதிர்காமநாதன் |
| | திரு. சி. மகாலிங்கசிவம் |
| | திரு. மன்னவன் கந்தப்பு |
| | திருமதி. சுசீலா சிவலிங்கம் |
| | திருமதி. சுமதி மகேஸ்வரன் |
| | திரு. ஆ. சண்முகநாதன் |
| | திரு. கு. நாகராசா |
| | திரு. சி. ஸ்ரீரகுபதி |

# வித்தியாலயத்தின் முகாமையாளர்கள்



உயர்திரு இராசவாசல் முதலியார்
வீரவாகு சிற்றம்பலம்
(சித்தமணியம்)



உயர்திரு
சிற்றம்பலம் முருகேசு உடையார்




உயர்திரு முருகேசு சிவசிதம்பரம்

# எங்கள் அதிபர்



## திரு. இ. இராகவன்




## பாடசாலை அமைப்பு

| | | |
|---|---|---|
| A | - | தச்சந்தோப்பு வீதி |
| 1 | - | நல்லதம்பி மண்டபம் |
| 2 | - | முதலியார் சின்னத்தம்பி மண்டபம் |
| 3 | - | 70'x25' கட்டடம் |
| 4 | - | 40'x20' கட்டடம் |
| 5 | - | நூற்றாண்டு நிறைவு நினைவு மண்டபம் |
| 6 | - | 2002இல் கொள்வனவு செய்யப்பட்ட கரவை வெல்லன் விநாயகராலயக் காணி |
| 7 | - | சுந்தரலிங்கம் சிவோத்தமன் நினைவு அன்பளிப்புக் காணி (30-06-2002) |
| 8 | - | குழாய்க் கிணறு. |

உ



# ஆசிச்செய்தி

தச்சை சிந்தாமணி விநாயகர் ஆலய பிரதமகுரு

***பிரம்ம ஸ்ரீ கணேச சபாபதி சர்மா***

"தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

(திருக்குறள் 399)

கற்றறிந்த அறிஞர், தம் கல்வியால் தாம் இன்புறுவதோடு உலக மக்களும் இன்புறுவதைக் கண்டு மேன்மேலும் கற்கவும் கற்பிக்கவும் விரும்புவர்.

உலகப் பொதுமறையாம் திருக்குறளின் வழி நூற்றாண்டு விழா கொண்டாடும் மாணிக்கவாசகர் வித்தியாலயம் புதுமைகள் பல கண்டு இன்புறுவதை காணமுடிகிறது. மேன்மேலும் வளர்ந்து சிறப்படைய

களியுற்று நின்று கடவுளியிங்குப்
பழியற்று வாழ்ந்திடக்கண் பார்ப்பாய் - ஒளிபெற்றுக்
கல்விபல தேர்ந்து கடமையெலா நன்காற்றித்
தொல்வினைக்கட் டெல்லாம் துறந்து

என சிந்தாமணிப் பிள்ளையாரை பிரார்த்தித்து ஆசிகள் பல கூறி வாழ்த்துகிறோம்.

பாடசாலையை ஸ்தாபித்த சித்த மணியத்தின் பேரன்
முன்னாள் பாடசாலை முகாமையாளர்

மு. சிவசிதம்பரம் பா.உ
தலைவர்-தமிழர் விடுதலைக் கூட்டணி
M. SIVASITHAMPARAM, M.P.
President - TULF
පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT
30/1B, Alwis Place,
Colombo - 3
Tel: 594962, 347721
Fax: 384904

23-02-2002.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் 100 ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்படுவதைக் கண்டு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன். ஒரு பாடசாலை 100 ஆண்டுகள் சிறப்பான சேவை செய்தது என்பது ஒரு மகத்தான சாதனை. அதுவும் ஒரு சிறிய கிராமமாகிய கரவெட்டியில் விவசாயத்தை நம்பிவாழும் மக்கள் மத்தியிலே ஆங்கிலக்கல்வி மேலோங்கியிருந்த சூழலிலே இந்த வித்தியாலயத்தின் வளர்ச்சி மிகமிகப் போற்றத்தக்கது.

கிறீஸ்தவர்கள் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் கிறீஸ்தவக் கல்லூரிகளை ஸ்தாபித்து தங்களுடைய மதத்தைப் பரப்ப எத்தனித்த நேரத்தில் பெரியார் நல்லதம்பி அவர்களும், என்னுடைய பேரன் சித்த மணியமும் சைவசமயப் பாரம்பரியத்தில் ஒரு கல்லூரி இயங்க வேண்டு மென்று மாணிக்கவாசகர் வித்தியாலயத்தை ஸ்தாபித்தார்கள். அருகாமையில் ஒரு கிறீஸ்தவக்கல்லூரி இருந்ததினால் இந்தக்கல்லூரிக்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று கல்விப்பணிப்பாளருக்கு புகார் செய்திருந்தார்கள். ஆனால் புத்தியுள்ள எமது மக்கள் அந்தப் பணியாளரை நேராக இந்தப்பள்ளிக்கு அழைத்துக்கொண்டு போகாமல் சுற்றிவளைத்து நெடுந்தூரம் என்பதை அவருக்கு நிருபித்தார்கள். கல்லூரிக்கு அனுமதியும் கிடைத்தது.

அந்த நாட்களில் ஆசிரியராவதற்கு கிறீஸ்தவ மதத்தில் சேர வண்டும். அப்படி என்னுடைய குடும்பத்தில் சிலரும் சேர்ந்

தார்கள். பொதுவாகச் சொல்லுவார்கள் - கரவெட்டியில் தடுக்கிவிழுந்தால் ஒரு ஆசிரியரின் மேலேதான் விழவேண்டும் என்று. இந்த நிலையை உருவாக்கிய பெருமை மாணிக்கவாசகர் வித்தியாலயத்திற்கு உண்டு.

நான் இந்தக் கல்லூரியில் படிக்கவில்லை. சிறுவயதிலேயே சரஸ்வதி வித்தியாலயம் என்ற பெண்கள் பாடசாலையில் தமிழ் கற்று ஆங்கிலம் கற்பதற்காக விக்கினேஸ்வராக் கல்லூரிக்குச் சென்றுவிட்டேன். எனது தமிழ் அறிவு மிகவும் குறைந்தது. பல சந்தர்ப்பங்களில் எனக்கு போதிய தமிழ் அறிவு இல்லையென்று வெட்கப்பட்டிருக்கின்றேன். அன்றைக்கு மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தமிழ் கற்றிருந்தால் இப்படியான நிலைமை எனக்கு ஏற்பட்டிராது. அந்தக் கல்லூரியில் படியாமல் விட்டிருந்தாலும் கூட கல்லூரியுடன் நெருங்கிய தொடர்பு எனக்கு இருந்தது. அந்த நாட்களில் ஒவ்வொரு பூரணை தினங்களிலும் ஒரு சைவ அறிஞர் வந்து சொற்பொழிவு ஆற்றுவது வழக்கம். அந்தச் சொற்பொழிவுகளைக் கேட்பதற்கு நான் தவறாமல் போவேன். நான் பெற்றிருக்கின்ற சமய அறிவு - இந்த சொற்பொழிவுகளைக் கேட்டுத்தான்.

வழிவழியாக சிறந்த தலைமை ஆசிரியர்களும், மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளும் சிறந்த சேவை செய்ததினால்தான் இந்தக் கல்லூரி இன்று இந்தளவுக்கு வளர்ச்சி பெற்று நூற்றாண்டையும் கொண்டாடுகின்றது. இந்தத் தருணத்தில் அவர்களை நன்றியுடன் நினைவு கூருவது எமது தலையாய கடமையாகும்.

முன்போல் என்றும் நல்ல மாணாக்கர்களை உருவாக்கி ஊருக்கும் நாட்டுக்கும் சிறப்புத்தர வேண்டும் என்று தச்சன்தோப்புப் பிள்ளையாரை வணங்கி வாழ்த்துகின்றேன்.

வணக்கம்.

*மு. சிவசிதம்பரம் பா.உ.*
தலைவர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி.

பேராசிரியரும், பழைய மாணவருமான
கா. சிவத்தம்பி அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

எழுத்தறிவித்தவன் இறைவன் என்றால் எழுத்தறிந்த / அறியும் இடம் கோயிலாகும்.

இது நமது பண்பாட்டுப் பார்வை மாணிக்கவாசக வித்தியாலயம் நமக்கு அப்படியான ஒரு கோயிலாகவே இருந்தது. கோயில்களை வாழ்த்துவது கும்பிடச் செல்பவர்கள் செய்யக் கூடிய ஒன்றல்ல.

அந்தத் "தலத்திற்" கும்பிட்டவன் என்ற வகையில் அதை வணங்குகிறேன்.

அதன் புகழினுள் நாங்கள் சங்கமம் ஆகிறோம். கரவெட்டி பெருமைப்பட வேண்டிய ஒரு கல்வித்தலம் எங்கள் "புதுப்பள்ளி"

நினைவுகள் நிறைந்த நெஞ்சுடன்

சண்டில் பண்டிதர்
த.பொ. கார்த்திகேசு உபாத்தியாயர் மகன்.
*கா. சிவத்தம்பி*

முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளரும், பழைய மாணவருமான

க. கந்தசாமி அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கரவை மாணிக்கவாசகர் வித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது எனக் கேள்விப்படும் போது எனது மனதில் எழும் ஞாபகங்களும் உள்ளத்தில் கிளம்பும் உணர்ச்சிகளும் எழுத்தில் அடக்க முடியாது.

இந்த அறிவாலயமும் "அத்துளுக்" குளமும் கரவெட்டியில் பிறந்த எவர் மனதிலும் இறக்கும் வரை மறையாது துலங்கும்.

கரவெட்டியில் பிறந்த பலர் தங்கள் சின்னஞ்சிறு பராயத்தில் நத்தைபோல் ஊர்ந்து சென்று ஏடு எடுத்த கல்வித் தடாகம் இது. அத்துளுக் கேணியில் ஸ்ஞானமும், இவ்வாலயத்தில் கல்வி ஞானமும் பெறாதோர் கரவெட்டியில் ஒரு சிலரே.

தொடக்கநிலைப் பள்ளி ஆசிரியர்களும், அதிபர்களும் பள்ளிக்குச் சென்ற ஒவ்வொருவர் மனதிலும் ஆழமாக பதிந்த பாத்திரங்கள் என்பது கல்வியியல் ஆய்வில் கண்ட ஓர் உண்மை. என்மனதிலும் இன்றும் அழுத்த மாகவும் பசுமையான இடம் பிடித்திருப்பது இந்த ஆண் பாடசாலையும் எனக்கு எண்ணும் எழுத்தும் சொல்லித் தந்த உபாத்தியாயர்களுமே. பண்டிதர் க. சிற்றம்பலம், வை. சின்னத்தம்பி, மா. சுப்பிரமணியம் ஆகியோர் என் உள்ளத்தில் "மின்னிமின்னி" நைசாக உறைந்துள்ளனர். இவர்களை நான் என்றும் மறந்தது இல்லை. எனது உயர்ச்சி கண்டு இவர்கள் மகிழ்ச்சி கொண்டதையும் நான் அறிவேன். நல்லோர்களை உருவாக்குவதில் இவர்கள் ஆற்றிய கடமை பெரும் தொண்டாகும்.

மழையில்லாது குளம் வற்றியது போன்று நல்லதோர் அதிபர் இல்லாது இப்பாடசாலையும் வளர்ச்சி குன்றியிருந்தது. திரு. இராகவன் நல்லவன், வல்லவன். இங்கு அதிபராக வந்துள்ளார். அவர் சிறந்த தலைமை உபாத்தியாயராக கடமையாற்றி இப் பள்ளிக்கூடம் வளர வாழ்த்துகிறேன்.

றொறொன்ரோ,
கனடா,

***கணபதி கந்தசாமி***
முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி

யா/ கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் நூறாண்டு கல்விச் சேவையை நிறைவு செய்துள்ளது. 1901ம் ஆண்டு இப்பகுதிச் சைவப் பெரியார் களினால் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்கத்துடன் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1905ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட பாடசாலையாக ஆக்கப்பட்டது. இராசவாச முதலியார் வீரவாகு சிற்றம்பலம் முதல் முகாமை யாளராகப் பணியாற்றி இப்பாடசாலையின் விரிவாக்கத்திற்கு உதவினார். ஒரு காலத்தில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரம் வரை வகுப்புகள் இருந்தன. தமிழப் புலமை வாய்ந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி, பண்டிதர் வீரகத்தி, மன்னவன் கந்தப்பு போன்றோரை இப்பாடசாலையே உருவாக்கியது. அதுமட்டு மன்றி இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வி பெற்ற பல மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் புகழ்பெற்றுப் பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் இணைந்து பாடசாலைப் பழையமாணவர்கள், பெற்றோர்கள் நூறாவது ஆண்டுவிழா கொண்டாடுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நூறாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் நூற்றாண்டு மலரானது பாடசாலையின் கல்விப் பணியையும் இதனூடாக ஏற்பட்ட சமூக அபிவிருத்தியையும் எடுத்துக்காட்டும் சிறந்த ஆவணமாக இருக்கும். இம் மலரானது இன்று கல்வி கற்கும் மாணவர்களிடையேயும், வருங்கால மாணவர்களிடையேயும் பெரும் மனவெழுச்சியை ஏற்படுத்தும் என உறுதியாக நம்புகிறேன். இந்த நூற்றாண்டு மலரை வெளியிட்டு கடந்தகால வரலாறுகளைப் பதிவு செய்து வருங்கால அபிவிருத்திக்கு வழிகாட்டும் பாடசாலைச் சமூகத்தினரைப் பாராட்டுகின்றேன். இப்பாடசாலை மென்மேலும் வளர என் நல்லாசிகள்.

*திரு. சி. சிவராசா*
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

யாழ்ப்பாணம்.

வலயக் கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி

கிராம எழுச்சியே ஒரு நாட்டை முழுமையடையச் செய்கிறது. மறைந்து கிடக்கும் வளங்களைப் பண்படுத்துவதனூடாக பொருளாதார வளம் கட்டி எழுப்பப்படுவது போன்று மறைந்து கிடக்கும் மூளை வளங்களை முறைசார் நோக்கில் வழிப்படுத்துவதன் ஊடாக மிகச் சிறந்த வாண்மையாளர்களை விருத்தி செய்யலாம். அந்தவகையில் கிராமியச் சூழலில் சைவமும் தமிழும் தழைத்தோங்க கரவெட்டிப் பிரதேசத்திற்கு கல்வி ஒளியூட்டி வழிகாட்டிய மாணிக்கவாசகர் வித்தியாலயம் நூறு ஆண்டுகள் ஆற்றிய கல்விப் பணியை பதிவு செய்கின்ற நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

கடந்த காலங்களில் கல்வி பயிலும் பிற துறைகளிலும் சாதனை நிலைநாட்டியது போன்று தொடர்ந்தும் மாணவர் சமூகத்திற்கு சிறந்த பயில்களமாக விளங்க வாழ்த்துகிறேன்.

***வே. தி. செல்வரட்ணம்***
வலயக் கல்விப் பணிப்பாளர்

வடமராட்சி வலயம்,
புலோலி.

கோட்டக் கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி

யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் நூறு ஆண்டுகள் கல்விப் பணியின் நிறைவையொட்டி பாடசாலைச் சமூகத்தினர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி நூற்றாண்டு மலரை வெளியிடுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மானது இப் பிரதேசத்தின் சிறந்த ஆரம்பப் பாடசாலையாக விளங்கி இங்கு கல்வி பயிலும் மாணவர்களைப் பலதுறை ஆற்றல் உள்ளவர்களாக ஆக்கி வருகின்றது. இப்பாடசாலையின் ஆரம்பக் கல்வி கற்ற மாணவர்கள் பலதுறைகளிலும் உயர் கல்வி பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். பாடசாலையின் நூறாவது ஆண்டு நிறைவையொட்டிப் பாடசாலைச் சமூகத்தவரிடையே அளவு கடந்த உற்சாகம் ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இப்பாடசாலையானது இங்கு கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் சிறந்த ஆரம்பக் கல்வியை வழங்கி மேலும் மேலும் வளர எனது நல்லாசிகள்.

***திரு. க. அம்பலவாணர்***
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கரவெட்டி.

# வாழ்த்துக் கவி

## *வாழிய வாசகர் மன்றே*

மங்கலமார் மாணிக்க வாசகப்பேர் மன்றே!
வண்ணமலர் கலைமயிலாய் வந்தாய்நீ வாழி
மாதவன்நல் லவன்சிற்றம் பலமுதலி நெஞ்ச
மலர்ப்பள்ளி வளர்ந்தஇள மகளே நீ வாழி
செங்கதிரோன் இளங்கதிர்போல் முகமலர்ந்து வாழி
செழுங்கரவைக் குலமகளே! ஜீவகியே! வாழி
சீர்த்திடுபல் கலைக்கழக மாயென்றும் வாழி
சிவநெறியும் தீந்தமிழும் திசைமலர வாழி
எங்களுக்கின் கலையமுதம் ஈந்தஅன்னாய்! வாழி
ஏத்துதமிழ் வித்தகர்தம் மடிதவழ்ந்தாய் வாழி
எவ்வுலகும் அளந்தகலை மலர்பூத்து வாழி
இதழ்க்கமல வாணியென எம்மிதயம் பூத்தே
சங்கமெனும் தமிழ்மன்றாய்த் தாயேநீ வாழி
தண்ணிமயத் தீபமாய்த் தரணிதொழ வாழி
சந்தமலர் தாள்மலர்க்கே இட்டுமுடி தாழ்த்திச்
சமர்ப்பித்தோம் நூற்றாண்டு விழா; அன்னாய்! வாழி.

**சிலேடைக் கவிமணி**

# ஆசிரியர், ஆளணி

| ஆசிரியர் பெயர் | விலாசம் | பயிற்சி |
|---|---|---|
| திரு. இளையதம்பி இராகவன் (அதிபர்) | கோயிற்கடவை துன்னாலைமத்தி, கரவெட்டி. | கணிதப்பயிற்சி |
| திருமதி. சுமதி மகேஸ்வரன் (பகுதித்தலைவர்) | வாரியத்தனை, கரவெட்டிமத்தி கரவெட்டி | ஆரம்பப்பயிற்சி |
| திருமதி. புஸ்பரதி சேகர் | பெரியதோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. | தொண்டர் ஆசிரியர் |
| செல்வி விமலரதி சுப்பிரமணியம் | தம்பையாவீடு, கரவெட்டி மத்தி, கரவெட்டி. | ஆரம்பப்பயிற்சி |
| திருமதி. கிருஷ்ணகுமாரி புவனேந்திரம் | பெரியதோட்டம், கரவெட்டி மத்தி, கரவெட்டி | ஆங்கிலப் பயிலுனர் |
| திருமதி. மாலோகநாயகி துரைசிங்கம் | தல்லையப்புலம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி | ஆரம்பப்பயிற்சி |
| செல்வி. ஆனந்தநாயகி கந்தசாமி | சண்டில்குளவீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி. | ஆரம்பப்பயிற்சி |
| திருமதி. ஜெயவதனி தேவநேசன் | தச்சந்தோப்புவீதி, கரவெட்டிமத்தி, கரவெட்டி. | ஆரம்பப்பயிற்சி |
| செல்வி. மங்களேஸ்வரி சண்முகநாதன் | சிவபவனம் ஒழுங்கை துன்னாலைவடக்கு, கரவெட்டி | பயிற்றப்பட்ட கலைப்பட்டதாரி |
| திருமதி. ரேவதி யோகலிங்கம் | புளியடிவீதி, கரவெட்டிமத்தி கரவெட்டி. | கணிதப்பயிற்சி |
| செல்வி. சாந்தி நடராஜா | கரவெட்டி மேற்கு, கரவெட்டி. | தொண்டர் ஆசிரியர் |


1901
2001

# விளங்குக வித்தியாலயம்

கண்ணுடையோர் எவரென்றாற் கல்வி என்னும்
கண்ணுடையார் தாமென்பர் மற்றுள்ளோர்கள்
புண்ணிரண்டு முகத்திடையோர் என்றார் முன்னோர்
படித்தறிதல் கேட்டறிதல் என்ப தற்காய்
மண்ணிதனில் மாணிக்க வாச கப்பேர்
மிளிர்நிலையம் நல்லதம்பிப் பேரான் தந்தார்
விண்ணளவு புகழ்கொண்டார் அவர்க்கு நாங்கள்
வணக்கங்கள் தருகின்றோம் தலையைத் தாழ்த்தி.

பீடுபுக ழார்சித்த மணியம் பின்னர்
பெரும்பணிகள் செய்துயர்வு காட்டி நின்றார்
தேடுகல்வி நமக்கிங்கே கிடைத்த தாலே
தேசத்திற் தலைநிமிர்த்தி நிற்கி றோம்நாம்
நாடிமத மாற்றங்கள் நிகழ்ந்த போது
நமதுஇன முத்திரையைக் காத்து விட்டோம்
சூடுபுகழ் கல்விவிளை யாட்டிற் காட்டித்
திசைபுகழ நின்றகதை உண்மை யுண்மை.

காலத்தின் கோலத்தாற் தாக்குப் பட்டு
கைகடந்த நிலையென்ற வேளை மேலோர்
சீலத்தின் துணையாலே நிமிர்ந்து விட்ட
சிறப்பைநாம் தலைநிமிர்ந்து பார்க்கிறோமே
காலத்தால் அழியாத புகழைக் கண்ட
கலையகத்தின் உயர்வுக்கு உதவி னோர்கள்
ஆலத்தை உண்டசிவன் அருளே பெற்று
ஆன்மாவின் திருப்தியுடன் உயர்வீர் வாழ்க.

அந்நாளின் எஸ்எஸ்வி வகுப்பும் பின்னர்
ஐந்தாவ தாம்வகுப்புப் போட்டித் தேர்வில்
தன்னோடு நிகர்நிற்க விடாது மேன்மைத்
திறன்பேறு காட்டிமுதல் இடத்தில் நின்ற
என்னேஇக் கலைக்கூடம் என்று போற்ற
ஏற்றவெற்றி பெறுபேற்று முடிவு கூறும்
பொன்னேபோற் போற்றிடுவோம் உதவி செய்வோம்
பொலியட்டும் பல்லூழி ஓங்கி வாழ்வோம்.

***மன்னவன் மு. கந்தப்பு***

# மண்ணிலிருந்து நாங்கள் மனிதர்களாக்கப்பட்டோம்

## மாணிக்கவாசக வித்தியாலய நினைவுகள்

**கார்த்திகேசு சிவத்தம்பி**

பெயருக்கு மேல் தகைமைகளை பட்டங்களை எழுதக் கை கூசுகிறது.

மாணிக்க வாசக வித்தியாலயத்தில் படித்தது நினைவில் நிற்கிறது. அப்போ...... நாங்கள் என்னவாக வர விரும்பினோம். அப்படி ஏதாவது நினைவுகள் இருந்தனவா?

2002 இலிருந்து 1937ஐ 38ஐ 39, 40களை நினைவில் பிடிக்க முயல்கிறேன்.

மாணிக்க வாசக வித்தியாலயத்துக்குப் போவதற்கு முன், என் அட்சர ஆரம்பம் ஐயாவோடு ஹேனமுல்லையில் (பாணந்துறை) தொடங்கியது. "அ"னா எழுத முதல் விரல்களைச் செவ்வைப்படுத்தியவர் ஆசுதீன் என்று ஒரு ஆசிரியர்.

ஆனால் வரன் முறையான பாலர்கல்வி மாணிக்கவாசக வித்தியாலயத்தில் தான்.

சிலவேளைகளில் அழுதுகொண்டே பள்ளிக்கூடத்துக்குப் போவது.... நல்ல கறுத்தப் பொட்டுடனும் திரு நீற்றுடனும் ஒரு தொங்குசட்டையுடனும் பள்ளிக்கூடம் போனது ... அந்தச் சட்டை பாணந்துறையின் எச்சசொச்சம்.

வகுப்புக்கள் -

சின்ன முதல்
பெரிய முதல்
இரண்டாம் வகுப்பு
மூன்றாக....?

மூன்றாம் வகுப்பில், இங்கிலீசு பள்ளிக்கூடத்துக்குப் போய் விடுவோம்.

ஆனால் அது இங்கிலிசுப் பள்ளிக்கு போகிறவர்கள்தான். மாணிக்கவாசக வித்தியால யத்தில் தமிழ் எஸ்.எஸ்.சி வரை வகுப்புக்கள் இருந்தன. கரவெட்டி மேற்கின் அக்காலத்துத் தமிழாசிரியர்கள் மாணிக்க வாசகர் வித்தியாலயத்திலிருந்துதான் "புறப்பட்டார்கள்."

மாணிக்கவாசக வித்தியாலயம் என்று சொல்ல எனது வழத்தாத்தைக்குத் தெரியாது. அவவும், எங்கள் அயல் முழுவதுமே "புதுப்பள்ளி" என்றுதான் இந்தப் பாடசாலையை குறிப்பிட்டனர்.

"புதுப்பள்ளி" என்றதும் நினைவுகளின் ஈரம் நெஞ்சில் பிடிபடுகிறது.

சிலேட்டும், சிலேட்டுப் பென்சிலும் தான் சின்ன முதலில் எழுதப் பழகியதிலும் பார்க்க சிலேட்டில் அதன் பென்சிலால் வண்டி மாதிரி இழுக்கும் விளையாட்டும் அதனால் வாங்கிய அடிகளும் நினைவுக்கு வருகின்றன.

அணில்
ஆடு
இலை
உறி.... தான்!

வாத்தியார் வை.சியின் அவருடைய தாயார் எங்கள் வீட்டுக்கு அயல் அதனால் அதிகம் பயம் இல்லை.

இரண்டாம் வகுப்பில் வல்லிபுர வாத்தியார் (வல்ற வாத்தியார்) நினைவுக்கு வருகிறார். கூடவே செல்லையாவாத்தியாரும்.

இரண்டாம் வகுப்பில் நான் ஒரு நாடகத்தில் நடிப்பதாக இருந்தது. இடுப்பில் சால்வையை இறுக்கி விடுவார். நான் மேடைக்கு வரும்போதே அவிழ்த்துக் கட்டுவேன். கடைசிவரை கட்டவில்லை கடைசியில் அதனால் என்னை நடிக்கவே விடவில்லை. அம்மா வரவில்லை.

இராசையா (எனக்கு என் வழத்தாத்தை வைத்த பெயர் ஏறத்தாழ 15,16 வயது வரை இதுவே எனது அயலவர் நிலைப் பெயராக இருந்தது) நடிக்கவில்லை என்ற தகவல் அம்மாவுக்கு கிட்டியபொழுது அவர் சற்று அசௌகரியப்பட்டதை இன்னும் மறக்க முடியாமல் இருக்கிறது.

இதுவோ... என்னவோ... பின் நாட்களில் அம்மா திட்டத்திட்ட நாடக ஈடுபாட்டில் திரிந்தேன்.
வானொலி, பல்கலைக்கழகம்....
பின்னது அதுவே ஆராய்ச்சியாகி...
எதிர்பார்ப்புக்களை கொடுத்தால்
அதை ஏமாற்றக்கூடாது
நிலம் ஆழப்படுகிறது... நீர் பிய்த்துக் கொண்டு வருகிறது.

எனது வகுப்பு மாணவர்களில் ஒருவன் பரமேஸ்வரன்... தலைமையாசிரியர் ச.சி.யின் (ச. சிற்றம்பலத்தின்) மகன் பின்னர் விக்னேஸ்வராவிலும்... தகப்பனைப்போல, வெள்ளையடித்தது போல் நெற்றியில் ஒரு திருநீற்றுக்கீறு எங்கள் சாத்தியப்பாடுகளை நாங்கள் உணர்ந்து கொள்வதற்கு முன் விக்னேஸ்வராவுக்குச் சென்றுவிட்டோம்.

எனக்கு சமயபாடப் பரீட்சையில் பரிசு கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் தச்சன் தோப்பு தீர்த்தத்தன்று எல்லோரும் பார்க்க வாங்கியிருக்கலாம். இன்றும் தான் எனக்கு முக்கியமான வரிகளை தவிர முழுப்பாட்டும் மனதில் நிற்பதில்லையே.

"புதுப்பள்ளி"யின் மிகப் பசுமையான நினைவு... மத்தியானச் சாப்பாடு சின்ன முதலில் அல்ல, பெரிய முதலில் இருந்ததாக நினைவில்லை... இரண்டாம் வகுப்பில் நிச்சயமாக நடந்தது.

மத்தியானச் சாப்பாட்டுக்கான கோப்பையை முன்னரே அங்கு வைத்திருப்போம், பருப்பு கத்தரிக்காய், வெள்ளைக்கறி, சொதி மேல் வகுப்பு மாணவர்கள்தான் பந்தி வைப் பார்கள். பத்தியக்கை தான் பொறுப்பு. பத்தியக்கைக்கு என் அம்மாவைத் தெரியும். "எட வள்ளியம்மையின்ரை மேன்...ஆ.... கரவெட்டியில் அந்த வழக்கம் இன்றும் உண்டு. அம்மா, தங்கச்சியர் பெயரைக் கொண்டே என்னை இனங்காணுவார்கள்.

ஐயாவின் பண்டிதர்ப்பட்டம், சோதிடச் சிறப்பு ஆண்கள் மத்தியில்தான்.

மாணிக்கவாசக வித்தியாலய மட்டத்தில் நாங்கள் அந்த மண்ணின் ஒரு பகுதி. எங்களினதவரைப் பற்றியும் எதிர்பார்ப்புகள் இருந்ததாகவும் தெரியவில்லை. ஆனால் அதற்காக வை. சியோ, ச.சியோ எங்களைப் பத்தோடு பதினொன்றாக நடத்தவுமில்லை. எங்களைத் தனிமனிதர்களாகவே கருதினார்.

எந்தப் பராபட்சமும் காட்டவில்லை.

பின்னோக்கிப் பார்க்கும் பொழுது மாணிக்க வாசக வித்தியாலயம் என்னிடத்துச் சொல்லாமல் சொன்ன சேதி... திணிக்காமல் ஊட்டிய தகவல்

என் நண்பர்களுள் / என் வகுப்பில் நானும் ஒருவன்... சக மாணவன்

என்னிடத்திருந்தும் சில விடயங்கள் எதிர்பார்க்கப்படலாம்.....

அதற்கு நான் தயாராக இருக்க வேண்டும். (சரியான வேளையில் வேட்டியைச் சரி செய் வதிலும் பார்க்க பணியைச் செய்யவேண்டும்.)

குழந்தையாக அங்கு சென்றேன். விலகியதும், ஏறத்தாழக் குழந்தையாகத்தான். ஆனால் முத்திரை குத்தப்பட்ட ஒரு குழந்தையாகவே வந்தேன்..... அது எனக்கு மாத்திர மல்ல... எல்லோர் மீதும் விழுந்த முத்திரை.....

இன்றும் அந்த எழுத்துக்கள் மறையவில்லை.

சிதம்பரத்தையும் சீர்காழியையும் ஸ்ரீரங்கத்தையும் பார்த்த பின்னும், தச்சன்தோப்பை மறக்கமுடியாததுபோல்,......

கேம்பிரிட்ஜையும், ஒக்ஸ்போட் பஸ்கினியையும் பர்மிங்காமையும் கண்டதன் பின்னும் விக்னேஸ்வரா, ஸ்ராகிறூவை மறக்க முடியாதது போல்....

எத்தனை பாய்ச்சல்கள், ஏற்றங்கள், சரிவுகள் எல்லாவற்றுக்கும் பின்னர்

புதுப்பள்ளியை
வல்ற வாத்தியாரை
ச.சியை
பத்தியக்கையை

மறக்க முடியவில்லை.

நாம் என்றோ ஒரு நாள் மனிதர்களாக மாறக்கூடியவர்கள் என்ற ஒரு எதிர்பார்ப்பு இவர்களிடம் இருந்ததா...?

தந்துன் தன்னை, கொண்டது என் தன்னை
சங்கரா யார் கொலோ சதுரர்
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன் யாது நீ பெற்றது என்பால்...?

மறக்காத நெஞ்சுடன்
அப்பொழுது "இராசையா" என்று
அயலார் கூப்பிடப்பெற்ற

**சிவத்தம்பி**

(பண்டிதர் த.பொ.கார்த்திகேசு வள்ளியம்மையின் மகன்.)

எல்லோருடைய மனங்களிலும் பல அபிப் பிராய பேதங்கள் இருந்தாலும் அவர்கள் நல்ல விடயத்தில் ஒன்றுபட வேண்டும்.

# அதிபர் அறிக்கை

முன்னாள் அதிபர் மன்னவன் கந்தப்பு அவர்களின் வேண்டுகோளின் பேரில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. சிவராசா அவர்களின் கட்டளைக்கு இணங்க இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டேன். 13-10-2001ல் அதிபர் கடமையை நிறைவேற்றும் பொருட்டு எனது கடமையை ஏற்றுக் கொண்டேன்.

கரவையின் கீர்த்திமிகு நிர்வாகிகள் திரு. வி. சிற்றம்பல முதலியார், திரு. சி. முருகேசு உடையார், திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்ட பாடசாலை, திரு. வ. சின்னையா அவர்கள் போன்ற மக்களின் பெருமதிப்பிற்குரிய தலைமையாசிரியர் களால் வழிகாட்டப்பட்ட பாடசாலையை தலைமையேற்று நடாத்துவது என்பது மனச்சங்கடத்தை ஏற்படுத்தியது. இருப்பினும் இப்பாடசாலையில் சின்னையா உபாத்தியா யரின் கீழ் படித்தவன், சமூக ஒழுங்கைப் பேண வழிகாட்டிய முகாமையாளர்களின் ஊரவன் அவர்களால் வழிகாட்டப்பட்ட ஆலயத்தில் (வெல்லன் விநாயகர்) வளர்ந்தவன் என்ற முறையில் மிகப் பணிவுடன் இறைவனை மனதில் இருத்தி என் கடமையை ஆற்ற வந்தேன்.

நூறு ஆண்டுகள் கல்விப்பணியாற்றிய பாடசாலையில் நூற்றாண்டு நிறைவு மண்டபம் ஆரம்பிக்கப்பட்டு, அதன் காரணமாக ஏற்பட்ட சில அசௌகரியங்களால் பாடசாலையிலும், பாடசாலைச் சூழலிலும் ஒரு அமைதியின்மை காணப்பட்டது. கட்டட வேலைகள் தடைப்பட்டு இருந்தது. அவற்றைச் சீர்ப்படுத்தி மாணவர்க்கான கற்றல் சூழலை ஏற்படுத் தல், ஆசிரியர்களை கற்பித்தல் சூழலுக்கு உள்வாங்கல், அயற் சமூகத்தின் நம்பிக்கை யைப் பெறல் ஆகியவை முதலில் வென்றெடுக்க வேண்டிய பணியாக இருந்தது.

விக்கினேஸ்வராக் கல்லூரியின் ஆசிரியப்பயிற்சி இவற்றை மிக விரைவாகவும், சிறப்பாகவும் செயற்படுத்த உதவியது. நான் இப்பாடசாலையை பொறுப்பேற்ற அன்றே கட்டடவேலைகளையும் ஆரம்பிக்கக் கூடியதாக இருந்தது. அதற்கு உதவியாக இருந்தவர் எமது தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. த. இரவீந்திரதாஸ் அவர்கள் ஆகும்.

இக் கட்டட அமைப்பைப் பொறுத்தவரை பல பிரச்சனைகள் என் முன் இருந்தன. அமைக்கப்படவிருந்த மண்டபத்தின் ஒரு பகுதி கரவை வெல்லன் விநாயகர் ஆலய காணிக்குள் செல்வதாகக் கூறி கட்டுவதற்கு தடை செய்யப்பட்டிருந்தது. சின்னத்தம்பி மண்டபம் உடைக்கப்பட்டு அதன் ஓடுகள் இம்மண்டபத்திற்கு போடப்பட வேண்டும் என திட்டமிடப் பட்டிருந்தது. திறந்த மண்டபமாகவும், பூர்த்தியாக்கப்படாத கட்டடமாகவும், திட்டமிடப்பட் டிருந்தது. ஆனால் எனது திட்டம் கோயிற்காணி கொள்வனவு செய்யப்பட வேண்டும். முதலியார் சின்னத்தம்பி மண்டபம் உடைக்கப்படக் கூடாது. புதிய கட்டடம் வகுப்பறை களாக பிரிக்கப்பட வேண்டும். பூர்த்தியாக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற வேண்டும். மேற்கூறிய இவ்வளவு செயல்களும் இறைவன் அருளால் இனிதே நிறைவேறியது.

அடுத்த முக்கியமான பணி நூறு ஆண்டுகள் இப்பாடசாலை ஆற்றிய பணிகளை பதிவு செய்து நூற்றாண்டு மலரை வெளியிடுதல் ஆகும். **கரவையின் கல்வி வரலாறு மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் வரலாறு** என்ற தொனிப் பொருளுடன் மலராக்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டது.

மன்னவன் கந்தப்பு அவர்களின் தலைமையில் மலராக்கக் குழு அமைக்கப்பட்டு நூலாக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கடந்த பெப்ரவரி மாதத்தில் வெளியிட வேண்டும் என ஆரம்பிக்கப்பட்டு, ஓவியர் கோ. கைலாசநாதனின் முகப்பு அட்டையுடன் திட்டமிட்டவாறு பெப்ரவரி மாதத்திலே அட்டைப்படங்கள் அச்சடிக்கப்பட்டு முடிக்கப்பட்டன. எனினும் கட்டுரையாளர்களின் தாமதத்தால் திட்டமிட்டவாறு வெளியிடமுடியவில்லை.

இம்மலரைப் பொறுத்தவரை எதிர்காலத்தில் கரவையின் வரலாறு எழுதப்பட வேண்டும் என்ற நோக்கில் இம்மலர்கள் உங்கள் முன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இப்பாடசாலையை பொறுப்பேற்ற பின் நிறைவேற்றிய பணிகள்.

1) நூற்றாண்டு மண்டபம் பூர்த்தியாக்கப்பட்டு 26-05-2002 அன்று திறந்து வைக்கப்பட்டது.
2) சுமார் 3 பரப்புக் கோயில்காணி கொள்வனவு செய்யப்பட்டது.
3) குழாய்க்கிணறு அமைக்கப்பட்டு நீர்வசதி பெறப்பட்டது
4) பாடசாலையின் பெயர்வளைவு அமைக்கப்பட்டது
5) பாடசாலையின் நுழைவாயிலுடன் உள்ள காணி அன்பளிப்பாக பெறப்பட்டது.
6) G.T.Z நிறுவனத்தால் நவீன மலசலகூடத் தொகுதி அமைக்கப்பட்டது.

இப்பாடசாலை வளர்ச்சியுற மேலும் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள்

1) மின்சார வசதி பெறல்
2) தகவல் தொழில்நுட்ப வசதிகளை மாணவர்கள் பயன்படுத்த வசதியேற்படுத்தல்
3) குடிநீர் வசதியேற்படுத்தல்
4) சுற்றுமதில் அமைத்தல்
5) அனைத்து வகுப்புகளையும் அடைக்கப்பட்ட வகுப்பறைகளாக மாற்றுதல்
6) நல்லதம்பி மண்டபம் நவீன வசதிகொண்ட அரங்காக மாற்றுதல்
7) சின்னத்தம்பி மண்டபத்தை புனரமைத்தல்
8) நூலக வசதியை ஏற்படுத்துதல்
9) புலமைப் பரிசில் நிதியத்தை மேலும் விரிவுபடுத்தல்

மேற்காட்டிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உலகத்தோடு இணைந்த கல்வியை எமது இளஞ்சிறார்கள் வசதியுடன் கற்க வழியேற்படுத்துவது சமூகத்தின் கடமையாகும்.

நான் இப்பாடசாலையைப் பொறுப்பேற்ற பொழுது, பாடசாலைச் சமூகத்தினர் பலர் எனக்கு பேருதவிகள் புரிந்தனர். குறிப்பாக அமரர் மு. சிவசிதம்பரம் அவர்களும் முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அவர்களும் கடித மூலம் வாழ்த்துத்

தெரிவித்ததுடன் அபிவிருத்திபற்றிய ஆலோசனைகளையும் தெரிவித்தார்கள். அமரர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் எமது மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியது டன் இங்கு வருவதாகவும் கூறியிருந்தார். ஆனால் இவ் வாக்குறுதி நிறைவேற முடியவில்லை.

கட்டடவேலைகளைப் பொறுத்தவரை அமரர் ஆகிவிட்ட சந்திரவளவு நடராஜா, மற்றும் திருமதி. சுசீலா சிவலிங்கம், திரு. சி. சிதம்பரநாதன், செயலாளர், திரு. வே. குணசிங்கம், திரு. ச. செவ்வந்திநாதர், அயலவர்கள், ஆசிரியர்கள் அனைவரதும் ஒத்துழைப் பும் கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உதவியும் சிறப்பாக இருந்தது.

தேவையின் போது கட்டட அமைப்பிற்காக ஏற்கப்பட்ட காணி கரவை வெல்லன் விநாயகராலய நிர்வாகத்தின் ஒத்துழைப்பும் சிறப்பாக இருந்தது.

சிவோத்தமன் நினைவு அன்பளிப்பு காணிக் கொள்வனவின் போது முன்னின்று உழைத்த திரு. கா. ஈசுருபாதம் அவர்களின் சிறப்பான செயற்பாடு பாராட்டுக்குரியது.

பாடசாலை நிர்வாகத்தைப் பொறுத்தவரை எமது ஆசிரியர்கள் மிகத்தரமானவர்களும், நல்மனப்பாங்கு உடையவர்களும் ஆவர். இக்கட்டான சூழ்நிலையில் பொறுப்பேற்று பல வேலைத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய நிலையில் தமது கடமையைச் சிறப்பாகச் செய்து பூரண ஒத்துழைப்பை வழங்கினர்.

நூற்றாண்டு நிகழ்வுகளிற்கு பொருளாதார உதவி தேவைப்பட்டபோது எமது பகுதிமக்க ளிற் பலர் தாமாகவே முன் வந்து பண உதவி வழங்கி வருகின்றனர்.

கனடாவிலுள்ள கரவை ஒன்றியத்தினர் திரு. சி. அம்பிகாவரன் திரு. வை. சி. பாலசுப்பிரமணியம், திரு. சு. சிவஞானம், திரு.க. கந்தசாமி ஆகியோரின் முயற்சியுடன் ரூபா 95000 இம்மலர் வெளியீட்டிற்காக அனுப்பி, எமது செயற்பாட்டை உற்சாகப்படுத்தி யுள்ளார்கள்.

இவ்வாண்டு நூற்றாண்டு நிறைவாண்டாக அமைவதால், பாடசாலையின் வருடாந்த கலைவிழாவையும், பரிசளிப்பு விழாவையும், நூற்றாண்டு நிறைவு விழாவாக, நவம்பர்மாதம் நடாத்துவதற்கு எமது நூற்றாண்டு விழாக் குழுவினர் தீர்மானித்துள்ளனர். இவை சிறப்புற நிறைவேற இறைவனை வேண்டுவதுடன், குறுகிய காலத்தினுள் இத் திட்டங்கள் நிறைவேற திணைக்கள ரீதியாக ஒத்துழைப்பு வழங்கிய கல்விப்பணிப்பாளர்கள், பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. இராகவன்.**




நூற்றாண்டு விழாக்குழு

# பசுமை நிறைந்த பள்ளி நினைவுகள்

**வ. சிவராசசிங்கம்**
முன்னாள் அரசகரும மொழித்திணைக்கள உதவி ஆணையாளர்,
தற்போதைய வருகை விரிவுரையாளர்,
ஆங்கில இலக்கியம்,
யாழ் பல்கலைக்கழகம்.

வீணாகானபுரம் என விதந்தோதப் பெறும் சைவநன் மக்களின் தவப்பேற்றினால் நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையில் 1848இல் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். யாழ்ப்பாணப் பகுதியில் நிலவிய மகாமாயை களைந்திட வெண்ணி நாவலர் பிரானால் வித்தியாசாலை நிறுவப் பெற்ற பாங்கில் கரவெட்டியில் 1901ஆம் ஆண்டில் ஒரு சைவப்பாடசாலை நிறுவப் பெற்றது. அதனை நிறுவிய மகான் நாவலர் போன்று கல்வி வளமோ சமய ஞானமோ இல்லாதவராயினும் சைவத் தமிழை வளர்க்க வேண்டு மென்னும் தணியாத வேட்கையினராய் தற்றுணிபே துணையாக தருமத்தின் தலைநின்று முயற்சியில் இறங்கினார். தாம் நிறுவிய தாபனத்திற்கு மாணிக்கவாசக வித்தியாலயம் என்று பெயரிட்டார். மணிவாசகப் பெருமானின் தோற் றத்தை குறிப்பிட வந்த கடவுள் மாமுனிவர்.

தவமெனும் பெரிய வித்துள் தங்கியே யங்குரித்து
பவமெனும் பங்கம் நீக்கி பயிலருள் குருத்துண்டாகி
அவமெனும் களைகள் நீக்கி ஆக்கு வோனருளால்
உண்மைச்
சிவமெனும் விளைவுண்டாக வளர்ந்தது தெய்வச்சாலை.

எனப் போற்றிசைப்பார். அன்றைய கால கட்டத்தில் பாடசாலை வளர்ந்த மாண்பினை நோக்க

'சிவமெனும் விளைவுண்டாக வளர்ந்தது தெய்வச்சாலை'

என்று குறிப்பிடலாம் போலும். இப்பாட சாலையை நிறுவியவர். வண்மை படைத்த வாழையப்பாவீட்டு நல்லதம்பி என்னும் மகாபுருடர், ஆயினும் அடக்க சுபாவமுடைய இம்மகான் தன்னை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பாதவராகி பாடசாலை முகாமைப் பொறுப்பினை கல்விகேள்வி, சைவச்சீலம், நிர்வாகத்திறன் ஆகிய சர்வகுண சம்பன்னரான சித்த மணியமெனப் போற்றப் பெற்ற உயர்திரு சிற்றம்பல முதலியார்பால் ஒப்படைத்தனர். வித்துவச் சிறப்பும், ஆன்வினையுடைமையும் கொண்டு திகழ்ந்த முதலியாருடைய பராமரிப்பில் பாடசாலை வெகுவேகமாக வளர்ச்சி கண்டது.

பாடசாலையின் மண்டபத்தில் பிரதான கட்டடத்துக்கு தெற்கே கிழக்கு மேற்காக அமைந்த சின்னமுதல் வகுப்பில் கச்சியப்பர் குறிப்பிட்டவாறு இறை நிலம் எழுதுமோர் இளைய பாலகனாய் படித்துக் கொண்டிருக்கின் றேன் சிவலை மெல்லிய ஆசிரியர் ஒருவர் மலர்ந்த முகத்தோடு எழுதப்பழக்குகிறார். தம் கரத்தால் மாணவர்களின் வலக்கையைப் பிடித்து சுட்டு விரலால் நிலத்தில் பரவிய மண்ணில் எழுத்துக்களை எழுதச் செய்வார். ஓர் எழுத்தை இவ்வாறு எழுதிய பின்பு அதனைப் பார்த்து சாய்ந்தாடிய வண்ணம் எல்லோரும் வாய்விட்டு ஏகோபித்த குரலில் சொல்லிப் படிப்போம். இவ்வளவே எனது சின்னமுதல் படிப்புப் பற்றிய நினைவு. எழுத்துக் கற்பித்த ஆசிரியர் சின்னத்தம்பி உபாத்தியாயர் எனப் பின்னர் அறிந்து கொண்டேன். அடுத்து பெரிய முதல் வகுப்பு நெஞ்சினிக்கும் நீங்கா நினைவுகள் உள்ளத்தில் அழுத்திய வகுப்பு பெரிய முதல் என்றால் வல்லிபுரவாத்தியார் என்ற நினைப்பு ஏன் ஆண் பாடசாலை என்று சொன்னாலே வல்லிபுர வாத்தியாரின் வடிவம்

கண்களில் தெரியும். ஆஜானுபாகுவான தோற்றம், ஏழெழுயானை என்பார்களே. அப்படியொரு எழும்பிய வடிவம். ஆனால் வகுப்பிற்குள் நுழைந்து-இல்லை அப்படி ஒரு தோற்றம். எப்படி நுழைவது? வகுப்பிற்குள் வந்து விட்டால் சிறுபிள்ளையாகிய எங்களோடு அவரும் சிறுபிளளையாக மாறிவிடுவார். திடீர் என்று பாடல் ஒலிக்கும்.

''குண்டுடுக்கி குடுகுடுக்கி! குண் டுடுக்கி குடுகுடுக்கி' நாம் அண்ணாந்து வாய் திறந்து கேட்டிருக்க வாத்தியாரின் பாட்டோடு நடிப்பும் சங்கமிக்கும்.

வாளிப்பான நெடிய உடல் வளைந்து குனிந்து குறத்தியின் வடிவமாக மாறிவிடும்.

குண்டுடுக்கி குடுகுடுக்கி கூடை கையிலேந்தி
குனிந்து நின்று பழம் பொறுக்கும்
குறத்தியம்மே. கண்ணே

வாட்டசாட்டமான திருமேனி பாட்டும் அபிநயமுமாய் பரிணமிக்கும் விதமாய் வளைந்து வளைந்து நெளிந்து குழைந்து சோபிக்கும் பாட்டு முடிவுடன் மணி ஒலிக்க மீண்டும் இவ் வுலகுக்கு வருவோம். பாடல் அபிநயத்தோடு அன்றைய பாடம் முடிவுறும். கதையும் பாட்டும் கற்பிப்பதோடு அவரின் பெரியமுதல் வகுப்புப் பாடவிதானம் நின்றுவிடவில்லை. கொன்றை வேந்தன் வெற்றி வேற்கை ஆகியவற்றை எம்மை மனனம் செய்ய வைத்தார். வல்லிபுர வாத்தியார் அவர்கள் நொத்தாரிசு லிகிதராகவும் பணியாற்றியவர். இரண்டாம் வகுப்பில் மயில்வாகன வாத்தியார், அவருக்குப் பின்னர் இராமலிங்கம் வாத்தியார் கற்பித்தார். மயில்வாகன வாத்தியார் இவர் தமிழ்ப்பாண்டித்தியம் நிறைந்த புலவர். அந்திரான் முருகமூர்த்தி மீது ஊஞ்சல் பாடிய ஆசிரியர் அவரே என்பது பின்னர் அறிந்த சேதி. இரண்டாம் வகுப்பில் இராமலிங்க வாத்தியார் பரமார்த்த குரு கதையைத் தொடர்ச்சியாகச் சுவைபட சொல்லி மகிழ்வித்தது நல்ல ஞாபகம். அக்காலத்தில் 1930களில் தலைமை ஆசிரியராகத் திகழ்ந்தவர் உயர்திரு சந்தயினார் சிற்றம்பலம் ஆசிரியர் அவர்கள். ச.சி. எனக் குறிப்பிடுவது வழக்கம். சற்றுப் படபடப்பாகப் பேசுவது அவரின் சுபாவம். வேட்டியும் சால்வையுமே பாடசாலை உடை. சோதனைகாரர் வரும். ஆண்டுப் பரீட்சை நாளாக இருந்தால் மேலங்கி (coat) அணிவார். ஆசிரியர்கள் அனைவருமே வேட்டி சால்வை அணிவது வழக்கம். ஆசிரியர் கார்த்திகேசு மாத்திரம் சிலவேளைகளில் காற்சட்டை மேற்சட்டை தரித்து வருவார்கள். இதனால் நான் அவரைப் பார்க்க நேர்ந்த நாட்களில் சோதனைகாரர் வருகிறார் போலும் என்று எண்ணியதுண்டு.

''சிவ பூசை செய்யுமுன் மருந்தேனுமுட்கொளாச் சீலரிவர்'
இவர் மேல் வகுப்புக்களில் பாடங்கற்பித்தவர். இவர் போன்று மேல் வகுப்புகளில் படிப்பித்தவர்கள் சபாபதி தேசிகர் அவர்கள் சு. செல்லையா ஆசிரியர் அவர்கள், சுப்பிரமணிய ஆசிரியர் அவர்கள் கனகசபை ஆசிரியர் அவர்கள், ஐ. சிற்றம்பலம் ஆசிரியர் அவர்கள் ஆகியோர் சபாபதி தேசிகர் அவர்கள்.

"அளமார் தருங் கடற்பொருவில் வேதாரணிய ஆதீன கர்த்தரான
அரிய யாழ்ப்பாணத் துறும்வரணி கரணவாயமர் சைவதிலகர் கூர்த்த அறிவின் வளமார் தருஞ் சைவ சித்தாந்த நன்னிலை. வழாவருட்செல்வர். நீலகண்டபாடியம் முதலான சைவபொக்கிசங்களைக் கற்றுத் தேர்ந்தவர்.

சு. செல்லையா அவர்கள் சிவந்த மேனியும் கட்டுமட்டான உடலும் நிமிர்ந்த தோற்றமும் பரந்த நெற்றியும் நேர்கொண்ட பார்வையும் பொருந்தியவர். தமிழ் மொழி இலக்கியம் கற்பிப்பதில் கைதேர்ந்தவர். நன்னுலார் கூறிய நல்லாசான் இலக்கண வாக்கியத்துக்கு வாய்ச்சியமாய்த் திகழ்ந்தவர். இவரது கற்பித்தற் சிறப்புக்களை எனது சோதர முறையினரான கணபதிப்பிள்ளை ஆசிரியர் வாயிலாகக் கேட்டுப் பெரு மகிழ்வு கொண்டிருக்கின்றேன். எனது மூன்றாம் வகுப்பில் சின்னத்துரை எனப் பெயரிய ஆசிரியர் கற்பித்ததாக நினைவு. நன்னெறி மூதுரைப் பாடல்கள் பல மனனம் செய்ததாக ஞாபகம். மூன்றாம் வகுப்பில் உடன்பயின்ற மாணவர்களுள் நெருக்கமானவர் முன்னை நாள் கணித ஆசிரியர், கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தற்போதைய தலைவர் சிதம்பரப் பிள்ளை அவர்கள். 1940ஆம் ஆண்டு நான் வகுப்பிற்கு வகுப்பேற்றம் பெற்றதையடுத்து எனது பாடசாலை வாழ்க்கை விக்னேஸ்வராக் கல்லூரிக்குத் தாவியது.

மாணவர்களுக்கு பாடவிதானத் துக்கமைந்த கற்பித்தலுக்கு மேலாக கேள்வி மூல அறிவை விருத்தி செய்யும் நோக்கில் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தில் மாலை வேளையில் பூரணப் பிரசங்கம் என்ற பெயரில் தமிழ்த்துறை போகிய வித்து வான்களைக் கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கும் வழக்கம் இருந்தது. வித்துவான் கார்த்திகேசு, சபாபதி தேசிகர் போன்ற பேரறிஞர்கள் இத்தகைய பேருரைகளை வழங்கி கல்வி வளர்ச்சிக் குப் பெரும் பங்காற்றினர்.

இத்தகைய வித்தியா விருத்தி நிகழ்ச்சிகளேயன்றி கலைத்திறன் உட் பொதிந்திருந்த மாணவர்களின் ஆற்றலை மலரச் செய்யும் நோக்கில் மாணவர்களின் நாடகங்கள் பல பாடசாலை மட்டத்தில் அரங்கேறின. மதுவின் கொடுமையைச் சித்தரிக்கும் ஒரு நாடகம் அதன் பெயர் நினைவில்லை. ஆனால் அதில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்தவரின் பெயரும் தோற்றமும் பாத்திரப் பங்களிப்பும் நினைவிருக்கிறது. அந்த் நாடகத்தில் கள்ளுச் சேர்க்கும் தொழிலாளியாக ஆழ்வாப்பிள்ளை என்பவர் நடித்தார். அவர் கரவெட்டி மேற்கை சேர்ந்தவர்.

அவர் பாடிய பாடலை இப்போதும் சில வேளைகளில் எனது வாய் முணு முணுப்ப துண்டு. அந்தப்பாடலின் இரண்டு அடிகள்.

*"சோக்கான தென்னங்கள்ளு சொக்கவைக்கும்*
*எந்தன் கள்ளு*
*சோதித்துப் பார்த்துக் குடிக்க வாருங்க நயினார்"*
*சூறையாட்டி விளுத்தாவிட்டால் கேளுங்க நயினார்."*

பாடசாலையில் அந்த நாள்களில் மாணவர்க்கு வழங்கிய இலவச உணவை என்றும் மறப்பதற்கில்லை. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே. அநேகமாக நாள்தோறும் ஒரே வகையான கறிவர்க்கம் தான். ஆனால் நளவீமபாகங் களை விஞ்சிய சுவை. அந்த உணவின் அருமையை பிற்கால மாணவப் பராயத்தில் ஒரு பாடலாக எழுதி வைத்துக் கொண்டேன். அப்பாடல்

*ஊரரிசிச் சோறும் உவப்பான கத்தரிக்காய்ச்*
*சீர்க்கறியும் மைசூர்ப் பருப்புடனே - பாற்சொதியும்*
*மானேச்சர் தம்பிறுப்பில் மாணவர்க்கு நாடோறும்*
*தேனமுதமாய்க் கிடைத்த தீன்.*

சிவபிரானது முக்கண்கள் போன்று கரவெட்டியில் அக்காலத்தில் மூன்று பாடசாலைகள் திகழ்ந்தன. மாணிக்க வாசக வித்தியாலயம், சரஸ்வதி மகளிர் வித்தியாலயம், விக்னேஸ்வராக் கல்லூரி என்பன அவை. இம்மூன்று பாடசாலைகளுள் இரண்டில் கல்வி கற்க வாய்ப்புக் கிட்டியதை இட்டு நான் பெருமிதம் அடைவதுண்டு.

# மாணிக்க வாசகர் வித்தியாலயம் ஓர் வரலாற்றுப் பார்வை (1901-2001)

**இளையதம்பி இராகவன்**
பழைய மாணவர்

இலங்கையின் வரலாற்றில் வடமராட்சிக்குத் தனியிடம் உண்டு. அதிலும் சிறப்பாக வடமராட்சியின் மிகப்பெரிய கிராமமாகிய கரவெட்டியின் வரலாறு தனித்துவமானதும் பல்நோக்கு சமூகவிழுமியங்களை உள்ளடக்கியது ஆகும். பூர்வீகமாகத் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்று கருதப்படுகின்ற கரவையம்பதி வாழ் மக்களின் சமூகப்பழக்கவழக்கங்கள், சமூகநோக்குகள், சமூக உயர்வுக்கான வழிகாட்டல்களை அடித்தளமாகக் கொண்டது.

கரவைமக்களைப் பொறுத்தவரை ஆழ்ந்த இறைபக்தி, கோயில் தொண்டுகள், தமது உடமைகளை, சொத்துக்களை ஆலயங்களிற்கு தர்ம சாதனமாகக் கொடுத்தல், தமது குலதெய்வங்களின் குளிர்ச்சி கண்டு அகமகிழ்தல், ஆகமவழி நின்று வழிபடல், ஆலயக் குருவின் வழிகாட்டலை சிரமேற்கொண்டு செயற்படல், ஆலயக் குருவிற்கு தொண்டு செய்தல், ஆகியவை ஆரம்பக் காலம் தொட்டே பாரம்பரியமாக கரவை மக்களுடன் ஊறிய பண்பாடாகத் திகழ்கின்றது. அந்தவகையில் சைவ ஆசாரமும், சைவ ஒழுக்கமுமே கரவை மக்களின் வாழ்வின் அடிநாதமும் சிறப்பும் என இவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

இறைதொண்டு புராணபடனம் தோத்திரங்கள், ஆகமங்களையறிதல் ஆகியவற்றை நோக்காகக்கொண்டு திண்ணைப் பாடசாலைகளில் ஆசார சீலர்களாக கல்வி கற்று வந்தார்கள்.

வாழ்வாதாரத்தை நோக்காகக் கொண்டு மந்தைவளர்த்தல், நெல் உற்பத்தி, வியாபார நோக்கற்ற சிறுதானிய உற்பத்திகளை நன்னீர்க்குளங்கள், கிணறுகள், துரவுகள் ஆகியவற்றின் அண்டிய பகுதிகளில் செய்து, அவற்றின் அறுவடைகளை தமது தேவைக்காக சேமித்து மிகுதியானவற்றை ஆலயத் திற்கு கொடுத்தும், வறிய வர்களிற்கு கொடுத்தும் உதவி செய்து வந்தார்கள். எத்தொழில் செய்கின்ற போதும் தோய்த்துலர்ந்த ஆடையணிந்து திருநீறு சந்தனத்துடன் அவர்களைக் காணக் கூடியதாக இருக்கும். அவ்வாறான வழக்கமுடையவர்களை இன்றும் நாம் காணலாம்.

முழுமுதற் கடவுளான சிவன் மேலாடையணியாததைப் போன்று ஆரம்ப காலங்களில் கரவையின் ஆண்கள் வேட்டியும் சால்வையுமாக, அரச உத்தியோகங்களைப் பார்த்து வந்தார்கள். ஆரம்ப காலப்புகைப்படங்கள் இதற்கு சான்று பகர்கின்றன.

அந்நியரின் வருகையின் பின்பு எமது பிரதேச ஆலயங்கள் இடிக்கப்பட்டமை, கிறீஸ்தவப் பாடசாலைகளின் மூலம் கல்வியளித்து மதமாற்றம் செய்யப்பட்டமை, ஆசாரசீலர்களாகவும், சைவ ஒழுக்க சீலர்களாகவும் இருந்தவர்கள் அவர்களின் வழித்தோன்றல்கள் மதம்மாறியமை என்பவை, சைவ ஒழுக்கத்துடனும் பாராம்பரியத்துடனும் வாழ்ந்த எமது பெரியார்களிற்கு பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் கொடுத்தது.

## பாடசாலை உருவாக்கம்:-

கட்டைவேலி கோயில்பற்றுப் பகுதியில் ஆதிக்கம் செலுத்திய மெதடிஸ்ற் மிஷனரியைச் சேர்ந்தோரால் இயல்பிலே கல்வியில் ஆர்வமுடைய கரவையைச் சேர்ந்தோர் கல்வி கற்பதற்காக மதம் மாறிவந்தனர். இந்நிலை கரவையின் உட்பகுதிகளிற்கும் வியாபிக்கும் நிலை உருவானது. சண்டில் குளத்திற்கு அண்மையிலும், கரவெட்டி கிழக்கு சத்துருங்கையிலும் மிஷனரிப் பாடசாலைகள் மெதுவாகத் தோற்றம் பெற்றன. கரவையின் உட்பகுதிகளிலும் இவ் ஆக்கிரமிப்பை உணர்ந்த நம் பெரியார்கள் பாடசாலை உருவாக்குவதற்கு அடித்தளமிட்டனர். அக்காலத்தில் வசதியுடன் வாழ்ந்தவர்களில் ஒருவரான ஊரவரால் நல்லவர் என அழைக்கப்பட்ட **வாழையப்பாவீட்டு நல்லதம்பி பெரியார்** தனது காணியில் கொட்டில் அமைத்து 1901ம் ஆண்டு இப்பாடசாலையை உருவாக்கினார். உருவாக்கியது மட்டுமன்றி பாடசாலை வளவை துப்புரவு செய்தல், சாணி கொண்டு மெழுகுதல், கொட்டிலைப் பராமரித்தல், அயலவரை பாடசாலையில் படிப்பதை ஊக்கப்படுத்தல், போன்ற செயற்பாடுகளைச் செய்து பாடசாலையை வளர்ச்சி பெறச் செய்தார்.

## அரசாங்கப்பதிவும் முகாமையும்:-

புதுப்பள்ளி என மக்களால் அழைக்கப்பட்ட இப்பாடசாலையில் மாணவர் தொகை பெருகிவருகின்ற நிலையில் கரவெட்டியின் கீர்த்திக்கும், ஒழுக்கத்திற்கும் சமூக விழுமிய மேம்பாட்டிற்கும் அடித்தளமிட்டவரும் தென்மராட்சி மணியகாரரும் கரவை வெல்லன் விநாயகராலய மணியகாரரும் ஆகிய முதலியார் வீரவாகு சிற்றம்பலம் அவர்களை அணுகி பாடசாலையை அரசிற் பதிவு செய்வதில் உள்ள சாதகம், பாதகம் பற்றிக் கலந்துரையாடினார். அதன் பின்பு பாடசாலை நிர்வாகப் பொறுப்பை ஏற்ற சித்தமணியம் அவர்கள் அரசில் பதிவதற்கு 1903ம் ஆண்டு விண்ணப்பம் செய்தார். ஆனால் அருகிலுள்ள கிறிஸ்தவக் கல்லூரி நிர்வாகத்தினர் அண்மையில் பாடசாலை உள்ளமையால் இப்பாடசாலை இயங்க அனுமதிக்கக் கூடாது. என தமது செல்வாக்கைப் பாவித்து தடுத்து வந்தனர். ஆனால் சித்தமணியத்தின் நிர்வாக ஆற்றல் கல்விப் பணிப்பாளரை நேரில் அழைத்துவந்து கிறிஸ்தவ கல்லூரியைக் காட்டினார். பின்னர் அங்கிருந்து நீண்ட தூரம் சுற்றிவளைத்து வந்து எமது பாடசாலையைக் காட்டினார். எமது பாடசாலையை முதன்முதலில் கண்ணுற்ற கல்விப் பணிப்பாளரும் அதிகாரிகளும் பதிவு செய்வதற்கு இணங்கினர் 1905ம் ஆண்டு கரவெட்டி மாணிக்க வாசகர் இந்து தமிழ் ஆண்கள் பாடசாலை என அரசினால் பதிவு செய்யப்பட்டது.

இப்பாடசாலையின் முகாமையாளராக இருந்து மிகச் சிறப்பாக சைவத்தையும், தமிழையும் வளர்ந்த பெருமை பெரியார் சிற்றம்பலம் முதலியார் அவர்களையே சாரும். இன்றும் கரவெட்டியில் சித்தமணியத்தின் புகழ் மங்காது பேணப்படுவதற்கு அவரது சமூகமேம்பாட்டு தலைமைத்துவமே காரணமாகும்.

அவரது மறைவைத் தொடர்ந்து அவரது மகன் சிற்றம்பலம் முதலியார் முருகேசு உடையார் முகாமைப் பொறுப்பேற்றார். அவரது காலத்தில் பாடசாலை பெருவளர்ச்சி கண்டது. 29-07-1959இல் உடையார் மறைவைத் தொடர்ந்து அவரது மகன் முருகேசு சிவசிதம்பரம் முகாமையாளராக அரசினால் பாடசாலை பொறுப்பேற்கும் வரை தொடர்ந்து இருந்தார்.

## கரவையில் சித்தமணியம் அவர்களால் உருவாக்கப்பட்ட பிற பாடசாலைகள்:-

இப்பாடசாலையின் முகாமையாளராக இருந்த சித்தமணியம் பெண்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, சரஸ்வதி மகளிர் பாடசாலையை ஸ்தாபித்தார். ஆங்கில மொழியினூடான கல்வியின் ஆதிக்கம், அரச உத்தியோகக்கல்வி என்பன மக்கள் மத்தியில் எழுச்சியை உண்டுபண்ணி வந்தமையால் 1917ம் ஆண்டு சித்தமணியம் அவர்கள் கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியை ஆரம்பித்து அவரது மைத்துனரான பொன்னையா மணியம் என அழைக்கப்படும் இராசவாசல் முதலியார் கந்தப்பு சின்னத்தம்பி அவர்கள் தலைமையேற்று அக்கல்லூரியை இயங்கவைத்தார். இந்தியாவின் கேரளா இருந்து ஆங்கில மூல ஆசிரியர்களை தருவித்து வடமராட்சி கல்வி ஆர்வலர்களின் கல்வித்தாகம் தீர்த்து புகழ்பெற்ற ஆங்கிலப் பாடசாலையாக வியாபித்து நின்றது. மேலும் விபரங்களை விக்னேஸ்வராக் கல்லூரி பவளவிழா மலரில் பார்வையிடலாம். கரணவாய் விநாயகர் வித்தியாலயத்தையும் சித்தமணியம் அவர்கள் 1932இல் உருவாக்கி மணலாவடி, கோணாண்டி, மத்தொனி, உச்சில் கிராமத்தைச் சேர்ந்தவர்களின் கல்வி ஆவலையும் தீர்த்து வைத்தார். இவற்றில் மாணிக்கவாசகர் வித்தியாலயம், விநாயகர் வித்தியால்யம் என்பன வெல்லன் விநாயகராலய நிர்வாகத்திலும், இருந்தமையால் அவற்றின் வருமானத்தின் ஒருபகுதி இப்பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கும் செலவு செய்யப்பட்டு வந்தது. இப்பாட சாலைகளின் காணிகளும் மேற்படி ஆலயத்திற்கு தர்மசாதனமாக வழங்கப்பட்ட காணிகள் என்பதும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

## பாடசாலைக் காணிகளும், கட்டடங்களும்:-

பாடசாலையின் நல்லதம்பி மண்டபம் அமைந்துள்ள காணி ஸ்தாகர் நல்லதம்பி அவர்களிற்குச் சொந்தமானது. 1901ம் ஆண்டு 70' x 30' அளவுகொண்ட பெரிய கொட்டிலாக அமைக்கப்பட்டு பின்னர் சித்த மணியத்தின் உதவியுடன் 1912ம் ஆண்டள வில் சீமெந்து கட்டடமாக மாற்றப்புட்டது.

1920ம் ஆண்டளவில் சின்னத்தம்பி மண்டபம் என அமைக்கப்படும் கட்டிடட சித்தமணியம் அவர்களின் உறவினர் காணியில் 110' x 25 அளவு கொண்ட பெரிய கொட்டிலாகப் போடப்பட்டு 1935ம் ஆண்டள வில் சீமெந்து கட்டிடமாக மாற்றப்பட்டது.

சின்னத்தம்பி மண்டபத்தின் தெற்குப் புறமாக உள்ள 54' x 15' அளவு கொண்ட கட்டடம் 40ம் ஆண்டளவில் கொட்டிலாகப் போடப்பட்டு 1964 இல் அதிபர் திரு. வ. சின்னையா அவர்களால் சீமெந்துக் கட்டடமாக கட்டி முடிக்கப்பட்டது.

பாடசாலையின் வடக்குப் புறத்தில் அமைந்துள்ள 70'x25' கட்டடம் திரு.க. சிற்றம்பலம் (ஆசி வீடு) அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. 15-09-1971ல் இதன் திறப்புவிழா கலைநிகழ்ச்சிகளுடன் நடை பெற்றது. இக்கட்டடத்தை இப்பாடசாலையின் முன்னாள் முகாமையாளரும், உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் திறந்து வைத்தார்.

அதன்பின் திரு.ந. வீரகத்தி அவர்கள் அதிபராக கடமைபுரிந்த காலத்தில் அவரது முயற்சியின் பயனாக கரவை வெல்லன் விநாயகராலயத்திற்கு சொந்தமான மேலும் நான்குபரப்புக் காணி ஆலய பரிபாலன சபைத்தலைவர் திரு.மு. சிவசிதம்பரம்,

ஆலய மணியகாரன் வித்துவான் திரு.க. நடராசா ஆகியோரால் 14-03-1980 அன்று பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப் பட்டது.

அக்காணியை வேலியடைத்து துப்பரவு செய்து பெற்றோர்கள், மாணவர்கள் பயன்பெற வழிசமைத்தனர். இக்காணி 1983இல் அரசால் சுவீகரிக்கப்பட்டது. தெற்குப் புறத்திலுள்ள 40`x20` கட்டடம் அதிபர் மன்னவன் கந்தப்பு அவர்கள் முயற்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. த. இராஜலிங்கம் கட்டடத்திற்கான நிதியை ஒதுக்கி 07-10-83ல் அடிக்கல் நாட்டி கட்டிமுடிக்கப்பட்டது.

பாடசாலையின் நுழைவாயிலுடன் அமைந்துள்ள காணி 30-06-2002 அன்று எமது பாடசாலையின் பழைய மாணவனான அமரத்துவமடைந்த சுந்தரலிங்கம் சிவோத்த மன் நினைவாக அவரது குடும்பத்தினரால் சட்டத்தரணி பெ. பாலசிங்கம் அவர்களால் முடிக்கப்பட்ட உறுதியின்படி 4 பரப்புக் காணி பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங் கப்பட்டது.

## நூற்றாண்டு நிறைவு மண்டபம்:-

பாடசாலையின் நூறாண்டு நிறை வினைக் குறிக்கும் முகமாக நூற்றாண்டு நிறைவு மண்டபம் அமைக்கப்படவேண்டும் என்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க தீர்மானத்திற்கு அமைய அக்கால அதிபர் திரு.வே. துரைசிங்கம் தலைமையில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் மண்டபம் அமைப்பதற் கான அடிக்கல்லை வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. சிவராசா அவர்கள் 5-9-2001ல் நாட்டினார்.

அதன்பின் கட்டடம் கட்டுவதில் ஏற்பட்ட சில தடங்கல்கள் காரணமாகவும் அதிபரின் இடமாற்றத்தாலும் கட்டடத்திற்கு காணிப்பற்றாக்குறை ஏற்பட்டதாலும் கட்டடம் கட்ட முடியாமற் தடைப்பட்டது. பின்னர் இப்பாடசாலைக்கு அதிபர் கடமையை நிறைவேற்ற நியமிக்கப்பட்ட திரு. இ. இரர்கவன், கரவ்வை வெல்லன் விநாயகராலய நிர்வாகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி பாடசாலையின் கிழக்குப் புறத்தேயுள்ள சுமார் 3 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு புனர் வாழ்வமைச் சினால் ஒதுக்கப்பட்ட ரூபா பத்து இலட்சத்து ஐம்பதினாயிரம் நிதி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் பொறுப்பேற்கப் பட்டு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. இதனை 26-05-2002 அன்று வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் திரு.வே.தி. செல்வ ரட்ணம் அவர்கள் திறந்து வைத்தார்.

## கல்வி நிலை:-

சைவமும் தமிழும் தழைத்தோங்கவும் அறிவாற்றலூடான ஆளுமைச் சிறப்பையும் ஏற்படுத்த நிறுவப்பட்ட இவ்வித்தி யாயலத்தில் 1964ம் ஆண்டுவரை ஆண்கள் மட்டும் கல்வி கற்றுவந்தார்கள். ஆரம்பத்தில் வாசித்தல், எழுதல், தேவாரப்பாசுரங்களை ஓதல் என தொடங்கிய கல்வி, அரச அங்கீகாரத்தின் பின் 1ம் வகுப்பு முதல் படிப்படியாக J.S.C, S.S.C வகுப்புவரை நடைபெற்றது. 1920வரை அனைத்து மாணவர்களும் இப்பாடசாலையில் கல்வி கற்று வந்தார்கள். விக்னேஸ்வராக் கல்லூரி 1920களின் பின்னர் ஆங்கில மொழியி னூடான கற்பித்தலில் சிறப்படைய ஆரம்பித்தவுடன் 3ம் வகுப்புக்கு பின்னர் ஆங்கிலம் கற்பதற்காக மாணவர்கள் அக்கல்லூரிக்குச் செல்லத் தொடங்கினர். தமிழ் மூலம் கல்வி கற்போர் தொடர்ந்தும் S.S.C வரை இங்கே கல்வி கற்றனர். 1945இல் இலவசக் கல்வி அறிமுகமானதும் J.S.C வகுப்புகளில் கற்ற மாணவர்கள் பிற பாடசாலைக்குச் சென்றமையால் 8ம் வகுப்புவரையே வகுப்புகள் நடைபெற்றன.

பின்னர் தாய்மொழிக் கல்வி அறிமுகப்படுத் தப்பட்டமை, பாடசாலைகள் வகைப்படுத்தப் பட்டமை காரணமாக தரம் 1 முதல் தரம் 7வரை வகுப்புகள் நடை பெற்றன. 1972இன் பின்னர் தரம் 5 வரை உள்ள பாடசா லையாக நடைபெற்று வந்தது. மீண்டும் திரு மன்னவன் கந்தப்பு அதிபராக இருந்த காலத்தில் தரம் 8 வரை வகுப்புகள் நடைபெற்றது.

நாட்டுச்சூழல், மக்கள் இடம்பெயர்வு போன்ற காரணங்களால் தரம் 1 முதல் தரம் 5 வரையுள்ள பாடசாலையாக தற்போது செயற்பட்டு வருகின்றது.

பிறபகுதி பண்டிதர்களால் "கற்றோர் மிகுந்த கரவெட்டி" என்னும் செய்யுள் நிலை அடியாக வர்ணிக்கப்படுவதற்கு மாணிக்க வாசகர் வித்தியாலயத்தில் S.S.C வகுப்புவரை கல்வி கற்று தமிழாசிரியர்களாக நாடுமுழுவதும் சேவையாற்றி புகழ் பெற்றமையே காரணமாக அமைந்தது. அதுமட்டுமன்றி கரவெட்டியில் தெருவுக்குத் தெரு நாஷனல் போட்ட ஆசிரியர்கள் மிகுந்து காணப்படுவர் என்னும் கருத்து பிறரால் கூறப்படுவது வழமை. அதற்கு விளைநிலமாகவும், பயில்களமாகவும் நின்றது மாணிக்கவாசகர் வித்தியாலய கல்விப்பெருமையே என அவ்வாசிரியர்கள் கூறுவதை நாம் இன்றும் கேட்கலாம். அந்த வகையில் அக்காலத்தில் இருந்த தமிழ்ப்புலமை பெற கற்பித்த ஆசிரியர்கள் சிலரை இங்கே குறிப்பிடுவது பொருத்தம்.

பொன்னம்பல உபாத்தியாயர், பண்டிதர் க. மயில்வாகனம், ஞா. சபாபதி தேசிகர், பண்ணாகம் சிற்றம்பலம், புலவர் சின்னத்தம்பி ஆகிய உபாத்தியாயர்கள் குறிப்பிடக் கூடியவர்கள். அதாவது இன்று ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் தமது ஆசிரியர்களை நினைவு கூர்ந்த ஆசிரியர் களே அவர்கள்.

## புலமைப் பரிசில் பரீட்சை:-

வடமராட்சியிலே 5ந் தர புலமைப்பரிசில் பரீட்சையில் காலங்காலமாக அதிகமாணவர்களைச் சித்தியடையச் செய்து வருகின்ற பெருமைக்குரிய பாடசாலைகளில் ஒன்றாக இன்றும் விளங்கி வருகின்றது. அந்தவகையில் முதன் முதல் இப்பாடசாலையில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் என்ற பெருமை பிராமணந்தோட்டம் சுப்பிரமணிய வாத்தியாரின் மருமகன், ஓய்வு பெற்ற பொறியியலாளர் திரு. சி. செல்லையா அவர்களையே சாரும். தேசிய நிலையில் மாவட்ட நிலையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பெருமைசேர்த்த மாணவர் பலர். பொறியியலாளர்கள், மருத்துவர்களாக இன்றும் கடமைபுரிந்து வருகின்றார்கள். அந்தவகையில் 2000ம் ஆண்டு அதி உச்ச மாணவர்களாக 17பேர் சித்தியடைந்து வித்தியாலயத்தின் புகழை மேலும் மேன்மையடையச் செய்தனர்.

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் |
|---|---|---|
| 2001 | 37 | 06 |
| 2000 | 36 | 17 |
| 1999 | 30 | 03 |
| 1998 | 38 | 11 |
| 1997 | 38 | 08 |
| 1996 | 35 | 07 |
| 1995 | 45 | 06 |
| 1994 | 47 | 05 |
| 1993 | 55 | 06 |
| 1992 | 45 | 03 |
| 1991 | 44 | 12 |
| 1990 | 46 | 11 |

புலமைப்பரிசில் பரீட்சையைப் பொறுத்தவரை இப்பாடசாலைக்கு நீண்டகால பாரம்பரியம் உண்டு. 1980ல் 14மாணவரும் 1983ல் 12 மாணவரும் சித்தி பெற்றுள்ளனர். 1983ல்

அகில இலங்கை ரீதியில் 1ம், 3ம் இடங்களைப் பெற்று சாதனை புரிந்ததை பெருமையுடன் நினைவு கூறவேண்டும்.

கல்வி வளம் மிகு கரவெட்டியில் காலத்துக்கு காலம் மாணவர்களிற்கு சிறந்த வழிகாட்டிகளாக இருந்து கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்கள் என்றும் நினைவை விட்டு அகலக் கூடியவர்கள் அல்லர்.

## புலமைப் பரிசில் நிதியம்:-

கரவெட்டிமத்தி அரசதோட்டத்தைச் சேர்ந்த தங்கராஜா சிவலிங்கம் அவரது தந்தையார் ஆறுமுகம் தங்கராஜா மூலம் "ஆறுமுகம் தங்கராஜா புலமைப்பரிசில் நிதியம்" என்ற பெயரால் அழைக்கப்படும் நம்பிக்கை நிதியத்தில் கரவெட்டி மாணிக்கவாசகர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பெயரில் ரூபா 50000 தை பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் நிரந்தர வைப்பில் இட்டு வருடாந்த வட்டியை ஆண்டு தோறும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்க்கு சமனாக பங்கிட்டு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். இந் நம்பிக்கை நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி 02-06-2000 ஆகும்.

## விழாக்கள்:-

கல்வியொடு கலையும் ஓங்க கரவைச் சிறாரின் அகப்புலமையை வெளிக்கொணரக் களம் பல அமைத்து அக மகிழ்ந்து நின்றவள் மாணிக்கவாசகத்தாய். அந்த வகையில் ஆரம்பக் காலங்களில் பெற்றோர் தினவிழாக்கள் ஆண்டு தோறும் நடைபெற்று வந்தன. இதிலுள்ள சிறப்பு என்னவெனில் ஆண் பாடசாலை என அழைக்கப்படும் இவ்வித்தியாலய மாணவரும் பெண்பாடசாலை என அழைக்கப்படும் சரஸ்வதிமகளிர் கல்லூரி மாணவரும் இணைந்து இங்கு கலைவிழா வை நடாத்துவர். இவ்வாறாக பெற்றோர் தினவிழாக்களிற்கு மாகாண ஆளுனர், மாவட்ட அரசஅதிபர் ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர். சித்தமணியத்தின் மறைவின் பின் கரவைப் பெரியார் சிற்றம்பல முதலியார் நினைவுதின நிகழ்வு நடைபெற்று வந்துள்ளது. நால்வர் குருபூசைகள் சிறப்பாக நடைபெற்றன. மாணிக்கவாசகர் குருபூசையில் மாணிக்கவாசகரின் திருவுருவச்சிலை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்று வந்துள்ளன.

குருபூசையின் போது அன்ன தானங்களும் நடைபெற்று வந்துள்ளது. அதன்பின் பரிசளிப்பு விழா, கலைவிழா என்பனவும் சிறப்பாக நடைபெற்று வருவதன் மூலம் காலத்துக்குக் காலம் மாணவர் கலைவிழாக்களில் தம் உள்ளார்ந்த திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இவ்வாறான விழாக்கள், குருபூசைகள், நினைவு நிகழ்வுகள் மூலம் எமது மாணவர்களின் சமூக ஒழுக்கம் சிறப்படைய ஏனையோர் பாராட்ட வித்தியாலய நிகழ்வுகள் வழி வகுத்து வந்தன.

நவராத்திரிக் காலங்கள் இவற்றிற்கு சிகரம் வைத்தாற்போல் இருக்கும் நவராத்திரி காலங்களில் போட்டிகள் நடாத்தி சரஸ்வதி பூஜையன்று வெற்றியீட்டுவோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

## கரவை பழைய மாணவர் சங்கம்

1920ம் ஆண்டுகளில் இப்பாடசாலையின் முகாமையாளரால் உருவாக்கப்பட்ட மூன்று பாடசாலைகளையும் இணைத்து கரவைப் பழைய மாணவர் சங்கம் என்ற அமைப்பு சிறப்பாக இயங்கியது. சைவத்தையும் தமிழையும் மேம்படுத்தும் நோக்குடன், மூன்று பாடசாலைகளின் மாண

வர்களும் பங்குபற்றும் வண்ணம் சமயபாடப் பரீட்சை நடாத்தப்பட்டு, வகுப்பு ரீதியாக வெற்றியீட்டிய மாணவர்களிற்கு வெல்லன் விநாயகர் தீர்த்த உற்சவம் அன்று பரிசில்கள் வழங்கப்படும். பிற்காலத்தில் விவேகானந்த சபையால் நாடளாவிய ரீதியில் சமயபாடப் பரீட்சை ஆரம்பித்ததும், இச் சங்கம் நடாத்திய பரீட்சை தடைப்பட்டது.

இச்சங்கத்தால் ஒவ்வொரு பூரணை யின் போதும் நிலவொளி வெளிச்சத்தில் சமயப் பெரியார்களால் சமயச் சொற்பொழிவு கள் நடாத்தப்பட்டு வந்தன. இவ்வாறு கரவையில் சைவமும் தமிழும் தழைத் தோங்க பாடசாலைகள் அரசு பொறுப்பேற் கும் வரை இச்சங்கம் தனது செயற்பாட்டை சிறப்புடன் செய்து வந்துள்ளது.

## முடிவுரை:-

இவ்வித்தியாலய வரலாறு என்பது ஆராய்வுக்குரியது. பல்துறை சமூக நோக்கோடு செயற்பட்ட பாடசாலையின் ஒரு நூற்றாண்டு கால செயற்பாடுகளை அக்கு வேறாக பிரித்து எழுதக் கூடியளவிற்கு சான்றுகள் இல்லை. அகில இலங்கை ரீதியில் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ள தாக அவ்வக்கால தலைமுறையினர் தெரிவிக்கிறார்கள். அனைவரினதும் பெயர் களையும் சேர்ப்பதற்குரிய சான்றுகள் கிடைப்பதரிது. இக்கட்டுரையை வாசிப்போர் சேர்க்கக்கூடிய விடயங்களை எழுத்துமூலம் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஒரு சமூக சிறப்பென்பது அப்பகுதி யின் பாடசாலையின் வளர்ச்சி, பெற்றோர், பழையமாணவர், சமூக உறவு ஆகியவற் றிலே தங்கியுள்ளது. அதன் மூலம் பாடசாலை சூழல் சார்ந்த சமூகம் சிறப்புறும்.

மேலும் அடுத்த நூற்றாண்டு கால பாடசாலை சிறப்புறவும் புதிய உலகிற்கான கல்வியினை மாணவர் பெறவும், பௌதீக வள தேவைகளை எமது கரவைச் சமூகமும் தேவை அறிந்து உதவி செய்ய வேண்டும்.

கரவையின் கல்வி வளம் உயரபாடு பட்ட ஆரம்ப கர்த்தாக்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் கரவை சமூகம் கரவை கடந்த சமூகமும் என்றும் நெஞ்சில் நிலை நிறுத்தியிருக்கும்.

வலது கைகொடுப்பது இடது கைக்கு தெரியக் கூடாத என்ற பண்புடைய எமது பெரியோர்கள் நான்கு பாடசாலைகளை உருவாக்கியும் கரவையின் எல்லைப் புறங்களிற்கு அப்பால் அமைந்துள்ள பல உருவாவதற்கு அடித்தளமிட்டும் தமது சொத்துக்களை பாடசாலை உருவாக்கத் திற்கு வழங்கியும் வந்த சித்தமணியம் குடும்பத்தினர் தமது பெயரை எந்தப் பாட சாலைக்கும் சூட்டவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. கரவைச் சமூகத்தை சிறப்புற வாழ வழிவகுத்த அவர்களை கரவைச் சமூகம் என்றும் நிலைநிறுத்தி அவர்கள் பெயர் எதிர்காலச் சந்ததியினருக்கு தெரியும் வகையில் செயற்பட வேண்டியது கரவைப் புத்திஜீவிகள் கடமையாகும்.

# எமது வித்தியாலயத்தின் நூற்றாண்டுகால அதிபர்கள்

| | | |
|---|---|---|
| திரு. சா. வீரகத்தி - துன்னாலை தெற்கு | 1901 - ------ | ஓய்வு |
| திரு. ச. சிற்றம்பலம் - கரவெட்டி கிழக்கு | 1916 - ------- | ஓய்வு |
| பண்டிதர். க. சிற்றம்பலம் -கரவெட்டி மேற்கு | ------- - 1953 | ஓய்வு |
| திரு. வை. சி. சின்னதம்பி - கரவெட்டி மேற்கு | 1953 - 1954 | பதில்க்கடமை |
| திரு. வ. சின்னையா - கரவெட்டி கிழக்கு | 1.1.1955-17.7.1970 | ஓய்வு |
| திரு. வே. கந்தையா - கரவெட்டி வடக்கு | 19.7.1970-30.12.1970 | ஓய்வு |
| திரு. க. சிற்றம்பலம் - கரவெட்டி கிழக்கு (ஆசியா வீடு) | 30.12.1970-1.1.1973 | ஓய்வு |
| திரு. மு. வேலுப்பிள்ளை - கரவெட்டி கிழக்கு | 1.1.1973-1.5.1977 | இடமாற்றம் |
| திரு. ந. வீரகத்தி - சாமியன் அரசடி | 1.5.1977-5.12.1982 | ஓய்வு |
| திரு. மன்னவன் மு. கந்தப்பு - கரவெட்டி மத்தி | 5.12.1982-18.06.96 | ஓய்வு |
| திரு. பொ. பாலச்சந்திரன் - கரவெட்டி மேற்கு | 18.6.1986-5.11.1996 | ஓய்வு |
| திரு. வே. துரைசிங்கம் - வல்வெட்டி | 11.11.1996-10.10.2001 | இடமாற்றம் |


# வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்கள்




திரு. ச. சிற்றம்பலம்
1914- ---



திரு. வை. சி. சின்னத்தம்பி
1953-1954




திரு. வே. கந்தையா
19-07-70--30-12-70




திரு. க. சிற்றம்பலம்
(ஆசியா வீடு)
30-12-70--01-01-73



திரு. வ. சின்னையா
01-01-1955--17-07-70



திரு. சி. வீரகத்தி
01-05-77--05-12-82




திரு. மன்னவன் கந்தப்பு
05-12-82--18-06-86




திரு. பொ. பாலச்சந்திரன்
18-06-86--05-11-96



திரு. வே. துரைசிங்கம்
11-11-96--10-10-2001



1930ல் முகாமையாளர் கல்விப்பணிப்பாளருடன் ஆசிரியர் குழாம்.



1980ல் நடந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றியீட்டிய இல்லம்

# கரவையின் இலக்கியப் புலமைப் பாரம்பரியம்

திருமதி. நாளினி கணபதிப்பிள்ளை
(M.A Tamil -MPhil (Edu)
ஆசிரியை, யா/விக்னேஸ்வரக்கல்லூரி.

ஈழத்தின் தமிழிலக்கிய வரலாற்றில் தனக்கென ஒரு முத்திரை பதித்து புகழ் பூத்து விளங்கும் வகையில் கரவெட்டி எனும் இக்கிராமத்தை பரிணமிக்க வைத்தது இம் மண்ணின் ஊற்றாம் புலமைப் பாரம்பரியமாம். இப்புலமைப் பாரம்பரியம் இப்பிரதேச சமூக பொருளாதார மரபுகளுடாக வரும் கல்வி கேள்விகளாலும் பயிற்சிகளாலும் அவற்றினூடே முகிழ்த்த சிந்தனைகளாலும் உருவான பாரம் பரியமென்பதே பொருத்தமுடையது. ஆம் ஒரு பிரதேச அடிக்கட்டுமானமாகிய சமூக, பொருளாதார மரபுகளூடாக மேற்கட்டுமானமாகிய இலக்கியம் அமைகையில் அதனூடாக அச்சமூக உணர்வுகள், எண்ணக்கருக்கள், அதன் சிந்தனை வெளிப்பாடுகள் புலமையாளரால் வெளிக்கொணரப் படுகின்ற இந்நிலையில் இப் புலமையாளர்கள் (அறிவாற்றலில் துறைபோயவர்கள்) அவர்களால் உருவான புலமைச் செல்நெறி என்பவை வரன்முறையாக நோக்கப் படுவதனூடே புலமைப்பாரம்பரியமும் அதனுடைய ஆக்க இலக்கியப் பாரம்பரியமும் வெளிக் கொணரப்படுகின்றன. இதற்கு களமாயும் வளமாயும் திகழும் காரணிகள் எனும் வகையில் எமது கரவெட்டிப் பிரதேசப் பாரம்பரியமும் அதனை ஊடறுத்துச் செல்லும் மரபுகளும், நிறுவனத் தொழிற்பாடுகளும் முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றன. அதுவே எமது புலமையாளரின் கருத்துநிலைப் பாரம்பரியத்தையும் செல்நெறியையும் அறிந்து கொள்ள உதவும்.

**கரவெட்டி பிரதேச தொன்மைச் சிறப்பு**

கரவெட்டி எனும் இக் கிராமமானது கரவை வேலன் கோவையின் களமாய் விளங்கியதன் மூலம் 18ம் நூற்றாண்டில் ஈழத்தமிழ் இலக்கிய பாரம்பரியத்திலேயே தன் தடம் பதித்துக்கொண்டது. அதேவேளை சமயச்சார்பான நூல்கள் மட்டுமே இயற்றப் பட்டுவந்த காலத்தில் இக்கதைமரபு முற்றிலும் மாறுபாடாக உள்ளூர் பிரபுத்துவ பரம்பரை பற்றிய காவியப்பாங்குடன் ஆக்கப்பட்டதாய் அமைந்தது. இந்நூலின் தலைவனாக அமைந்தவர் கரவெட்டியில் வாழ்ந்த கங்காகுல வேளாளனாகிய சேதுநிலையிட்ட மாப்பாண முதலியாரின் மகனான வேலாயுதபிள்ளை எனும் நிலப்பிரபு ஆவர். மேலும் இக்கதை தோன்றிய விதமும், அதற்கு கிடைத்த சன்மானமும் கூட கரவெட்டியின் புலமை ஊற்றாம் மண்வாசனையை காட்டுவ தாயிற்று. இக்கோவைத் தலைவனான வேலாயுதபிள்ளை வேலாயுதக்கடவுளை எப்போதும் பூசைசெய்து வந்தமையால் வேலன் எனவும், காணிபூமிகளை வைத்திருந்தமையால் வேலமகிபதி எனவும், தாய்போல் விருந்தினரை உபசரித்து வந்தமையால், வேலாத்தை யுடையாரென்றும் (செய்யுள் 44) அழைக்கப்பட்டார். இவரது எதிரியான கரவையிலிருந்த இருமரபுந்துய்ய மாப்பாண முதலியாரின் சந்ததியார் கரவை வேலாயுதபிள்ளை மேல் வசைக்கவி பாடுவிக்க எண்ணி சின்னத்தம்பிப் புலவரை

கரவெட்டிக் கழைத்தபோது, இப்புலவர் மட்டுவில் வழியாக கரவெட்டிக்கு வரும்வழியில் கப்புதூவில் எல்லைமானப் பந்தலடியில் கரவை வேலாயுதபிள்ளை யால் வரவேற்கப்பட்டார். அவ்வரவேற்பும் தமிழரசர் புலவர்களுக்களித்ததுபோல அமைந்தது. புலவர் கட்டில்மேல் பச்சைவடம் விரித்து உபசரிக்கப்பட்டார். அப்போது வேலாயுதபிள்ளையின் வேண்டுகோட்படி ''கரவை வேலன் கோவை'' பாடி பாட்டுக்கொரு பொற்தேங்காயாக பரிசில் பெற்றார். இவ்வாறான அவரின் கொடைத் தன்மையை ஆவர்த்தம் புட்கலாவர்த்த மெனும் மேகங்கட்கு ஒப்பிட்டு

''ஏழு முகி றன்னி லிரண்டெனப் பூசுராக் கென்றுந் தெண்ணீர்
விழுமிய பொன்பொழி வேலன்''01

என்று புலவரே பாராட்டியுள்ளார். இக் கதை சற்று அதீத கற்பனை போலத் தெரியினும் இதனூடே இப்பிரதேசத்து மண்ணின் தமிழறிவு, தமிழ்ப்பற்று, செல்வச்செழிப்பு, கொடைப்பண்பு என்பவை இயல்பாக வெளிப்படுத்தப் படுகின்றது.

இந்நூல் யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் ஒரு பெரும் புரட்சியாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது. அந்நிய ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் எமது சுதேசிய பண்பாடும், மதங்களும், சமுதாய அமைப்பும், இலக்கியக் களமாகாத காலத் தில் அக்கால நிலப்பிரபுத்துவ அமைப்பை, அதன் பெருமையை, ஆவண மாக இலக்கிய வடிவில் தோற்றுவித்த பெருமை கரவை வேலன் கோவையையே சாரும். இந்நூலில் தமிழும் சைவமும் பாரம்பரியப் பண்பாடும் செழித்தோங்கிய பழம்பெருமை வாய்ந்த பிரதேசமாக கற்றறிந்த நூல் வல்லார் நிறைந்த பகுதியாக கரவெட்டி சித்தரிக்கப் படுகின்றது.

''மொழிகண்டமுச்சங்க முத்தமிழ் நூலை முழுமதியால்
வழி கண்ட நீதிக் கரவையில் வேலன் 02

என்ற பாடலடிகள் இதற்குச் சான்றாம். மேலும் கற்றவர் நம்புக் கரவை எனப் பல்வாறு புகழப்படும் இப்பிரதேசத்தில் இலக்கியப் பாரம்பரியம் சிறப்புற திகழ்ந்ததற்கு இந்நூல் சான்றாயும் திகழ்வதனால் எம்மூரின் வரலாற்றை இந்நூலிலிருந்தே ஆரம்பிக்கும் மரபுண்டு.

***கரவெட்டியின் அமைவு:-***

கரவெட்டி பல சிறு கிராமங்களின் தொகுதி. அது கிழக்கு, மேற்கு, வடக்கு என முன்னர் பிரிக்கப்பட்டிருந்தது. தற்போது மத்தி, தெற்கு என்ற பிரிவுகளையும் கொண்டுள்ளது. இதன் சிறு அலகுகளாக கட்டைவேலி, மத்தொனி, கன்பொல்லை, கரணவாய் எனும் கிராமங்கள் (சிறுஅலகுகள்) உண்டு. இப்பிரதேசம் விவசாயப் பிரதேசமாயுள்ள அதேவேளை உப்பங்கழி மூலம் உப்பு விளைவித்தல், உள்ளூர்மீன்பிடி, பனைவளத்தொழில்கள் என பல வகையான தொழில் வளர்க்கும் இடமாயும் விளங்குவதால் நிலப்பிரபு எனும் மேனிலை சமூகத்தவர் வாயிலாக கீழ்நிலை அசைவு கொண்ட கல்விப்பாரம்பரியத்தை வளர்ப்பதாகவும் பல்வகைச் சாதிப் பிரிவினரின் நிலவுகைக்கும் ஏதுவாயிற்று. இதன் சமூக ஒழுங்கமைப்பு மிகவும் இறுக்கமானது. அக இறுக்கமும் புறநெகிழ்வும் கொண்டமைந்ததால் கரவெட்டியின் புலமைப் பாரம்பரியம் பரந்துபட எல்லாச் சமூகத்திலும் உருவாக வாய்ப்பளித்தது.

***புலமைப் பாரம்பரியம் அறிமுகம்***

அடுத்து இப்பிரதேசத்திலே தோன்றி இப்பிரதேசத்திற்கு பெருமை சேர்த்த, சேர்க்கின்ற புலமையாளர்களை நோக்கு வோம். அதன்மூலம் புலமைப் பாரம்பரி

யத்தை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். இப்புலமையாளர்களை பல்வேறு துறைகளில் துறை போயவர்களை அவர்தம் சிந்தனை மரபின் வழியே காலவரன்முறை ஒழுங்கிலும் நோக்குவது பொருத்தப் பாடுடையது. மேலும் எம் சமுதாய அமைப்பில் மேலாதிக்கம் உடையனவாக விளங்கியனவும், மேலாண்மை பெற முற்பட்டதுமான சமூக மரபுகளின் சிந்தனை வடிவங்களே புலமைச் செல் நெறியாக அமைந்து எமது சமூக வளர்ச்சியை, மாற்றங்களை வெளிப் படுத்துகின்றன. இவ்வகையில் எம்மண்ணின் இயல்பை, பண்பாட்டை சமூக இறுக்கத்தை, அனுபவத்தை அனுபவித்து அதனை தம் அறிவாலும் அறிவுதரும் கற்பனைத் திறன்களாலும் இலக்கியமாய், ஆய்வுகளாய் தந்தவர்களே புலமையாளர் களாய் கருதப்பட்டு புலமைப் பாரம்பரிய ஆய்வுக்களமாகின்றனர். இவ்வகையில் புலமையாளர்களின் பின்புலமாக அமையும் கருத்துநிலைப் பாரம்பரியங்களும் நோக்கத் தக்கவை. அந்நிலை காரணமாக புலமைப் பாரம்பரிய உருவாக்கத்திற்கு வழிகாட்டி யாக அமைந்த, அமைகின்ற நிறுவனங் களை நோக்குவோம். அடித்தளமாக பாடசாலைகளும், அக்கல்வி வளர்ச்சியுறும் நிலையில் புலமைத்துவ மரபின் செல்வாக்குள்ள மையங்களாக அமையும் ஆசிரியகலாசாலைப் பாரம்பரியம் பல்கலைக்கழக புலமை மரபு என்பவையும் ஈண்டு கருத்திற் கொள்ளத்தக்கனவாகும். இவையாவும் கரவெட்டியின் புலமைப் பாரம்பரியத்தை மேனிலைப்படுத்தின என்பது வரலாறு கண்ட உண்மை ஆகும்.

**நிறுவனங்கள்**

கல்வி நிறுவனங்களாம் பள்ளிக் கூடங்களே வாழ்க்கைக் கூடங்கள் என்ற டுயியின் வாக்கிற்கு இணங்க முதலில் இப்புலமைப் பாரம்பரியதிற்கு அடித்தளமிட்டு நெறிப்படுத்திய பாடசாலைகளை நோக்கு வோம். இவ்வகையில் நிறுவனரீதியாக திகழ்ந்தவை மாணிக்கவாசகர் வித்தி யாலயம், சரஸ்வதி வித்தியாலயம், விநாயகர் வித்தியாலயம், விக்னேஸ்வரக் கல்லூரி எனும் நான்குமாகும். இவற்றுள் முதல் மூன்றும் தமிழ்மொழி மூலமான கல்வியறிவை வழங்க விக்னேஸ்வரக் கல்லூரி ஆங்கிலமொழிப் பாடசாலையாக திகழ்ந்தது. அதன் காரணமாக மரபுவழிப் புலமை மரபின் களமாய் மாணிக்கவாசகர் வித்தியாலயமும், நவீன இலக்கிய மரபின் ஊற்றாக விக்னேஸ்வரக் கல்லூரியும் முக்கியத்துவம் பெற்றன. இக்கல்விச்சாலை கள் தமிழும் சைவமும் தழைத்தோங்கும் முகமாக கரவை வேலன் கோவையின் கதைத் தலைவனான சேதுநிலையிட்ட மாப்பாண முதலியார் குடும்பத்தின் ஐந்தாவது தலைமுறையினரான தென்மராட்சி மணியகாரனாக இருந்த இராசவாசல் முதலியார் வீரவாகு சிற்றம்பலம் என்பார் தோற்றுவித்த வையாகும். 3 இவை அந்நியராட்சிக் காலத்தில் விதேசப் பண்பாடும் பிற மதங்களும் பரவிய வேளையில் எமது பண்பாட்டையும் மதத்தையும் பேணிக்காத்த நிறுவனங்களாக திகழ்ந்தமை குறிப்பிடத் தக்கதாகும். இப் பாடசாலைகளும் கல்வி நிலையில் சமூக மேனிலைப்பட்ட அசைவியக் கத்துக்கு இடமளித்தன. அதேவேளை கரவெட்டிக் கிராமத்துள் கிறிஸ்தவ மதம் பெரிதும் வராமைக்கு வழிவகுத்த தூண்களாயும் பண்பாட்டு பேணுகைகளாகவும் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனங்களே யாழ்ப்பாண சமுதாய நிலப்பிரபுத்துவ முறைகளின் கொடுமைகளை ஒழிக்கவும் சமூக மேம் பாட்டு நடவடிக்கைகளுக்கு வித்திட வும் ஏது வாயிற்று. அதுவே கரவெட்டிப் பிரதே

சத்தில் பல சமூக நிலைப்பட்ட மக்களிடமும் ஆக்க இலக்கிய பாரம்பரியத்துக்கு அடிநாதமாக அமைந்தது. மேலும் இந்நிறுவனங்கள் சமூக ஒழுங்கமைப்பைப் பொறுத்த வரையில் இறுக்கமாய் இருந்த போதும் 1946களில் யாழ்குடா நாட்டிலேயே முற்போக்கான செய்கையினை தனது கல்விப்பாரம்பரியத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தையும் இணைக்கும் முறையினை மேற்கொண்டது. அதுவும் மற்றோர் விதமாக ஆக்க இலக்கியத்தை வளர்த்ததெனலாம். அதாவது சமூகக்கொடுமைகளை, அனுபவித்த உண்மைகளை, பார்த்த அனுபவங்களை வெளிப்படுத்தும் எழுத்தாளர் சமூகத்தை உருவாக்கியது. இவ்வாறு சமூக அமைப்பிற்கேற்ப அமைக்கப்பட்ட பாடசாலைச் சமூகமும் அதன் கல்விச் செயற்பாடுமே புலமைப்பாரம்பரிய உருவாக்கத்தின் முதற்படி எனலாம். இதனை

"*மனித இனம் பல்லாண்டு காலமாக முயன்று உருவாக்கிய நாகரிகத்தினை மங்காமல் பாதுகாத்து அதனை மேலும் சிறப்பாக்கவும் கல்வி உதவுகின்றது. மாணாக்கர்களிடையே நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத புதிய மாற்றங்களை வரவேற்கும் மனப்பான்மையை தோற்றுவித்து உலகப் பொதுநோக்கையும் அவர்களிடையே பேணி வளர்த்தது.*" [4]

என்ற கருத்து தெளிவுபடுத்துவதாய் உள்ளது.

அடுத்து உயர்கல்வி நிறுவனம் எனும் வகையிலும் வாண்மை விருத்திக் கல்வி வழங்கும் நிறுவனம் எனும் வகை யிலும் எமது பிரதேச மரபுவழி அறிஞர் களை உருவாக்கிய புலமைசார் மைய மாகிய ஆசிரியர் கலாசாலையை நோக்குவோம். இதுவே ஆரம்பகால புலமைப் பாரம்பரியத்தின் உயர்கல்வி மைய மாகத் திகழ்ந்தது எனலாம். இதனாலேயே கரவெட்டியில் அதிகம் ஆசிரியர் சமூக மாகவே அந்நாளில் இருந்தது. இதனை

"*1930 களில் அரசினர் சேவையில் தமிழாசிரியர்களாகக் கடமை ஆற்றியவர்களில் கணிசமானோர் கரவெட்டியைச் சேர்ந்தவர்கள்*" [5]

என்ற கருத்தானது நிரூபணமாக்குகிறது. இக்கலாசாலைக் கல்வியானது இலக்கியம், இலக்கணம், சித்தாந்தம், சோதிடம் என்பவற்றில் பாண்டித்தியம் பெற வழிவகுத்தது. இவ்வறிவாற்றல் வளர்ச்சியால் பின்னாளில் சைவப்புலவர், பண்டிதர், சித்தாந்தப் பண்டிதர் போன்ற பட்டங்களை அவர்கள் பெற்றுக்கொள்ள ஆரிய பாஷா அபிவிருத்திச் சங்கமும், சைவபரிபாலன சபையும் உதவியமை இங்கு குறிப்பிடத் தக்கது. இதனால் அவர்கள் சமூகத்தில் வைத்தியம், சோதிடம் ஆகிய துறைகளில் புலமையாளர் களாகவும் நீதிவாதிகளாகவும் மதிக்கப்பட்டனர். இதனை

"*மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோரும் ஊரவர்களும் ஆசிரியர்களை மதித்துப் போற்றியும் வந்துள்ளனர். பெரியவர்கள் ஆசிரியர்களையே ஆலோசனை பெறுதல், நாள் பார்த்தல், குடும்பப் பிணைக்குகளைத் தீர்த்தல் என்பவற்றிற்காக நாடியுள்ளனர்*" [6] எனும் கருத்தானது எடுத்துரைக்கிறது.

இவ்வாறு மரபுவழிக்கல்வி நிறுவன மையமாக ஆசிரியர் கலாசாலை காத்திரமானதாகத் திகழ்ந்தது. இதன் வழியே இலக்கிய இலக்கண வித்தகர்கள், மரபுவழிக் கவிஞர்கள், வானியலறிவோடு கூடிய சோதிடர்கள், சரமகவிஞர் போன்ற ஓர் புலமைப் பாரம்பரியம் உருவாவதனை எமது பிரதேச இலக்கிய வரலாற்றின்

வளர்ச்சியிலே கண்டு கொள்ளமுடிகிறது. இவ்வழிவந்த மரபு வாதிகளில் சிலரிடம் உதித்த நவீன சிந்தனைக்கருத்துக்களே இளைய சமுதாயத்தின் மத்தியில் ஊன்றப்படுகையிலே அது மறுபுறம் நவீன இலக்கிய மரபினையும் தோற்றுவித்தது. எனினும் அதனை மென்மேலும் வளம்படுத்தியது எனும் வகையில் பல்கலைக்கழகப் பாரம்பரியமும் குறிப்பிடத்தக்கது.

கரவெட்டியின் புலமையாளர்களை அவர்களிடம் மறைந்திருந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அதன்மூலம் சிறந்த விமர்சகர்களை, ஆக்கஇலக்கிய கர்த்தாக் களை உருவாக்கியது என்ற வகையில் 1950களில் இலங்கைப் பல்கலைக்கழகமும், 1960 களில் பேராதனை பல்கலைக் கழகமும் முக்கியத் துவம் வாய்ந்ததாகும். இதனைத் தொடர்ந்து 1970களின் நடுப்பகுதி யிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் தன் பங்களிப்பை வழங்கிய தெனலாம்.

இப்பல்கலைக்கழகங்களுக் குரிய தமிழ்க்கல்விப் பாரம்பரியமும் சிறந்த பேராசான்களும் தமைத்தேடி வருகை தந்த மாணவர்களுக்கு களமமைத்து இலக்கிய விமர்சன வெளிப்பாடுகளுக்கு உத்வேகம் தந்தனர். இதனால் இன, மத, பிரதேச வேறுபாடற்ற பொதுமைப்பட்ட பண்பு ஏற்பட்டது. மேலும் மேனாட்டு பல்கலைக்கழக மரபினுள் மொழி, இலக்கியக்கல்வியும் வழங்கப்பட்ட தனால் தமிழை நோக்கும் முறையும், பயிலும் முறையும் மரபுவழிப் பாரம்பரியப் பயில்வு முறையிலிருந்து வேறுபடவே நவீன சிந்தனை வளர்ச்சி பெற்ற புதிய புலமைப் பாரம்பரியம் உருவாயிற்று. இவ்வகையில் (பேராதனைப்) பல்கலைக்கழகத்தின் தமிழியல் ஆய்வாளர்களும், பேராசிரியர் களுமான அமரர்கள் பேராசிரியர் கணபதிப்பிள்ளை,சுவாமி விபுலாநந்தர், பேராசிரியர் செல்வநாயகம். பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர், கைலாசபதி என்போரும், பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் தில்லைநாதன், பேராசிரியர் சண்முகதாஸ் போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்தம் நெறிப்படுத்தலின் காரணமாக இக்கற்கை நெறியிலே வந்த தமிழை ஒரு பாடமாகவோ அல்லது சிறப்புப் பாடமாகவோ பயின்ற புதிய பரம்பரையினர் இன்று சிரேட்ட வகுப்புகளில் பாடசாலைமட்டங்களில் பணியாற்றுவதால் மாணவர் மட்டத்திலும் சில நவீன சிந்தனை, சமுதாய நெளிவு சுளிவுகளை இலக்கியத்தில் படைக்கும் ஆற்றல் என்பவற்றை வளர்த்தனர். இதனால் மேலும் புதிய இலக்கிய கர்த்தாக்கள் உருவாக்கின்றமையைக் கண்ணெதிரே காணமுடிகிறது.

இவ் அரசாங்கக் கல்வி நிறுவனங்களுக்கு புறம்பாக புலமைப் பாரம்பரியத்தை வளர்க்க பல்லாற்றலும் துணைநின்ற கல்விசார் நிறுவனங்களை அடுத்து நோக்குவாம். இவையும் கரவெட்டிப் பிரதேச ஆளுமை வளர்ச்சிக்கான அடிநாதங்களாகும். இவ்வகையில் குறிப்பிட்டத்தக்கது ''வாணி கலைக்கழகம்.'' இது பண்டிதர் க. வீரகத்தி அவர்களால் நிறுவப்பட்ட பண்டிதர் தேர்வுக்கான பயிற்சி மையமாகும். இங்கு இலக்கணம், இலக்கியம், தருக்கசித்தாந்தம் எனும் பாடங்கள் நடாத்தப்பட்டன. பிரதேசபண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் பலர் இக்கழகக் கல்வியினால் விசேட சித்தி பெற்றமை மரபு வழிப்புலமைப் பாரம்பரிய

வளர்ச்சியில் பெரும் பங்களிப்பு செய்ததெனக் கருதக்கிடக்கிறது.

இந்நிறுவனம் இலங்கையில் தொல்காப்பியருக்கு முதன்முதல் விழா எடுத்தமை, ஆண்டு மலர் வெளியீடு போன்ற செயற்பாடுகள் மூலம் புலமை வெளிப்பாட்டுக்கு வடிவம் தந்தது. மேலும் சாதாரண மக்கள் சொற்பொழிவுகள் மூலம் கேள்விச் செல்வத்தை பெறும் நோக்குடன் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த தமிழறிஞர்களை அழைத்து சொற்பொழிவு ஆற்ற வைத்ததுடன், புத்தக வெயியீட்டு முயற்சிகளில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும்.

இச்செயற்பாடு மரபு வழிப்புலமை மையமாக அமைய, மறுபுறம் நவீனத்துவ சிந்தனை உருவாக்கத்துக்கு இப்பிரதேச கம்யூனிச கட்சியினர், சிந்தனையாளர்கள் வழிவகுத்தனர் எனலாம். இவர்கள் நிறுவனம் என்ற வகையில் இல்லாவிடினும் வீடுகளில் மார்க்ஸீய வகுப்புகளை நடத்தி அதன்மூலம் முற்போக்கான சிந்தனை களை விதைத்து முற்போக்காளர்களை வளர்த்ததனால் காத்திரம் பெற்றுவிடு கின்றனர். இதனை பேராசிரியர் சிவத்தம்பி தன் பேட்டியில்

"*ஜே. எஸ். ஸி மட்டம் என்று நினைக்கிறேன். முதல் தடவையாக மகாலிங்கம் வீட்டில் நடைபெற்ற ஜெயத்தின் (தர்மகுலசிங்கம்) மார்க்ஸிய வகுப்புகளுக்குச் சென்றேன் அது சிலை எழுத்தாகப்பதிந்தது*"

என்று குறிப்பிடுவதால் உணரமுடிகிறது.

***மரபுவழி அறிஞர்கள்:-***

புலமைப் பாரம்பரியம் உருவாகக் காரணமாயமைந்த பின்னணியாம் நிறுவன அமைப்புகளை நோக்கிய நாம் இனி முதலில் உருவான மரபு வழிப் பாரம் பரியத்தை, புலமையாளர்களை நோக்கு வோம். இவர்கள் அனைவரும் உடுப்பிட்டி சிவசம்புப்புலவரிடமும், புலோலி கந்தமுரு கேசனாரிடமும் புலோலி வ.குமாரசாமிப் புலவர் அல்வாய் சின்னத்தம்பி உபாத்தி யாயர், புலவர் சு. சிவபாதசுந்தரம் ஆகி யோரிடமும் கற்றவர்கள் என்பது வடமராட் சிக் கல்விப் பாரம்பரியத்தின் ஒன்றிணைந்த எம் கல்விப் பாரம்பரிய சிறப்பை உணர்த்து வதாகும். மரபுவழிப் புலமையாளர்கள் வரிசையில் கரவெட்டி கிழக்கு அறிஞர் கார்த்திகேசபிள்ளை, அறிஞர் க.சிற்றம்பல உபாத்தியாயர், அறிஞர் க.பொன்னம்பல உபாத்தியாயர், பண்டிதர் க.வீரகத்தி, திரு. சொ.சிவராமலிங்கம், பண்டிதர் க. சின்னத்தம்பி, கரவெட்டி மேற்கு பண்டிதர் க. மயில்வாகனம், பண்டிதர் சைவப்புலவர் த. பொ. கார்த்திகேசு வித்துவான் வ.நடராசா, திரு. க. கண பதிப்பிள்ளை, திரு. சி ஆழ்வாப்பிள்ளை உபாத்தியார் திரு. க. சிவராசசிங்கம் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

திரு. கார்த்திகேயபிள்ளை எனும் இவர் 1955ல் பிறந்தவர். ந.க. பொன்னையா பிள்ளையிடம் பன்னிரண்டு ஆண்டுகள் புலமைபெற்றவர். இதை வித்துவ சிரோன் மணி கணேசய்யர் என்ற கட்டுரை வலி யுறுத்தும். இவர் நடமாடும் சர்வகலாசாலை எனப்படும் பொன்னம்பல பிள்ளையிடம் கற்ற தன்பேறாக கந்தபுராண விளக்கக் குறிப்பு கள் எழுதி பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையிடம் கையளித்தமை குறிப்பிடத் தக்க புலமைத்துவச் சான்றாகும். மேலும் விபுலானந்தர் ஆகியோரைப் போன்று பிரமச்சாரியாக வேவாழ்ந்து இளமையில் மறைந்தது பேரிழப்பாகும். இவர் தாம் வாழ்ந்த காலத்தில் புராணபடன மரபை வளர்த்துச் செல்லும் வகையில் புராண படனம் படித்து பயனுரைத்து வந்தது கருதத்தக்கது.

அடுத்து குறிப்பிடத்தக்கவர் க.சிற்றம்பலம் உபாத்தியாயராவர். இவர் முன்னுரைக்கப்பட்ட கார்த்திகேச பிள்ளையின் பெறாமகனாவர். இவர் புலோலிப் புலவர் வ.குமாரசாமியிடம் தனது மொழியறிவு பெற்றார். திரு. வ.குமாரசாமி புலவரின் மகன் உளவியல் டாக்டர் கு. சிவப்பிரகாசம் (எம்.எஸ்.ஸி) மிகுந்த புலமைநலம் மிகுந்தவர். இவரிடமும் கற்றவர் பலரெனினும் பண்டிதர் க. வீரகத்தி, பண்டிதர் குகவைரவனார், மன்னவன் மு. கந்தப்பு என்போர் சிலராகும். கிறிஸ்தவ பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றிய போதும் சைவாசார சீலராயிருந்தவர். இவரால் ஆக்கப்பட்ட யார்க்கரு விநாயகர் அந்தாதி (அச்சாகவில்லை) சிறப்புடையது. இவர் சிறந்த புராணபடனகாரர் பின்னாளில் மாணிக்க வாசகர் பாடசாலை அதிபராகத் திகழ்ந்தார். இவருக்குப் பல மாணவர்கள் உண்டு. அவர்கள் இவரது பெருமை உயரும் வகையில் வாழ்வது குறிப்பிடத் தக்கது.

அடுத்து திரு. சு. பொன்னம்பலம் உபாத்தியாயர் குறிப்பிடத்தக்கவர். இவர் முன்குறிப்பிட்ட சிற்றம்பல உபாத்தியாயரிடம் கல்விகற்றவர். ஆழ்ந்த தமிழ்ப் புலமை உள்ளவர். இவர் கரவெட்டி மாணிக்கவாசக வித்தியால யத்தில் கற்பித்தவர். புராணபடன மரபினராகிய இவர் 'சந்தானாசாரியார் சரித்திரம்' என்றொரு நூல் எழுதி 1936ல் அச்சிட்டார். மேலும் பருத்தித்துறை சைவப்பிரகாச சபையாரால் சைவசமயம் கருதி வெளியிட்ட சைவபோதினி எனும் மாதப் பத்திரிகையில் பல சமயக்கட்டுரைகள் எழுதியுள்ளார்.

அடுத்து பண்டிதர் க. சின்னத்தம்பி அவர்களை நோக்குவோம் இவர் 1941ம் ஆண்டளவில் இளமையில் மறைந்த அதிவிவேகி பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையுடன் சமகால ஆசிரியப் பயிற்சிபெற்ற இவரது ஆக்கங்கள் பலவாகும். திருச்செந்தூர் திருவிரட்டை மணிமாலை எனும் அவரது நூலானது வெண்பாவும் கட்டளைக்கலித்துறையும் கலந்த மாலையாக அமைந்துள்ளது .இதிலுள்ள வெண்பாக்கள் புகழேந்திப் புலவரை சமன் செய்யுமளவு நயமிகுந் தவை. மேலும் தச்சை - செல்வச்சந்நிதி மீது மான் விடு தூது தச்சை விநாயகர் பிள்ளைத்தமிழ் (இதில் காப்பு செங்கீரைப் பருவமும் பாடிமுடித்த நிலையில் நிறைவு பெறுமுன் இறையடி எய்தினார்) எனும் நூல்களும் பாலர் கவிதைகள், பாலர்களுக் கான பிள்ளைப்பாடம், எனும் பாடநூல் களும் குறிப்பிடத்தக்கன. அது மட்டுமன்றி தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில் ஆகிய இரண்டிலும் அவர் எழுதிய கட்டுரைகள் புலவர்களால் விதந்து போற்றப்பட்டன. இவர்தம் சொற் பொழிவுகளும் கவர்ச்சி யூட்டுவதாய் அமைந்தது.

அடுத்து க. வீரகத்தியை நோக்கின் இவர் கரவெட்டி மாணிக்க வாசகர் வித்யாலய மாணவராவர். பின் பரமேஸ்வராக்கல்லூரியில் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆசிரிய பயிற்சி பெற்றவர், யாழ்ப்பாணம், சென்னை ஆகிய இடங்களில் நடாத்தப் பெற்ற பண்டிதர் தேர்வில் முதன்மைச் சித்தி பெற்றவர். புலவர் சோமசுந்தரனார் மகன் இளமுருகன், டாக்டர். கு. சிவப்பிரகாசம் (அதிபர்) சு. நவநீத கிருஷ்ணபாரதி வித்துவான் கார்த்திகேசு என்போர் இவரது ஆசிரியர்களாவர். இவர் கரவெட்டிப் பிரதேச மக்கள் தமிழறிவு பெற இலக்கணக்கல்வி அவசியம் என உணர்ந்தவராய் இலங்கைப் பண்டிதர் சங்கம் (வாணிகலைக்கழகம்) நிறுவியவர். அத்துடன் அமையாது இலங்கை வானொலியில் இலக்கணச்சுடர்

எனும் தலைப்பில் சொற்பொழிவுகளை வழங்கினார். (அதுவே கடலும் படகும் எனும் நூலாக வெளிவந்துள்ளது). இவர் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் 'சொல் இலக்கணத்தில் யாப்பின் செல்வாக்கு' என்ற தலைப்பில் சமர்ப்பித்த கட்டுரைக்காக, 'தமிழ் இலக்கணத்திற்கு ஒரு நியூட்டன் என பாராட்டப் பெற்றார். இவரது இலக்கணப் புலமை தமிழ்கூறு நல்லுலகத்தால் பாராட்டப் பெற்றதாகும். இவரது 'இலக்கணவிளக்கம்', 'பிற்கால இலக்கண மாற்றங்கள்', 'இலக்கண விதிகளும் விதி மூலகங்களும்' எனும் இலக்கண நூல்களும் 'செழுங்கமலச் சிலம்பொலி', 'சிவதிபுராணமம்", 'அபிராமி நவநீதம்', 'தங்கக்கடையில்' என்ற கவிதைத் தொகுதிகளும் 'ஓருலகம்', என்ற குறுங்காவியமும் 'கிருதயுகம்" என்ற அவரது சஞ்சிகையும் அறிவாற்றலின் விளைவுகளெனலாம். இவர் தம் சிறப்பு தமிழுலகு போற்றும் பெருமைக்குரியது.

இவ்வரிசையில் இடம் பெறும் திரு. பொ. சிவராமலிங்கம் அவர்கள் தந்தையாரான பொன்னைம்பல பிள்ளையிடம் தமிழும் ஆங்கிலமும் கற்றவர் அதனால் மிகுந்த புலமையும் ஆங்கிலவன்மையும் கொண்ட இவர் வையாபுரிப்பிள்ளை, கா. சுப்பிரமணிய ப்பிள்ளை, மறைமலையடிகள் போன் றோரின் ஆய்வுகளை விமரிசனம் செய்துள்ளார். இவரது விமர்சனங்கள் சிறப்பாக அமைந்ததால் இவரது புலமைத் துவமும் பலராலும் போ ற்றப்பட்டது.

அடுத்து கரவெட்டி மேற்குப் பகுதியினரான பண்டிதர் சைவப்புலவர் த. பொ. கார்த்திகேசு அவர்களை நோக்குவோம். இவர் ஆரிய திராவிடபாஷா அபிவிருத்திச் சங்கத்தில் பண்டிதர் பட்டம் பெற்றவராகவும், சைவசித்தாந்தக் கழகத்தினால் சைவப்புலவர் பட்டம் பெற்றவராகவும் உள்ளார். இவர் குமாரசுவாமி புலவா், நவநீத கிருஷ்ணபாரதி, சோம சுந்தரப்புலவர், மகாலிங்கசிவம் போன்ற அறிஞர்களிடம் பாடம் கேட்டவர். அதனால் இலக்கணப் புலமை மிக்கவராயும் யாப்பில் சிறப்புத்தாடனம் பெற்றவராயும் திகழ்ந்தார். கரவெட்டியில் பல அறிஞர்களுக்கு யாப்பு பாடம் பயிற்றியது குறிப்பிடத்தக்க புலமைச் செயற்பாடாகும். யோகர் சுவாமியின் பக்தரான இவர் சமயப்பற்றாளராயும் முருக பக்தியுடையவராகவும் திகழ்ந்தார் .இவரது சமயப்பற்றுக்கு இவரியற்றிய செல்வச் சந்நிதி வேற்பெருமான் தோத்திரப் பாமாலை, ஒருபாவொருப.்.து எனுமிரு நூல்களும் எடுத்துக்காட்டாகும். சமயம் வளர்க்கும் வகையில் சமயப் சொற்பொழிவுகள் ஆற்றியமையால் 'கொண்டலென பிரசங்கம் பொழியும் மாரி' என புகழப்பட்டார். சைவபோதினி எனும் பெயரில் சைவப்பிரகாச சபையாரால் வெளியிடப்பட்ட பத்திரிகையில் பலவகை யான சமயக்கட்டுரைகள் எழுதியுள்ளார். அத்துடன் அமையாது ஆரிய பாஷா அபிவிருத்திச்சங்கம், உயர்மறைக்கழகம், ஆசிரியர் சங்கம் என்பவற்றுக்கு தலைமைதாங்கி நடத்தியமை இவரது ஆளுமைக்கு ஓர் சான்றாகும்.

இவர் 1940களிலிருந்து அதிப ராகக் கடமையாற்றிய போதும் தன் தமிழ்ப் பணியை தொடர்ந்தார். இளவயதிலிருந்து பத்திரிகைகளுக்கு எழுதிவந்தார். ஈழகேசரி, தினகரன், இலங்கைவித்யா போதினி (தமிழகம்) ஆனந்தபோதினி, சித்தாந்தம் போன்ற சஞ்சிகைகளில் இவரது கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன. இவரது

இரட்டையர் சரிதை, பாரதம் பாடிய பெருந்தேவனார் போன்ற கட்டுரைகளில் தமிழ்ப் பற்றை. ஆய்வுத்திறனை கண்டுகொள்ள முடிகிறது. மேலும் சோதிட ஆய்வை தனது விருப்பு முயற்சியாகக் கொண்டவர். இவரது ஆசிரியப் பதவிக் காலத்தின் பெரும்பகுதி தென்னிலங்கையில் கழிந்ததால் மூன்று முஸ்லீம் பாடசாலைகள் அவரின் தமிழறிவு பெற்று சிறப்படைந்தன. அவ்வகையில் இவரது மாணவனான டாக்டர் உவைஸ் இவர்தம் அறிவாற்றலின் வெளிப்பாடு எனலாம் அதோடு தனது மகனும் மற்றோர் புகழ்பூத்த பேராசிரியரான சிவத்தம்பியின் தமிழறிவின் புலமை ஊற்றாக அமைந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவரது யாப்பிலக்கண ஆற்றலும் கற்பனைச் சிறப்பும் வாழ்த்துக்கவி, சரமகவி ஆற்றல் சிறப்புற வழிவகுத்தன. அக்கால விழாக்களில் அவரது வாழ்த்துக்கவியும், மரணவேளையில் சரமகவியும் இணைந் திருந்தன. அதேவேளை கிருஷ்ணாழ்வார் என்ற நாடகக் கவிஞருக்கு சரமகவி வல்லுனருக்கு அத்துறை சிறக்க இவரது தொடர்பு உதவியது என்ற அறிஞர் கருத்து ஈண்டு கவனிக்கத்தக்கது.

அடுத்து வித்துவான் வ. நடராசா அவர்களை நோக்குவோம். இவர் கரவெட்டிமத்தியைச் சேர்ந்தவர். இவரும் மரபுவழி அறிஞர்களாகிய குமாரசுவாமிப் புலவர், நவநீத கிருஷ்ணபாரதி, மகாலிங்கசிவம் போன்றவர்களிடம் பாடங்கேட்டவர். மிகுந்த யாப்பறிவு மிக்கவர். இவரும் விருத்தங்கள் பாடியுள்ளார். இவருடைய தொடர்பும் கிருஷ்ணாழ்வார் போன்ற கவிஞருக்கு, நாடகக்கலைஞருக்கு சரமகவி பாடும் ஆற்றலை வளர்த்தது என்ற கருத்துக்கள் இவர்தம் புலமைத்துவத்திற்கோர் எடுத்துக்காட்டாகும். "வீ.கிருஷ்ணாழ்வாரின் கவித்துவ ஆளுமை உருவாக்கத்திற்கு கரவெட்டிப் பகுதியின் கல்விப்பாரம்பரியமும் இலக்கியச்சூழலும் கைகொடுத்தன. வித்துவான் க. நடராசா, பண்டிதர். த. பொ.கார்த்திகேசு முதலிய கல்வியாளர்களுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்துக் கொண்டார். இக்கல்வியாளர் நட்பினால் தன்னை யாப்பறிபுலவனாகவும் ஆக்கிக் கொண்டார். தமது கவிதைகளை அவர்களது திறனாய்விற்கு (திருத்தத்திற்கு) உட்படுத்தி வளர்த்தார்." என்ற பல் கலைக்கழக விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராசா அவர்களின் கருத்து ஈண்டு குறிப்பிடத் தக்கது.

இவ்வரிசையில் திரு. க. கணபதிப் பிள்ளை அவர்களைக் குறிப்பிடு வோம். பயிற்றப்பட்ட தமிழாசிரியராகத் திகழ்ந்த இவர், தாம் வாழ்ந்த பிரதேசமும் தலங்களும் சிறப்புப் பெறும் வண்ணம் செய்யுளிலக்கியங்களும் உரை நூல்களும் ஆக்கியுள்ளார். இவரது கரவை தச்சைச் சிலேடை வெண்பா (அச்சானது) அத்துளு அம்பாள் அந்தாதி, திருச்செந்தூர் சிலேடை வெண்பா, பல தலங்களுக்கான திருவூஞ்சற் பதிகங்கள் எனும் ஆக்கங்கள் செய்யுளி லக்கியங்களில் சிறப்பிடம் பெறுவன வாகும். மேலும் நயினை நாகபூசணி அம்மைத்தமிழ், அரும்பத விளக்கக் குறிப்பு, கோணமலை அந்தாதி உரை, ஔவையார் எழுதிய கல்வி ஒழுக்கம் பதவுரை விளக்கம், கந்தபுராணம் யுத்தகாண்டம் (1922 செய்யுள்களைக் கொண்ட முதற் பதினொரு படலம்) பதவுரை விளக்கம் எனும் உரை நூலாசிரி யராயும் திகழ்கிறார். இவர் பத்துப்பாட்டிற்கு முழுமையாக உரை எழுதியபோதும் அச்சிடப்படாமை பெருங்குறையாகும். அத்துடன் கம்பர் சரஸ்வதியந்தாதி உரை, மணிவாசகர் வரலாறு ஓர் ஆய்வு எனும்

நூல்களும் இவர்க்கு பெருமை சேர்த்தன. இவரது கட்டுரைகளில் 'திருமுறைகளில் ஈழத்துத்தலங்கள்' வானொலி - பத்திரிகையிலும் 'சிந்தனைக்கு ஒரு குறள்' (பரிமேலழகரை மறுத்தெழுதியது) வானொலியிலும் வெளியாயின. மேலும் இவரது 1972 - 1977 கால சமயச் சொற்பொழிவுகள் என்பவையும் குறிப்பிடத் தக்கனவாகும். புராணபடன மரபை வளர்க்கும் செயல் முறை யின்போது இசையுடன் ஓதவல்ல வராயும் இவர் திகழ்ந்தமையால் புராணபடனமரபு கவர்ச்சிகரமாகத் திகழ்ந்தது.

கரவெட்டி கிழக்கு வ. கணபதிப் பிள்ளை அவர்களும் இப்புலமை யாளர் வரிசையில் சிறப்பிடம் பெறுபவ ராவர். இவர் பழைய ஏட்டுப்பிரதிகளிலிருந்து எடுக்கப்பட்ட நாட்டுப் பாடல்களை அச்சு வாகனமேற்றும் பணியில் ஈடுபட்டவராவர். மேலும் வடமராட்சிக்கு அப்பால் வரலாற்று புகழ்மிக்க வன்னிவள நாட்டில் வழங்கிய வேலப்பணிக்கர் பெண்சாதி- அரியாத்தையின் பேரில் ஒப்பாரி எனும் நூலை நெல்லியடி சிவகுக அச்சியந்திரசாலையில் பதிப்பித்தார் இவர் பதிப்பாசிரியர் எனும் வகையில் கரவெட்டிப் பிரதேசத்துக்கு பெருமை சேர்த்தவரெனலாம்.

அடுத்து சி. ஆழ்வாப்பிள்ளை உபாத்தியாயரை பார்ப்போமாயின் 1940களில் வாழ்ந்த இவர் ஆசிரியப் பயிற்சி பெற்றதுடன் சுவாமி விபுலாநந்தரோடு நீண்ட பழக்கமுடையமையால் சிறந்த மொழியாற்றல் கைவரப் பெற்றவராயும் திகழ்ந்தார் இதன் காரணமாக கரவெட்டிப் பிரதேசத்துக்குப் புகழ் சேர்த்த கரவை வேலன் கோவை என்ற நூலுக்கு உரை எழுதினார். அது இவருக்கு பெருமை சேர்த்ததுடன் கரவெட்டியின் புலமைப் பாரம்பரியத்தில் தடம்பதிக்க ஏதுவாயிற்று.

மரபுவழிப் புலமையாளர்களில் திரு. வ. சிவராசசிங்கமும் குறிப்பிடத்தக்கவர். இவர் ஆங்கிலப் பட்டதாரியாக திகழ்ந்தமையால் ஆங்கிலப் புலமை கைவரப் பெற்றவராய் காணப்பட்டதுடன் தமிழிலும் இலக்கண இலக்கிய சமய அறிவு விருத்தியும் பெற்றிருக்கிறார். இன்றும் அரச கருமமொழித் திணைக்கள உப ஆணையாளராக இருந்து ஓய்வுபெற்ற பின் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளராகப் பணிபுரியும் இவரது ஆக்கங்கள் பெரும்பான்மை சமயச்சார்புடையவையாக உள்ளன. இவரது நூல்களாக நயினை நாகபூசணி அம்மை பிள்ளைத்தமிழ், பலதல தெய்வ, திருவூஞ்சற் பதிகங்கள், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவை (அச்சில் வரவில்லை) என்பவற்றுடன் கரவை தச்சைச் சிலேடை வெண்பாவுக்கு உரை புலவர் கந்த முருகேசனாரின் நல்லை நாவலன் கோவைக்கு கலாநிதி முத்தையாவுடனிணைந்து எழுதிய உரை, கந்தபுராண சூரபன்மன் படல உரை முதலாகிய உரை நூல்களையும் குறிப்பிடலாம். மேலும் இவர் புராணபடனம் செய்வதில் வல்லவராயும் இலங்கை வானொலி தொலைக்காட்சிப் பேச்சுகள் வழங்குபவராயும் விளங்குவது கரவெட்டிப் புலமைப் பாரம்பரியத்துக்கு வளம் சேர்ப்பதாக உள்ளது.

மரபு வழிப்பாரம்பரியத்தை வளர்த்துச் சென்ற புலமையாளர்கள் வரிசையில் நாடகத்துறையில் புகழ்சேர்ந்த நாடகக்கவிமணி எம். வீ. கிருஷ்ணாழ்வார் குறிப்பிடத்தக்கவர். இவர் கரவெட்டி மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்தவர். 1940, 50 60 களில் யாழ்ப்பாண ஸ்பெசல் நாடகமரபின் உச்ச ஸ்திரிபார்ட் நடிகராக ஆரம்ப காலத்தில் திகழ்ந்தமையால் சுபத்திரை ஆழ்வார் என சிறப்பிக்கப்பட்டவர். அதே

வேளை கூத்துக்களில் பிரதானமான ஆண் வேடங்களை - அம்பிகாபதியில் கம்பர், வள்ளிதிருமணத்தில் நாரதர், கோவலன் கண்ணகி டாப்பர்மாமா ஏற்றுநடித்த போதும் கிருஷ்ணலீலாவில் கிருஷ்ண ராக வந்ததால் கிருஷ்ணாழ்வார் என சிறப்பித்தார் மூத்தகலைஞராகவும் திகழ்ந்தார். இவர்தம் புலமை உணர்ந்த கரவெட்டிப்பிரதேசம் பாராட்டுவிழா நடத்தியதுடன் நெல்லியடியிலிருந்து கரவெட்டித் தச்சந்தோப்பு பிள்ளையார் கோவில் வரை ஊர்வலமாக அழைத்து வந்தது. இதில் கலையரசு சொர்ண லிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டது சிறப்பம்சமாகும். பார்ஸி வழி ஸ்பெசல் அரங்கில் இவர் பொதுஜன அரங்குமுறை அறிமுகப்படுத்தியதனால் 1962, 63 கொழும்பு கலைக்கழக தமிழ் நாடகக் குழுவின் வருடாந்த விழாவில் கௌரவிக்கப்பட்டது அவரது புகழ் இலங்கை முழுமையும் உணரப் பட்டதனை புகல்கிறது. நாடக கூத்து மரபினை வளர்க்கும் நோக்குடன் கரவெட்டிக் கிராமத்திலேயே இரண்டு நாடகங்களை விக்னேஸ்வரக் கல்லூரி யில் கூட்டுறவு நாடகம், கரவெட்டி மேற்கு மக்களுக்கு, மந்திரிகுமாரியும் பயிற்றினர். அவ்வகையில் சிறந்த பயிற்றுநராகவும் தன்திறமையை வெளிப்படுத்தினார்.

இவரது சிறப்புத் தோற்றமாகக் குறிப்பிடத்தக்கது இப்பிரதேச ஆஸ்தான கவிஞராக திகழ்ந்தமையாகும். இதற்கு ஏதுவாக வெண்பா, கட்டளை கலித்துறை இரண்டையும் கரவெட்டி மேற்குப் பண்டிதர் மயில்வாகனத்திடம் கற்றதுடன் வித்துவான் க. நடராசா, பண்டிதர் த. பொ. கார்த்திகேசு முதலியோர் தொடர்பினால் யாப்பறி புலவனாக தம்மை ஆக்கிக்கொண்டார். இதனால் ஸ்பெசல் நாடகங்களில் பாடுவதற்கு புதிய புதிய பாடல்இயற்றும் கவித்துவ ஆற்றலை வளர்த்தார். அதனூடாக புதுமைக் கருத்தைப் புகுத்தவும் பயன்படுத்தினார். இதனை கூத்துக்களில் பறையராக வந்து புலையரை இழிவுபடுத்துவதை எதிர்த்துப் பாடிய சம்பவத்தினாலும் பெண்கள் நாகரிகம் எனும் போர்வையில் தலைகால் தெரியாமல் நடப்பதைக் கண்டித்து பாடிய சம்பவத்தினாலும் கண்டுகொள்ள முடிகிறது. இவ்வாறு கவித்துவ ஆற்றலை கூத்து மேடையில் பயன் படுத்தியபோதும், அது கரவெட்டிப் பிரதேச பண்பாட்டம்சமான சரமகவியிலேயே முழுமை பெற்றது. இது இறப்பிற்காகப் பாடப்பட்ட கவி எனினும் இதில் பலபுதுமைகளைக் கையாண்டார். இக்கவிகளை பொருத்தமான கற்பனை களுடன் உள்ளத்தை உருக்கும் வகையில் புலம்பலாக பாடினார். இவரது சரமகவி ஆற்றல் கண்டு புலவர் கந்தமுரு கேசனார் தன்னிடம் கற்ற மாணவனின் இறப்புக்கு இவரைக் கொண்டு சரமகவி பாடுவித்தது பெருமை சேர்த்த விடயமாகும். இவரது புலம்பல்கள் ஒவ்வொன்றும் கிராம வாழ்க் கையின் அழகியலை பிழிந்து தருபவை யாக அமைந்ததுடன் அடிநிலை மக்களின் இலக்கியத் தேவைகளைப் பூர்த்தி செய்பவையாகவும் அமைந்தன.

இக்கவித்துவ ஆற்றலால் வாழ்த்து மடல்கள், வாழ்த்துப்பாக்கள், பதிகங்கள், கோவில்கள், கடவுளர் மீது தனிப்பட்ட துதிகள் என்பவற்றையும் பாடினார். மேலும் பெரியோர்கள் செய்த சிறப்புச் செயற்பாடு களை புகழ்ந்து பாடினார். இவ்வாறு பாடலால் கௌரவிக்கப்பட்ட பெரியவர் களாக பொன் கந்தையா, ஜீ.ஜீ. பொன்னம் பலம், வதிரிப்பெரியார் சூரன், நீச்சல்வீரர் நவரத்தினம் என்போர் குறிப்பிடத்தக்க வர்கள். இவரது உயிர்த்துடிப்புள்ள கவிதைகள் வரகவி யாகவும் ஆக்கியது.

இக்கவித்துவ மரபில் அடுத்து குறிப்பிடத்தக்கவர் மன்னவன் கந்தப்பு ஆவார். கரவெட்டி மேற்கு பகுதியை சேர்ந்த இவர் ஆசிரியர்பணி புரிந்தவர். இவர் கந்தமுருகேசனார். உடுப்பிட்டிக் குமாரசுவாமிப் புலவர் அவர் மகன் டாக்டர் சிவப்பிரகாசம் என்பவர்களுடைய தொடர் பினால் தமது கவித்துவ ஆற்றலை வளர்த்துக்கொண்டார். மிகுந்த தமிழறிவு வேட்கையினால் பண்டைத் தமிழ்ச்செய்யுள் களை யாப்பு மரபு பிசகாது கற்பனை நயத்துடன் கவிதை வடிப்பவர். கிருஷ்ணாழ் வார் காலத்தின் இறுதிப் பகுதியில் சரமகவி பாடத் தொடங்கிய இவர் இன்றுவரை இத்துறையில் பணிபுரிவது குறிப்பிடத் தக்கது. 1960களில் வானொலியில் கவியரங்குகளை நடாத்தி கரவெட்டியின் புலமையை இலங்கை பூராகவும் பரப்பியவர். இவரது ''குறளாமை எனும் கவிதை தினபதி கவிதைப் போட்டியில் தங்கபதக்கம் பெற்றது. இவர் தம் கவிதை ஆற்றலினால் டாக்டர் சிவப்பிரகாசத்தால் 'மன்னவன்' என்ற பெயர் சூட்டப்பெற்றவர். மேலும் கரவெட்டிப் பிரதேச மையப் பாடசாலைகளான விக்கினேஸ்வரக் கல்லூ ரிக்கும் மாணிக்கவாசகர் வித்தியாலயத்துக் கும் பாடசாலைக்கீதம் இயற்றியமை இவரது புகழை கல்வி உலகில் இடம்பெற வைத்தது. இவரது கவிதைகளில் சரமகவியும் அதிலுள்ள திதி வெண்பாவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாகும். வாழ்த்துக்கவிதைகள் ஆக்கியதுடன் கம்பன் கழக உறுப்பினராகவும் கவித்துவப் பணி புரிந்துள்ளார். இவரது கவிதை களெதுவும் தொகுப்பாகா5 போதும் இவர் கவிதைகள் கரவெட்டி பிரதேசத்தின் அழியாத சொத்தாகும்.

அடுத்து கவித்துவ சிறப்புமிகு கவிஞர் வரிசையில் கரவைக்கிழார் குறிப்பிடத்தக்கவராவர். கரவெட்டி கிழக்கில் பிறந்த இவர் பிரதேச கல்விச்சாலைகளிலே கல்விபயன்றவர். கல்விமானும், சிறந்த தமிழறிஞனுமான பகுத்தறிவுத் தந்தை கந்த முருகேசனாரிடம் கல்வி கற்றவர் அதனால் தன் குருபக்தியை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் 'சான்றோர்' என்ற கவிதை சமர்ப்பித்துள்ளார். இவரது தமிழ்ப்பற்றினை இவரது கவிதைத் தொகுதியான 'கரவைக்கிழார் கவிதை களில் காணமுடிகின்றது. தமிழர் கேட்கும் கேள்வி எனும் கவிதையானது அவரது தாய்மொழிப்பற்றையும் விடுதலைக் கவிதைகள்' தன்மான உணர்ச்சி,விடுதலை வேட்கை என்பவற்றையும் தமிழருக்கு ஊட்டும் உணர்ச்சிமயமான கவிதை களாகத் திகழ்கின்றன. இவை பாரதியின் கவிதைகளை ஒத்த தன்மையுடன் அமைந் திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும் .இவர் கவிஞராக மட்டுமன்றி சிறந்த கட்டுரை ஆசிரியராகவும் திகழ்ந்தமையை சித்தம் அழகியார் எனும் கட்டுரைத் தொகுப்பு நூலில் கண்டுகொள்ளமுடிகிறது. இந்நூலில் பழைய இலக்கியங்கள் காட்டும் பெண்கள் பற்றிய கட்டுரைகள் அமைந்துள்ளன. இவை இவரது பரந்துபட்ட அறிவாற்றலின் சான்றாகவு மமைகின்றன.

இவ் வரன்முறை ஒழுங்கில் மரபு வழிபுலமையாளருட் கரவெட்டி மேற்கை சேர்ந்தவருமான நில அளவையாளர் பண்டிதர் ஆ. தங்கமயில் அடுத்து குறிப் பிடத்தக்கவர். இவர் புலோலி கந்த முருகேசனார், இலக்கண வித்தகர் புலோலி கந்த முருகேசனார், இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர், பண்டிதர் க.வீரகத்தி போன்றோரிடம் தமிழ்ப்புலமைநலம் பெற்றவர். ஆதங்கன் எனும் புனைபெயரில் ஆத்மீகக் கவிதைகள் எழுதியவர் இவரது 'கண்ணன் கவசம்' எனும் நூல் வெளியீட்டு விழாவின் போது இக்கவிதைகளின் திவ்வி

யத் தன்மையினால் 'திவ்விய ஆதங்கன்' என சிறப்பு பெயரால் கௌரவிக்கப்பட்டார். இவரது ஆத்மிக ஞானத்திற்கும் மதப் பற்றிற்கும் எடுத்துக்காட்டாக ரகுராமாய ணம், பகவத்கீதை பாஷ்யம் என்ற நூல்கள் (அச்சாகவில்லை) விளங்குகின்றன. அவற்றுடன் அமையாது புதுமைப் பாங்குடன் மகாகவியின் குறும்பா அமைப்பு வடிவத்தை ஒத்த தன்மையுடன் தறு குறும்பா எனும் அமைவை ஆக்கியதை வண்டு எனும் சஞ்சிகையில் காணமுடி கிறது. இது இவரது கவித்துவத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு.

இவ்வாறு மரபுவழிக் கவிஞர் களின் வரிசை நீண்டு கொண்டே போகுமாயினும் சில கல்விமான்களின் விவரங்களை எம் நாட்டுச் சூழலினால் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. ஆனாலும் இவர்கள் நற்புலமையாளர்கள் என்பதால் அவர்கள் பெயர்களை மட்டும் குறிப்பிடலாம் என எண்ணுகிறேன். வித்துவான் க. கார்த்திகேயன் B.A (பரமேஸ்வரா பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர்) பண்டிதர் க. சிற்றம்பலம் (தலைமை ஆசிரியர், பண்ணாகம்) பண்டிதர் க. மயில்வாகனம் ,வித்துவான் சிவப்பிரகாசம், பண்டிதர் க.கனகசபை திரு. ஆ. கணபதிப்பிள்ளை (தலைமை ஆசிரியர்) எனப்பலரும் குறிப்பிடத் தக்கவர்களாவர். முழுவிவரமுமின்றி இவர்களைப்பற்றி எழுதமுடி யாமையினால் இத்துடன் மரபு வழிப்புலமைப் பாரம்பரிய ஆய்வை நிறுத்திக்கொண்டு நவீன இலக்கிய கர்த்தாக்களை இனி நோக்குவோம்.

### நவீன புலமைப் பாரம்பரியம்

நவீன சிந்தனைப்பாங்கான புலமைப் பாரம்பரியத்திற்கு களமமைத்து வளமூட்டும் பணியில் முன்னின்றவர் பத்திரி கையாளர் எனும் வகையில் கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சி. சிவஞானசுந்தரத்தைக் கூற லாம். இவரது பத்திரிகையான சிரித்திரன் ஈழத்திலே தோன்றிய பத்திரிகைகளுள் வேறுபட்டதாக நகைச்சுவை நோக்குடன் உருவாகி பின் நாவல் சிறுகதை, புதுக்கவிதை, கேள்வி பதில் என்ற அம்சங்களுடன் வெளிவந்தது. இச்சஞ்சிகை கரவெட்டிப் பிரதேசத்திற்குரிய மண் வாசனை கலந்த நகைச்சுவை துணுக்கு கள் மூலம் முத்திரை பதித்தது. இவரால் கரவெட்டிப் பிரதேசத்தின் சாதாரண மனித னான தம்பர் அவரது பட்டப் பெயரான சவாரித்தம்பராக நாடறியும் பாத்திரமாக உலாவந்தமை குறிப்பிடத் தக்கது. அதே வேளை இவரது Mrs. டாமோடிரன், மகுடிபதில் போன்றவைகளையும் கருத் தாழமும் மிக்கவையாக திகழ்கின்றது. இவர் தமது நகைச்சுவைகளுக்கு சுந்தர் எனும் பெயரில் வரைந்த ஓவியங்கள் நகைச்சுவையுடன் சமூக சீர்திருத்தங் களையும், பிரதேசச் சிறப்பம்சங்களையும் வெளிக் கொணர்ந்து அவரை சிரித்திரன் சுந்தர் என்றே புகழ் பரப்பின. மேலும் கரவெட்டிப் பிரதேச பேச்சு வழக்கை ஈழமெங்கும் பரப்பியது. நாட்டின் அடி நிலை மக்களே மண்ணை, மொழியை, கலையை கட்டிக்காப்போர் என்ற முற் போக்குக் கருத்தை ஈ.வே.ரா வழியில் பரப்பியவராயும் திகழ்கிறார்

இவர் ஈ.வே.ரா பெரியாரின் குடி யரசின் அங்கத்தவராகத் திகழ்ந்ததுடன் நெல்லியடி மடத்தில் முற்போக்குணர் வுடைய குழுவினரையும் உருவாக்கினார். அதன் மூலம் ஈ வே.ரா. பெரியாரை வடமராட்சிக்கழைத்து கூட்டம் நடாத்தினார். இவ்வாறு பிரதேசத்தில் மக்களிடையே முற்போக்கு உணர்வை வளர்க்கத் தம் பத்திரிகையையும் பயன்படுத்தினார். இவ் வாறான தனித்துவப் பண்பினால் இவர் பத்திரிகைத்துறைசார் புலமைப்பாரம்பரிய புலமையாளருள் தனி இடம் பெறுகிறார்.

இப்பத்திரிகைத்துறை சார் புலமையாளர் வரிசையில் சிறப்புற குறிப்பிடத்தக்கவர் மூத்த பத்திரிகையாளரும் சமதர்மவாதியுமான சின்னத்தம்பி ஆவர் 'பாரதிநேசன் சின்னத்தம்பி எனப் போற்றப்படும் இவர் கரவெட்டி கட்டைவேலி கிராமத்தில் பிறந்து கம்யூனிச தத்துவத்தால் கரவைக்குப் பெருமை சேர்த்தவர் ஆரம்பக்கல்வியை மாணிக்கவாசகர் வித்யாலயத்திலும். உயர் கல்வியை விக்னேஸ்வரக்கல்லூரி, ஹாட்லிக்கல்லூரியிலும் கற்றவர். அரசியல், இலக்கியம், பொருளாதாரம், வரலாறு போன்றவற்றில் பாண்டித்தியம் மிக்கவரான இவர் பாரதியாரிடம் மிகுந்த பற்றுடையவராய்த் திகழ்ந்தார். இளம் வயதிலே கம்யூனிசக் கொள்கைகளால் கவரப்பட்ட இவர் இறுதி வரை சொல்லும் செயலும் இலட்சியமும் மார்க்சியமாக வாழ்ந்தவர். இவரது கம்யூனிசப்பற்று பீகிங் வானொலியில் தமிழ்ச் சேவையில் கடமையாற்ற வழிவகுத்தது. எனினும் மாஓசேதுங்கின் மறைவையடுத்து நாடு திரும்பிய இவர் தம் வாழ்வை எழுத்துத்துறைக்கே அர்ப்பணித்தார் இவர் பத்திரிகையாளராக விமர்சனக் கட்டுரையாளராக திகழ்ந்தார் தம் எழுத்தாற்றலை பயன்படுத்தி யாழ் மக்களின் வேதனைகளையும் சோதனைகளையும் வெளியுலகிற்கு எடுத்துரைத்தார் இச்செயற்றிற மைக்கு இவரது பத்திரிகைத் துறைப் பணியே பெரிதும் உதவிய தெனலாம். இவ் வகையில் பத்திரிகைப் புலமைப் பாரம்பரியத்தில் தடம் பதித்து பிரதேசத்தில் பெருமை சேர்த்துள்ளார்.

அடுத்து நவீனத்துவ சிந்தனைப் போக்குடைய புலமையாளர்கள் எனும் வகையில் முதலில் குறிப்பிடத்தக்கவர் பேராசிரியர் கா. சிவத்தம்பியாவர். இவர் கரவை மாதா பெற்றெடுத்த நன்மகனாக இலங்கையின் தமிழ்ப் பேரறிஞர் வரிசையில் முதன்மை வகிப்பதுடன் அமைந்துவிடாது உலகம் போற்றும் உன்னத ஆய்வாளராக பரிணமித்து நிற்பதை அவருக்கு வழங்கப்பட்ட திரு. வி. க. விருது உணர்த்திவிட்டது. இவ் இலக்கிய ஆய்வாளர் விருதானது இவர் தம் பல்துறை ஆய்வுகளை பழந்தமிழ் இலக்கியம், நாடகம், சிறுகதை, இலக்கியமும் கருத்தும் அதனூடாக வளர்ந்த நவீன இலக்கிய ஆய்வு அணுகுமுறையை, சிந்தனையை சிறப்பாகத் தமிழின் பொதுமையை காணும் பண்பை உலகுக்கு உணர்த்திவிட்டதெனலாம். இவர் ஏறத்தாழ நாற்பது வருடங்களாக தமது ஆய்வின் வன்மையாலும் புதிய கருத்துருவாக்கங்களாலும் தமிழ் இலக்கியத்தை வளம் படுத்தி வருகின்றார். இவரது ஆரம்பகால ஆய்வுகள் பண்டைக்கால இலக்கியங்களை சமூகவியல் நோக்கில், சிறப்பாக வரலாற்றுப் பொருள்முதல்வாத நோக்கில் நோக்குவதாயமைந்து அதன்மூலம் சங்க கால சமூகம்பற்றி நிலவிய மாயத்திரையை அகற்றி புதிய உண்மைகளை வெளிக் கொணர்ந்தது. இவ்வகையில் அக்கால சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகள், சமூக பொருளாதார உறவுகள், கற்புக்கோட்பாடு என்பவை 'முல்லை சான்றகற்பு' '1966' திணைக் கோட்பாட்டின் சமூக அடிப்படைகள் The Development of Aristocracy in Ancient Tamil Nadu 1971, Organization of Political Authority and Early Tamil Nadu 1987, இலக்கணமும் சமூக உறவுகளும் எனும் ஆய்வுகளால் முன்வைக்கப்பட்டன. அத்துடன் Drama in Ancient Tamil Society எனும் கலாநிதி பட்ட ஆய்வு நூலானது தொன்மை வடிவத்தினை விரிவாக எடுத்துரைத்ததுடன் சமூக வரலாற்றுடன் கலை வரலாற்றையும் இணைத்து நோக்கி நாடகம் பேணப்படாமைக்கானகார ணத்தையும் கிரேக்க வரலாற்றுடன் ஒப்பிட்டு நோக்கில் முன்

வைக்கப்படுவதாய மைந்தது. இது நாடக மரபியலாய் வுகளுள் முதனூலாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து இலக்கணங்களை மரபு நிலை நின்ற புலமையாளரிலிருந்து வேறுபாடாக புதுமைப்பாங்குடன் சமூக வியல் நோக்குகளுடாக ஆய்வு செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் 'இலக்கணமும் சமூக உறவுகளும்' எனும் நூலில் இலக்கண வகுப்புமுறை, அதனூடாக உற்பத்தி உறவுகளை மொழியுடன் தொடர்புபடுத்தி விளக்குகிறார். இவ்வாறான நோக்கு தமிழிலக்கிய வரலாற்றின் மைல்கல் என்றே கூறலாம். அனைத்திலும் மேலாக இவரது 'தமிழில் இலக்கிய வரலாறு' எனும் நூல் உலக ஆய்வாளர்களில் ஒருவராக உயர்த்தி விட்டதெனலாம். இந்நூல் சமூகவியல் பாங்கான வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு காலவகுப்பு செய்வதாய் அமைகிறது. அதாவது இலக்கியங்களின் வழி வரலாறாக நோக்கி சமூக அரசியல் வளர்ச்சியை கொண்ட காலவகுப்பு வகுத்து அதனூடே இலக்கி யத்தையும் வரலாற்றையும் இணைக்கும் போதான பிரச்சனைகளையும் முன்வைத்துள்ளார். இலக்கிய வரலாற்று ரீதியான ஆய்வுகளுள் பக்தி இலக்கியத்தை இலக்கிய ஆக்கங் களாக ஆய்வு செய்தமையும் பிறமத இலக்கியங்களை தமிழ் எனும் பொதுமைத் தன்மையுடன் ஆய்வு செய்தமையும் குறிப்பிடத்தக்க செயற்பாடாகும். இவர்தம் 'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' தமிழில் சிறுகதைகளை விமர்சனப் பாங்குடன் ஆய்வு செய்வதாய மைந்தது மேலும் நாவல் இலக்கியத்தை மானிடவியல், சமூகவியல் முதலிய துறை களுடன் கொண்ட உறவுகளுடாக முதன்மைப்படுத்தி நோக்குவது புதுமை யாகும்.

இவர்தம் ஆய்வு வெறுமனே நவீன இலக்கியப்பிரிவுகளுடன் மட்டும் அமையாது தமிழிலும் ஈழத்திலும் தோன்றிய இலக்கிய இயக்கங்களினை சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டு நிலைநின்று அணுகமுற்பட்டுள்ள முயற்சி -தனித்தமிழ் இயக்கம், முற்போக் கெழுத்தாளர் சங்கம் - கவனிக்கத் தக்கது. இலக்கிய வரலாற்றிலும் ஈழத்தின் தனித்துவ வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு காலவகுப்புகளாக ஆய்வு செய்த ''ஈழத்தில் தமிழ் இலக்கியம்' எனும் நூல் காத்திரமான செயற்பாடாகும். அதேவேளை ஈழத்தில் பலராலும் இனம் காணப்படாத புலமையாளர்களை, அவரது அறிவாற் றலை புலமைத்துவத்தை உலகுக்கு வெளிப்படுத்தியமை உன்னத செயற்பாடாகும். மேலும் பிரதேசப் பற்றுடன் பிரதேசத்தினதும் தமிழரதும் அரசியல் பண்பாட்டு அம்சங்களை எடுத்துரைக்கும் வகையில் 'யாழ்ப்பாணம், சமூகப் பண்பாடு, கருத்துநிலை' எனும் நூலினையும் இலங்கைத்தமிழர் யார், எவர் என்ற நூலையும் ஆக்கியுள்ளார். நவீன யுக வளர்ச்சிப் போக்கிற்கிணங்க தகவல் தொழில்நுட்ப ஆய்வு தமிழில் செய்யப் படவேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு ''தமிழ் சினிமாவும் சமூகமும், பண்பாட்டுருவாக்கத்தில் பத்திரிகையின் பங்கு, தொடர்பூடகம் வளர்த்த தமிழ் என்ற ஆக்கங்களால் இளைய சமூகத்திற்கு வழிகாட்டியுள்ளார். இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங் களிலிருந்து நவீனயுக சிந்தனைகள் வரை அனைத்தையும் மார்க்சிய சமூகவியல் நோக்கில் மார்க்சிய பார்வையுடன் விமர்சனம் ஆய்வு செய்ததன்மூலம் பல புதிய சிந்தனை களை, கருத்துக்களை இளைய சமுதாயத் திற்கு வழங்கிய இவர் யோகர் சுவாமி களின் வாக்குப்போல இப்பிரதேசத்தின் சிவத்தம்பியாகவே திகழ்கிறார்.

கரவெட்டிப் புலமைப் பாரம் பரியத்திற்கு ஆக்க இலக்கியம் எனும் துறையில் புகழாரம் பதித்த செ. கதிர்காம நாதன் அடுத்து குறிப்பிடத்தக்கவர். கரவெட்டி மணல்ப்பாதியைச் சேர்ந்த இவர் இளமையிலேயே தமிழின் உன்னத ஆக்க இலக்கியகர்த்தாவாகத் திகழ்ந்ததுடன் 1969ல் சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றுள்ளார். இவரது முதற்சிறுகதைத் தொகுப்பான 'கொட்டும் பனி' சிறந்த சிறுகதைத் தொகுப்பென பாராட்டுப் பெற்றது. மேலும் மொழிபெயர்ப்பு இலக்கியங்களை தமிழில் வழங்குவதிலும் சிறப்புப் பெற்றவராக இவர் திகழ்ந்தார். பிரபல முற்போக்கு எழுத்தாளரான கிஷன் சந்தரின் சில சிறுகதைகளை மொழி பெயர்த்துள்ளார். இச் சிறுகதைகள் உள்ளடக்கிய 'நான் சாகமாட்டேன்' ஈழத்திலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க நூலாகும். 1961ல் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான இவர் தம் தமிழாற்றிலினால் 62-63ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்ச்சங்கமலரான 'இளங்கதிர்' சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தபோது அம்மலரில் முதன் முதல் குறுநாவல் போட்டியை நடாத்தினார். அத்துடன் தம் சக மாணவர்களுடன் இணைத்து 'சோளகம்' என்ற தலைப்பில் சிறுகதையில் பரிசோதனை முயற்சி செய்தார். அதில் வெளியான இவரது கதையில் கரவெட்டிப் பிரதேசத்தை அதிலுள்ள நிலப்பிரபுத்துவ மேலாண்மையை, அதனால் அடிமைப் படுத்தப்படும்- சுரண்டப்படும் மக்கள் கஷ்டம், வாழ்வியல் பிரச்சனை என்பன இடம்பெற்றன. அக்காலத்தில் வெளியான 'கதைப்பூங்கா' என்ற பன்னிருவர் சிறுகதைத் தொகுதியில் இவரது கதையும் ஒன்றாக விளங்குகின்றது. மேலும் இவரது 'கிராமத்துப்பையன் கல்லூரி செல்கிறான்' எனும் சிறுகதையானது க.பொ. த. சாதாரண வகுப்பிற்குரிய விருப்பத்திற்குரிய இலக்கிய பாடநூலில் முதலாவதாக சேர்க்கப்பட்டிருப்பது கரவை மண்ணிற்கு கிடைத்த கௌரவமாகும். இவரது 'வெறும் சோற்றுக்கே வந்தது,' 'வியட்னாமே உன் தேவதைகளின் வாக்கு' எனும் சிறுகதைகள் புரட்சிகர சிந்தனையை எடுத்துரைப்பதாக உள்ளன. இவர் கதைகளில் தனிமனிதப் பிரச்சனை, சமுதாயப்பிரச்சனையாக உருமாற்றம் பெறுகிறது. இவர் பாரதியைப் போல் தெளிந்த சிந்தனையுள்ளவராக இருப்பதை இவரது என்னுரை புகல்கிறது.

"கலையும் இலக்கியமும் மக்களுக் காகவே என்ற கோட்பாடுடைய வன் நான் ஒடுக்கப்பட்ட மக்களது வாழ்க்கையின் பிரதி பலிப்புக்களும் விளைவுக்களுமே என்கதையின் உள்ளடக்கம். வாழ்க்கை தாங்கொணாத அழுத்திச் செல்கிற சுமையாக ஏன் இருக்கிறது என்பதை துருவி ஆராயும் உளப்பாங்கே என்கதையின் ஊற்றுக்கண்" [8]

என்று சிறுகதை சமூகப் பிரச்சனை யின் வெளிப்பாடாக, மக்களின் தேசிய பாரம்பரியச் செழுமைக்கு அடிகோல வேண்டும் என்ற கருதுகோளை முன் வைத்ததன் மூலம் சிறுகதை உலகில் முத்திரை பதித்துள்ளார்.

இவர் சிறந்த சிறுகதையாசிரிய ராகத் திகழ்ந்தாலும் சிறந்த கவிஞராகவும் விளங்கினார். கவிதைகளிலும் கற்பனைச் சிறகடித்து பறந்து செல்லாது மண்வாச னையை பிரதிபலிக்கிறார் எனலாம். இவர் தனது பல்கலைக்கழக முதலாம் வருடத்திலே நடைபெற்ற கவிதைப் போட்டியில் கலந்து பாரதியின் குயிற் பாட்டின் மையக்கருவான பட்டப்பகலில் பாவலர்க்குத் தோன்றுவது என்பதை அடிப்படையாகக் கொண்டு 'நானுந்தான்

பார்த்துவிட்டேன்' எனும் கவிதையை எழுதி மூன்றாம் பரிசுபெற்றார் இக்கவிதையூடே கவிஞா தம் கற்பனைச் சிறப்பைக் கூறி, ஆனால் யதார்த்தத்தில் சந்தையில் கூப்பாடு போடும் பெண்களிடம் குயில் மொழி இல்லை என சாதாரண நிலைநின்று கூறுகிறார். இக்கவிதை சங்க இலக்கிய மாநாட்டில் இடம் பெற்றதாகும். இவ்வாறு ஒரு சில கவிதைகள் எழுதிய போதும் சிறந்த புனைகதை ஆசிரியராகவே வாழ்ந்தாரெனலாம். இவர் மிக இளமைப் பருவத்திலேயே காலமானது ஈழத்தமிழிலக் கியத்திற்கு ஈன்று உவந்த கரவை மண்ணுக்கும் நேர்ந்த பேரிழப்பாகும்.

அடுத்து இவரது சம காலத்திவரான திரு. சோமகாந்தன் அவர்களை நோக்கு வோம். இவர் சிறுகதை, ஆசிரியராக, நாவ லாசிரியராக மற்றும் பல இலக்கியத்தரமான மலர்களின் ஆசிரியராக பணிபுரிந்து மணிவிழாக்கண்ட புலமை நெறியாளராவார். இவர் கரவெட்டியின் ஒருபகுதியான கரணவாயைச் சேர்ந்தவர் .இவர் கரவையூர் சோமு, புதுமைப் பிரியன், கலாமதி, சோமகாந்தன் என்ற பெயருடன் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்தார். இன்று 'ஈழத்து சோமு 'என தன் பெயரை மாற்றிக்கொண்டவர். இவரது ஆரம்பக் கல்வி கரவெட்டியின் ஆங்கிலப் பாடசாலையாக திகழ்ந்த விக்னேஸ்வரக் கல்லூரியில் அமைந்தது. 1960களில் இலக்கியத்தரமான சிறுகதைகளை எழுதி வாசகர்களின் கவனத்தைக் கவர்ந்த இவர் பிற்பட்ட காலத்தில் இந்து கலாசார ஆய்வுக் கட்டுரைகளில் கவனம் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. இவரது 'ஆகுதி' 'நிலவோ நெருப்போ' எனுமிரு சிறுகதைத் தொகுதிகளும் அவரது சிறுகதைப் படைப்பாற்றலுக்கு எடுத்துக்காட் டாயமைவன. இச் சிறுகதைகளில் கதை ஆரம்பத்தை எடுப்பாயமைத்து வாசகரைக் கவரும் நடையில் எழுதும்பாணி, பாத்திரங்களை வாசகர் மனக்கண்கொண்டு வருவதுடன் அதனூடாக மக்கள் வாழ்க்கை சமூகப் பிரச்சனைகளை உணர்த்துவதாயும் சமூகப் பிரச்சனைகளை உணர்த்துவதாகவும் அமைகிறது. இக் கதைகளில் பிராமணர்களின் சமூகப் பிரச்சனை, உயர்சாதியினரின் அடாவடித் தனம், உழைக்கும் வர்த்தகத்தினர் எதிர் நோக்கும் இன்னல்கள் என்பவை முன்வைக்கப்படுகின்றன. இவ் யதார்த்தப் பண்பினால் ''தமிழ்சிறுகதை வளர்ச்சிக்கும் வளத்துக்கும் ஈழத்து எழுத்தாளர்கள் கணிசமான அளவு பங்காற்றியிருக் கிறார்கள் குறிப்பிடத்தகுந்த ஈழத்துச் சிறுகதைப் படைப்பாளிகளில் ஈழத்து சோமுவும் ஒருவர்''[9]

என்று வல்லிக்கண்ணனால் போற்றப்படுகிறார்.

இவரது நாவலிலக்கியப் படைப்பாக 'களனிநதி தீரத்திலே, விடிவெள்ளி பூத்தது, பொய்கை மலா' எனும் மூன்று நாவல்களைக் குறிப்பிடலாம். இதில் முதலிரண்டு நாவல்களும் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட நலிவுற்ற பிரிவினர்பால் மிகுந்த ஈடுபாட்டையும் மானுடத்தின் மகிமைக்கான போராட்டத்தில் ஆழமான அக்கறையையும் எடுத்துக் காட்டுவன வாயுள்ளன. மேலும் இந்நாவல்கள் தனது சமூகத்தின் வாழ்வை, ஏற்ற இறக்கங்களை, அவலங்களை புதிய கோணங்களில் எடுத்துக்காட்டுவதாயும் உள்ளது. விடி வெள்ளி பூத்தது எனும் நாவலில் பிராமண சமூகம் ஆசாரத்தால் அமுக்கப்படுவதை நெஞ்சைத் தொடும் வகையில் சித்தரித்ததுடன் அதனூடாக தமிழர் வரலாற்றில் நடைபெற்ற இனக்கலவரப் பாதிப்புகளையும் கதைப்பின்னலூடே எடுத்துரைப்பது அவரது சமூக நோக்கினைக்

காட்டுகின்றது. மேலும் இவரது 'பொய்கை மலர்' நாவல் ஆன்மீகப் பண்பாட்டு உணர்வை, கதிர்காமயாத்திரை மரபை இலங்கையின் முருக வழிபாட்டு முறையை கூறுவதாய் உள்ளது.

இவரது பல்துறைப் போக்கினை உணர்த்தும் வகையில் ஈழத்து இலக்கியம் - ஒரு பல்துறைப்போக்கு எனும் நூலானது 15 கட்டுரைகளை கொண்டு விளங்கு கின்றது. இந்நூலில் நாவல், சிறுகதை, இலக்கியத் திறனாய்வு, இலக்கியச் சிற்றேடுகள், இலக்கியத்தில் பத்திரிகை, வானொலி, எழுத்தாளர் சங்கங்கள் என்பவை பற்றி ஆய்வு செய்வதாக உள்ளது. இவை அவரது விமர்சனப் பாங்கினை சித்தரிப்பனவாகவும் உள்ளன. இவர் ஆக்க இலக்கியப் பாரம்பரியத்துடன் மட்டும் அமையாது மிகத்திறமைவாய்ந்த இலக்கியவிழா ஒழுங்கமைப்பாளராகவும் திகழ்ந்தார். இதனை இவர் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற யாழ்ப்பாணம் முற்போக்கு எழுத்தாளர் சங்க விழா பேரரங்கு, இலங்கை கலாசார பேரவையின் நாவலர் சிலையை யாழ்ப்பாணம் கொணர்ந்த விழா, என்பவை எடுத்துரைப்பனவாகும். ஒட்டுமொத்தமாக நோக்கின் இவரும் கரவெட்டிப் புலமைப் பாரம்பரியத்திற்கு பெருமை சேர்த்தவரெனலாம். இவருக்கு கிடைத்த இலக்கிய குருசில் தமிழ் மாமணி, தமிழ்ஒளி எனும் சிறப்புப் பட்டங்கள் புகழுரைக்கும்.

கரவெட்டியின் டலமைப் பாரம் பரியத்திற்கு சிறப்பிட பெற்றவராக குறிப்பிடத்தக்கவர் ச ணமகேஸ்வரன் ஆவார். கரவெட்டி மேற்கு நுகவில் பகுதியைச் சேர்ந்த இவர் தாரகை சஞ்சிகையின் ஆசிரியராக கடமை புரிந்ததுடன் சிறுகதை, குறுநாவல், கவிதை களை எழுதிவரும் ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும் உள்ளார். இவரது முதல் ஆக்கம் சிரித்திரனில் வெளிவந்தது. எழுதுவினைஞரான இவரது புனைப்பெயர் 'மணிமணாளன்' இவர் அகில இலங்கை ரீதியான குறுநாவல் சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்றவர் இவரது 'அதிர்வுகள்' கதை உயிர்ப்புகள் எனும் கதைத்தொகுதியில் இடம்பெற்றுள்ளது. இவரது சிறுகதைகளிலும் கரவெட்டிப் பிரதேசமும் அதன் சமூக அமைவுமே களமாக அமைந்தமை குறிப்பிடத் தக்கதாகும். அவ்வகையில் இவரது கதைகள் சமகால சமூகநிலைப்பாட்டைக் கூறும் அதேவேளை புரட்சிகர சிந்தனை களையும் விதைத்துள்ளார். இதனை இவரது அதிர்வுகள் (மல்லிகை 85) கதையில் காணமுடிகிறது. இது எம் மத்தியில் காணப்படும் ஹரிஜனம் எனப்படும் பறையடிப்போர் அவலமும் நிலப்பிரபுவின் அடாவடித்தனமும் என்ற கருப்பொருளில் அமைந்த போதும் அதனூடே இளைய தலைமுறையின் எழுச்சிக்குரலையும் உரைக்கிறது. மேலும் இவர் சிறந்த பத்திரிகையாசிரியராக செயற்பட்டதனை "தாரகை" இதழ்கள் புகலும். தரமான ஆக்கங்களை தேர்ந்து வெளியிட்டதுடன் இளைய சமுதாயத்தை வழிநடத்தும் வகையில் அமைந்த செயல்முறையாலும் ஈழத்தமிழிலக்கிய வரலாற்றில் சிறப்புப்பெறுகிறார்.

அடுத்து கால வரன்முறை ஒழுங்கில் குறிப்பிடத்தக்கவர் கரவெட்டிப் பகுதியான கரணவாய் கிழக்கைச் சேர்ந்த ச. முருகானந்தன். 1976 ஆவணி முதல் எழுதிவரும் இவர் வைத்தியத்துறையினராக இருந்தபோதும் இலக்கியத்துறையிலும் ஈடுபாடு உடைய வராக திகழ்ந்தார். இலக்கியம் என்பது சமூகத்தை செம்மைப்படுத்தும் ஆத்மார்த்த மருத்துவம்

என்ற வகையில் மானுட நேயத்துடன் எழுதிவருகிறார். சிறுகதைகள் மூலம் இலங்கைத் தமிழ் உலகிற்கு அறிமுகமான இவர் தமிழகத்தின் பல இலக்கிய சஞ்சிகைகளில் தனது சிறுகதைகளை வெளியிட்டதன் மூலம் தமிழிலக்கிய உலகிற்கே பொதுவானவராக விளங்கு கிறார். இவரது கதைகள் தினகரன், வீரகேசரி, ஈழநாடு, ஈழநாதம், சஞ்சீவி, ஈழமுரசு, மல்லிகை, சுடர், தாயகம், சிரித்திரன், சிகரம், தீபம், கணையாழி, இதயம்பேசுகிறது முதலான பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந் துள்ளன. சிறுகதை எழுதத்தொடங்கிய போதிலேயே சென்னை இலக்கிய சிந்தனை பரிசினை பெற்ற இவர் ஈழத்துச் சிறுகதைப் போட்டிகளிலும் குறுநாவல் போட்டிகளிலும் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது. கணையாழியில் வெளியான 'புலி' சிறுகதை ஹிந்து, தெலுங்குமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் இவரது சிறுகதைகள் ஈழத்துச்சிறுகதை மஞ்சரி, சென்னை இலக்கியச் சிந்தனையினரின் 'அற்பஜீவிகள்' சிறு கதைத்தொகுதி ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளன. இவரது மீன்குஞ்சுகள் சிறுகதை, சென்னை இலக்கியச் சிந்தனைப் பரிசினையும் அகில இலங்கை கத்தோலிக்க மஞ்சரியினரின் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசும் 'சுடர்' மணிக்கதை சிறுகதைப்போட்டிகளில் பரிசு களையும் நீர்பாசனத்திணைக்களத் தமிழ் மன்ற சிறுகதைப்போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றது. இவர் ச. முருகானந்தன் என்ற இயற்பெயரில் முருகு, தமிழ்பித்தன் என்ற புனைப்பெயரிலும் எழுதிவருகிறார். இவர் தாம் வாழும் சமூகத்தை சீர்திருத்தும் முயற்சிகளை கலை யாக்கத்தின் மூலம் மேற்கொண்டவர் .அவ்வகையில் இவரது ஆக்கங்களில் வர்க்க முரண்பாடுகள், நிலமானிய அமைப்புகளின் சீர்கேடுகள், சாதிபேதங்கள், பெண்ணடிமைத்தனம் என்பவை கண்டிக்கப்படுகின்றன. அதேவேளை இவரது 'அலியன்யானை' சிறுகதைத்தொகுதியும், [1] ''ஓர் இளம் விதவை தனியே வாழ்கிறாள்'' என்ற இரு குறுநாவல் தொகுப்பும் இவரது சமகாலகட்ட சமூக பிற்போக்கு தனங்களை தகர்த்துஎறியும் நேர்மையுள்ள. எழுத்தாளனின் நிலைப்பாட்டை காட்டுவதாய் உள்ளது. இவரது புலமைத்துவத்தினை

''*இவரது ஆரம்பச் சிறுகதைகள் வளமான எதிர்காலப் படைப்புகளுக்கு கட்டியங்கூறி நிற்கின்றன. முற்போக்கு சிந்தனைகள் இயல்பாகவே கதையோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன.*'' [10]

என்ற பேராசிரியர் கைலாச பதியின் கருத்து சிறந்த விமர்சனமாகின்றது.

அடுத்து குறிப்பிடத்தக்கவர் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளரும் கரவெட்டி யின் ஒரு பகுதியான கரணவாயைப் பிறப் பட மாக கொண்டவருமான செ. யோக ராசா. இவரும் இளவயதிலேயே பத்திரிகை களில் கவிதைகள், கதைகள் எழுதியவர் பரிசில்கள் பெற்றவர் - இவர் மல்லிகை, அனல், தாமரை, தீபம், ஆகிய சஞ்சிகைகளில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவரது புனைபெயர் ''கருணையோகன்''. இவரது ''அகதிகள் சிறுகதை'' சிங்களத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, கட்டுரைத் துறையிலும் விமர்சனத்துறையிலும் அதிக நாட்டமுள்ள இவர் ''வங்காள நாவல்கள் தமிழ் நாவல்களில் ஏற்படுத்திய தாக்கம்''. எனும் நூலை எழுதியுள்ளார். இவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையினை

பற்றிய ஆய்வினை மேற்கொண்டு முதுகலை மாமணிப்பட்டமும் ''20ம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் கவிதை'' ஆய்வினை செய்து கலாநிதிப் பட்டமும் பெற்றவர். ஒப்பியலாய்வு, விமர்சனம், ஆகிய துறைகளில் கொண்ட ஈடுபாட்டினை இவரது ''சுவாமி விபுலானந்தரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும்'' எனும் தலைப்பில் விபுலாநந்தர் நினைவுப் பேருரை வழங்கியமை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. மேலும் ''விபுலானந்த அடிகளாரின் தமிழ்ப்பணி சில குறிப்புகள், விபுலானந்த அடிகளின் நவீன இலக்கிய நோக்கு'' எனும் கட்டுரைகள் விபுலானந்தர் மீதான ஈடுபாட்டை காட்டுகின்றன. இவர் கவிதை '' மல்லிகைக் கவிதைகள், எனும் கவிதைத் தொகுதியில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. ''உயர்திரு. கந்தசாமியும் ஒரு மனித ஊர்வலமும'' எனும் இக்கவிதை கரவெட்டியின் சமூக இறுக்கத்தை சாதியமைப்பை சித்தரிப்பதாக அமைந்துள்ளது. அதேபோல சிறுகதைகளிலும் கரவெட்டியின் மண்வாசனை பிரதிபலிப்பதைக் காணலாம். தற்போது பல்கலைகழக விரிவுரையாளராக பணிபுரிவதால் அதிக அளவில் கட்டுரை விமர்சனத் துறையிலேயே ஈடுபடுவதைக் காணலாம்.

அடுத்து பல்கலைக்கழக சமூகத்தினை சார்ந்து நின்று புலமைத்துவத்தை வெளிப்படுத்திய வரான சி.சிவலிங்கராஜா அவர்களை நோக்குவோம். இவர் தமிழியல் ஆய்வாளராக விளங்குகின்றார். இவரது சிறப்புக் கலைமாணி பட்டத்திற்கான ஆய்வு ''வடமராட்சியின் கல்விப்பாரம்பரியமும் இலக்கிய வளமும்'' என்ற தலைப்பிலே நூலாக வெளிவந்தது. இந்நூல் வடமராட்சிப் பிரதேச சமூகபண்பாட்டு வரலாறு பற்றிய ஆவணமாகவும் உள்ளது. அதேவேளை இளைய சமுதாயம் ஈழத்தமிழர் பாரம்பரியத்தை பல்வேறு கோணங்களில் ஆய்வுசெய்வதற்கு துண்டுகோலாயிற்று எனலாம். மேலும் இவரது சி.வை.தாமோதரம்பிள்ளை எனும் சிறுநூலானது அவரது தமிழ்ப்பணி, பதிப்புப்பணி பற்றி ஆய்வு செய்வதாக உள்ளது. இவர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே சிறப்பு ஈடுபாடு கொண்ட தன்மையால் ''ஈழத்துத் தமிழ் இலக்கிய செல்நெறிகள்'' எனும் ஆய்வு நூலினை எழுதியுள்ளார். இது இவரது அண்மைக்கால வெளியீடாக அமைந்து ள்ளது. இது ஈழத்து இலக்கிய வரலாறு சார் விடயங்களில் அதன் ஆய்வுகளில் கொண்ட ஆவலின் வெளிப்பாடாகவும் உள்ளது எனலாம். இவர் ஆரம்பகாலத்தில் மரபுவழித் தமிழ் அறிஞர்களுடன் மரபுவழிப் புலமைத்து வத்தை வளர்த்த போதும் பல்கலைக்கழக கல்விநிறுவனத்தால் நவீனத்துவ சிந்தனை மரபுடன் இணைத்துக் கொள்ளப்பட்டவர். தமிழ் நாட்டில் நடைபெறும் கருத்தரங்கில் பல ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியவர்.

அடுத்து கரவெட்டி மேற்கைச் சேர்ந்த ஆனந்தமயில் அவர்களை நோக்குவோம். இவரது ஆக்கங்கள் நூல் வடிவில் வராவிடினும் பல்துறைப் பாங்குடையதாக அமைகின்றன. இவரது சிறுகதைகள் சமுதாயப்பிரச்சனைகளை மையமாகக் கொண்டமைந்துள்ளன. இவ்வகையில் ஒரு கட்டுமரம் காத்திருக்கிறது, விளக்கீடு, திருவிழா, ஒற்றைக்கால் கோழி, நண்பனும் ஒரு புளியமரமும், ஒளிபிரவாகம், எனும் சிறுகதைகள் குறிப்பிடத்தக்கன. இவர் மல்லிகை, வீரகேசரி, தமிழோசை, அலை, சமர், மறுமலர்ச்சி, தினக்குரல் என்பவற்றில் 70களிலிருந்து

எழுதி வருகிறார். இவரது ஓர் எழுது வினைஞனின் டயறி, கொழும்பு, நீர்ப்பாசனத் திணைக்களத் தமிழ் பண்பாட்டுக்கழக போட்டியில் இரண்டாவது பரிசையும் ''முருகைக் கற்கள்'' யாழ் இலக்கிய வெள்ளி விழாப்போட்டியில் இரண்டாவது பரிசையும் பெற்றது. குறிப்பிட்த்தக்கது இவர் மொழிபெயர்ப்புத் துறையிலும் ஈடுபட்டார் இதனை லூசினின் ''ஒரு பைத்தியக் காரனின் தினக்குறிப்பு'' என்ற மொழிபெயர்ப்புக்கதை மூலம் காணமுடியும். இவரது நாடகத்துறைப் பங்களிப்பை 1981ல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூலம் வழங்கிய ''எதற்கும் ஓர் எல்லை அல்லது சுயநிர்ணயம்'' எனும் நாடகமும் 'சீதனம்' போன்ற நாடக ஆக்கங்களும் எழுத்துக் காட்டுவனவாகும் இவரது கவிதைகளும் 80 களின் பின் வெளிவந்தனவாகும் இதில் ''வீச்சு வனிலக் காரணின் மழைக்கயிறு' மல்லிகையிலும் 'மாதுளம் பிஞ்சுகள்' சமர் இதழிலும் வெளிவந்த சமுதாய நோக்குடைய கவிதைகளாகும். அதே வேளை மரபு வழிக்கவிதையாக 'நவசக்திப் பாமாலை'யும் அமைந்து ள்ளது. இவ்வாறு ஆக்க இலக்கியப் பாரம்பரியம் வளர்ச்சி பெற்று வருகையில் கரவெட்டிப் புலமைப் பாரம்பரியத்தில் புதிய சிந்தனை வளர்ச்சியை காணமுடிகிறது. இவ்வகை யில் புதியதொரு இளைய சமுதாய தோற்றத்தையும் காணலாம்.

நவீனத்துவமான சிந்தனைப் போக்குடைய ஆக்க இலக்கிய கர்த்தாக்களில் இளைய சமுதாயத் தினரில் முன்னணியில் குறிப்பிடத் தக்கவர் கரவெட்டி மேற்கு மத்தொனியினரான ரஞ்சகுமார் ஆவார். இவரது கதைகள் கலைத்துவச் செறிவோடு எடுத்துக் கூறும் முறையும் புதுமையைக் கையாளும் மொழி ஆற்றலுமுடையவையாக விளங்கு கின்றன. அது மட்டுமன்றி சமகால சமுகச் சூழலை சித்தரிப்பதிலும் சிறப்பான ஆளுமையுடையவராக சிறுகதை உலகில் தனி இடம் வகிக்கிறார் அதுவும் யாழ்குடாநாட்டில் போர்க்காலச் சூழலில் இளைஞர் சமுதாயம் எதிர்நோக்கிய பிரச்சனை, இயக்கங்களின் தோற்றம் தமிழ் மக்களின் தவிப்பு, வேதனை அனைத்தையும் 'கோசலை,' 'காலம் உனக்கொரு பாட்டெழுதும்' போன்ற படைப்புக்கள் மிக அற்புதமாகச் சொல் கின்றன. இவரது 'மோகவாசல்' எனும் கதையானது புதுமைப்பித்தன் போல சற்று மாறுபட்ட நோக்குடையதாய் அமைவது சிறப்பாகும் இக்கதையூடே மோகமும் அனுபவித்துமுடிக்கையில் ஒரு மாயையாக மலபந்தம் நீக்கும் வழியாக அமைவதை கத்திமுனையில் நடப்பதுபோல் சித்தரிக் கிறார்.

இவரது 'சுருக்கும் ஊஞ்சலும்' 'கபரக்கொய்யாக்கள்' எனும் இரு சிறுகதைகளும் கொழும்பு நகர வாழ்க்கை யையும், சமுதாயப்பிரச்சனை, பெண் களுக்கு இழைக்கப்படும் துன்பம், மனித உயிர்கள் விலை போகும் நிலை என்பவற்றைச் சித்தரிக்கின்றன. இவரது கதைகளில் மையக்கருத்தைச் சொல்லும் முறையும், நடையும் ஈழத்தமிழிலக்கிய வரலாற்றில் தனிஇடம் பெறச் செய்து விடுகின்றது. மேலும் இவர் கதைகள் ஒவ்வொன்றும் பல்வேறு அவலங்கள் மத்தியல் வாழும் தமிழர் சமுதாயத்தை, யாழ்குடாநாட்டைப் பிறகால சமூகத்துக்கு எடுத்துரைக்கும் வகையிலான ஆவணமாக திகழும் என்பது உறுதி இந்நிலை நோக்கியே இவரது கதைகள் பல்கலைக் கழகங்களில் பாட நூலாக்கப்பட்டது. குறிப்பிடத்தக்கது.

அடுத்து சிறுகதை இலக்கிய கர்த்தா எனும் வகையில் குறிப்பிடத்தக்கவர் ந. பார்த்திபன் ஆவார். வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக பணிபுரியும் இவர் கடந்த பத்து வருடங்களாக சிறுகதை கவிதை, கட்டுரை, நாவல் விமர்சனம் போன்ற துறைகளில் பங்களிப்பு வழங்கிவருகிறார். இவரது ஆக்கங்கள் தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, நவமணி, உதயன், ஈழநாடு, திசை, தமிழ், உலகம் (அவுஸ்ரேலியா) ஆகிய பத்திரிகைகளிலும் அகிலம், தொண்டன், தடாகம், நான்காவது பரிமாணம் (கனடா) சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. மேலும் வானொலி கலைப்பூங்கா நிகழ்வில் தன் கட்டுரை களினை வழங்கி வரும் இவர் கலை இலக்கிய நிகழ்வுகளிலும் வெளியீட்டு விழாக்களிலும் விமர்சனம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. தொண்டன் சஞ்சிகையில் வெளியான (ம(னி)தம் தொடர்கதை நாவலர்க்கத்தின் ஆரம்பப் படியாயுமுள்ளது. இவரது 'மனத்தூறல்' சிறுகதைத் தொகுதியானது சமூகம், அதன் பிரச்சனைகள், சமூக மாந்தர் குணவியல் புகள் என்பவற்றை யதார்த்தப் போக்குடன் சித்தரிப்பவையாக உள்ளது. மேலும் முற் போக்குக் சமுதாய கதையம்சங்களைக் கொண்ட இத் தொகுதியில் பெரும் பாலனவை, யாழ்ப்பாணத்தின் சமகாலகட்ட பின்னணியில் சித்தரிப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இச் சிறுகதைகளில் பூட்டில்லாப் பூட்டு, துறவு, ஊமை, ஒற்றுமையே உயர்வு, எதிர்ப்பார்ப்புக்கள் முதலியன பரிசு பெற்ற கதைகளாக அமைவது இத்தொகுதிக்கே பெருமை சேர்ப்பதாகும்.

காலவரன் முறையில் பல்கலைக் கழக சமூகத்தவரான புலமையாளர் எனும் வகையில் காலம் சென்ற பொ. கமலரூபனை நோக்குவோம். தமிழ் கவிதையில் ஈடுபாடு கொண்ட இவரது புலமைக்கும் ஆற்றலுக்கும், ''எண்பது களுக்கு பின் ஈழத்துப் புதுக்கவிதை" எனும் ஆய்வுநூல் சான்றாகும். இது இவரது கலை மாணிப்பட்ட ஆய்வு என்பது குறிப்பிடத்தக்கது மேலும் புதுக் கவிதையின் பயின்றுவரும் குறியீடுபடிமம் பற்றி சிந்தித்தமையை ''இன்றைய கவிதைகள் உரித்த வாழைப் பழங்களல்ல' கட்டுரை வெளிக் கொணர்கிறது இவர் மேலும் பலகவிதை தொடர்பான கட்டுரைகளை ஈழத்துப் பத்திரிகைகள், தமிழகத்திலிருந்து வெளியான சதங்கை என்பவற்றில் எழுதி வந்தார் இக்கட் டுரைகள் இவரது தமிழலக்கியப் புலமை சார் ஆய்வுத்திறமையை எடுத்துக் காட்டுவனவாக அமைந்தன. இவரது 'மொழியும் நடையும், நடையியல், மொழிநடை அணுகு முறைகள் என்ற கட்டுரைகள் விமர்சனத்துறை ஆய்வளா ராக திகழ்ந்தமையை எடுத்துரைக்கின்றன. மேலும் ''குற்றவாளிக் கூண்டில் பாரதியை நாம் நிறுத்தியது நியாயந்தானா'' (சஞ்சீவி99) என்ற கட்டுரையானது பாரதியின் ''மெல்லத் தமிழினிச்சாகும்'' என்ற பாடலடியை தவறாக விளங்கிய வாக்கு அது பேதை உரைத்த வாக்கு என்பதை நிரூபிப்பதாக நல்லறிவு புகட்டுவதாக அமைந்தது அத்துடன் பாரதிக்கு புகழாரம் சூட்டி பெருமைப் படுத்துவதாயுள்ளது. மேலும் தம் ஆசான்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் 'நற்றமிழ் வல்ல ஞானகுரு' 'பல்பான ஆளுமை கொண்ட பண்டிதர் க.வீ.' என்ற கட்டுரைகள் எழுதியுள்ளார் நவீனயுக வளர்ச்சியையும் கருத்திற் கொண்டவராக 'தொடர்பு சாதனங்களில் மொழி' எனும் கட்டுரையையும் ஆக்கி யுள்ளார் தமிழ் இலக்கிய ஆய்வாளராக வளர்ந்துவந்த இவர் இளம் வயதிலேயே

மறைந்தமை எமது பிரதேசத்திற்கு பேரிழப்பென்றே கூறலாம்.

அடுத்து இவ்வரிசையில் ஆக்க இலக்கியகாரர்களில் மிகவும் இளைய வர்களும் பல்கலைக்கழக சமூகச்சூழலில் பயின்று வருபவர்களும் சஞ்சீவி எழுத்தாளர்கள் எனக் குறிப்பிடும் வகையில் சஞ்சிவி மூலம் அறிமுகமான வர்களுமான இராகவன் ஈ. தயாரூபன் ஆகிய இருவரைக் குறிப்பிடலாம். இவர்கள் இருவருமே கரவெட்டிக் கல்விக் சமூகத்தவர்கள் விக்னேஸ்வரக் கல்லூரி ஏணி சஞ்சிகையில் அரங்கேறியவர்கள் இவர்களில் முதலில் ஈ தயாரூபனை நோக்குவோம். இவர் எழுதிய 'தவளை' எனும் முதற் கதையானது மண்வாசனை யுடன் அமைந்துள்ளது அது கரவெட்டிக் கிராமத்தையும் சற்று முந்தியகாலத்தில் வாழ்ந்த சமூகத்தின் அறியாமையையும் சுட்டிக் காட்டுவதாய் அமைந்தது. அடுத்து இவரது மூன்று சிறுகதைகள் சஞ்சீவியில் வெளிவந்தன அவ்வகையில் 'திருமணங் கள் கொர்க்கத்தில்', 'பரிகாசங்கள்' அந்த வானத்தைப் போல எனும் கதைகள் குறிப்பிடத்தக்கன இவை எமது சமூகத்தில் இடம்பெறும் சீதனக் கொடுமையையும், அதனால் பெண்களின் துயர் நிலை யினையும், கிராமிய மட்டத்தில் கசிப்பு உற்பத்தினாளர்களின் மனநிலை, சுயநலவெறி என்பவற்றையும் இன்றைய இளைஞரது போக்கினையும் சமூகத்திற்கு எடுத்துக்காட்டுவனவாக அமைந்தன. இவர் சிறுகதைகள் சிலவாகவே அமைந்த போதும் அவற்றின் கனதியினால் ஈண்டு நோக்கினோம்.

அடுத்து இவரது சம காலத்தல் வரும் சிறுகதை உலகில் தன்னை வளர்த்துக் கொண்டவரும் கரவெட்டி கிழக்கினை இருப்பிடமாகக் கொண்ட வருமான ச. இராகவனை நோக்குவோம் இவரும் தம் மண் சார்ந்த துன்பங்களை இளைய சந்ததி இன்று எதிர் நோக்கும் பிரச்சனைகளை சஞ்சீவி என்ற நணப னூடாக உலகுடன் பகிர்ந்து கொண்டவர் சிறுகதை, கவிதை, ஓவியம் என்பவற்றில் ஈடுபாடுள்ளவர் சஞ்சீவி, சரிநிகர், தாயகம், மித்திரன், ஆதவன் ஆகிய சஞ்சிகைக் களை தனது களமாக பயன்படுத்தி வளம் பெற்றவர் வழமையாக சமூகப் பிரச்சனையை சொல்லும் முறையினால் தனித்துவமான நடையினால் பின் நவீனத்துவ பாணியினால் இளைய சமுதாயங்களை சிந்திக்கத் தூண்டுகிறார் சமகால பிரச்சனையை, யாழ்ப்பாண சமூக அவலங்களை, மக்கள் எதிர்நோக்கும் அவலங்களை எடுத்துரைப்பனவாக 'சொன்னாலும் வெட்கமில்லை', 'கனவே கலையாதே', 'அலைகள் ஓய்வதில்லை', 'நானமட்டும்தான் இப்படியா' 'நாய்கள் குரைக்கின்றன' பயணம், இது பூதங்களிக் காலம்' எனும் இவரது சிறுகதைகள் அமைகின்றன. அதே வேளை இதிகாசங் களை புதிய நோக்குடன் சிந்திக்கும் பரிசோதனை முயற்சியாக ''அகலியை'', 'மாறிப்போன அடையாளம்' என்பவற்றை அமைத்துள்ளார். சமூகத்தில் மறைமுக மாக தாக்கும் சீதனப்பிரச்சனையினை, 'அவனும் இவனும்' கதையின் மூலமும் பெண்கள் அனுபவிக்கும் பாதிப்புகளை ''வானதியின் கணவன்'', எனும் கதை மூலமும் முன்வைத்துள்ளார். இவரது 'பேய்க்குஞ்சு' கதை பாடசாலைகளில் ஆசிரியர்களின் பாலியல் துஷபிரயோகம் பற்றி மந்தகதி மாணவனின் பார்வையில் கூறுவதாயுள்ளது. இவ்வாறு சமூகத்தில் பல்வேறு முகங்களை பல்வேறு கோணங்களில் பார்ப்பினும் யாழ்ப்பாண சமூக வாழ்வின் அவலத்தை சித்தரிப்பதன் மூலம் வரலாற்று ஆவணமாகி விட்டதெனலாம்.

அடுத்து இவர்களின் சமகாலத்த வரும் கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாக


கொண்டவரும் இன்குலாப் போல புரட்சிகர சிந்தனைக் கவிதைகள் படைத்தவருமான அருணோதயான் எனும் இளம்கவிஞர் குறிப்பிடத்தக்கவர். இவர் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்யாலயத்தில் ஆரம்ப கல்வியை கற்றவர் இவருக்கு சிறந்த கவிதைக்களமாய் அமைந்தது சரிநிகர் என்றே கூறலாம். சரிநிகர் வாசகர்களுக்கு நட்சத்திரன் செவ்விந்தியன் எனும் புனை பெயரில் அறிமுகமான இவர் பல நட்சத்திரக் கவிதைகள் தந்துள்ளார் தம் கவிதைகளில் சமூகப் பிரச்சனைகளை ஆராய்ந்ததுடன் வாசகரை புதிய கோணங் களில் நோக்க வழி வகுத்துள்ளார் இவரது கவிதைகள் இளைய சமுதாயத்தின் புதுமைச் சிந்தனைக்கு தூண்டுவனவென்றே கூறலாம் இவரது கவிதைத் தொகுதி ஞான உதயம் என்ற பெயரில் வெளி யிடப்பட்டது. இவர் தற்போது ஐரோப்பிய நாடொன்றில் வசிக்கின்றபோதும் கவித்துவ ஆற்றலை வளர்த்துக் கொள்வார் என்றே எதிர்பார்க் கிறோம்.

புலமையாளர்கள் எனும் வகையில் நாட்டுக்கூத்துக்கலைஞர், பட்டிமன்றப் பேச்சாளர்கள், சித்திர வல்லு னர்கள் போன்ற பலரும் தம்திறமையால் கரவெட் டிப்பிரதேசப் பெருமையை வழர்க் கின்றனர் இதேபோல பல்வேறு துறைசார் புலமை யாளர்கள், மருத்துவர்களாக, பொறியிய லாளர்களாக, அதிகாரிகளாக திகழ்ந்து நாடெங்கும் கரவெட்டிப் புகழைப் பரப்பு வதும் குறிப்பிடத்தக்கது எனினும் கட்டுரை நீண்டுவிடும் என்பதால் இலக்கிய ரீதியான புலமையாளர்களை மட்டும் இங்கு குறிப் பிட்டுள்ளேன்.


இவ்வகையில் கரவெட்டியின் புல மைப்பாரம்பரியமானது கரவை வேலன் கோவையில் களமாகி மரபுவழி அறிஞர் களால் வளர்க்கப்பட்டு நவீன இலக்கிய ஆய்வாளர்களால் உலகெங்கும் தனக் கென முத்திரை பதித்தமையை இதுவரை நோக்கினோம் இப்புலமைப் பாரம்பரியத்தின் ஊற்றுக்கண் பாடசாலைகளில் நல்லாசான் களால் இடப்படுவது இன்றும் தொடரும் செயல்முறையாக உள்ளது. இவ்வகையில் புலமையாளர்கள் வரிசையில் நல்லாசான் களும், அவர்வழி வந்த புலமைச் செல் நெறி தொடர்ச்சியும் இடம் பெறத்தக்கவை, ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து இப்புல மைப் பாரம்பரியமானது. 21ம் நூற்றாண்டி லும் முத்திரை பதித்து எம் பிரதேச புகழ் பரப்பும் என்பது உறுதி அதற்கு ஏதுவாக எமது பிரதேச கல்விசார் கலாசார நிறுவ னங்கள் இலைமறையாய் மறைந்திருக்கும் புலமையாளர் ஆக்கங்களை, ஆய்வுகளை நூலுருவாக்கி வழங்குவது புலமைச் சொத் துக்களை பேணும் நடவடிக்கையாய் அமைவதுடன் புலமைப் பாரம்பரியத்தை வளர்க்கும் செயற்பாடாயும் அமையும் என்பது பேருண்மையாகும்.

### அடிக்குறிப்புக்கள்

1. சின்னத்தமிபிப்புலவர், <u>கரவைவேலன்கோவை</u>, சி.ஆழ்வாப்பிள்ளை,உரை கலாநிதி. யந்திரசாலை, பருத்துறை, 1956, பா.72, ப. 41
2. <u>மு.சு.நூ.பா.</u> - 60 ப -35
3. மலர் வெளியீட்டுக்குழு, விக்னேஸ்வரக் கல்லூரியின் வரலாறு, <u>யா.·விக்னேஸ்வரக்கல்லூரி பவளவிழாமலர்</u> பழையமாணவர் சங்கம் கொழும்பு, 1992, ப - 1
4. சந்தானம் எஸ். <u>கல்வியின் தத்துவ அடிப்படைகள்</u> பழனியப்பா பிரதாஸ் சென்னை, 1987, ப - 16
5. சிவத்தம்பி கா, கரவெட்டியின் பண்பாட்டு ஆளுமை, <u>பவளவிழாமலர்</u> விக்னேஸ்வரக்கல்லூரி, ப. 29
6. சிவலிங்கராசா எஸ், <u>வடமராட்சிக்கல்விப் பாரம்பரியம்</u> பருத்தித்துறை, 1984, ப.- 25
7. சிவத்தம்பி கா, <u>கரவைஊற்று</u>, யா.·விக்னேஸ்வரக்கல்லூரி பழையமாணவர் சங்கம் கொழும்புக்கிளை, கொழும்பு, 2001 ப. 87
8. கதிர்காமநாதன் சி. என்னுரை, <u>கொட்டும் பனி</u> கொழும்பு, 1968
9. வல்லிக்கண்ணன், அணிந்துரை, நிலவோ நெருப்போ, <u>சோமகாந்தன், மணிவிழாமலர்</u> 1996 ப. -143
10. கைலாசபதி. க. <u>மீன்குஞ்சுகள்,</u> அணிந்துரை, மல்லிகைப் பந்தல், குறிஞ்சி வெளியீடு 1994, ப- 6



1970ல் ஆசிரியர் குழாம்



1957ல் ஆசிரியர் குழாம்

# சிந்தனைக் களஞ்சியம் கவீ

(பண்டிதர் க. வீரகத்தி)

**செல்வி.ந. கல்யாணி**
M. Phill - Tamil

பேராசிரியர் என்பர் சிலர் பெருத்தமிழ்ப் புலவர் என்பர் சிலர் ஆராய்ச்சி அறிஞர் என்பர் சிலர் அழகுக் கவிஞர் என்பர் சிலர். ஆராது இவரில் ஆழுந்துபவர் அதிநவசிந்தனையாளர் என்பர் பாரோர் இப்படிப் பல பேசும் அறிஞன்; 'கரவை வேலன் கோவை' புகழ் கரவெட்டியின் தவமைந்தன் க.வீ.புலவர் பாடும் புகழுடைய கரவெட்டியிலே அறிஞர்கள், புலவர்கள் கவிஞர்கள், சிந்தனை யாளர்கள் காலத் திற்குக் காலம் தோன்றிச் சாதனை யால் சரித்திரம் படைப்பது சாதாரணம், கரவை நாடகமணி எம்.வீ கிருஷ்ணாழ்வார் கரவையின் புகழை

''கட்டறுத்துப் பொலிதளத்துக் கன்னிமார்கள் கைக்கிளிக்குத் தமிழூட்டும் கரவையூர்'

என தமிழோடு கரவைக்குள்ள பிணைப்பை அழகாகக் கூறியுள்ளார். இந்தவகையில் யாழ்ப்பாணக் குடா நாட்டின் வடகிழக்குப் பிரதேசமான வடமராட்சிப் பகுதி தனித்துவமான கல்விப்பாரம்பரியமும், இலக்கிய வளமும் கொண்டது. இத்தகைய பாரம்பரிய கிராமங்களில் தன்னிகரற்ற தனித்துவப் பண்புகள் பல சேர்ந்தது கரவெட்டி புகழ்ச்சியில்லை உண்மை இது.

***க.வீயின் குடும்பப் பின்னணியும் பிறப்பும்***

கந்தபுராண கலாச்சாரம் லாமிச்சம் வேராக மணம் பரப்பும் கரவெட்டிக் கிராமத்தில் 1922 ஐப்பசி நான்காம் நாள் க. வீரகத்தி அவர்கள் பிறந்தார் தந்தையார் பெயர் கந்தர், தாயார் பெயர் சின்னப்பிள்ளை. ஏகபுத்திரனான க.வீ வளமான 'விவசாயக் குடும்பத்திலே பிறந்த தோடு. நல்ல தமிழ்ப் பாரம்பரியத்திலே வந்த வராகவும் திகழ்கின்றார் இவரது இல்லம் இன்றும் ''சொத்திச் சட்டம்பியார் வீடு'' என அழைக்கப்படுகின்றது வடமராட்சிப் பகுதிலே நடத்த திண்ணைப் பள்ளிக் கூடங்களில் இவரது வீட்டில் நடந்த திண்ணைப் பள்ளிக்கூடமும் குறிப்பிடத்தக்கதாகும். இவரது பேரன் வல்லியார் நிறைந்த தமிழ்ப் புலமை மிக்கவராகத் நிகழ்ந்துவந்துள்ளார். பெரியதகப்பனார் ஆறுமுகம் ''பொடியச் சட்டம்பியார்'' என அழைக்கப்படுபவர் சோதிடம் வைத்தியம் சார்ந்த பல்துறை ஆற்றல் மிக்கவராகச் சிறந்து விளங்கியவர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டிருந்த போதும்

இவரது தந்தையாரும் தமிழில் ஈடுபாடு உடையவர். தாயாரும் இறை பக்தியிலும், வழிபாட்டிலும் பெருவிருப்புக் கொண்டவர். புராண இதிகாசங்களில் ஆர்வம் மிக்கவர். ஈடுபாடு கொண்டவர். இத்தகைய சமயப் பழக்கவழக்கம் மிக்க பின்னணியும், தமிழறிவுமிக்க புலமைச் சூழலும் க.வீ அவர்களின் கல்வி ஆழத்திற்கும், சிந்தனைச் சுழியோட்டங்களுக்கும், ஆளுமை உறுதிக்கும் அடித்தளமாக ஆணிவேராக அமைந்தது எனலாம்.

க.வீ அவர்கள் இயல்பாகவே இயற்கையில் உள்ளத்தைப் பறிகொடுக்கும் கலாரசிகன். மலர்ந்த பூவைக்கண்டு மனதைப் பறிகொடுப்பார். சலசலத்து ஓடும் நீரைக் கண்டு கலகலப்பார். இயற்கையன்னையின் அழகுக் கோலங்களைக் கண்டு குதூகலிப்பார். இது இளமையில் இருந்து முதுமைவரை தனது இயல்பான குணம் எனக்கூறுவார். இதே போல இயற்கையில் தனக்குப் பயம் என்ற ஒன்று கிடையாது எனக்குறிப்பிடும் க.வீ படிப்பைப் பற்றியோ, சோதனையைப் பற்றியோ பயம் இல்லை எனக் கூறுவார். ஆலயமணி கேட்டுத் துயில் எழும் கரவெட்டிக் கிராமத்திலே பிறந்த க.வீ ஆலயவழிபாட்டில் நாட்டமுடையவர். ''அத்துளுவின் புத்திரர்கள் நாங்கள்'' என அத்துளு அன்னையில் அதி ஆர்வம் கொண்டவர்

''*அன்னையாய் அரவணைத் திடுவாள் – அன்புச் செவிலியாய் அமுதூட்டி அருமையாய் வளர்ப்பாள் கன்னியாய்க் காதல்நகை புரிவாள் – என் கவிதை அந் நளினத்தில் கரைபுரண்டோடும்*

எனத் தான் பக்திப் பாடல்கள் பாட உந்து சக்தியாக இருந்தவள் அன்னை அபிராமி எனக் குறிப்பிடு கின்றார். மோனத்தவமுனி குமர குருபரர், அபிராமிப் பட்டர், பாரதியார் வரிசையிலே சிறந்த சக்தி உபாசகராகத் திகழ்ந்து சிவதிபுராணம், இராஜஇராஜேஸ்வரி சதகம், சிவபூரணி கவிதாஞ்சலி, அபிராமி நவநீதம் போன்ற கவிதைநூல்களைப் படைத்தார். பிற்காலத்திலே அன்னைமீது அளவற்ற ஈடுபாடு கொண்டு தன்னை காளிதாசன் என அழைப்பதிலே ஓர் ஆத்மசுகம் கண்டவர்.

***கல்வி***

க.வீ அவர்களின் கல்விப்புலம் சிறப்பாக அமையக்காரணம் அவரது ஆரம்பப் பாடசாலை. சைவத்தையும் தமிழையும் அமுதாக ஊட்டிஅழியாவரம் பெற்ற புதல்வர் பலரை உருவாக்கி இன்று நூற்றாண்டு விழாக்கண்டும் இளமையோடு பூரித்துச் சிரிக்கும் மாணிக்கவாசகர் வித்தியாலயமே அவரின் கல்வித்தாய். மாணிக்க வித்தியாலய அன்னையின் கருவிலே உருண்டு புரண்ட குழந்தை க.வீ. மாணிக்கவாசகத் தாயின் கருவிலே திருவுடைய குழந்தை க.வீ என்பதை அக்காலத்தில் பிரசித்தி பெற்ற பாடசாலைப் பரிசோதகர் உயர்திரு. எஸ்.ரி. சதாசிவஐயர் அவர்கள் பரிசோதித்து இனம் கண்டார். இதனால் வகுப்புயர்ச்சி பெறும் வாய்ப்பையும் பெற்றார்.

சிரேஸ்ட பாடசாலைத் தராதரப் பத்திர (எஸ்.எஸ்.சி ஆங்கிலம்) கல்வியை வடமராட்சியின் கல்வியின் கலங்கரை விளக்கமாகத் திகழும் விக்கினேஸ்வரக் கல்லூரியில் பெற்றார்.

எஸ்.எஸ். சி பரீட்சையில் சித்திபெற்றதும் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக்கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி பெறச்சென்றார். அங்கேயே பண்டிதர் பயிற்சியும் பெற்றார். க.வீ செய்த பூர்வீக புண்ணியப் பலனால் பயிற்சிக் காலத்தில் தமிழ் விரிவுரையாளராக இருந்த மாவை வெண்ணெய்க் கண்ணனார் எனப் புகழப்பட்ட நவநீதகிருஷ்ண பாரதியாரிடம் பாடங்கேட்கும் வாய்ப்பைப் பெற்றார். மேலும் வித்துவான் கார்த்திகேசு. கந்தமுருகேசனார் போன்ற ஆசான்களிடம் கல்வி பயிலும் பெரும் பேறுபெற்றார். நல்லாசான்களின் கைபட்டு ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்த க.வீ மதுரைத் தமிழ்சங்கம் நடாத்திய பண்டிதர் பரீட்சையிலும் சிறப்புச் சித்தி பெற்றுள்ளார்.

ஞான குருமாரின் ஞானோபதேசம் பெற்று அறிவுச் சுடராகத் தன்னை மாற்றியது ஒரு பக்கம் இருக்க சுய சிந்தனை மூலம் தனது அறிவாற்றலை வளர்த்தமையை கதை கதையாகச் சொல்லுவார். இலக்கண இலக்கியங் களில் கொண்ட ஈடுபாடு, இயல்பாகவே அமைந்த வாசிக்கும் பழக்கம், நவநவ சிந்தனைச் செல்நெறி முதலியன இவரைச் சிறந்த கல்வியாளனாக உருவாக்கின எனலாம். என்போன்ற மாணவருக்கு அவர் விடுக்கும் கட்டளை ''குறைய வாசியுங்கள் நிறையச் சிந்தியுங்கள் அப்பொழுதுதான் புதிது புதிதான சிந்தனை ஓட்டங்கள் உருவாகும்'' என்பார். ''அறிவின் வெற்றி சிந்தனையின் வெற்றி'' என்பது அவர் வாயில் அடிக்கடி வரும் பொன்மொழி யாகும்.

**தொழில்**

1946ல் அரசாங்கப் பாடசாலை ஆசிரியராகப் பணியேற்ற க.வீ கொழும்பு, வவுனியா, ஆகிய இடங்களில் சேவையாற்றிய பின் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்றுவந்தார். யாழ் வந்த ஆசிரியரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் சேவைக்காய் அரவணைத்துத் தன்னவராக்கியது அக்கல்லூரி அன்னைக்கு வாழ்த்துக் கூறி பாடசாலைக் கீதத்தை அன்புப் பாமாலையாகச் சூடினார். தொடர்ந்து பருத்தித்துறைக் ஹாட்லிக் கல்லூரி, நல்லூர் மங்கையர்க்கரசிவித்தியாசாலை, கோப்பாய் சாதனா பாடசாலை, நல்லூர் சன்மார்க்க வித்தியாசாலை என்பன வற்றிலும் தனது ஆசிரியசேவையை தொடர்ந்தார். நாடு பூராவும் நல்மாணாக்கர் பலரை உருவாக்கினார்

**குடும்பம்**

பூரண ஆசிரியத்துவம் மிளிர ஆசிரியப் பயிற்சியை முடித்தார். பின்பு தனது வாழ்க்கைத் துணைவியாக கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த செல்வி.நாகம்மாவைத் திருமணம் செய்தார். இவரது மனைவி சிறந்த ஆசிரியயையாகவும் அதிபராகவும் சேவையாற்றியவர். கணவனின் செல்நெறிக்கெல்லாம் நாணலாக வளைந்து கொடுத்து சேர்ந்து ஓடியவர் இல்லறத்தின் நல்லறமாக சேந்தன், சாந்தா, வசந்தன், வசந்தா, வாணி என்று ஐந்து பிள்ளைகள் உள்ளனர். 1970களில் மனைவியை இழந்தார் தீவிர போக்குடையவராக, தன் செயற் பாட்டையே குறியாகக் கொண்டு குடும்பத்தின் பொறுப்பை மறந்து

வாழ்ந்தவர். தன் தவறை ஒருகணம் மனைவியின் பிரிவின் சோகத்திடையே சிந்தித்தார். சிந்தித்த கவிஞனின் உள்ளத்தில் உதிர்த்த கவிதையில் ''மந்திகையில் பூமாலை வாடியதோ?'' என்ற வரியின் சிலேடையின் ஆழம் நெஞ்சை நெகிழ வைக்கிறது. மந்திகை வைத்தியசாலையில் உயிர்பிரிந்தது எனவும், மந்தி + கையில் பூமாலை போனால் திரும்ப வருமா? பூ உதிர்ந்த நார்தான் மிஞ்சும் எனப் பொருள்படும். எனினும் அதன்பின் சோகத்திலும் தன்னைக்கட்டுப்படுத்தி பிள்ளைகளை பொறியியலாளராக, டாக்ரராக, விரிவுரையாளராக உருவாக்கினார். எனினும் அந்த இருண்டநாட்களை அவரே டிசம்பர் ''நிகழ் 24'' தன்னைப் பற்றிய அறிமுகத்தில்

''1970ல் துணைவி திடீரென இயற்கை எய்துகிறாள் சிறகுகள் அரியப்பட்ட கழுகுகள் ஆய்விட்டேன். இதுவரை வீட்டுக்காரியங்களைக் கவனிக்காத நானும் பிள்ளைகளும் தனிப்பட்டோம். திக்குத் தெரியாத ஏகாந்த இருள்''

எனக் குறிப்பிடுகிறார். பிள்ளைகளின் திருமணவிடயத்தில் கூட அவர் ஏனைய யாழ்ப்பாண சமூகத்தை விட வித்தியாசமான போக்குடையவராகவே காணப்பட்டார். தான் சாதாரண ஆசிரிய சம்பளத்தில் திண்டாடியபோதும் பிள்ளைகளின் திருமணவிடயத்தில் புரட்சிகரமான சில செயற்பாட்டை செய்தார். தன்பக்கம் வயது வந்த பெண்பிள்ளைகள் இருந்தபோதும் நட்புக்கு மதிப்புக் கொடுத்து தனது இலக்கிய உலக நண்பனான கிழக்கிலங்கைக் கல்முனையின் பெரிய நீலாவணையைப் பிறப்பிடமாகக் கொண்ட நீலாவணன் மறைந்தபோது அவர் மகளை தன்மகனின் வாழ்க்கைத் துணைவியாக்கினார். இச்சம்பவத்தை எஸ் பொ. பின்வருமாறு குறிப்பிடுகின்றார்

..........ஒருலகம் நோக்கிய யாத்திரையில் யாழ்ப்பாணமண்ணுடன் மட்டக்களப்பு மனங்களையும் தழுவிக்கொள்ளுதல் வேண்டும் என்பதை க.வீ உணர்ந்திருந்தார். நீலாவணனின் மரணத்தின் பின்னரும் அந்த நட்பினை உறவாக்கித் தங்கவைத்துக் கொள்வதில் க.வீ தீவிரமாக இருந்தார். நீலாவணனின் மகள் எழிலரசியைத் தனது மகனுக்குத் திருமணம் செய்து வைத்துச் சம்பந்தியாக்கிக் கொண்டார். யாழ்ப்பாணக் கலட்டிச் சந்தியை ஒட்டினாற் போல் அமைந்த வீட்டிலே வீரகத்தி வாழ்ந்த காலத்தில் நான் அங்கு விருந்துண்டு மகிழ்ந்த சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. அப்பொழுது நீலாவணனின் மகள் வீரகத்தி வீட்டில் குடும்பவிளக்காய் நடமாடியதைக் கண்டேன்.

**பணிகள் பற்றிய அறிமுகம்**

பண்டிதர் க.வீ. அவர்களின் தமிழ்ப்பணிகளை தமிழ் ஆசிரியர், வாணிகலைக்கழகமும் மாணவர் மரபும், இலக்கணமுயற்சிகள், இலக்கிய முயற்சிகள், உரைமுயற்சிகள், பத்திரிகைப்பணி, பதிப்புப்பணி எனப்பகுத்து ஆராயமுடியும்.

**பாராட்டுக்களும் பரிசுகளும்**

சென்னையில் 1968ல் நடைபெற்ற இரண்டாவது உலகத்

தமிழாராய்ச்சி மகாநாட்டிலே'' "சொல்லிலக்கணத்திலே யாப்பின் செல்வாக்கு'' என்ற தலைப்பில் சமர்ப்பித்த இவரது கட்டுரைக்காக பன்மொழிப்புலவர் அப்பாத்துரையால் ''தமிழ் இலக்கணத்திற்கு ஒரு நியூட்டன்'' என்றும் பாராட்டும் பேறுபெற்றவர்.

1966ல் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடாத்திய திருவள்ளுவர் நினைவு ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் ''பரிமேலழகரின் இலக்கண நுட்பங்கள்'' என்ற கட்டுரைக்காகப் பணப்பரிசு பெற்றார்.

இலங்கை வானொலி தொடர்ந்து ஒலிபரப்பிக் கொண்டிருந்த குழந்தைக் கவிதைகளில் இவரது ''பலூன்'' பாடலுக்காக இலங்கை வானொலியின் தயாரிப்பு நிகழ்ச்சி 1967ம் ஆண்டு ஜப்பானில் ரோக்கியோ நகரில் நடைபெற்ற அகில உலகவானொலி (ஐ.ஈ.பி.சி) போட்டியில் பாராட்டும் பரிசிலும் பெற்றது.

1969ல் கொழும்பு வருமானவரித் திணைக்களம் நடாத்திய ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் ''சமகால இலக்கியம்'' என்ற பொருள் பற்றிக் கட்டுரை எழுதி தங்கப் பதக்கத்தினைப் பரிசாகப் பெற்றார்.

1972ல் இவரது ''செழுங்கமலச் சிலம்பொலி'' என்ற கவிதைநூல் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. இவ்வாறு பல பாராட்டுக்களால் புகழுக்குரியவர் க.வீ.

**புனைபெயர்கள்**

பண்டிதர் க.வீ அவர்கள் இலங்கையிலும், இந்தியாவிலும் வெளிவந்த பல பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் பல புனை பெயர்களில் கட்டுரைகளும், கவிதை களும் எழுதியுள்ளார் 1946ல் எழுதிய முதற்கவிதை *நாகமைவண்ணன்* என்ற புனை பெயரிலே வெளிவந்தது. இதே புனைபெயரில்''மாணிக்க கங்கையில் பாணிக்கிரகணம்'' என்ற சிறுகதையை சுதந்திரன் பத்திரிகையில் எழுதினார். தினகரன் வாரமலரில் ''குருவி'' என்ற புனைபெயரில் சிறுகதை ஒன்றை எழுதியுள்ளார். மேலும்; மைவண்ணன், கட்டபொம்மன், சிறீ அமிர்தலிங்கம், இலங்கையன், யாரோ, பண்டிதைகமலா, தமிழ்நாடன், ஈழநாடன், வாணி, கல்லாடன், லெனின், பிறையாளன், நாராயணன்,ஈழவன், காளிதாசன் எனப் பல புனைபெயர்களிலே எழுதியுள்ளார்.

**இலக்கண முயற்சிகள்**

***க. வீ. யும் தமிழ் இலக்கணமும்.***

தனக்கென இலக்கணம் வகுத்த உயர் தனிச் செம்மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று. இலக்கியம் கண்டு இலக்கணம் கண்டவன் தமிழன். ஏனெனில், மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதது மொழி. மொழிக்கு இன்றியமையாதது இலக்கணம். தமிழ் இலக்கண அமைப்பை விளக்க எழுந்த நூல்கள் பல. அவற்றுள் எமக்குக் கிடைத்த காலத்தால் முற்பட்ட இலக்கணநூல் தொல்காப்பியமே. இந்நூலைத் தொடர்ந்து வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம் முதலிய பல

இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன.

ஈழத்திலும் இலக்கணமுயற்சிகள் காலங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. புதிய சிந்தனைகளுக்குக் கருக்கொடுத்து, புதுநூல்கள் உருவம் பெற்றன. அதே நேரம் பழையனவற்றையும் பொன்போற் பேணி இறந்துபடாமற் காத்து பழையனவற்றுக்கு புத்துயிரையும் தந்து, உரைகளுக்கு விளக்கமும் கண்டு, காலந்தோறும் இலக்கண உரையாளர் களால் புலமைநோக்கில் சுழியோடப்பட்டு பழமையிடையே புதுமைகண்டு, உறுதியான தீர்வுகண்டு புதியதுறை ஆராய்ச்சிகளுக்கு அடியெடுத்துக் கொடுத்து வழிகாட்டி நின்றது ஈழத்து இலக்கண முயற்சிகளாகும்.

இவ்வாறு ஈழத்து இலக்கண முயற்சிகளுக்கு வித்திட்டு நின்ற விற்பன்னர்களுள் இலக்கணச் சுருக்கம் தந்த ஆறுமுகநாவலர் விதந்து குறிப்பிடத்தக்கவர். இவருக்குப்பின் சங்குவேலி மு. சிதம்பரப்பிள்ளை (உவில்லியம் நெவின்ஸ்), சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர், சுன்னாகம் பூ. முருகேச பண்டிதர், வித்துவசிரோமணி கணேசையர், ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை, பேராசிரியர் அ. சண்முகதாஸ் முதலியோர் இலக்கணத்துறையில் சிறப்புப் பெறுகின்றனர். இந்த இலக்கணச் சிந்தனையாளர் வரிசையில் க.வீ. அவர்களுக்கு ஒரு தனியான இடமுண்டு.

க.வீ.யின் பல்துறைப்பணிகளில் இலக்கண முயற்சிகள் காத்திரமானவை என்பதை அவர் படைப்புகளிலிருந்து அவதானிக்கலாம். மரபுவழிக் கல்வி யிலே வந்தவர்கள் இலக்கணத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினர். எழுத்தறிவுப் பாரம்பரியத்தின் நிலைப்பாட்டினையும், நுண்ணறிவுச் செயற்பாட்டினையும் இப்பாரம் பரியத்திலே காணலாம். இந்தவகையில் வடமராட்சிப்பகுதியின் இலக்கணப் பாரம்பரியத்தினை நோக்கும்பொழுது அம்மரபு வைரம்பாய்ந்ததாகவே காணப்படுகின்றது. சிவசம்புப்புலவர், நா.கதிரைவேற்பிள்ளை, கந்தமுருகேசன் முத்துக்குமாரசாமிக்குருக்கள், இலக்கணக்கொத்தர், குமாரசாமிப்புலவர் போன்ற அறிஞர்கள் தோற்றுவித்த இம்மரபு பண்டிதர்-வீரகத்தி கையில் புதுமெருகு பெற்றது என்ற கூற்று க.வீயின் இலக்கணப்பணியின் சிறப்பிற்குக் கட்டியம் கூறுவதாக அமைகின்றது.

க.வீயின் இலக்கணத் தெளிவிற்குக் காரணம் அவர் தனக்கு முன்னோருடைய இலக்கண நூல்களைத் துருவித் துருவிக் கற்றவர். இதை அவர் பின்வருமாறு கூறுகிறார் ''பின்வந்த இலக்கண நூல்களில் நன்னூல், இலக்கணவிளக்கம் ஒருவகையின, பிரயோகவிவேகம் இலக்கணக்கொத்து பிறிதொருவகையின, தொன்னூல் விளக்கம் மற்றொருவகையது. மூவகைப்படும் இந்நூல்களுக்கெல்லாம் வீரசோழியம் ஒரு முன்னோடி நூல் எனக்குறிப்பிடுவது சாலப்பொருத்த மாகும்.

இக்கூற்று இலக்கண நூல் களோடு அவருக்குள்ள ஈடுபாட்டை தெளிவாகக் காட்டுகிறது. மொழிக்கும் இலக்கணத்திற்கும் உள்ள பிணைப்பை,

நெருக்கத்தை, அவசியத்தை தன் சிந்தனைப் பார்வையிலேயே கூறுகின்றார். ''மொழி நம்கருத்தைப் பிறர் புரிந்திடவும், பிறர்கருத்தை நாம் புரிந்திடவும் உரியசாதனமாகும் அறிதல், புரிதல் என்றால் இலகுவாக தெளிவாக சிரமமின்றி உணருவதையே அவை கருதும். இம்முயற்சி எளிதாக நடைபெற பேசுவோனுக்கும் கேட்போனுக்கும் பொதுவான மொழிப் பொதுநிலை அல்லது மொழி மரபு ஒன்று வேண்டும். இதுவே இலக்கணமாகும். இந்தப் பொதுநிலை அல்லது மரபு அல்லது இலக்கணம் இன்றேல் நாம் சொல்லுவதும், எழுதுவதும் நம் முடனேயே நின்றுவிடும். இலக்கண நியதிக்கு உட்படாது பேசுவதும் எழுதுவதுமாயிருந்தால் நெடுங்கணக்கு ஒன்றேயானாலும் மொழி வேறு வேறு மொழிகளாய்விடும். பேச்சு வழக்கென்னும் வேற்றுமைக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தியதே இலக்கணம் மனிதனுக்குச் செய்த மாபெரும் நன்மையாகும்.

இவ்வுண்மையைத் தெரிந்து கொண்ட நம்முன்னோர் பேச்சு மொழியையும் எழுத்துமொழியையும் நன்கு ஆராய்ந்து சொற்களிலும் சொற்றொடர்களிலும் ஒன்றாக ஓடிய பொதுமைகளைப் பிரித்தெடுத்து அவற்றிற்கு மரபு அல்லது இலக்கணம் என்று பெயரிட்டு அவற்றை நாம் எவ்வாறு கையாளவேண்டும் என்று விதிவடிவில் சொல்லித் தம்பணியை நிறைவுறச் செய்துள்ளார்கள்[3]

என நுட்பமாக கருத்துக்கூறிய க.வீ அவர்கள் மொழியின் பயன்பாட்டில் இலக்கணம் வகிக்கும் பங்கினை மேலும் தெளிவாக உணர்த்தியிருக்கிறார் இதனை ''நமது மொழி உயிர்த்துடிப்புள்ளதாக இயங்க மொழி வரம்புகளைப் பாதுகாக்க வேண்டுமென்றால் புதிய வரம்புகளை ஏற்படுத்துவதும் நம் தலையாய கடமையாகும். இலக்கணம் மொழிக்குக் கொடுக்கவேண்டிய காயகற்பம். இளமைப் பூரிப்புக்கு காயகற்பம் தேவை[4]

எனக் கூறுகிறார் இதிலிருந்து மொழி என்றும் இளமையுடன் திகழ இலக்கணம் அவசியம் என்ற கருத்தை இலாவகமாக வலியுறுத்துகின்றார்.

இலக்கண நோக்கும் போக்கும் காலத்தோடு ஒட்டி காலத்தின் கோலத்திற்கு ஏற்ப புதுப்புனல்கள் புகுவதற்கு வழிசெய்யவேண்டும். என்பது அவர் நன்னூலார் வழியில் கொள்ளும் ஆசை. இதனை

''இலக்கண உலகில் புத்தம் புதிய பார்வைவேண்டும் இதுவே என் வேட்கை. இதனால் அவ்வப்போது சிந்திக்கிறேன். என் சிந்தனை வடிவம் பெற்றவற்றில் இவை சிலவாகும்[5]

என்று இலக்கண விதி மூலங்களும் விதிகளும் என்னும் நூலின் என்னுரையில் குறிப்பிடுகின்றார்.

**இலக்கண நூல்கள் ~ கட்டுரைகள்**

க.வீயின் இலக்கணமுயற்சியில் முதன்முதலில் கு.வி செல்லத்துரையுடன் சேர்ந்து 1955ல் ''மொழித்தேர்ச்சியும் இலக்கணமும்'' என்ற நூலை வெளியிட்டார். இந்நூல் இலகுவான சிறு சிறு வாக்கிய உதாரணங்களுடன்

எளிமையாக மாணவர் மனங்கொள்ளத் தக்க வகையில் அமைந்துள்ளது. இந்நூல் அடிப்படை இலக்கண முறையோடு மொழித் தேர்ச்சிக்குரிய எதிர்ப்பாற் சொற்கள், பலபொருள் ஒரு சொல், மரபுத்தொடர்கள் உவமைச் சொற் றொடர்கள், சொற்றொடர்ப் பிழைகளும் திருத்தங்களும், பழமொழிகள், சுருக்கம் எழுதுதல், கடிதம் எழுதல் முதலான முக்கிய பகுதிகளைக் கொண்ட மைந்துள்ளது.

க.வீயின் இலக்கண நூலாக அடுத்து 1968ல் ''இலக்கண விளக்கம்'' என்ற நூல் வெளிவந்தது. இந்நூல் பற்றி வெளியீட்டாளரான ஸ்ரீலங்கா புத்தகசாலையினர் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

''குறிப்பிட்ட தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து, விடயப்பரப்பைத் தருக்கரீதியாக வகுத்து புதுமையாக விளக்கம் செய்து, உளங்கொள்ளும் உதாரணங்கள் மூலம் தெளிவுசெய்து, இக்கால வழக்குகளை ஆங்காங்கே எடுத்துக்காட்டி, உயாதர மாணவர்களும், இலக்கணப்பசியும், தாகமும் உடைய வர்களும், மொழித் துறைப் பிரியர்களும் உவக்கும் வண்ணம் அமைந்துள்ளது இந்நூல் ''[6]

அடுத்து க.வீயின் ''கடலும் படகும்'' என்ற நூல் புதுமையாகவும், அருமையாகவும் கதைசொல்லும் பாங்கில் இதமாகச் சொல்லிச் செல்வது அவருக்கேயுரிய தனிக்கலை. இந்நூலில் தமிழின் ஐவகை இலக்கணத்தையும் நளினமாகச் சொல்லிச் செல்கின்றார்

க.வீயின் இலக்கண ஆய்வு களானவை ''இலக்கண விதிமூலங்களும் விதிகளும்'' என்ற பெயருடன் வெளிவந்துள்ளது. அதில் அடங்கிய விடயங்கள் பின்வருமாறு

1. *வீரசோழியம்*:

எழுத்துப்பேறும் உடன்படு (த்து) மெய்யும் மூலபாடத்திறனாய்வில் தொல்காப்பியத்து இருநூற்பாக்கள் (ஜனவரி 1981ல் மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் வாசிக்கப்பட்டது)

2. *தொல்காப்பியமும் நிகழ்கால இடைநிலையும்*

''சொல்லிலக்கணத்தில் யாப்பின் செல்வாக்கு'' (ஜனவரி 1968 ல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது)

***குறிப்புவினை:-***

''தன்வினை, இயக்குவினை, பிறவினை'' ''ஆய்தம் ஒரு முதலெழுத்தும் ஆகும்''
(நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு மலர்)

இக்கட்டுரைகள் அந்நூலில் உள்ளன. செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி முதலிய சஞ்சிகைகளிலும், உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு மலர்கள் என்பவற்றிலும் க.வீயின் இக்கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

1986 செப்டம்பர் ''செந்தமிழ்'' தொகுதி 80ல் ''ஆய்தம் தமிழ்ச் சொல்லா'' என்ற கட்டுரையை எழுதினார். அதே வருடம் அந்தமாதம் வெளிவந்த செந்தமிழ்ச் செல்வியில்

''புணர்மொழிக் குற்றியலுகரம்'' என்ற கட்டுரையை எழுதினார். 1985 யூன் செந்தமிழ்ச் செல்வியில் ''தொல்மொழிக் கோட்பாடு'' என்னும் இவரது கட்டுரை வெளிவந்தது. நான்காவது அனைத்து லகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு மலரில் எழுதிய ''ஈழத்து இலக்கண முயற்சிகள்'' என்ற கட்டுரையும் குறிப்பிடத்தக்கதாகும்.

க.வீ அவர்களின் இலக்கண ஆய்வு முயற்சிக்குக் கிடைத்த சிறப்பான உரிய இடம் தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் கிடைத்த சிறப்பாய்வாளர் நிலையாகும். க.வீ அவர்களின் இலக்கணமுயற்சியின் தொடுமுடி தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் சிறப்பாய்வாளராக இருந்து சமர்ப்பித்த ''பிற்கால இலக்கண மாற்றங்கள்'' (எழுத்து) என்ற ஆய்வேடாகும். இந்த ஆய்வேடு இன்னும் நூலுருப் பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

க.வீ அவர்களின் இலக்கண நூல்கள், கட்டுரைகள் யாவற்றிலும், இலக்கணச் செய்திகள் எளியநடையில் புதுப்புது உதாரணங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. அத்தோடு இவருடைய இலக்கண அணுகுமுறை களில் ஆய்வும் புதிய விளக்கங்களும் முடிபுகளும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகின்றன. அதேபோல தனது கூர்ந்த நுண்மதி அறிவின் ஆய்வு வெளிப்பாடாக மூலப்பாடத்திறனாய்விலும் க.வீ துணிந்துகைவைத்த மாமேதை. பாடத்தின் உண்மைத் தன்மையை பல்வேறு அணுகு முறைகளில் ஆராய்ந்து நிறுவமுயல்வதே மூல பாடத்திறனாய்வு எனக்குறிப்பிடப்படுகிறது. கவீயின் இலக்கண அணுகுமுறைகளில் மூலப்பாடத்திறனாய்வும் முக்கிய இடம் பெறுகிறது. தொல்காப்பியத்தில் நல்ல பரிச்சயம் மிக்க க.வீ அவர்கள் நீண்டகாலமாகக் கருகலாக கருத்துத் தெளிவுபோதாமல் இருந்த தொல்காப்பிய நூற்பாக்களுக்கு மூலபாடத்திற னாய்வு வழிநின்று அணுகிப் பொருத்தமான விளக்கங்கள் பல வற்றைக் கொடுத்துள்ளார். அவை நவீன மொழியியற் சிந்தனையாளரும் அங்கீகரிக்கும் வகையில் அமைந் துள்ளன. இறுதிநாட்களில் இந்தியாவி லிருந்து கொண்டு குமரகுருபரரின் சகலகலாவல்லி மாலையின் ஒரு சிலபாடல்களை மூலபாடத்திறனாய்வு செய்தமையை இங்கே குறிப்பிடுவது அவசியமாகும். உண்மையில் க.வீ யினுடைய மூலபாடத் திறனாய்வு தனியொரு கட்டுரையாக ஆய்வு செய்வதே சாலப்பொருந்தும். இவ் விடத்தில் க.வீயின் மூலப்பாடத் திறனாய்வு அணுகு முறை அவரது இலக்கண மேதா விலாசத்தைக் காட்டப் போதுமானதாக அமைகிறது.

### இலக்கிய முயற்சிகள்

கவிஞன் சுதந்திரமானவன். உணர்ச்சிகளுக்கு வார்த்தைகளால் வடிவம் கொடுப்பவன். சமூகத்தில் உள்ளவைகளை உணர்ந்தவாறு உரைப்பவன். சமூகத்தில் இருந்து மேற் கிளம்புவதால் சமூகத்தின் ஒவ்வொரு பதிவுகளும் அவன் கலைப்படைப்பில் பதிவாக்கம் செய்யப்படுவது என்பது தவிர்க்க முடியாத ஒன்று. எனவே தான் சமூகத்தின் பதிவு விம்பமாக அவற்றை நோக்கலாம் அந்த வகையில் புலவரை

நோக்கின் புலவர்களின் இலக்கிய முயற்சிகள் ஒவ்வொன்றும் கவிஞரினையும் அவர்தம் சமூக நோக்குப் பார்வையினையும், அக்கால சமூகநோக்கச் செல்நெறியினையும் கண்டு கொள்ளலாம்.

இந்த வகையில் க.வீயின் இலக்கிய வெளியீடுகளை
1. கவிதை நூல்கள்
11. கவிதைவளம்
என வசதிகருதி பிரித்து நோக்கலாம். க.வீயின் இலக்கிய வருகையானது ''மின்மினி'' என்ற சஞ்சிகையில் எழுதியதிலிருந்து ஆரம்பமாகிறது. இவர்பாடிய கவிதைகள் பல பத்திரிகைகளில் வெளிவந்த காலத்தில் கவிதை வானின் ஒளிநட்சத்திரமாகத் திகழ்ந்தாலும் அவரின் கவிதைகளிற் பல கிடைக்கப்பெறவில்லை.

குலதெய்வமான விநாயகரில் நிறைந்த பக்தியும், சிறந்த சக்தி உபாசகராகவும் திகழ்ந்தார். க.வீ தனது குலதெய்வமாம் கரவைத் தச்சைச் சிந்தாமணி விநாயகனை வாழ்த்தி ''கண்ணிற் காக்கும் காவலன்'' என்ற தொகுதியை வெளியிட்டார். மேலும் இவ் விநாயகர்மீது இவர்பாடிய ''இலக்கிய இருபது'' ஈழநாடு வாரமலரில் வெளிவந்தது.

அத்தோடு சக்தி வழி பாட்டாளராகத் திகழும் இவர் ''வாணியை வாழ்த்துவம்'', ''அபிராமி நவநீதம்'', ''ஈழத்துக் கருகம்பனையூர் இராச இராசேஸ்வரி சதகம்'', ''ஊரெழு சிவபூரணி கவிதாஞ்சலி'' முதலிய நூல்களை வெளியிட்டார். சிவனுக்கு மணிவாசகர் பாடிய சிவபுராணம் போன்று சக்திக்கு சிவதிபுராணம் பாடியுள்ளார்.

செந்தமிழ்ச் செல்வன் கலியுகக் கந்தன் மீது பல பாடல்கள் பாடியுள்ளார் ஆறுபடைவீடு எனத்தான் கருதிய கதிர்காமம, செல்வச்சந்நிதி, நல்லூர், மாவிட்டபுரம், கந்தவனம், சித்தாண்டி ஆகிய தலங்கள் மீதும், கரவைத் தாழங்குழி, மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை, பேராதனைப் பல்கலைக்கழக குறிஞ்சிக் குமரன் மீதும் நெஞ்சுருக நெக்குருகிப் பாடிய பாடல்களை ''செழுங்கமலச்சிலம்பொலி'' ஆக வெளியிட்டுள்ளார். இதே போன்று நல்லூர் கந்தன் மீது ''கந்தனே என் சிந்தனை நல்லைக் கந்தனே என் வந்தனை'' என்ற தொகுப்பாக வெளிவந்துள்ளது.

க.வீ அவர்கள் சமூகத்தின் நாளைய ஆக்கச் சிப்பிகளாகத் தெரியும் மனிதப் பூக்களுக்கான ஆக்கங்களையும் வெளியிடத்தவறவில்லை ''தங்கக் கடையல்'' என்ற பெயரில் நூல்வடிவம் பெற்றது.

க.வீயின் இசைப்பாடல்கள் பல ''பண்ணிசைப் பாடல்கள்'' என்ற தலைப்பில் நூல்வடிவம் பெற்றுள்ளது. இது தவிர கவிஞரின் மனிதமேம் பாட்டுணர்வின் வெளிப்பாடாகவும், மன வேட்கையாகவும், ''கிருதயுகப் புதுமலர்ச்சி'' ''ஓருலகம்'' முதலிய கவிதை நூல்களையும் எழுதியுள்ளார்.

***கவிதை வளம்***

கவிதை வளம் என்பது பொருளை மையமாகக் கொண்டு இயங்குவது இந்த வகையில் க.வீயின்

கவிதை வளம் பல பொருள் கொண்டதாகக் காணப்படுகின்றது.

''இளையோர் உளவியல்
இறையருள் நாட்டம்
சமுதாய உணர்வு
வாழ்த்து
நீத்தார் நினைவு.''

என அமைந்திருப்பதைக் காணலாம் இளையோர் உளவியல் என்ற பொருள் அமைப்பில் பாடப்பட்ட க.வீயின் பாடல்கள் குழந்தை அனுபவத்தை யதார்த்தத்தினூடாக உணர்வுக் குவியலாக மாற்றுகின்றார் குழந்தைக் கவிபாடவந்தது. ஓர் சொந்த அனுபவம் என்கிறார் க.வீ. 'அப்பா பாட்டுச் சொல்லித்தாருங்கள்'' என்பது தனது மூத்தமகன் கேட்ட காரணத்தினாலேயே தான் பாடியதாக குறிப்பிடுகிறார் இவ்வகையில்

I பந்துபந்து.....
II பச்சைக்கிளி...
III வண்ணவண்ணப் பலூன்கள்.....
IV கண்மணியே கேள் நீ....
V. இந்துசமுத்திரமுத்து....

போன்றனவும், ஔவையார், பாரதியார் போன்று ஆத்திசூடி அமைப்பிலும் பாடல்கள் யாக்கப்பட்டுள்ளன. கவிஞரின் குழந்தை இலக்கியம் உளவியல் ரீதியாக குழந்தைச் சிந்தனைக்கு உரம் ஊட்டுவனவாகவும், குழந்தை மொழிக் கையாளுகையூடாகவும் முட்டி நிற்பதைக் காணலாம். இவரின் குழந்தை இலக்கியம் பற்றி பேராசிரியர் கைலாசபதி அவர்கள் கூறும் போது ''இந்நூற்றாண்டில் தமிழில் புகழ் பெற்ற குழந்தைக் கவிஞரிற் பெரும் பாலானோர் தமிழில் புகழ் பெற்ற பள்ளிக்கூட ஆசிரியராய் இருந்தவர்களே. எடுத்துக் காட்டாக க.வீரகத்தியின் 'தங்கக்கடையல்' என்னும் நூலைக் குறிப்பிடலாம் தமிழ்ப் பண்டிதரும் அருங்கலை விநோதருமான வீரகத்தி தனது குழந்தைகளுக்கு பாட்டெழுதும் முயற்சியாக ஆரம்பித்து பல சுவைமிக்க பாடல்களை இயற்றியுள்ளார் குழந்தைகளின் அக்கறைகளையும், ஆர்வத்தையும் நன்கறிந்து எழுதப்பட்ட பாடல்களே அவை''. [7]

என்று கூறியிருப்பது மனங் கொள்ளத்தக்கதாகும். இக்கூற்று க.வீயின் இலக்கியத் தகைமையை எடுத்துக் காட்டுகிறது.

**இறையருள் நாட்டம்**

க.வீயின் கவிதையின் மற்றோர் வடிவம் ***இறையருள் நாட்டம்*** இறைவனின் பேரின்பநிலையினை, தத்துவத்தினை, எளிமையும், இனிமையும், ஓசை நயமும் கொண்ட சொற்கோர்ப்புகள் மூலம் பாடியுள்ளார்.

''உள்ளே யிருந்து மணியோசை
கேட்கும் பேறெதிர் பார்க்கின்றேன்
உள்ளே யிருக்கும் உயிர்த்தீபம்
சுடர்விட்டெரிய வேட்கின்றேன்
உள்ளே யிருந்து பிரசாதம்
உலகுக்களிக்க விழைகின்றோம்
உள்ளே யிருக்கும் உத்தமனுக்கு
உள்ளே யிருக்கப் பெறுவேனே.''[8]

என வேண்டிப் பாடுகிறார் இது அவரின் இதயதாகமாகும்.

அன்னை சக்தியை பல நாமங்கள் சாற்றிப் போற்றுகிறார் வாணியாக, அபிராமியாக, சிவ

பூரணியாக, இராசஇராசேஸ்வரியாக, சிவதியாக பலபெயரிட்டு அழைப்பதோடு மட்டுமல்லாமல் வா, நில், தா, எடியே என்று மிக உரிமையோடு நெருக்கமாக உறவு முறையோடு அத்துளுவின் புத்திரர்கள் நாங்கள் எனக் கூறிக் கேட்கிறார்

''வெள்ளைப் பசுங்கொடியே
வேதத்தின் ஓவியமே
கள்ளமில்லார் நெஞ்சின் கனிரசமே'' [9]

என விபுலானந்தர், பாரதியார் பாணியில் தேடுகிறார் தேடிக் கண்டுபிடித்த இடங்களை நயம்படக் கூறுகிறார்.

''வெள்ளைநிறத் தாமரைப்பூ வாணிவீடு – அவள்
வேதமென்னும் பொய்கையில் வாழ் அன்னப்பேடு
கொள்ளைமின்பக் கவிதையிலே அவளைக் கூடு
– எங்கள்
கொஞ்சுமொழித் தமிழ்த்தாமின் கீர்த்திபாடு [10]

என தமிழ்த் தாயாகக் காண்கிறார். காட்டுகிறார் கண்டவர், காட்டியவர், அவள் செயலை

''அழகினாலே அண்டமெல்லாம் ஆட்டிவைப்பவள்
– வாணி
ஒளியினாலே உணர்வையெல்லாம் ஊட்டிநிற்பவள்''

என்று பலவாறு போற்றி ஆனந்தப் பால் ஆரச் சொரியும் ஞானக்கறவை யாக அன்னையை அகம் மகிழ்ந்து வாழ்த்திசைக்கின்றார்

க.வீ எழுதிய 'அபிராமி நவநீதம்' என்ற நூற்தொகுப்பில் தலைமறைவாக என்ற தலைப்பிலான பகுதியில் தனது வேண்டுகோளை உருக்கமாகக் கேட்கின்றார். ஏனெனில் அன்னை நவநீதம் அதாவது பக்தரின் பக்திச்சுடரின் முன் வெண்ணெய் ஆக உருகுவாள் என்று எண்ணிப்போலும் இதை

''மனிதம் இலாத மனிதப் பிறவியில் தாவரங்கள்
புனிதம் மிகுந்தவை உன்பற்றைக் கூடலுள்ளே
தனியன் தலைமறைவாக ஒதுங்கிட ஓரிடம் தா
கனியும் கருணைக் கவிதைகள் உன்னை
வலம்வருமே'' [12]

என கருணைக் கவிதை வலம்வர பற்றையில் ஒதுக்கிடம் கேட்கிறார்

புராண இதிகாசங்களில் வரும் இறைகோட்பாடுகளை பக்திச் சுவையோடு பாடுகின்றார் க.வீ மாணிக்கவாசகர் சிவனைப் பாடியது போன்று சக்தியின் பல்வேறு வடிவங்களையும் பாடுகின்றார் பாக்களிலும், பூக்களிலும், இயற்கையின் கோல வெறியிலும் அம்பிகையை காணுகிறார். இதை

''தெண்ணிலாக் கீற்றினிலே தேனருவி யூற்றினிலே
மண்ணிலா னந்த மதுவெறிக்கும் பாக்களிலே
எண்ணற்ற பூக்களிலே ஏகாந்த மூலையிலே
விண்மீன் சிமிட்டலிலே மின்னற் பளிச்சினிலே
உன்னைக்கண் டென்ஜீவ ஊற்றுத் திறக்குதம்மா! [13]

என பத்திச் சுவை சொட்ட அவளைக் காட்டிய கவிஞர். அவள்

''தெள்ளி யெடுத்திட்ட தெய்வீக மெய்ஞ்ஞான
வெள்ளிப் பனிமலையின் வேதாந்தத் துச்சியிலே
ஆதார மாக அனைத்துக்கும் சக்திதரும்
கேதார கௌரீ'' [14]

என தத்துவப் பொருளாகவும் கண்டு அனுபவிக்கிறார். இவரது சிவதி புராணம் பற்றி ஆசிரியர் தனது உரையில் ''100வரிகளிலே என்

ஆத்மாவை நிழற்பதிவு செய்தது சிவதிபுராணம்'' எனக் கூறுகிறார். சிவதி புராணத்திற்கு முன்னுரை வழங்கிய திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் பின்வருமாறு கூறுகிறார்

''இந்தத் துதிநூல் திரட்டுப் பால் போல் அளவில் சிறியதாய், மகிமையில் பெரியதாய் விளங்குகின்றது'' எனப் போற்றுகிறார். இவ்வாறாக க.வீ அவர்களின் சக்திபாடல்கள் பல்வேறு கோணங்களில் நோக்கி இன்புறும் சிறப்பு வாய்ந்தவை''.

அன்னை அபிராமியின், சிவ பூரணியின் இயல்பினைப் பலபடக் கூறுகிறார்.

''நெற்றுக் கிலுங்கும் என்றாலும்
நெற்றுக்குள்ளே நவசிருஷ்டி
வித்துக் கிடக்குது நீயம்மா'' 15

என்றும்

''குத்துப் பச்சை அரிசிக்குள்
குவிந்து கிடக்கும் சத்தென்னச்
..........................................................
சக்தி அளிக்கும் வரலாறே
சக்தி உனது வரலாறாம் 16

என்று இலகுவான நடைமுறை உவமைகள் மூலம் இயம்புகிறார். மேலும்

''விஜய தசமியிலே வீரசக்தி கேட்பதெல்லாம்
புதையலும் புகழும் அல்ல பொருக்குவிடும் எவையுமல்ல
இதையநறு மலர்வுகளை இனிதுரைக்கும் சுகநிலைமை
அது இன்றேல் அபிராமி! இனியீளாத் துயிலருளே.'' [17]

என்று வெருட்டு விட்டவர் தான் அன்னையின் அருளாட்சிக்குட்பட்டவர் என்பதை

''வாணியெனும் தோணியிலே வாழ்க்கைப்
பெருங்கடலில் ஞான உலாவருமென் நான்''

எனக் கூறுவதனூடாக உணர முடிகிறது இவ்வாறு பக்திச் சுவையோடு தமிழாலே பாமாலை சூட்டிய கவிஞர் முருகனிடம் ஒருவரம் கேட்கின்றார்.

''தவத்தாலே உனைக்காண வேண்டும்
முருகா – உன்
தவமாகத் தமிழ்பாட வேண்டும்'' [19]

என வேண்டுகிறார்.

க.வீயின் பல கவிதைகள் இறையருள் நாட்டத்தினையும் தெய்வங்களின் அருட்சிறப்பையும், பெருமையையும், தனக்கும் தெய்வங் களுக்குமிடையே தான் ஏற்படுத்திய உறவு நெருக்கத்தையும், உரிமை யையும், சாதனையையும் எடுத்துக் கூறுவதை நோக்கமுடிகிறது.

### *சமுதாய உணர்வு*

க.வீயின் கவிதைகளில் சமுதாய உணர்வு மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறது. பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் சமூகவியல் நோக்கினை கவிஞரின் கவிதைப் பரப்புகளில் காணமுடிகிறது.

''ஒருலக அரசெனும் சமநீதி
ஒளிதவழ் உலகமாகப் பார்க்கிறேன'' [20]

என ஒருலகம்'' என்ற கவிதைத் தொகுதியிலே காணமுடிகிறது. மேலும்

ஓ! மானிடமே
உன் வேர்வை
உன் சிந்தனையில்
வேர் விடவில்லை

சுற்றாடல் உன்னில
சுருத்கென்று தைக்கவில்லை
ஏழைகளின் கண்ணீர் உன்
இதயத்தில் பாயவில்லை
சிந்தித்தாயோ? போகட்டும்
இனியயேனும் சிந்திப்பாயா? [21]

என்று மாந்தரைத் தட்டிஎழுப்பி அவர்தம் ஒடுங்கிக் கிடக்கும் உள்ளங்களைத் தட்டி எழுப்பி விசாலமடையத் தூண்டுகிறார். இது க.வீயின் மனிதநேய உணர்வை எடுத்துக் காட்டுகிறது சங்கக் கவிஞன் கணியன் பூங்குன்றனாரின் உணர்வு நிலையும் கவிஞரின் கவிதைகளில் மிதந்து வருவதைக் காணமுடிகிறது.

''சொந்தம் .....
எந்த ஊரும் எனதூரே
எல்லா மனிதரும் என்னவரே'' [22]

என சமூகத்தை உறவோடு அணைத்துச் செல்வதைக் காணலாம்

''வல்லரசு மெல்லரசு என்ற வேறுபாடுகள் எல்லாம் நீங்கி உலகில் நல்லரசு ஏற்பட வேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார். ஒருலகம் பற்றி புலமையில் கோதமன் கூறியவை, ''மனிதன் வியக்கத்தக்க அளவுக்கு அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சிகளின் உதவியினால் உயர்ந்து விட்டான் என்றாலும் மனிதனுக்கு மனிதன் அஞ்சுகின்ற நிலை மேலும் மேலும் வளர்ந்து கொண்டே இருக்கிறது ஒரு மனித இனத்திற்கு இன்னொரு மனித இனம் அஞ்சுகிற நிலை அதற்கு மேல் வளர்ந்து விட்டது ஒரு நாட்டைக் கண்டு இன்னொரு நாடு அஞ்சுகின்ற நிலை அதற்குமேல் வளர்ந்து விட்டது. இந்த இழிநிலை நாம் பெற்றிருக்கிற வளர்ச்சி களுக்கெல்லாம் கேடானது. இது மாறவேண்டும் என்று கவிஞர் மிக ஆழமாகச் சிந்திக்கிறார் ஆழமான மனவுணர்வு கவிதைக் கனவாகிறது கவிஞர் வீரகத்தி அவர்கள் விதைத்திருக்கிற விதை அவர்கள் விரும்புவது போலவே மிகப்பெரிய ஆலமரமாகி நிழல் தரவேண்டும் நாமும் விரும்புகிறோம் எதிர்பார்க்கிறோம்'' [23]

என ஆவலோடு கூறுகிறார் அந்தப் பொன்னாளை எண்ணி கவிதைக் கனவு கொண்ட கவிஞர் தன் மகிழ்ச்சியை பின்வருமாறு கூறுகிறார்.

''கணியன் பூங்குன்றனார் ஏற்றிவைத்த தீபம் – மனக்
கண்களுக்குக் குளுமை தரக் கிளர்வுற்று கனிந்த
புனித மிகு ஒருலகப் பேரரசு பூக்கும் – அந்தப்
பொன்னாளை எண்ணியெண்ணிப் பூரித்து நிற்பேன்'' [24]

இவ்வாறு உலகப் பேரரசின் ஒருமை என்பதைப் பற்றி ஆழமாக எண்ணிப்பார்த்து இலக்கியவடிவம் தருகிறார் க.வீ அவர்கள்

கவிஞர் சமுகத்தின் யதார்த்த மெய்மைகளை நன்கு ஊன்றிக் கவனிக்கும் தன்மை வாய்ந்தவர் என்பதை எடுத்துக் காட்டும் மற்றுமோர் கவிதையாக 1981 மே மாதம் 31ம் திகதி யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட போது பாடப்பட்டவையைக் குறிப்பிடலாம் காலத்தோடு இலக்கியங்கள் நடைபோடுவன என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

ஓ! யாழ்நூலகமே!
உனக்காக இல்லை
நமக்காக நமது
பட்டைவிட்ட சுயநலம்
பாசாங்கு பம்மாத்து
சாதிச் சழக்கு ஆதி
துட்ட குணங்களெல்லாம்
ஒட்டு மொத்தமாய் உடைய
நமக்காகத் தீக்குளித்தாய்!
நாமெல்லாம் புனிதம்உற
நடுநிசியில் தீக்குளித்தாய்
வரலாற்றைக் கடந்துநீ
வாழத்தான் போகின்றாய்''

எனக் கூறுகிறார் எம் தமிழ்க்கலாசாரத்தில் தீக்குளித்தல் ஓர் புனிதமான செயறபாடு, அச்செயற்பாட்டினைக் க.வீ அவர்கள் சமுதாயப் பிறழ்வு நிலைகளின் ஆர்ப்பரிப்பின் பிரதிவடிவமாகக் காட்டுகின்றார்.

போராட்ட காலங்களில் ஈழமக்களின் இன்னல்களையும், இந்தியாவின் பராமுகத்தினையும் கவிதையாகப்படைகிறார்.

''ஈழத் துருபதை ஓலம் இடும்குரல் – இந்தியா
உன்
ஈரச் செவியில் விழவிலையோ? – என்னே
பரிதாபம் [26]

என்று தமிழகத்தை நோக்கி மனம் நொந்து கேட்கிறார்.

மேலும் சமுதாயப் பார்வையின் நோக்கில் தனக்கே உரிய புதிய சிந்தனை நோக்கோடு ஒருமித்து நோக்குவதோடு, மகாவலி வளத்தினை ஒருமைப்பாட்டு உணர்வோடு நேசிக்கின்றார்.

''மாவலி எங்கள் தேசக்கொடி ஈழ
மாதாவின் மங்கள மஞ்சட்கொடி!
சுதந்திர உரிமைக் கீதங்கள் பாடி
இஸ்லாமியர் தமிழர்சிங் களவர்கள் தேச
பாசத்தில் ஒருமித்த பாந்தவியம் ஓங்கப்
பகலோடு இரவாகப் பனிமித்துப் பாயும்
(மாவலி) [27]

என்று கூறுகின்றார்

க.வீயின் சமுதாய நோக்கப் பார்வைக்குள் ஈழமக்களை அல்லற் படுத்தும் சாதியமும் அடங்கத் தவறவில்லை

''பொலிவுதரும் அரண்சனரைக் கோமிலுள்ளே
புகவைத்துத் தமிழ்மாசு போக்க வேண்டும் '' [28]

என்றும்

'முள்ளிக்கும் முத்தியென முழங்குசைவ
நெறிவாழ்வில்
உள்ளத்தொன் றானவரைத் தள்ளிவைத்த
லுயர்வாமோ? [29]

என்று வினா எழுப்பும் கவிஞர்தான் அப்படி வாழ்ந்து காட்டியதோடு இளைய தலைமுறை யூடாக சாதிபேதத்தினைக்களைந்தெறிய முனைகிறார்

''பொன்னார் வாதை போக்கும் உனைப்
புறம்பே வைத்த தீண்டாமை
சின்னா பின்ன மாக்குவனால் எங்கள்
செல்வச் சேய்''[30]

க.வீயின் சமூகநோக்கப் பார்வைக்குள் வறுமை நிலையும் அடங்கத் தவறவில்லை.

''எந்த மொழி அகராதியிலும் – கேவலம்
ஏழைஎனும் வார்த்தை – ஒழியட்டுமே [31]

என்றும் சமூகத்தின் ஏழைகளின் உற்பத்திக்கு சுரண்டும் வர்க்கமான முதலாளிக் கூட்டமும் ஓர் பிரதான காரணம் என்கின்றார். இலஞ்சம் வாங்குதலினையும் வன்மையாகக் கண்டிக்கின்றார்.

''நாலு பத்து மனிதர் கையில்
நாட்டு வளம் குவிந்திடும்
சீலம் அற்ற ஆட்சி நீதி
சின்னாபின்னம் ஆக்குவோம்'' 32

என்றும்,

''பகலிரவு பாடுபடும்
பாட்டாளி விவசாயி
குருதியினைக் குடித்துண்டு
கொழுத்துவரும் பெருஞ்சாளி
நரகாசுரன் பொல்லா நரகாசுரன் 33

என்கிறார்.

மேலும் மனித சமுதாயத்தின் கீழ்மைத்தன்மைகளைப் பாடியவர் சமூக மேம்பாட்டிற்கு கற்றலும் சுயசிந்தனையும் அவசியம் என்கிறார்.

''கற்றல் அறியா மூளை பிறர்முன்
கையைக் கட்டி நிற்குது!
கற்கும் மூளை தொட்டதெல்லாம்
கைமேல் பலன் காணுது
இந்த வழியில் உனது வாழ்வின்
இருட்டும் நிலவும் இருக்குது
சொந்தமாகச் சிந்தனை செய்
சொர்க்க வாசல் காணலாம் 34

என்று சிந்தனையைத் தூண்டியவர், நாகரிகத்தின் மென்மை சீரழிக்கப்படுவதையும் குறிப்படுகின்றார்

''மினியுடை மின்மினி கேளடி
இனியெதை நீ குறைப் பாயடி
கனியிதழ் கயல்விழி கலைதரும் இளநகில்
மணிமொழி தொடைபடும் உடையுனக் கேனடி 35

இவ்வாறு கவிஞரின் சமுதாய நோக்கு அனைத்து மூலை முடுக்கெல்லாம் சென்று மீழ்வதைக் காணலாம் சமூகக் கட்டுக்கோப்புகளை யெல்லாம் ஊடறுத்துச் சென்று மனித உணர்வோட்டங்களை நாடிபிடித்துப் பார்த்து சமுதாய முரண்பாடு என்னும் நோயை நீக்க அன்றே புதுமை என்னும் மருந்தை புரட்சிகரமாக அக் காலத்திலேயே தமது கவிதையூடாகப் பரப்பிய சமூகநோய்தீர்க்கும் மூலிகை யாகத் திகழ்ந்தவர் க.வீ.

### *சோக உணர்வுப் பாடல்கள்*

க.வீயின் பாடல்களில் சோக உணர்ச்சி ததும்பும் பாடல்கள் காணப்படுகின்றன. என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு பேராசிரியர் க. கைலாசபதியின் துன்பச் சேதியைக் கேட்டபோது விடுத்த ''கடல்விடுதூது'' நட்புக்கு இலக்கணமான சோக உணர்வின் விளிம்பில் நின்றுவிடும் கவிதை

''இயற்கை விதி இது என்று எளிதாகச் சொல்வர்
இதயத்தின் துல்லியங்கள் இடர்ப்படுவ தறியார்
இயற்கைதரும் எழிலெல்லாம் வாரியுண்டு
வாணாள்
வளர்த்து வரும் ஆத்மாவே துடிக்கிறது
கைலாஸ்'' 36

இங்கு உணர்ச்சிகளை உள்ளபடி உணரவைப்பதில் கவிஞர் சளைத்தவ ரல்ல என்பது புலப்படுகிறது

### *இசைநாடகம்*

கவிஞரின் இலக்கிய வடிவத் தினுள் இசைநாடக வடிவமும் ஒன்றாகும் அவர் எழுதிய'' கதிரைமலைப்பள்ளு

இசை நாடகம் விதந்து குறிப்பிட வேண்டிய ஒன்றாகும் தமிழில் தோன்றிய பள்ளு இலக்கியங்களில் கதிரை மலைப்பள்ளே காலத்தால் முந்தியதென கவிஞர்கள் நிறுவுகின்றனர் மற்றைய பள்ளு இலக்கியங்களை விட காலத்தாலும், வடிவ அமைப்பாலும் முந்தியது கதிரை மலைப்பள்ளுத்தான் என்பதை தடுத்துரைக்க முடியாத ஆதாரங்களுடன் க.வீ எடுத்தரைப்பது அவரது ஆராய்ச்சித் திறனைக் காட்டுகிறது.

கதிரைமலைப்பள்ளு கதிர் காமத்தில் எழுந்தருளியுள்ள முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. கடவுள் வணக்கம் முதலாக வாழ்த்து ஈறாக நூற்றுமுப்பத்தேழு செய்யுட்களை உடையது.

இசைப்பாடலிலே அமைந்த கதிரைமலைப் பள்ளினை எளிமைப் படுத்தி நாடகத்திற்கு ஏற்ற உரையாடற் பண்புகளையும் அமைத்து இடையி டையே இசைப்பாடல்களையும் சேர்த்து சிறந்ததோர் இசைநாடகமாக அமைத் துள்ளார் க.வீ. நாடக வரைவிலக்கணம் சற்றும் மாறாத வகையில் இந்நாடகம் மூன்று காட்சிகளாகப் பிரிக்கப்பட்டு, எளிய தமிழ் நடையில் பள்ளரின் வாழ்க்கைப் போராட்டத்தினைச் சித்தரிப்பதுடன் கதிரமலைக்கந்தன் புகழையும் பாடுகிறார்.

இந்நாடகத்தில் கவிஞரின் பாத்திர அறிமுகமே நாடகமாண்பை எடுத்துக் காட்டிச் செல்கிறது பாத்திரங்களை மனக்கண்முன் கொண்டுவந்து, பார்வையாளர்களை, நாடகத்திற்குள் எடுத்து வருவதாகவும் உள்ளது எடுத்துக் காட்டாக; மூத்தபள்ளியின் வருகையை

''கருமேகம் போன்ற! கன்னங்கரிய
கொண்டை, பருத்து மலைபோன்று
தளதளக்கும மார்பு, கனதிபொறுக்காமல்
கதிபிழந்து வாடும் கொடியிடை,
அம்புலியை வென்ற அழகுமுகம்,
அம்முகத்திலே வேர்வைத் துளிகள்
அரும்பிய வண்ணம் பவழமணி
மாலை மார்பிலே விளங்கிய
வண்ணம் கண்ணாற் கண்டவர்
களுக்குக் கனிவோடு அருள்சொரியும்
கந்தவேள் மெய்யடியவளான
மகாவலிகங்கை வயற்பள்ளி
வருகின்றாள் '' [37]

இவ்வாறு பள்ளியர் அறிமுகம், தலப்பெருமை, நாட்டுவளம், வீட்டுநடப்புகள், குலதெய்வங்களின் பெருமைகள் முதலியவற்றைக் கூறுவது முதற்காட்சியிலே இடம் பெறுகிறது.

இரண்டாவது காட்சி அழக்கும்பன் வீட்டுமுற்றத்தில் நிகழ்கின்றது. ஆண்டை வருகை தருகின்றார். ஆண்டையின் வருகையை

''வைக்கோற்புரி போன்ற தோள்கள்
பென்னம் பெரிய வயிறு – பக்கப் பாட்டுக்கு
வளைந்து இடவித்த கால்கள் – காய்ந்த
உடல் – கோழி போன்ற முட்டி நெஞ்சு
வட்டப் பானை போன்ற மொட்டந்தலை
பார்க்கப் பயங்கரமான கூகைமுகம்
தெற்றுப்பட்ட நரிக்காதுகள் – எட்டுக்
கட்டைக்கு நாற்ற மெடுக்கும் பற்கள்
இத்தியாதி அங்க லட்சணங்கள்

கொண்ட பண்ணைத் துரை
குடம்பன் வீட்டிற்கு வருகிறான் [38]
என்று பாடுகிறார் கவிஞர்

மேலும், மூத்தபள்ளி ஓடிச்சென்று ஆண்டையை வணங்குவதும், ஆண்டை பள்ளியரின் பாடுகளைக் கேட்பதும் மூத்தபள்ளி விடைகூறுவதும், மூத்த பள்ளி இளையபள்ளி மாறிமாறி ஆண்டையிடம் குற்றம் சொல்வதும், குடும்பன் மூத்தபள்ளியை அதட்டுவதும், ஆண்டை கணக்குக் கேட்பதும், மூத்தபள்ளி குடும்பனைத் தண்டிக்க வேண்டுமென்று ஆண்டகைக்குச் சொல்வதும், ஆண்டை கசையடி கொடுத்து தொழுவிற் கட்டிப் போடுவதும், குடும்பன் தன்னை விடுதலை செய்விக்கும்படி மூத்தபள்ளியிடம் வேண்டுவதும், மூத்தபள்ளி பண்ணையாரிடம் சென்று பள்ளனை விடுவிக்க வேண்டுவதும் கவிஞரினால் சுவைப்படக் கூறப்படுகிறது.

மூன்றாம் காட்சி கதிரைமலைப் பண்ணையில் இடம் பெறுகிறது. குடும்பன் காளைபாய்ந்ததால் மயங்கிச் சேற்றில் விழுகின்றான். பள்ளியர் புலம்புகிறார்கள், மூத்தபள்ளியின் புலம்பலை,

''ஐயோ! ஐயோ! மாலைப் பொழுதில்
மருதடி வயலிலே மாணிக்கச் சிலம்பனை
வலக்கையில் ஓச்சி வந்தாய்; என்ன
கம்பீரமாக உழுதுநின்றாய் யார்
பட்டதோ; எவர் நாவூறியதோ;
கொம்பாலே குத்திக் குடலையும்
எடுத்துவிட்டதே – எடியே எழுவி(இளையபள்ளி)
உன் கண்ணாளனுக்கு நேர்ந்த
கதி இன்னும் அறியாயோ! ஆ, தெய்வமே!
பொல்லாத எருதென்று நயினார் கூடச்
சொல்லி வைத்தாரில்லையே – ஐயையோ
இனிநான் ஏது செய்வேன் பாவியேன்
செய்த பாபமோ, அந்தச் சக்களத்தியின்
கோபமோ அல்லது தாபமோ நுகம்
வைத்த உனக்கு இந்தக் கெதி
அத்தான் அலங்கார வீரப்பள்ளனே,
நீ ஆவிமயங்கிக் கிடக்கின்றாய்
எனக்கோ ஒன்றும் புரியவில்லையே
கதிரை மலைத் தந்தையே – நீ எங்கே
போய்விட்டாய் என் அத்தான் படும்
துயர் கண்டு அன்பு செய்யாயோ
அருள் தாராயோ'' [39]

என்று அருமையாகக் கூறுகின்றார் இவ்வாறே பள்ளன் மயக்கம் தெளிந்து வயல் வேலைகளைக் கவனித்தல், நாற்று நடுதல், அரிவிவெட்டுதல், ஆண்டை நெல்லைப் பங்கீடு செய்தல், பத்தியப்படாத மூத்த பள்ளி இளையவளுக்குக் கூடக் கொடுத்ததாக முணுமுணுத்தல், குடும்பன் அவளைப் பற்றி ஆண்டையிடம் முறையிடுதல், பள்ளியரின் சச்சரவு மூன்றாம் காட்சியிலே சுவை குன்றாமல் கூறப்படுகின்றது.

ஆண்டை:-
''நிறுத்துங்கள் பொலிக்களத்தில்
உங்கள் பள்ள புத்தியைக்
காட்டத் தொடங்கி விட்டீர்கள்
உங்கள் 'ஆண்டைகள்' இருவரும்
ஒரு பிதாவின் பிள்ளைகள் அது
அப்படியிருக்க, நீங்கள் ஏன்
குத்துப் படுகிறீர்கள் ? இனியேனும்
அயலறியாமல் வாழுங்கள்
முடவனும் எருதும் போலக்
குடும்பனை வாட்டி வதையாதீர்கள்
அக்காளுந் தங்கையும் போல்

குடும்ப ஆனந்தத்தில் குடும்பனுடன்
சேர்ந்து வாழுங்கள் கதிர்காமத்
தெய்வம் உங்கள் எல்லோரையும்
காப்பாற்றுவாராக [40]

என்று ஆண்டை பள்ளியருக்கு அறிவுரை கூறுகின்றார் எல்லோரும் கணபதியையும், கந்தனையும் மாறி மாறி வாழ்த்துகின்றார்கள்.

கதிரைமலைக் கந்தனுக்கு அரோகரா!
கணபதித் தெய்வத்திற்கு அரோகரா!
வள்ளியிட பாகனுக்கு அரோகரா!
வல்லபை தெய்வத்திற்கும் அரோகரா![41]

என்பதுடன் இசை நாடகம் நிறைவு பெறுகின்றது. பள்ளரின் பாஷையே பள்ளின் உயிர் இவ்வுணர்வோட்டமான வார்த்தைப் பயன்படுகையானது கதிரைமலைப் பள்ளில் பயன்படுத்தப் படுவது போன்று எந்தப்பள்ளு இலக்கியத்திலும் காணப்படவில்லை மேலும், பாத்திர வர்ணிப்பில் கூட கவிஞர் மிகவும் கச்சிதமாகப் பணியாற்றியுள்ளதையும் காணலாம்.

எழுத்துக்களிற்குள் கவிதை மெருகூட்டி தமிழ்த் தெய்வமான முருகப்பெருமானைப் பாட்டுடைத் தெய்வமாகக் கொண்டு கதிரைமலைப் பள்ளானது உயிர் ஓவியமாகப் படைக்கப்பட்டுள்ளது. என்ற உண்மையை மறுக்கவோ மறைக்கவோ முடியாது பள்ளுப் பிரபந்தக் கூறுகளின் சுவை குன்றாமல் இந்த இசைநாடகத்தையும் அமைத்துச் சென்றமை க.வீயின் முத்திரை பதிக்கும் தனித்துவமான தனிநடையழகில் இதுவும் ஒரு நடையழகு.

*உரையாசிரியர்*

தமிழ் இலக்கிய வரலாற்றில் நூலாசிரியருக்குச் சமமாக உரையாசிரியர்களும் இடம்பெற்றுள்ளனர். தமிழ்மொழியின் காலங்கடந்த வாழ்விற்கும், வெற்றிக்கும் காரணமாய் இருப்பவர்கள் உரையாசிரியர்களேயாவர். இலக்கியக்கொள்கைகளை விளக்கி, காலந்தோறும், பண்பாட்டை வளர்த்தும், இலக்கணக்கொள்கைகளை விளக்கி மொழியை வரம்பிட்டுக் காத்தும் தமிழினத்திற்கு அளப்பரும் தொண்டாற்றிய பெருமை உரையாசிரியர்களையே சாரும்.[42] இந்த வகையில் க.வீ அவர்கள் சிறந்த இலக்கணநுட்பமும், கவித்துவமும் உடையவராக விளங்கியதோடு சிறந்த உரையாசிரியராகவும் திகழ்ந்தார்.

கந்தபுராணத்திற்கு ஈழத்தவர்கள் பலர் உரை எழுதியிருக்கின்றார்கள். இந்த உரைவரிசையில் க.வீயும் ஒருவர். இவர் கந்தபுராண உற்பத்திக் காண்டத்திலுள்ள ஆறுபடலங்களுக்கும் உரை எழுதியுள்ளார் இலக்கியப் பாடநூல்களான இரட்சணிய யாத்திரிகம் - கடைதிறப்புப் படலம், தேம்பாவணி முதற்காண்டம் - மகனேர்ந்த படலம், சீறாப்புராணம்- அலிமா முலையூட்டு படலம் என்பவற்றுக்கும் க.வீ எழுதிய உரைகள் விதந்து குறிப்பிடக்கூடியன. இந்நூல்களோடு சமயநூல்களான உமாபதி சிவாச்சாரியாரின் திருவருட்பயன், ஆண்டாளின் திருப்பாவை முதலிய சமய நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார்

க.வீயின் உரைமரபு மாணவர்முதல் ஆராய்ச்சியாளர் வரை விளங்கும் எளிமையும், ஆழமும் மிக்கது. எப்படியெனில் சொல்விளக்கம், பொருள்விளக்கம், உரைவிளக்கம்,

இலக்கணவிளக்கம் முதலியவற்றை உணர்த்தும் வகையில் அவரின் உரைமுயற்சிகள் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். க.வீயின் உரை கூறும் ''பாணி'' எல்லா நூல்களிலும் ஓரே தன்மையானதாகவே காணப் படுகின்றது. க.வீயைப் பண்டைய உரையாசிரியா வரிசையில் வைத்து எண்ணவைக்கிறது. க.வீ அவர்கள் உரை எழுதும்போது, முக்கிய பாடல்களுக்கு சொல்விளக்கம் தந்து,பொருள் விளக்கம் செய்தபின், நயம்பட உரைக்கு விளக்கம் தந்து, இலக்கண விளக்கம் தருவது வழக்கம். கந்தபுராணம் உற்பத்திக்காண்டம், காம தகனப் படலத்திற்கும் இவ்வாறே உரைவிளக்கம் தந்துள்ளார். இவ்வுரைபற்றி...

''-----------பிள்ளை இலக்கிய உலகை பழகும்வரை முதலில் சில பாடல்களுக்குப் பதவுரை தரப்பட் டுள்ளது. மீண்டும் இடையிடையே சில பாடல்கள் தேவைநோக்கிப் பதவுரை வேண்டிநிற்கின்றன. மிகுதியான பாடல்கள் உரைநடையிலேயே பொருள் உணர்த்தப்பட்டுள்ளன. மிக அருமையாக உரைநடையும் பதவுரையும் இன்றி நிறுத்தக்குறியீடுகளின் உதவியுடன் இரண்டொரு பாடல்கள் விடப்பட்டுள்ளன. சுருக்கமாக சொல்லப்போனால் எல்லோரும் எழுதுகின்றார்களே என்பதற்காக எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

சுவை உணர்ச்சி மிகுதல் வேண்டும். அது காரணமாக இலக்கியப்பிரியம் ஏற்பட வேண்டும். படிக்கும் இலக்கியத்தை திறனாய்ந்து படித்தல் வேண்டும். ஒப்பிட்டு மதித்தல் வேண்டும். இம்முழுநோக்கம் இறுதிவரை கவனிக்கப்பட்டுள்ளது.''

என்று க.வீ அவர்கள் குறிப்பிடுவது அவரது உரைகூறும் முறையை தெளிவுபடுத்தி நிற்கின்றது.

க.வீ அவர்கள் எதிலும் புதுமை காண எண்ணுபவா் அந்த வகையில் தான் உரையெழுதிய நூல்களின் பெயர்களையும் புதுமையாக குறிப்பிட்டுச் செல்கின்றார். கந்தபுராணம் உற்பத்திக்காண்டத்தில் ஆறு படலங்களுக்கு உரையெழுதிய போதும் நூற்பெயரை ***காம தகனம்*** என்றே குறிப்பிட்டுள்ளார். இரட்சணிய யாத்திரிகம் கடைதிறப்புப்படலம், *தட்டுங்கள் திறக்கப்படும்* என்றும், தேம்பாவாணி முதற்காண்டம், மகனேர்ந்த படலம், *கர்த்தரின் காணிக்கை* என்றும், சீறாப்புராணம் அலிமா முலையூட்டு படலம், அலிமா முலையமுதம் என்றும் பெயர்கள் சூட்டப்பட்டு உரைவிளக்கம் செய்யப்பட்டன.

தாம் உரையெழுதும் பாடல்களுக்கு பொருத்தமான தலைப்புக்கொடுத்து செல்வதையும் க.வீயின் உரைநூல் களிலே காணமுடிகின்றது. இவ்வாறு கொடுத்த தலைப்புகள் பாடல்கூறும் கருத்தினை ஒரு வரியிலேயே அறிய வழிகாட்டியாய் அமைவது குறிப்பிடத் தக்கதாகும் க.வீயின் உரையானது சிறு சிறு வாக்கியங்களில் பொருளை தெளிவாக சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திறன் உடையதாகவும் அமைந்துள்ளது.

வகை மாதிரிக்கு இரட்சணிய யாத்திரிகம் கடை திறப்புப்படலத்தில் "கல்லேன் சுருதி,...... என்ற பன்னிரண்டாம் பாடலுக்கு எழுதிய உரையை சுட்டிக்காட்டலாம்.

*உரை:-*

''யான் சுருதி (வேதம்) கற்கவில்லை. (யார்க்கும்) நன்மை புரியக்கருதவில்லை. பாவம் செய்தலில் எனக்கு கசப்பு ஏற்படவில்லை. (மொத்தத்தில்) யான் பொல்லாதவனே என்றாலும் இங்கு வந்தடைந்து விட்டேன் (இனி யான்) திரும்பிப் போகமாட்டேன்(ஆதலின் ஐயன்மீர் ) கதவுகளை திறந்தருளிவீராக''[44]

என்று சின்னஞ்சிறு தொடர்களால் உளங்கொள்ளும் உரையை எழுதுவதை காணமுடிகின்றது. பாடலின் பொருளை விளங்கி, மாணவா படிக்கும்பொருட்டு அடைப்புக்குறிக்குள் விளக்கம் தந்தமை மாணவரை படிக்கத்தூண்ட க.வீ கையாண்ட சிறப்பான வழியாகும்.

க.வீயின் ஆசிரியப் பணி, அனுபவம் என்பவை உரையெழுதுவதில் நுட்பங்களை புகுத்த உதவியிருக்கிறது என்பதை அவரது உரை நூல்கள் மூலம் அறிய முடிகின்றது .இவ்வாறே வேண்டிய இடத்திலே பொருத்தமான மேற்கோள் காட்டுவது பண்டைய உரையாசிரியர் மரபு. க.வீயும் தம்முரைகளினூடே வேண்டிய இடங்களில் பொருத்தமான மேற்கோள்களை கையாளுவதை அவதானிக்க முடிகின்றது. அதே போல பாடலடிகளுக்கு க.வீ கூறிச்செல்லும் உரைவிளக்கங்கள் சிறப்பானவையாக அமைந்து அவரின் நயம் காணும் திறன் பல இடங்களில் அவரது பாடல்களில் வெளிப்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது.

க.வீயின் பாடல்களில் இலகுவான உவமைகளைக் கொண்டு பொருளை விளக்கிச் செல்வதையும் அவை தெளிவானவையாகவும் படிப்போர் உளங்கொள்ளுமாறும் தனக்கேயுரிய நடையில் விளக்கிச் செல்வதையும் காணலாம். தேம்பாவணி முதற்காண்டம் மகனேர்ந்த படலத்தில '''வேய்தான் அன்னான்........" என்ற ஏழாம் பாடலில் உள்ள அணியை க.வீ அவர்கள் விளக்கிச்செல்வதை எடுத்துக்காட்டலாம்.

வி-ம்:- ஒருஇயல்பான நிகழ்ச்சி அல்லது இயற்கை நிகழ்ச்சிக்கு தன்னுடைய மனக்குறிப்பை ஏற்றிச்சொல்வது தற்குறிப்பேற்ற அணியாகும்.இவ் அணியை கவிஞர் கையாண்ட பாங்கு தற்குறிப்பேற்ற அணியை ஆக்கிக் கொள்வதில் கவிஞர் சிறந்த வல்லுநர் என்பதை பின்வரும் அணிவிளக்கம் எடுத்துக்காட்டுகிறது.

''சூரியன் உதிக்கும்பொழுது ஒளி குறைவு. தானே தன்னுடைய ஒளிக்குறைவிற்குக் காரணம் எது என்று உதயசூரியன் ஆராய்கின்றானாம். கன்னி கரங்களில் உள்ள மைந்தன் பூவலயம் முழுவதையும் ஒளியால் மூடிக்கொண்டான். அந்த ஒளிக்கு இந்தச்சூரியன் ஒளி எந்தமூலையில்? ஆகவே சூரியன் அந்த மாபெரும் ஒளியைத் தன்ஒளிக்கரங்களினால் வணங்கிக்கொள்கிறான். சூரியன் உதிக்கும்பொழுது இவர்களும் புறப்பட்டு வருகின்றார்கள் என்பது கருத்து. இது ஒரு தற்குறிப்பேற்றம்.

பொழுது மேலே வரவர வெயிலும் கூடிக்கூடி வரும் அல்லவா? இதற்கு கவிஞர் தன் கருத்தை சமய நம்பிக்கையூடே கொடுக்கிறார். தேவ மைந்தனைத் தொழாதவர்களைச் சூரியன் சுடுகின்றானாம்.இதுவும் ஒரு தற்குறிப்பேற்றம்.

சமய சமரசநோக்குடைய க.வீயின் பல்வேறுபட்ட சமய அறிவை அவரது உரைகள் மூலம் அறியமுடிகிறது. காம தகன உரைமூலம் சைவ சித்தாந்தக் கருத்துக்களில் க.வீயின் ஆழத்தை அறியமுடிகிறது. தான் சைவப் பாரம்பரியம்மிக்க சூழலில் ஊறித்திளைத்தவராக இருந்தும் கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய இலக்கியங்களிற்கு அவர் உரை எழுதியமை அவரின் தெளிந்த அறிவையும் பரந்த மனதையும் எடுத்துக்காட்டுகின்றது. இம்முயற்சிகளை அம் மதத்தவர்கள் விதந்துகூறியமை குறிப்பிடத்தக்கது. க.வீயினால் எழுதப்பட்ட சீறாப்புராணம் அலிமா முலையூட்டு படல உரையை வெளியிட்ட ஸ்ரீலங்கா புத்தகசாலையினர் பின்வருமாறு கூறியிருக்கின்றனர்.

''இவ் விளக்கம் பொன்னின் குடத்திற்கு ஒரு பொட்டு. அலிமா முலையமுதம் இலக்கியக் கலையமுதம் ஆக்கப்பட்டுவிட்டது.''[46]

இக்கூற்று க.வீயின் உரைச்சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

அதேபோல க.வீ கூறும் சொல் விளக்கங்கள் மனதைத்தொடும் சுவையானதாகவும் இருக்கும் கவீயின் இலக்கணப் புலமையை, ஆழத்தை, தெளிவை பரந்துபட்ட அறிவை அவர்தம் உரைகட்குக் கூறும் இலக்கண விளக்கங்களுடாக காணமுடிகின்றது

சிறந்த உரையாசிரியருக்கு இருக்கவேண்டிய இலக்கண ஆற்றல், இலக்கியப்புலமை, பன்னூற்பயிற்சி, ஒப்பியல் நோக்கு, புதுமைகாணும் மதிநுட்பம் ஆகியன க.வீயிடம் விஞ்சி நின்றதை அவரது உரைவிளக்கங்களுடே அறிய முடிகின்றது. க.வீ ஒரு உரையாசிரியராகவும் திகழ்ந்தார் என்பதை அவரது உரைநூல்கள் காலத்தால் அழியாமல் காட்டி நிற்கின்றன.

### வாணிகலைக்கழகமும் மாணவர் மரபும்

#### வாணிகலைக்கழகம்

க.வீ அவர்களின் தமிழ்ப் பணிகளுள் வாணிகலைக்கழகப் பணி விதந்து குறிப்பிடக்கூடியது. வடமராட்சியின் கல்விப் பாரம்பரியத்தை பேணி வளர்ப்பதிலும், இலக்கிய உருவாக்கத்திலும் இக்கழகம் முக்கிய பங்கு வகிக்கிறது[47] வாணிகலைக்கழகம் க.வீயினால் 15.08.1956ல் நிறுவப்பட்டது. இக்கழகத்தின் நோக்கத்தை ஆசிரியர்; ''நமது சிறந்த மொழி கலை கலாச் சாரங்களில் துரிதமான வளர்ச்சியை ஏற்படுத்தவும், பரபரப்பும் வேகமும் நிறைந்த இச்சமுதாயத்திலும் தனிமனித வாழ்விலும் நிரந்தரமான அமைதியை ஏற்படுத்தவும் பொருந்தமான ஒரு கல்விமுறை குருகுல அடிப்படையில் இயங்குவதே ஆகும். தமிழ்நாடும் பரந்த பாரதமும் வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டு குருகுலக்கல்வி முறையிலேயே மனிதஆன்ம மலர்ச்சி

பெற முயற்சி செய்து வருகின்றன.

தட்சசீலம், நாலந்த, காசி, விக்கிரம சீலம் முதலியன வடநாட்டிலும், எண்ணாயிரம், திருமுககூடல், திருவொற்றியூர் ஆதியன தென்நாட்டிலும் மிகச்சிறந்த குருகுலநிலையங்களாகப் பழைய காலத்தில் பணிபுரிந்தன. இன்றும் கவிதாகூர் கண்ட சாந்திநிகேதனம் உலகப்பிரசித்தி பெற்ற குருகுலக்கல்விப் பல்கலைக்கழகமாகும். தமிழ் நாட்டில் தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆதியன குருகுல அடிப்படையிலே மொழிக்கும், சமயத்திற்கும், மனித ஆன்மாவுக்கும் வேகமும், இயக்கமும், அமைதியும் அளித்து வருகின்றன.

இந்த அடிப்படையில் ஈழத்தமிழகத்திற்கும் ஒரு சாந்திநி கேதனம் வேண்டுமென்ற தூய்மையான நோக்கத்துடன் 15-08-1956ல் உருவானது தான் வாணிகலைக்கழகம் இம் முயற்சி மிகப்பெரிய கனவெனப் பலராலும் கருதப்பட்டாலும் 'மிகநல்லகனவு' என்பதே நமது பணிவான எண்ணம்."[48]

கவிச்சக்கரவர்த்தி கந்தமுருகேசனார், திரு.மு.சிவசிதம்பரம் எம்.பி., திரு.க.துரைரத்தினம் எம்.பி., நவரத்தினம் எம்.பி ஆகியோரைக் காப்பாளர்களாகக் கொண்டு இக்கழகம் அமைக்கப்பட்டது. இதன் இயக்குநர் க.வீ அவர்களே. நிரந்தர நிர்வாகக் குழுவில் திரு.க.வீரகத்தி, திரு. மு. கந்தப்பு, திரு.அ.லிகோரி, திரு.ப.சச்சிதானந்தன், திரு. வே. நல்லைநாயகன் என்போர் அங்கம் வகித்தனர்.

வாணி கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் ஆசிரிய கலாசாலைப் புகுமுகத் தேர்வுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்தல். ஆனால் குறுகிய காலத்திலேயே அது தன்பணியை விரிவுபடுத்திக் கொண்டது. பிரவேச, பாலபண்டித, வகுப்புகள், இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் வகுப்புகள், இசைநடன வகுப்புக்கள், எழுதுவினைஞர் புகுமுகத் தேர்வு ஆயத்த வகுப்புகள் என்பன. சிறப்பாக நடத்தப்பட்டது. இதன் ஆரம்பகால வகுப்புகள் சனி ஞாயிறு தினங்களிலும், விடுமுறை, தினங் களிலும், கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது. இலக்கணம், இலக்கியம், தருக்கம், சைவசித்தாந்தம், சரித்திரம், புவியியல், விஞ்ஞானம், கணிதம் முதலிய பாடங்கள் இங்கு கற்பிக்கப்பட்டன. இசை, நடனம், நாடகம், ஓவியம், தையல், முதலிய கலைகளும், போதிக்கப்பட்டன. ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம், முதலிய பிறமொழிகளும் இங்கு கற்பிக்கப்பட்டமை பெருமையுடன் நினைவு கூர வேண்டியவையாகும்.

வளர்ந்தோர் கல்விப்பகுதியும் இக்கழகத்தால் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. உலகின் பலநாடுகள் முதியோர் கல்விபற்றி இன்று சிந்திக்க முன்பே முதியோர் கல்விபற்றிச் சிந்தித்த தொலை நோக்குச் சிந்தனையுடையவர் க.வீ வளர்ந்தோர் கல்விப் பகுதியின் மேற்பார்வையாளராக திருமதி.வீ.நாகம்மாளும், உதவியாளர்களாக செல்வி. வெ.சாந்தநாயகி, செல்வி.த.நல்லநாயகி, திரு.அ.லிகோரி, திரு.சி.கே.நடராசா என்போரும் பணிபுரிந்தனர்.

இக்கழகம் தனக்கெனத் தனித்துவமான ஆசிரியர் குழுவைக் கொண்டு மாணவர்களிடம் வேதனம் பெறாது ஊதியம் எதுவுமின்றி பணியாற்றியமை விதந்து குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். 1962 ம் ஆண்டுகளில் இங்கு கற்பித்த ஆசிரியரின் பெயர்கள் பின்வருமாறு

***இயல்:-***

திரு.க.வீரகத்தி (பொறுப்பாளர்)
பண்டிதர் சி.கந்தவனம்
பண்டிதர் வித்துவான் சி.சுப்பிரமணியம்
பண்டிதர் வித்துவான் க.கிருஷ்ணபிள்ளை
வித்துவான் மு.கணபதிப்பிள்ளை
பண்டிதர் க. கனகசபை
பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை
திரு.சி.சிவஞானசுந்தரம் **டீ.யு**
திரு.வை.கா.சிவப்பிரகாசம் **ஆ.யு**
திரு.வ.சிவராசசிங்கம் **டீ.யு**
பண்டிதர் எஸ்.முருகேசு

***இசை:-***

சங்கீத பூஷணம் சோ.கோவிந்தராஜன் (ஆலோசகர்)
சங்கீத பூஷணம் திருமதி த. சரஸ்வதி (பொறுப்பாளர்)
சங்கீதபூஷணம் செல்வி க.பர்வதகல்யாணி
செல்வி. தி.ஞானதேவி

***நாடகம்:-***

மன்னவன் மு. கந்தப்பு (பொறுப்பாளர்)
திரு.மு.கந்தவனம் (ஐயா)
திரு. வ. தங்கேஸ்வரன்

***நடனம்:-***

கண்ணன் வ.கிருஷ்ணபிள்ளை (பொறுப்பாளர்)
கீதாஞ்சலி வி. கே. நல்லையா

***ஓவியம்:-***

திரு.சி.சிவஞான சுந்தரம் (சுந்தர்) (பொறுப்பாளர்)
திரு. ஆ. சுப்பிரமணியம் (மணியம்)
திரு. பொ. விசாகப்பெருமாள் (விசாகன்)

***தையல்:-***

திருமதி சரஸ்வதி கனகசபை

***சமஸ்கிருதம்:-***

பண்டிதர் எஸ்.பஞ்சாட்சரசர்மா (பொறுப்பாளர்)
திரு.எஸ் சின்னத்தம்பி
பண்டிதர் பொ. சதாசிவம்

***விஞ்ஞானம்*** திரு. கே.எஸ். குகதாசன் B.Sc.
திரு. த. பாலேந்திரன் (E.T. Science)

***கணிதம்:-***

திரு.அ. லிகோரி (பொறுப்பாளர்)
திரு.க. இராசையா
திரு. ஏ.எஸ் அகஸ்தீன். (ET.MATHS;)

***சரித்திரம்:-*** திரு.பொ.கணேசன் B.A (பொறுப்பாளர்)
திரு.வ.மகாலிங்கம் B.A
திரு. சு.முருகவேள் B.A

***ஆங்கிலம்:-***

திரு. எஸ். மனுவேற்பிள்ளை B.A
திரு.த. செல்லப்பா B.A (Lond)
செல்வி க. இராசேஸ்வரி M.A

***புவியியல்:-***

திரு.வ. இராசையா

***சமயம்:-***

திரு. சி.பொன்னம்பலம்

1962 களுக்குப் பின் இங்கு கற்பித்தவர்களுள் சைவப் புலவர் எஸ். வல்லிபுரம், புலவர் புவனேஸ்வரி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்

இக்கழகத்தின் மாணவர்கள் பலர் ஆசிரியகலாசாலை புகுமுகப் பரீட்சையில் சித்தி பெற்றனர். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடாத்திய பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சைக்கு தோற்றிய பலர் இதில் படித்து விசேடசித்தி பெற்றனர். சைவபரிபாலன சபையினர் நடாத்திய சைவப்புலவர் தேர்வுகளிலும், இக்கழக மாணவர்கள் தோற்றி திறமைச்சித்திகள் பெற்றனர். இக்கழக மாணவர்கள் வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சை களிலும் தோற்றிச் சித்தியடைந்துள்ளனர். பம்பாய் பாரதீய வித்தியாபவான், சென்னை அமரபாரதி சமஸ்கிருத பரீட்சைகளிலும் இக்கழகத்தின் மாணவர்கள் தோற்றி விசேட சித்திகளைப் பெற்றமையும் விதந்து குறிப்பிடத்தக்கது.

வடமராட்சி மாணவர்கள் மட்டுமன்றி ஈழத்தின் பல்வேறு பிரதேச மாணவர்களும் இக்கழகத்தில் படித்தனர். இங்கு பல ஊர் பலசாதி மாணவர்களும் பல்கலைக்கழகத்தில் பயிலுதல் போன்றதோர் உணர்வுடன் பயின்றமை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். தனித்துவமான இலவசக்கல்வி முறையில் இயங்கி வந்த வாணி கலைக்கழகம் பல்வேறு எதிர்ப்புகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. இதனைக் க.வீ அவர்களே பின்வருமாறு குறிப்பிட்டி ருக்கின்றார்.

தாழ்த்தப்பட்ட மாணவர்களைச் சேர்த்துக் கொண்டதே புயல் காரணமானது. என் சூழல் வைதீக மேலாதிக்கம் செய்யும் சூழல். எதுவுமே என்னில் பலிக்கவில்லை. உயர்சாதி மாணவர்களும் தா.ப.மாணவர்களும் ஒரே கோப்பையில் உண்ணச்செய்கிறேன் 'சம்ஸ்கிருதம்' படிப்பிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. என் ஆசிரியர் ஒருவரைக் கேட்டபோது அவர் சொன்னது ''வீரகத்தி 'வேதம் ஓதுதல் வேதியர்க்கு அழகு' தா.ப. கற்கமுடியாது'' என்றார். நான் சொன்னேன் ''இப்போது அது வேளாளருக்கும் அழகாய்விட்டது. (அவர் வேளாளன்) இன்னும் சற்று இறங்கி எல்லோருக்கும் அழகாகட்டுமே' என்றேன், அவர் 'உன்னோடு நியாயம் பேசவில்லை; நான் வரமாட்டேன் என்று விட்டார். நான் விட்டபாடில்லை. உங்கள் விடையில் இருவித தவறுகள் உண்டு. ஒன்றைச் சுட்டிக் காட்டிவிட்டேன். மற்றது வேதத்திற்குத்தான் சமஸ்கிருதம் என்று நினைக்கிறீர்கள். அடப்போ என்று விட்டார். நான் பார்ப்பன நண்பர்களைக் கொண்டே அந்தப்பணியைச் செய்வித்தேன்.[50]

இக்கழகம் மாணவர்களை உருவாக்கியதுடன் சமூகப்பணிகளிலும் மாணவர்கள் ஈடுபடப்பயிற்சி அளித்துள்ளது. புதிய படைப்புகளை நூலுருவில் வெளியிட்ட பெருமையும் வாணி கலைக்கழகத்திற்குரியது. ஆறாம், ஒன்பதாம் ஆண்டு நிறைவுகளில் அழகான ஆண்டுமலர்களை வெளியிட்டு இக்கழகத்தின் பணிகளைப் பதிவு செய்துள்ளது.

இவைமட்டுமல்ல பல விழாக் களை எடுத்தும், பல இந்திய அறிஞர்களை வரவேற்றும், கிளை

பரப்பியும் தன்புகழ் நிறுவியுள்ளது. வாணிகலைக்கழகம். தமிழ்கூறும் நல்லுலகத்திலே முதன் முதல் தொல்காப்பியருக்கு விழாவெடுத்த பெருமை வாணிக்கேயுரியது இவ் விழாவிற்கு வாழ்த்தனுப்பிய முன்னாள் வித்தியாதிபதியின் வாழ்த்துச் செய்தி விழாவின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

''இன்று நிகழ்ந்த வாணி கலைக்கழகத்தின் தொல்காப்பியர் திருநாள் கொண்டாட்டத்தில் தலைமை வகித்துப் பங்குபெறும் பாக்கியத்தைப் பெற்றேன். நிகழ்ச்சிகளெல்லாம் நன்கு நடைபெற்றன. பெருந்தொகையான மக்கள் சமுகமாகிச் சபையைச் சிறப்பித்தனர் அதிக சொற்பொழிவு களைக் கேட்டு எல்லோரும் மகிழ்ந் தார்கள். இசையும் சோபித்தது வாணிகலைக்கழகம் பல்லாண்டு வாழ்க'' [51]

தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த பேரறிஞர்கள் பலர் இக்கழகத்திற்கு வந்து சொற்பொழிவு ஆற்றியதுடன் இக்கழகத்தைப் பாராட்டியும் வாழ்த்தியும் சென்றுள்ளனர். அ.ச.ஞானசம்பந்தன், பேரூர் இராமசாமி அடிகளார், கி.வா.ஜெகந்நாதன் தெ.பொ.மீனாட்சி சுந்தரம்பிள்ளை ,குன்றக்குடி அடிகளார், விஜயபாரதி தம்பதியினா், சா.கணேசன், வச்சிரவேலு முதலியார் போன்றோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் அ.ச.ஞானசம்பந்தன் 20-06-1969ல் வருகை தந்தபோது ''வாணிகலைக் கழகத்தைக் காணும்பேறு நேர்ந்தது இளம்சிறார்கள் கல்விபயிலும் ஆர்வத்தையும், உழைப்பையும் கண்டேன் இவர்கள் முயற்சி நாளும் ஓங்கி நற்பயன் விளைக்க இறைவன் திருவருள் பாலிப்பானாக'' [52]

என்று வாழ்த்தியுள்ளார்.

வரணி, கைதடி, யாழ்ப்பாணம், புசல்லாவை (மலைநாடு) என்ற நான்கு இடங்களிலும் வாணி கலைக்கழகக் கிளைகள் தமிழ்ப்பணி புரிந்துள்ளன. வித்துவான் க. கார்த்திகேயன் வாணிகலைக்கழகத்தின் செயற்பாட்டை தோற்றத்தை உவமைமூலம் கூறி பின்வருமாறு வாழ்த்தியுள்ளார்.

*''கரவைவாழ் சிறுவர்கற்கக் கழகங்கள் மூன்றுதந்த*
*திருமிகுமணியம் சிற்றம் பலவனின் செய்கைபோலப்*
*பொருவரு வீரகத்திப் பண்டிதன் நிறுவியுள்ள*
*பெருமை யோடிலங்கும் வாணி கலையில் கழகம் வாழ்க''*

இவ்வாழ்த்து அவர் உள்ளத்தில் இருந்து உதித்த உண்மையான வாக்காகும்.

இவ்வாறு நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்த வாணிகலைக்கழகம் இன்றில்லை. க.வீ அவர்கள் தனது இறுதிக் காலத்தில் கூட அதை மீண்டும் செயற்பட வைக்க முனைந்தார். அவரின் அந்த ஏக்கத்தை அன்னை அபிராமியிடம் முறையிடு கின்றார்.

*''அத்துரூவின் அத்துவித மெய்க்கலப்பில் எனைஅணைத்துச்*
*சித்தம்இரங் கியஉன்னை எந்தவிதம் சேவிப்பேன்?*
*முத்தமிழும் புனிதஉறப் புதுமைஉறப் பொலிமைஉற*
*நித்தியமும் என்வாழ்வைக் கரைத்தூற்றி நான்வளர்த்த*
*வித்தைஒளிக் கலைவிருட்சம் பாதிவழி வீழ்ந்துவிட*
*எத்தனையோ நலிவுற்றோர் கல்விநிழல் மறைந்துவிட*
*புத்திக்குப் புத்திசொல்லும் 'புத்தி'யை நான் இழந்துவிட*
*சித்தம்மிகக் கலங்கிவிட்டேன்! ''வாணி''*

*பழங்கதையாச்சே!*
*சிவமலரே! இனிஅதனை மீளுயிர்ப்புச் செய்வாயோ?*[54]

இந்த ஏக்கத்தை கடைசிக்கால மாணவர்களில் ஒருவரான அவரது பேரன் முறையிலான திரு.பொ. கமலரூபன் மூலம் நிறைவேற்ற எண்ணி ஒருசிறு முயற்சியையும் செய்தார் அந்த முயற்சி என்றோ நிறைவேறும் என்ற திருப்தியுடன் க.வீ இருந்தார், மறைந்தார், ஆனால் இன்று கமலரூபனும் மறைந்து விட்டார். எனினும் அவருடைய ஆரம்பகால வாணிகலைக் கழக மாணவியும், க.வீயின் விருப்பத்திற்குரிய மாணவியுமான பண்டிதர் வ.பத்தினிப்பிள்ளை வாணிகலைக் கழகத்தை ஏதோ ஒருவகையில் புத்துயிர்பெறச் செய்ய முனைகின்றார், ஏனெனில் தனது ஆசிரியர் க.வீ தனது கடைசிக் காலத்திலும் அதை மீளுயிர்ப்புச் செய்ய முனைந்த அந்தத் தணியாத தாகத்தைத் தீர்ப்பது தம் கடமை என்ற கொள்கையுடையவர். அது மட்டுமல்ல வாணிகலைக்கழகம் தம்முடைய கோயில். அக்கோயிலைப் புனருத்தாரணம் செய்வது தம்கடமை என்றும் கூறுவார்.

வாணிகலைக் கழகம் இன்றில்லாவிட்டாலும் அதன் மாணவர்பலர் இன்றும் அதன் புகழைத் தமக்கு முன்வைத்துப் புகழுடன் திகழ்கிறார்கள். இதற்கு உதாரணமாக வாணி கலைக் கழக மாணவனாக மட்டுமன்றி அதன் வளர்ச்சிக்கு க.வீயுடன் ஒத்தாசையாக நடத்த திரு. க. நவரட்ணம் ஆசிரியர் தனது பிள்ளைகளுக்கு 'வாணி' என்ற பெயரையே முன்பெயராகவும், முழுப்பெயராகவும் சூட்டியுள்ளார். இது அவர் ஆசிரியருக்கும், வாணிகலைக் கழகத்திற்கும் காட்டிய விசுவாசத்தின் குறியீடு ஆகும்.

***மாணவர் மரபு***

பாடசாலையிலும், வாணி கலைக்கழகத்திலும் சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்த க.வீ அவர்களுக்கு வடமராட்சிப் பகுதியில் மட்டுமல்ல ஈழத்தின் பலபாகங்களிலும் மாணவர்கள் புகழ்பூத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், அதிபர்கள், பண்டிதர்கள், சைவப்புலவர்கள் எழுத்தாளர்கள், அரச அதிபர்கள், விரிவுரையாளர்கள் என்று பல பதவிகளில் உள்ளனர். அது அல்லச்சிறப்பு. எப்பதவிகளில் இருந்தாலும் தமிழ்மொழியில் ஆற்றல் உள்ளவர்களாக திகழ்கிறார்கள் என்பதே பெருமை. இவ்வாறு க.வீயின் மாணாக்கர்கள் மூலம் தமிழ்ப்பணி தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இதனால் க.வீ அவர்களினதும், அவரது சேவையினதும் புகழ் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

க.வீ அவர்களின் மாணவர்களைப் பற்றிய விபரங்களை வாணிகலைக்கழக ஆண்டு நிறைவுமலர் மூலம் பெறமுடிந்தது. ஒன்பதாவது ஆண்டு நிறைவுமலரில் வாணிகலைக் கழக கட்டுரை, பேச்சு, இசைப் போட்டிகளில் பரிசில் பெற்றவர்களை அறிய முடிகின்றது. கட்டுரை மேற்பிரிவில் செல்வி. சி. தில்லைநடராசாவும், பேச்சு மேற்பிரிவில் செல்வன். சி.சிவலிங்கராசவும் முதலாமிடத்தைப் பெற்றுள்ளனர். இசை மேற்பிரிவில் செல்வி. சி.நாகம்மாவும்,

செல்வன் க.கருணாகரனும் முதலிடத்தைப் பெற்றனர். இசை கீழ்ப்பிரிவில் இரண்டாமிடத்தை செல்வன் த. கலாமணி பெற்றுள்ளார். இவர்கள் இன்று புகழ்பெற்றவர்களாகத் திகழ்கின்றனர்.

ஈழத்தின் பலபாகங்களிலும் க.வீயின் மாணவர்கள் பாடசாலை ஆசிரியர்களாக, அதிபர்களாக பலமாணவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். சேவையாற்றி ஓய்வும் பெற்றுள்ளார்கள். திருமதி கணபதிப்பிள்ளை இரத்தினம், திருமதி. வல்லிபுரம் பத்தினிப்பிள்ளை, திருமதி.சி.பரமேஸ்வரி, புலவர் புவனேஸ்வரி, திருமதி.ச. சுந்தரலிங்கம் போன்ற அதிபர், ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுள்ளனர். திரு. மகாலிங்கசிவம், திரு. ந. பாலசுப்பிரமணியம், திரு.க.நவரட்ணம், திரு.சிவஞானம், செல்வி.நமசிவாயம் கல்யாணி போன்றோர் க.வீயின் ஆசிரியப்பணிபுரியும் மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். வாணிகலைக்கழக இசைப்போட்டியில் முதலிடம் பெற்ற நாகம்மா சிறந்த இசை ஆசிரியை .தெல்லிப்பழை கல்விக் கோட்ட ஆசிரிய ஆலோசகர் திருமதி.நல்லநாயகி க.வீயின் மாணவி.

க.வீயின் மாணவர்கள் பலர் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகப் பணிபுரிகின்றனர். சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் மாணவர் களான பண்டிதமணியும், புலவர்மணியும் வடக்கினதும், கிழக்கினதும் இருகண் களாக இருந்து சமயம், தமிழ் இரண்டையும் வளர்த்தது போல வடக்கே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக திரு.சி.சிவலிங்கராசாவும், இவரைப் போலவே கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. செ.யோகராசாவும் க.வீயின் மாணவ மணிகள். இதில் திரு.சி. சிவலிங்கராசா இலக்கியம், இலக்கணம், புராணபடனம் யாவற்றிலும் வல்லவர். நவீன ஆய்வு நோக்கும்,புலமையும் நிறைந்தவர். சிறந்த மேடைப் பேச்சாளர் க.வீயின் அருகே நிழலாகத் தொடர்ந்து அவரின் வித்துவங்களைக் கவர்ந்தவர்களுள் ஒருவர். அவ்வாறே விரிவுரையாளரான திரு. செ. யோகராசா விரிவுரையாளரும் சிறந்த கவிஞர். நவீன இலக்கியங் களான புதுக்கவிதை புலம்பெயர்வு இலக்கியம் என்பவற்றில் ஆழ்ந்த ஈடுபாடுள்ள அவர் தெளிந்த நீரோடை போன்ற ஆழ்ந்த இலக்கண அறிவுடைய விற்பன்னர். க.வீயின் மாணவர்களான திரு.சி.சிவலிங்கராசாவும், திரு. செ.யோகராசாவும் ஈழத்தின் புகழ்பெற்ற தமிழ் பல்கலைக்கழகங்கள் மூலம் பல மாணவர்களை உருவாக்கு கின்றனர். க.வீயின் ஒரு சிறந்த ஆளுமைக்கு எடுத்துக்காட்டு; ஒரு காலத்தில் அவருடைய ஆற்றலென்ன, ஆளுமையென்ன, என்று கூறும் சாதாரண மனிதர் போல வாழவில்லை. அவருடைய கடைசி மாணவர் வரிசையில் முக்கியமான ஒரு இளமொட்டு விரிவுரையாளர் அமரர் பொன்னையா கமலரூபன் .அந்தமொட்டு மலராக முன் காலனின் கண்பட்டு காலவெள்ளத்தோடு கரைந்தாலும் தன்புகழ் நிறுவி தனது இலக்கண, இலக்கிய, ஆசான் க.வீயின் புகழையும் நிலைநிறுத்திச் சென்றுள்ளார். க.வீ அவர்கள் 10-09-1996ல் தென்னகத்தில் இயற்கை எய்தியபோது ஈழத்துப் பத்திரிகையான சஞ்சீவியில்

''பல்பரிமாணஆளுமை கொண்ட பண்டிதர் க.வீ'' என நீத்தார் பெருமை கூறி தனது பேரனான க.வீ அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார் .தமிழின் தவமாக யாழ்பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராக சாதனைபுரிய அத்திவாரமிட்ட கமலரூபன் க.வீயின் மாணவன்.

இவர்களைவிட நிர்வாக உத்தியோகத்துறையில் தமிழில் அறிவும், ஆற்றலும், பேச்சுத்திறனும் நிரம்பிய பலர் க.வீயின் மாணவர்கள். திரு. வீரபத்திரபிள்ளை, காலஞ்சென்ற நெல்லை க.பேரன், யாழ் அரசாங்க அதிபர் திருமதி. பத்தினியம்மா திலகநாயகம்போல், கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு.சி. தில்லை நடராசா முதலியவர்களும் க.வீயின் மாணவர்களே.

தன்னிடம் கற்ற மாணவர்களை மறதியின்றி நினைவில் வைத்திருப்பது அவரின் சுபாவம். அதேபோல மாணாக்கர்களின்மேல் அவர் வைத்த மதிப்பை'' மாணவரே தேட்டமென மார்பு தட்டுமிக் கட்டை'' [55] என்ற கூற்றுப் புலப்படுத்துகிறது க.வீயின் மாணவர் மரபு ஈழநாட்டில் கல்வி, இலக்கண, இலக்கிய முயற்சிகளில் ஆழமான சுவடுகளைப் பதித்துள்ளது.

## ஏனைய பணிகள்

### *பத்திரிகைப்பணி*

க.வீ அவர்களின் தமிழ்ப் பணிகளுள் பத்திரிகைப் பணியும் குறிப்பிடத்தக்கதாகும். 1953களில் கொழும்பிலிருந்து வெளிவந்த 'சுரபி' பத்திரிகையின் எட்டு இதழ்களும் க.வீ அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்ததாக அறியமுடிகின்றது

1981-1983களில் இரு திங்கள் இதழாக ''கிருதயுகம்'' சஞ்சிகையை வெளியிட்டார். இச் சஞ்சிகை க.வீ அவர்களின் பத்திரிகைப் பணியின் சிறப்புக்களை வெளிப்படுத்துகின்றது. இச்சஞ்சிகைக்கு ''கிருதயுகம்'' என்று பெயர் சூட்டியதற்கான காரணத்தை பின்வருமாறு கூறுகின்றார்.

''இயல்பாகவே நான் மானுடத்தை நேசிப்பவன் எல்லோருக்கும் சமதர்மநீதி கிடைக்கவேண்டும் என நினைப்பவன். அத்தகைய சிந்தனை ஓட்டத்திலே கிருதயுகம் நிச்சயம் வந்தே தீரும். சின்னவயதில் நம்மாழ்வாருடைய கவிதைகளைப் படித்த போதே முதன்முதலில் கிருதத்தைத் தரிசித்தேன். ஒருலக அரசு வரவேண்டும் என்ற என் சிந்தனையைப் பரப்புவதற்கு விஞ்ஞான சோஷலிச அமைப்புக்குள் முழு உலகமும் வரவேண்டும என்ற துடிப்புக்கு, இப்படி ஒரு பத்திரிகை தோன்றுவது காலத்தின் தேவை.

இச் சஞ்சிகையின் நோக்கத்தை 'கிருதயுகம்' முதல் இதழில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் பாடல்

''ஊனுயிர் நான்'' உளவரைக்கும்
ஒருல கரசென்றே பாடி
மானிட நேசிப்பை வளர்ப்பேன்
மன்பதை புன்னகை பூக்கும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்'' ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'', என்று மானிட நேசிப்புக்கான ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி ஒருலக அரசுக்கான எண்ணக்கருவை முதன்

முதல் முன்வைத்தவர்கள் நம்மவர்கள் என்பது நமக்குப் பெருமைதரும் செய்தி. ஆனால்...............

நமது முன்னோர்கள் புனிதமான அந்தக்கருவைப் போஷிக்கவில்லை, ஊட்டமளிக்கவில்லை உருவமாக்க வில்லை. மாறாக மானிடத்தை, சாதி, சமய, சமூக பொருளாதார வழியாக கூர்மையான கருக்கு விளிம்புகள் கொண்ட மீண்டும் ஒன்றாக முடியாதது போல் தோற்றமளிக்கின்ற பல்வேறு துண்டங்களாக உடைத்து நொறுக்கி சின்னாபின்னப்படுத்தி விட்டிருக்கிறார்கள் இருந்தாலும்,

இன்னும் காலம் போய்விட வில்லை. இப்பொழுதையிலிருந்தே ஒருமைப்பாட்டு முயற்சிக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம் அர்ப்பணிப்பு பிராயச்சித்தமுமாகும் சரவணப் பாயலில் கார்த்திகைக் கன்னியர் பெற்றெடுத்த சிசுக்களை இந்திரன் வச்சிராயுதத்தால் எறிந்து அவற்றை ஒருமைப்படுத்தி முருகன் ஆக்கினான் எனப் புராணம் கூறும், ஜனநாயக சோஷலிச அனைத்துலகப் பேரரசு காண நமக்கும் இந்திரன்களும் வச்சிர சிந்தனைகளும் தேவை. அதனாலே,

பொதுமக்களின் பக்கபலத்துடன் 'கிருதயுகம்' குழந்தைகளையும் இளைஞர்களையும் நோக்கிவிரைகிறது. அழகியல் இலக்கியங்களிலிருந்தும் நரமாமிச கலைப்படைப்புகளிலிருந்தும் அவர்களைக் காப்பாற்றுவது தட்டிக் கழிக்க முடியாத நமது கடமை. பிஞ்சு நெஞ்சில் நஞ்சு பாய அனுமதித்தல் அடாது. அவர்களுக்கு ஆரோக்கியமான சிந்தனைச் செழுமையை உண்டாக்க கிருதயுகம் தயார் நிலையில் உள்ளது. அதற்காக;

''துட்ட தேவதை'களின் நிழல் படாமலும் 'அசுத்த ஆவிகளின்' மூச்சு விழாமலும் கிருதயுகம், வளர, ஏழமைச் சிக்கல் அற்ற தோழமை உணர்வு மிக்க அனைவர்களது ஆசியையும் ஆதரவையும், வேண்டுகிறோம்.''[56]

கிருதயுகம் ஓர் இலக்கிய சஞ்சிகையாகவே வெளிவந்தது. தமிழ் மாணவருக்கும், ஆர்வலருக்கும்; ஆராய்ச்சியாளருக்கும் பயன்தரக்கூடிய பல விடயங்கள் இதில் வெளியாயின கவிதைகள், கட்டுரைகள்; சிறுகதைகள் முதலிய வற்றோடு இதர பல அம்சங்களையும் உள்ளடக்கியதாக இச்சஞ்சிகை வெளிவந்தது. ''புதிசு'' எழுதிய 'ஏனிந்த முடிவு? '' காவலூர் ஜெகநாதனின் 'யுகப்பிரசவம்' 'மேதின ஊர்வலம்'' சிவப்பிரியாவின் 'மன்னிக்கத் தெரிந்த உள்ளம்'' ஊரி எழுதிய 'ரஞ்சினி அழியத்தான் வேண்டுமா? 'கழுகுகளும் ...? சி.சுந்தரராஜாவின் 'சின்னம்மாச்சன்னம்'' செ. யோகநாதனின் ''பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே' தாமரைச் செல்வியின் 'கனவுகளில் மட்டும்' முதலிய சிறுகதைகள் கிருதயுகத்தில் வெளிவந்தன.

கிருதயுகத்தில் கவிதை எழுதியவர்களுள் க.வீ, முருகையன், புலவர் பார்வதிநாதசிவம், எஸ். அகஸ்த்தியர், வ.ஐ.ச.ஜெயபாலன் ஜீவாஜீவரத்தினம், பிலிப்நேரி, வீ. சேந்தன், திருமதி.யோகம் நவஜோதி, பாப்ரியா, பொன்மலர், க. ஆதவன், செல்வன். இராஜரட்ணம், இரட்ணராஜ், சாருமதி முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள். சோ. ப. மொழிபெயர்த்த 'எல்லாம் இழந்தவர்கள் 'நம்பிக்கை

யென்ன நமக்கு' என்னும் இரு கவிதைகளும் கிருதயுகத்தில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பேராசிரியர் க.கைலாசபதியின் ஒரே உலகம்' 'கிருதயுகமும் கேடில்லாவாழ்வும்' 'நவீன உலகும் இலக்கிய உணர்வும்' 'வெள்ளிப்பாதசரம் (விமர்சனக் கட்டுரை) 'இயக்கமும் இலக்கியமும்' முதலிய கட்டுரைகளை வெளியிட்ட பெருமை கிருதயுகத்தைச் சாரும் . மேலும் க.வீரகத்தி, எஸ். அகஸ்தியர், அம்மன்கிளி, என் சண்முகரத்தினம், அகளங்கன், கே.எஸ்.சிவகுமாரன், ப.சந்திரசேகரம், டாக்டர் இராமசுந்தரம், முனைவர் சாலை இளந்திரையன், வ.ஐ.ச. ஜெயபாலன் முதலியோரின் கட்டுரைகளை வெளியிட்ட பெருமையும் கிருதயுகத்திற்கு உண்டு. சீனத்தமிழ் அன்பர் திரு. வெய்பெய்சுங் சீனச்சஞ்சிகை ஒன்றுக்கு எழுதிய 'இந்தியத் தமிழ்மகாகவி, என்னும் கட்டுரையின் தமிழாக்கம், கிருதயுகத்தில் வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

கிருதயுகம் தனது இரண்டாவது, நான்காவது, ஏழாவது இதழ்களின் அட்டைப் படத்தில் ஒரேநீதி, ஒரேஅரசு என்னும் தனது சிந்தனைக் கட்டமைப்புகளை படமாக வெளிப்படுத்தியமை குறிப்பிடத் தக்கதாகும்.

யூன் 1983 கிருதயுகம் அமரர் பேராசிரியர் க.கைலாசபதியின் உருவப்படத்தை அட்டையில் தாங்கி அன்னாரை நினைவு கூர்ந்து வெளிவந்தது. அதிலே கைலாசபதிக்கு விட்ட "கடல்விடு" தூது விபுலானந்த அடிகளார் கந்தசாமிப்புலவருக்கு விடுத்த 'கங்கைவிடு தூது" போன்று உவப்பு தலைக்கூடிய உணர்வுள்ள புலவோரின் உளப்பிரிவாகும். பின்வரு மாறு கடலை விளித்து

> "விண்தொட்டு விளையாடும் விந்தை மிகுகடலே
> விண்ணாடு வாணிபுரம் பாரதியின் பக்கல்
> மண்விட்டு வந்துறையும் கைலாசின் கையில்
> மனங்கோணா வகையாக மடல் இதனைக்
> கொடுப்பாய்."

எனக் கேட்டு தானும் கைலாசும் ஒன்றுபட்ட நிலையைச் சுட்டிக் காட்டுகிறார்.

> "மடிப்பிச்சை' எடுக்காத மனவளத்து நானும்
> மதிப்பிச்சை கொடுக்கின்ற வினைவளத்து நீயும்
> தெருப்பிச்சை எடுக்காமல் மனிதங்கள் மலரும்
> கிருதயுகக் கிளர்ச்சியிலே ஒன்றுபடல் ஆனோம்"

இவ்வாறு பல ஆற்றல் மிக்கவர்களின் அறிவுச் சங்கமமாக வெளிவந்த 'கிருதயுகம்' க.வீ அவர்கள் தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் சிறப்பாய்வாளராகப் பணியாற்றச் சென்றதால் தடைப்பட்டது. எனினும் ஒருலக அரசுபற்றிய கோட்பாடு இளைய தலைமுறையினரைச் சென்றடைய வேண்டும்.- என்ற ஆர்வத்தால் க.வீ அவர்கள் ஆரம்பித்தபணி ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனக்கென ஒரு நிலையான இடத்தைப் பிடித்துள்ளமை மறுக்கமுடியாத உண்மையாகும்.

***பதிப்புப்பணி***

தமிழ் நூற்பதிப்புத்துறையில் ஈழநாட்டிற்குத் தனித்துவமானதோர் இடமுண்டு, காலாதி காலமாக ஏடுகளில் வாழ்ந்து காலதேச வர்த்தமானத்தால் கற்பாரும் கற்பிப்பாரும் இன்றி

மரணதசையடைந்து கொண்டிருந்த தமிழ் நூல்கள் பலவற்றைத் திருத்தமுறப் பதிப்பிக்க முயன்ற முதன் முயற்சியாளர்கள் ஈழநாட்டவர்களே. சி.வை. தாமோதரம் பிள்ளை, தி.க. கனகசுந்தரம்பிள்ளை, சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர், முதலியோரின் பதிப்பு முயற்சிகள் விதந்து போற்றத்தக்கவை. இவர்கள் வரிசையில் க.வீ அவர்களின் பதிப்புப்பணியும் இடம்பெறுகின்றது.

க.வீ அவர்கள் யாழ்ப்பாணம் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய நன்னூல் உதாரண விளக்கம் என்ற ஒரு நூலையே பதிப்பித்துள்ளார். இப்பதிப்பு நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு நினைவு வெளியீடாக வெளிவந்தது.

ஒரே பதிப்பு முயற்சியான இப்பதிப்பில் பல சிறப்பம்சங்கள் உண்டு. பாடங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. பொருத்தமான தலைப்புகள் தரப்பட்டுள்ளன. மேற்கோள்கள் எதுவும் காட்டியில்லாத ஆகுபெயர், அன்மொழி ஆராய்ச்சிக்கு சகலமேற்கோள்களும் பிற்சேர்க்கையாகக் கொடுக்கப் பட்டுள்ளன.[58] தேவையான இடங்களில் அடிக்குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றோடு நூலாசிரியரின் வரலாறு தந்தமையும் குறிப்பிடத்தக்கது. இப்பதிப்பு முயற்சி பற்றி ஆசிரியர்

> ''என்கன்னிப் பதிப்பு முயற்சி இது
> தவறுகள் உளவே மன்னிக்க வேண்டுகின்றேன்''[59]

எனக் குறிப்பிடுவது அவரது அவையடக்கத்தைக் காட்டுகிறது.

முடிவாக நோக்குமிடத்து ஒரேஒரு நூலைத்தான் க.வீ அவர்கள் பதிப்பித்திருந்தாலும் ஈழத்து இலக்கிய வரலாற்றில் பதிப்புத்துறையில் தனது சுவட்டினை ஆழப்பதித்துள்ளார். என்றே துணிந்து கூறலாம்.

### *க.வீயின் காலத்தால் அழியாத சுரப்புகள்*

> ''தக்கார் தகவிலர் என்ப தவரவர்
> எச்சத்தாற் காணப் படும்''

இது வள்ளுவம் இங்கே எச்சம் என்பது அவனவன் விட்டுச் சென்றவை. அதிலிருந்தே தக்கார், தகவிலா் என்ற பகுப்பு இந்த வகையில் க.வீ அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்கள் எச்சங் களாகவே நின்றுவிடாது வளர்ச்சி யடைவன. அடுத்த சந்ததிகள் சுகமாகச் சுமந்து செல்வன. அவை வற்றாத ஊற்றுச் சுரப்புக்கள்.

அந்த வகையில் க.வீயின் கல்விச் செல்வம் நிறை பிள்ளைச் செல்வங்கள் சந்ததி வளரும் குலச் சுரப்புகள் அவர் படைத்த இலக்கியச் செல்வங்கள், இலக்கணப் புதையல்கள், பண்ணிசைப் பாடல்கள், பக்திப் பாடல்கள் கற்றோராலும், மற்றோராலும் காவிச் செல்லும் சுகமான சுவைகள். ஆசிரியர் என்ற வகையிலும் வாணிகலைக் கழக சேவையாளர் என்ற வகையிலும் பல்வேறுபட்ட மாணவக் குவியல்களைத் தனதாக்கிக் கொண்டவர் வயது வேறுபாடு கொண்ட பல தர நிலையிலுள்ள மாணவர் பரம்பரை அவருடையது. அந்த மாணவரில் பலர் விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள். அவர் தம் ஆசான் புகழைத் தமது மாணவருக்குக்

கூறுவதால் அவர்பற்றி ஆய்வு செய்யத் தூண்டுவதால், அவர் நூல்களைக் கற்பதால் அவர் புகழ் பேசுவதால், அவர் ஆற்றல் நுட்பம் பேசப்படுவதால் அவரிடம் கற்றோம் என்று ஒரு சாராகும். அவரின் கூர்த்த மதிநுட்பத்தைக் கேட்டோம் என்ற வகையிலும் ஒரு பரம்பரை அறிவுச் சுரப்பாகவே பெருகியோடுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நெல்லியடி மத்தியமகாவித்தியாலய பாடசாலைக் கீதம் காலத்தாற் கூட அழிக்கமுடியாதது கலைக் கோயில்கள் அழியாதவை. அக்கோயில் அன்னை புகழ் காலந்தோறும் மாணவச்செல்வங்களால் வணங்கப்பட்டுப் போற்றப்படுபவை. இவை எல்லாம் க.வீ என்கின்ற சிந்தனைக் களஞ்சியத்தைச் சுற்றிச் சுரக்கும் காலத்தால் அழியாத சுரப்புக்கள்.

**க.வீயால் இயற்றப்பெற்ற பாடசாலைக்கீதம்**
**நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்**
**பாடசாலைக்கீதம்**

**முதனிலை**

வாழ்க வாழ்க வாழ்கவே - எங்கள் கலைக்
கோயில் என்றும் வாழ்க வாழ்க வாழ்கவே.

**நடுநிலை**

நெல்லியடி மத்திய மாவித்தியாலயம்
நிகரில்லாத கலையின் ஊற்றுக் குருகுலபீடம்
(வாழ்க)

**இறுதிநிலை**

கண்விழித்த கமலமன்ன கவர்ச்சிபொங்கு பார்வையும்
கனல்தெறித்து வீறுகொள்ளும் ஆண்மையோங்கு நெஞ்சமும்
எண்ணில்லாத இலட்சியங்கள் சூழுமிதய வேகமும்
விண்முகட்டிற் பாயவைக்கும் விந்தையறிவு நிலையமாய்
(வாழ்க)

இன்பவாழ்வு பூக்கும்வண்ணம் இனியகலை விஞ்ஞானமும்
என்றும்எங்கும் உண்மைகாணும் பேறுகொள் மெய்ஞ்ஞானமும்
அன்பினாலே வெற்றியீட்டும் அரியபண்பு நெறிகளும்
ஆக்கிளம்மில் ஆற்றலேற்றும் அறிவு நீர்வீழ்ச்சியாய்
(வாழ்க)

கல்விப்பண்ணை வளரநாளும் களைபிடுங்கி அறிவுநீர்
மெள்ளமெள்ளச் சொரிந்துநிற்கும் மேன்மைமிக்க குரவர்கள்
செல்வமென்று போற்றுமெங்கள் உயிரில்வாழும் செந்தமிழ்
அல்லல்நீக்கி ஆட்சிகாண அருள்வழங்கி வாணியாய்
(வாழ்க)

''என்பும் உரியம் பிறர்க்கு'' என்று இனியகொள்கை அழகிலே
அன்புநெறியிற் பணிகள் ஆற்றி அருமைத் தமிழன் நிழலிலே
தென்புபெற்றுத் தெய்வஒளியில் திசைகடந்த புகழிலே
இன்பம்காட்டும் வாழ்வுநல்கும் இணையில் சாந்திநிலையமாய்
(வாழ்க)

வைத்தகாலைப் பின்வையாமல் வாழ்விலே முன்னேறுவோம்
வையவாழ்வு சொர்க்கமென்று வாகைசூடிக் கூறுவோம்
நித்தம்எம்மைக் காக்கஎன்று நிமலன்பாதம் சூடுவோம்
அத்தன் கருணை வெள்ளம்மூழ்கி அமரகீதம் பாடுவோம்
(வாழ்க)

## க.வீயின் பிரிவுத்துயர் கேட்ட மாணவரின் குயில்விடு தூது

### விக்னேஸ்வரக் கல்லூரி
### ஏணி இதழ் - 5

*கூவு குயிலே கூவு -------*

மண்ணை மறந்து மாணவரைத் தான்மறந்து
விண்ணாடு சென்றுவிட்ட வீரகத்தி வித்தகரின்
வித்துவத்தை விருப்புடனே விதந்துரைக்க நீகேட்டு
பாரிலுள்ளோர் பண்பாட பாடுகுயிலே' பாடு'
பண்டிதரின் புகழேணி பாடுகுயிலே' பாடு'

கனியுண்டு கானகத்தே களித்திருக்கும் கிளியுண்டு
கனியூற்றுச் சுனைகளிலே களித்துறங்கும் அன்னமுண்டு
ஆனாலும் நானவற்றை தூதாக்க விரும்பவில்லை
ஏனென்று கேளாத எடுத்தெறிந்து பேசாதே

சின்ன வயிசிருந்தே சிங்காரப் பெடைக்குயிலே
உன்னை அதிகம்நான் நேசிப்பேன்; நேசிப்பேன்
சின்ன வயசிருந்தே உன்நாத ஒலிப்பொருளை
என்னை மறந்து நான் யோசிப்பேன்; யோசிப்பேன்
சின்ன வயசியிருந்தே உன்காதல் தலைக்கேற
கூவுகுயில் கூவுஎன்று யாசிப்பேன்; யாசிப்பேன்

அத்துளுவின் புத்திரன்! கரவைக் காளிதாசன்!
சிந்தனைச் சிகரம்! சிறப்பு ஆய்வாளன்!
தமிழன்னை பெற்றெடுத்த தவப்புதல்வன் க.வீ
தனியாற்றல் எடுத்துரைப்பேன் கூவுகுயிலே! கூவு !

வார்த்தைகளை அளந்துரைக்கும் அதிநுட்ப மதியுண்டு
வான்வெளியை வலம்காணும் நுண்கணித மூளையுண்டு
தர்க்கத்தை தமிழோடு இணைக்கும் ஆற்றலுண்டு
இலக்கணக் கடலிலே படகுவிடும் ஆற்றலுண்டு
நாட்டியத்தால் அபிநயிக்கும் நற்கவிதை ஊற்றுண்டு
நானிலத்தை ஓரரசின் ஒருகுடைக்கீழ் கொண்டுவரும்
நாகரிக நேயமுண்டு தொலைநோக்கு உணர்வுண்டு
நவநவமாய் சிந்திக்கும் அதிநவ சிந்தையுண்டு
ஆனாலும் என்ன ஏனிடையில் சென்றுவிட்டார்
பாழும் விதிதான் பாதையிலே வந்ததுவோ?
காலன் கையில் கணக்கு முடிந்ததுவோ?
நூலோரின் நுண்மதிதான் சற்று மழுங்கியதோ?
மேலோரின் கற்பனையில் சிறகொடிந்து விட்டதுவோ?

புரியாத புதிராக பாரதத்தில் போய்விட்டார்
போய்விட்டார்; போகட்டும் படைப்பாற்றல் எம்கையில்
வசந்தகாலக் கோகிலமே வாஞ்சையுடன் கேட்கின்றேன்
விண்ணாடு சென்றுவிட்ட வீரகவி வீரகத்தி
கற்றோர் நடுவில் களித்திருக்கும் காட்சிதனை
சொற்போரிற் சொல்லாடும் சொற்திறத்தின் சீலத்தை
அன்னை அபிராமி அடியிருக்கும் அதிசயத்தை
கவினழகுப் பெட்டகமே கவிஞர்களின் கற்பனையே
நாற்றங்கால் வற்றாமல் நாடிவந்து கூவாயோ?
நாதவெள்ளம் பாய்ந்தோட ஓடிவந்து கூவாயோ?
கும்பிட்டு வேண்டுகிறேன் கூவுகுயிலே! கூவு!
பார்த்துவந்த அற்புதத்தைக் கூவுகுயிலே! கூவு!

*அடிக்குறிப்புகள்*

1. நீலாவாணன்:- எஸ்.பொ.நினைவுகள்
கனடா காலம் வெளியீட்டுடன் இணைந்து
மித்ரவெளியீடு, சென்னை 1994 பக். - 116 - 117

2. வீரசுத்தி - பண்டிதர். க *இலக்கண விதிமூலங்களும் - விதிகளும்*
சென்னை - 1984 பக் 4

3. வீரகத்தி. க. *கடலும் படகும்,* கரவெட்டி 1971
பக் 4-5

4 வீரகத்தி. க. *கடலும் படகும்,* கரவெட்டி 1971
பக் 8

5. வீரகத்தி - பண்டிதர் க. இலக்கண விதிமூலங்களும் விதிகளும் சென்னை
1984 என்னுரை பக் 11

6. வீரகத்தி பண்டிதர் க. *இலக்கணவிளக்கம்* யாழ்ப்பாணம்
1973 பதிப்புரை பக் 1

7. கைலாசபதி க. எம். ஏ. பி எச். டி *நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்*
சென்னை 1980 பக் 60 - 61

8. க.வீ *கண்ணிற் காக்குங் காவலன்,* கரவெட்டி. 1965 பக் 7

9. *வாணி கலைக்கழகம் ஆறாண்டு நினைவு மலர்*
கரவெட்டி 1962 பக் 85

10. மேலது பக் 85

11. மேலது பக் 85

12. காளிதாசன் (க.வீ) *அபிராமி நவநீதம்* கரவெட்டி 1995 பக் 12

13. வீரகத்தி க. *சிவதிபுராணம்* 1995 பக் 3-4

14. மேலது பக் 4-5

15. வீரகத்தி க. *சிவபூரணி கவிதாஞ்சலி* ஊரெழு 1989 பக் 16

16. மேலது பக் 14

17. க.வீ காளிதாசன் *அபிராமி நவநீதம்* கரவெட்டி 1995 பக் 19

18. மேலது பக் 15

19. வீரகத்தி க. *கந்தனே என் சிந்தனை நல்லை - நல்லைக் கந்தனே என் வந்தனை - 1* நல்லூர் 1978 பக் 2

20. வீரகத்தி ஓருலகம் சென்னை 1991 பக் 8

21. க.வீ 'கிருதயுகப் புதுமலர்ச்சி' *கிருதயுகம்* யாழ்ப்பாணம் 1981 ஜனவரி பெப்ரவரி பக் 2

22. வீரகத்தி க. *சிவபூரணி கவிதாஞ்சலி* ஊரெழு 1989 பக் 9

23. வீரகத்தி ஒருலகம் சென்னை 1991

24. மேலது பக் 15

25. க.வீ செ. யாழ்நூலகமே' கிருதயுகம் யாழ்ப்பாணம் 1981 வைகாசி ஆனி பக் 2

26. ஈழவன் 'இனியும் சுணங்கேல்' செந்தமிழ் தமிழ்நாடு 1986 யூலை பக் 59

27. வீரகத்தி. க. *பண்ணிசைப் பாடல்கள்* சென்னை 1992 பக் 49

28. க.வீ *கண்ணிற் காக்குங் காவலன்* கரவெட்டி 1965 பக் 13

29. வீரகத்தி. க *செழுங்கமலச் சிலம்பொலி,* கரவெட்டி 1970 பக் 9

30. க.வீ 'பிறப்பு' பாடும்மீன் மட்டக்களப்பு 1967 பங்குனி பக் 56

31. வீரகத்தி க. பண்ணிசைப்பாடல்கள், சென்னை 1992 பக் 50

32. க.வீ 'மேதினம்' கிருதயுகம் யாழ்ப்பாணம் 1981 கைாசி ஆனி பக் 1

1981 கைாசி ஆனி பக் 1

33. வீரகத்தி.க. *பண்ணிசைப் பாடல்கள்*, சென்னை 1992 பக் 55

34. மேலது பக் 66

35. மேலது பக் 58

36. வீரகத்தி 'விண்ணுக்கு விடுத்த கடிதம்' கிருதயுகம் யாழ்ப்பாணம் 1983 யூன்

37. வீரகத்தி. க. *கதிரைமலைப் பள்ளு இசைநாடகம்* கரவெட்டி 1962 பக் 8-10

38. மேலது பக் 25

39. மேலது பக் 36

40. மேலது பக் 43

41. மேலது

42. அரவிந்தன் வித்துவான் மு.வை உரையாசிரியர்கள் சிதம்பரம் பக் 19

43. வீரகத்தி பண்டிதர் க. காமதகனம் யாழ்ப்பாணம் பக் 4

44. வீரகத்தி. க. பண்டிதர் *இரட்சணிய யாத்திரிகம்* 1வது ஆதிபருவம் கடைதிறப்புப்படலம் தட்டுங்கள் திறக்கப்படும் யாழ்ப்பாணம் 1977 பக் 24

45. வீரகத்தி. பண்டிதர் க. கர்த்தரின் காணிக்கை யாழ்ப்பாணம் 1976 பக் 11

46. பிறையாளன் அலிமாமுலையமுதம் யாழ்ப்பாணம் 1971 பதிப்புரை

47. சிவலிங்கராஜா எஸ். *வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும்* பருத்தித்துறை 1984 பக் 34

48. வாணிகலைக்கழகம் ஒன்பதாண்டு நிறைவு மலர்

கரவெட்டி 1965 பக் 23

49. வாணிக்கலைக்கழகம் *ஆறாண்டு நிறைவு மலர்* கரவெட்டி 1962 பக் 26 - 27

50. நிகழ் 24 டிசம்பர் 1992 பக் 91-92

51. வாணிகலைக்கழக ஆறாண்டு நிறைவுமலர் கரவெட்டி 1962 பக் 7

52. மேலது பக் 9

53. மேலது பக் 12

54. (க.வீ) காளிதாசன் அபிராமி நவநீதம் கரவெட்டி 195 பக் 5

55. க.வீ கண்ணிற் காக்குங் காவலன் கரவெட்டி 1965 முன்னுரை பக் 11

56. க.வீ கிருதயுகம் ஜனவரி பெப்ரவரி 1981 பக் 1

57. சிதம்பரப்பிள்ளை சிவலிங்கராஜா சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் - ஒரு நுண்ணாய்வு முதுகலைப்பட்ட ஆய்வேடு பக் 135

58. வீரகத்தி. க. பண்டிதர் பதிப்பாசிரியர் யாழ்ப்பாணத்து ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய நன்னூல் உதாரண விளக்கம் யாழ்ப்பாணம் 1974 பக் VIII

59. மேலது

## தன் விவரக்குறிப்பு

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | வீரகத்தி |
| 2. தந்தை தாய்பெயர் | : | கந்தர் சின்னப்பிள்ளை |
| 3. பால் | : | ஆண் |
| 4. பிறந்த தேதி | : | 04-10-1922 |
| 5. பிறந்த இடம் | : | நாடு ஈழம்<br>மாவட்டம் - யாழ்ப்பாணம்<br>கிராமம் - கரவெட்டி (கரவை) |
| 6. இனம் | : | தமிழ் |
| 7. கல்விச்சான்றிதழ் | : | 1. பண்டிதர் (மதுரை)<br>2. பண்டிதர் (யாழ்ப்பாணம்)<br>3. ஆசிரியர் பயிற்சி முன்னிலை சான்றிதழ்<br>4. எஸ். எஸ். எல் சி. (ஆங்கிலம்) |
| 8. பணி | : | கற்பித்தல் |
| 9. பதவி | : | 1. இரண்டாந்தர விசேட அசிரியர்<br>(Gd II Special Postholder)<br>2. அதிபர் ஓய்வு |
| 10. பல்கலைக்கழகப்பணி | : | சிறப்பாய்வாளர் தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர் 1983 - 1986<br><br>1. பிற்கால இலக்கணமாற்றங்கள் எழுத்து ஆய்வேடு 15-06- 1986 இல் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>(இதுவரை வெளிவரவில்லை)<br>2. ஈழத்து இலக்கணச் சிந்தனைகள் பற்றிய ஆய்வு |
| 11.பரிசில் பணம் | : | 1. 1966 தொ.சை.நூ கழகம் நடாத்திய திருவள்ளுவர் நினைவு ஆய்வுக் கட்டுரை போட்டி பொருள் பரிமேலழகரின் இலக்கன நூட்பங்கள் |
| பணம் | :- | 2 இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு |

தங்கப்பதக்கம் :- 3-1969 இல் கொழும்பு வருமானவரி திணைக்களம் நடாத்திய ஆய்வுக்கட்டுரைப் போட்டி பொருள் 'சமகால இலக்கியம்'

பாராட்டும் பரிசிலும் :- 4 இலங்கை வானொலியில் தொடர்ந்து ஒலிபரப்பிக் கொண்டிருந்த குழந்தைக் கவிதைகளின் 'பலூன்' பாடலுக்கான இலங்கை வானொலியின் தயாரிப்பு நிகழ்ச்சி 1977ம் ஆண்டு, ஜப்பானிக் (டோக்கியோ) நடைபெற்ற அகில உலக வானொலி (ஜ.ஈ.பி.சி) போட்டியில் பாராட்டும் பரிசிலும் பெற்றது.

12. நூலாக்கம் :- (1) கவிதை

1. வாணியை வாழ்த்தும் அன்னை நினைவு வெளியீடு தொகுப்பு குமரகுருபரர் + கவி)
2. கண்ணில் காக்கும் காவலன்
3. செழுங்கமலச் சிலம்பொலி (இலங்கை அரசின் சாகித்திய அகடமிப் பரிசு பெற்றது)
4. தங்கக்கடையல் (பாலர் கவிதை) 1960
5. சிவதிபுராணம் அ. ஈழப்பதிப்பு 1981, 82, 83. ஆ. தமிழகம் கழகப்பதிப்பு 1985
6. கந்தனே என்சிந்தனை (வான்முகில் வெளியீடு) 1974, 1978
7. கந்தனே என் சிந்தனை - நல்லைக்கந்தனே என்வந்தனை 2ம் பதிப்பு
8. ஈழத்துக் கருகம்பனையூர் சதயம் நாக இராஜ இராஜேஸ்வரி சதகம் : ஈழம் 1986 தமிழகம் 1987
9. ஓருலகம் (அதிபேதம் வெளியீடு 1991
10. ஊரெழு சிவபூரணி கவிதாஞ்சலி 1989
11. பண்ணிசைப்பாடல்கள் (அபேதம் வெளியீடு -2) 1992
12. கிருதயுகம் புதுமலர்ச்சி (அச்சில்)
13. இலக்கிய இருபது (ஈழநாடு) வாரமலர் (அச்சி) 1968 - 1970?

2. இலக்கண இயல்

1. மொழித்தேர்ச்சியும் இலக்கணமும் (கு.வி + க.வீ) 1955
2. இலக்கணவிளக்கம் (விரிவு 2ம் பதிப்பு) 1972
3. கடலும் படகும் (இலங்கை வானொலிச் சொற்பொழிவுகள்) 1972

4. சொல் இலக்கணத்தில் யாப்பின் செல்வாக்கு
5. இலக்கண விதிமூலங்களும் விதிகளும் (கழகம்)
6. பிற்கால இலக்கண மாற்றங்கள் (15-06-1986) தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு.
3. பதிப்பு முயற்சி மூதறிஞர் ஆ.மு. வின் 'நன்னூல் உதாரண விளக்கம்'

4. இசைநாடகம் — பொது அறிவுப்பூங்கா (வான்முகில் வெளியீடு)

13. உரைவிளக்கம்

அ. இந்துசமயம்
1. கந்தபுராணம் - காமதகனம்
2. திருவருட்பயன் பொழிப்புரை (அமரர் இராஜலிங்கம் நினைவு வெளியீடு)
3. தேன்தூளி (பாவை உரை)
4. இந்துசமயம் (பிற்சேர்க்கை வான்முகில் வெளியீடு) 1972

ஆ. கிறிஸ்தவம்

5. தேம்பாவணி - தேவமைந்தன்
6. இரட்சணிய யாத்திரிகம் - இரட்சகர் இயேசு (புனைபெயர் வலெனின்) தட்டுங்கள் திறக்கப்படும்

இ. இஸ்லாம் — சீறாப்புராணம் அலிமாமுலையமுதம் (பிறையாளன்)

14. மலர் தயாரிப்பு

1. வாணிகலைக்கழகம் 6வது நினைவு மலர் 1962
2. வாணிகலைக்கழகம் 9வது நினைவுமலர் 1966
3. வடமராட்சி கலைமன்ற ஆண்டுமலர் 1964

15பத்திரிகைப்பணி

1. ஐம்பது முற்கூறுகளில் கொழும்பில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த மாத இதழ் சுரபி எட்டு இதழ்கள் தயாரிப்பு 1953 2. ஆசிரியர் கிருதயுகம் (இருதிங்கள் ஓரிதழ்) 1981 - 1983

16. நாட்டு நற்பணி

அ. கல்வி,
1. நிறுவனரும் இயக்குனரும் 'வாணிகலைக்கழகம், கரவெட்டி 1956 - 1970
2. இயக்குனர் - யாழ். வரணி-பண்டிதர் 1973 - 1975

3. நல்லூர் ஸ்ரீலங்கா சாதிக்க சருசங்கமய யாழ் - கிளையினால் நடாத்தப் பெற்றது.

ஆ.சமூகம்

1. நூலகர் ஸ்ரீசெல்வந்தி நாத தேசிகர் நூலகம் கரவெட்டி 1939 -1975

2. உதவிச் செயலாளர் அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் 1950 - 1955

3. காப்பாளர் மேல்மாகாண அரசினர் தமிழ் ஆசிரியைகள் சங்கம் 1953
4. செயலாளர் கொழும்புக்கிளை அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் 1956 - 1956
5. தலைவா், அகில இலங்கைக் கட்டப்பொம்மன் கலைக்கழகம், கொழும்பு 1956 - 1957
6. செயலாளர் அகில இலங்கைப்பண்டிதர் பட்டதாரிகள் சங்கம் 1957-1970 (02-11-1958) இல் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலத்தில் நடைபெற்ற தமிழ்மாநாடு வரலாற்றுச் சிறப்புமிக்கது.
7. தலைவர் 'கிருதயுகம் வாசகர் வட்டம் கல்வியங்காடு 1955 - 1976
8. FOUNDER, SCORGANIZERONE WOLDMOVEMENT (OWN) 1992

17. ஆய்வுமுயற்சிகள்:- அ. 2, 4, 5 அம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப் பட்டவை.

ஆ. ஈழத்திலும் தமிழகத்திலும் உள்ள தரமான இலக்கிய இதழ்களின் ஆண்டுமலர்களில் ஆய்வுக்கட்டுரை எழுதுவது.

18. பாடத்திட்டம் பண்டிதர் புலவர் தேர்வுகளுக் கான'வீரகத்தி பாடத்திட்டம்' எனப் பிரபல்யம் பெற்ற திட்டம் இதுவாகும்.

19. புனைபெயர்கள் மைவண்ணன், நாகமைவண்ணன், குருவி, கட்டப்பொம்மன், ஸ்ரீஅமிர்தலிங்கம், இலங்கையன், 'யாரோ' பண்டிதைகமலா, தமிழ்நாடன், ஈழநாடன், 'வாணி', கல்லாடன், லெனின், பிறையாளன், 'நாரயணன்', ஈழவன், காளிதாசன்

| பொருள் | புனைபெயர் | சஞ்சிகை | |
|---|---|---|---|
| காலம் | | | |
| 1. அகண்ட தமிழகம் அமைப்போம் (கவிதை) | ஸ்ரீஅமிர்தலிங்கம் | தினகரன் வாரமலர் | 1956 - 1958 |
| 2. கொழும்பில் அலுவல் (கவிதை) | நாகமைவண்ணன் | மின்மினி (யாஎல) | 1945 - 1946 |
| 3. மாணிக்ககங்கையில் பாணிக்கிரணம் (சிறுகதை) | நாகமைவண்ணன் | சுதந்திரன் (வாரமலர்) | 1948 - 1950 |
| 4. சிறுகதை | குருவி | தினகரன் (வாரமலர்) | 22-07-1950 |
| 5. ஏழைப்பங்காளன் (ஆங்கிலக்கவிதை God With Lowly (தாகூர்) | கமக்தொழில் விளக்கம் | கமத்தொழில் விளக்கம் | 1950 - 1956 |
| 6. கானகமலர்கள் (ஆங்கிலக்கவிதை) | " சுரபி | | |
| 7. | கட்டப்பொம்மன் | சுதந்திரன் (வாரமலர்) | 1956 |
| 8. பலூன் | | அம்புலிமாமா | |
| 9. தெய்வப்பதிகங்கள் | தமிழ்நாடன் | ஈழநாடு வாரமலர் | |
| 10.பண்டிதர்மார் சம்பளப் பிரச்சினை | இலங்கையன் | தினகரன் வாரமலர் | 1953-1954 |
| 11. ஆசிய ஜோதி ஓர் அறிமுகம் | நாராயணன் | கிருதயுகம் | |
| 12. காரைக்காலம் மையார் | நாராயணன் | கிருதயுகம் | |

*எழுதிய சஞ்சிகைகள்*

1. செந்தமிழ்ச் செல்வி - ஈழவன் இன்றும் சுணங்கேன் முதல் முதல் எழுதியது
2. தமிழ்ப் பொழில் -ஈழவன், இன்றும் சுணங்கேன், முதல் முதல் எழுதியது
3. செந்தமிழ் - ஈழவன், இன்றும் சுணங்கேன், முதல் முதல் எழுதியது



முன்னாள் அதிபர்
பொ. பாலச்சந்திரன்
பிரியா விடை



ஆசிரியர் குழாம் - 1998



கோட்டகல்விப் பணிப்பாளருடன்
ஆசிரியர் குழாம் - 1990

# கரவெட்டியில் தலைமைத்துவம்
# Leader ship on Karaveddy

**ஆறுமுகம் சுப்பிரமணியம்**
விரிவுரையாளர் முகாமைத்துவத் துறை
யாழ். பல்கலைக்கழகம்

*1.0 அறிமுகம்*

இன்று நாம் வாழும் சமூகம், சமூக மேம்பாடு என்பன பற்றிச் சிந்திக்கும் போது தலைமைத்துவம் என்னும் எண்ணக்கருவைப் பற்றி ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டியது கட்டாயமானதாகும். சிறந்தவொரு சமூகத தலைமைத்துவம் பேணப்படுமாயின் சமூக மேம்பாடு மற்றும் தேச வளர்ச்சி போன்ற உன்னத இலக்குகளை நாம் இலகுவாக அடைந்து கொள்ள முடியும். இன்றைய உலகில் சமூகப் பொது இலக்குகளை அடைந்து கொள்வதற்கு மனிதன் குழுக்களாக இணைந்து செயற்படுவது அவசியமானதாகும். ஏனெனில் அனேகமான சமூக இலக்குகளை தனிமனித செயற் பாட்டினால் மட்டும் அடைந்து கொள்ள முடியாதிருக்கின்றது. இத்தகைய பின்னணியில் குழுச் செயலாற்றல் முக்கியத்துவம் பெறும்போது தலைமைத்துவமும் முக்கியம் பெறுகின்றது.

2. *தலைமைத்துவம் – வரைவிலக்கணம்*

தலைமைத்துவம் என்ற பதத்திற்கு பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கோணங்களில் வரைவிலக்கணங்களை வழங்கி யுள்ளனர். ஸபுறூட்ஸ் என்ற அறிஞர் ஏனையோருக்கு முன்மாதிரியாக நின்று செயற்படுகின்ற ஒருவரைத் தலைவர் என வரையறுக்கின்றார். இவரது கருத்துப்படி ஒருவரிடம் காணப்படும் சில சிறப்பியல்புகள் அவர் ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக செயற்படுவதற்கு காரணமாக அமைகின்றது.

மேர்வின் இ. சோ. என்பவரது கருத்துப் படி ''தலைவர் என்பவர் தூய்மையானவர்; சிக்கனமானவர் என்பதுடன் தன்னைச் சார்ந்துள்ள மக்கள் கூட்டத்தின் மேல் அல்லது குழுவின் மீது நேர்க்கணிய செல்வாக்கைச் செலுத்தக் கூடியவராகவும் விளங்க வேண்டும்'' இங்கு ஒரு தலைவரினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் கட்டளைகள் மற்றும் நெறிப் படுத்தல்களுக் கேற்ப அத்தலைவரைப் பின்பற்றும் மக்கள் கூட்டத்தினர் செயற்படுவார்களாயின் அத்தலைவர் நேர்க்கணிய செல்வாக்குச் செலுத்தும் ஆற்றல் உடையவர் எனக்

கருதப்படுவார். இத்தகைய நேர்க்கணிய செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஆற்றலின் அளவிலேயே ஒரு தலைவரின் தலைமைத்துவ வெற்றி தங்கியுள்ளது எனலாம். முன்னர் குறிப்பிடப்பட்டதைப் போன்று ஒருவரிடம் காணப்படும் சில சிறந்த குணநலன்கள் ஏனையவர் களுக்கு அவரை ஒரு முன்மாதிரியாக அடையாளம் காட்டுமாக இருப்பின் அக்குறித்த நபர் அக் குணநலன்களின் அடிப்படையில் ஏனையவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் ஆற்றலைப் பெறுகின்றார். அதன் மூலம் அவர் தலைவராகின்றார். இதே போன்று சிலர் பதவி வழியாகவோ அல்லது வேறு வழிகளிலோ தமக்குக் கிடைத்த அதிகாரங்களைப் பிரயோகிப்பதன் மூலமாகவும் மக்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் ஆற்றலைப் பெற்று தலைவராகலாம்.

எனவே தலைமைத்துவம் என்பது ஏனையவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தி அதன் மூலம் அவர்களது ஒத்துழைப்பைப் பெற்று ஒரு பொது நோக்கத்தை அடைய முற்படும் செய்முறையாகும். இவ்வகையில் தலைமைத்துவம் தொடர்பாக நாம் பின்வரும் அம்சங்களை அவதானிக்க முடியும்.

1. தலைமைத்துவம் ஒரு இயங்கும் செயற்பாடாகும்.

2. தலைமைத்துவம் மக்களுடன் தொடர்புடையது. அதாவது தலைவர், பின்பற்றுபவர்கள் என இரு தரப்பினர் இங்கு காணப்படுவர்.

3. தலைவரானவர் தன்னைப் பின்பற்றுபவர்களிலும் பார்க்க கூடிய வலுவினைக்கொண்டிருக்கவேண்டும். அப்போதுதான் பின்பற்றுபவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தி அவர்களை வழிநடாத்த முடியும்.

தலைமைத்துவமானது பல் வேறுபட்ட வழிகளில் தோற்றம் பெறமுடியும்.

1. மரபு ரீதியான அல்லது பரம்பரை ரீதியான தலைமைத்துவம். அரசனின் மகனுக்கு முடியுரிமை வழங்கப்படுவது இவ்வகைப் பட்டதாகும்.

2. தெரிவின் மூலமான தலைமைத்துவம். இங்கு ஏனையவர்களால் தலைவர் தெரிவு செய்யப்படுவார். உ-ம் சனசமூக நிலையத்தலைவர், ப.நோ.கூ.ச. தலைவர், பாராளுமன்ற உறுப்பினர்

3. பதவி வழியான தலைமைத்துவம், இங்கு சில பதவிகளுக்கு நியமிக்கப்படுவதன் மூலமாக தலைமைத்துவம் ஒருவரை வந்தடைவதனைக் கருதும் உ-ம் அரசாங்க அதிபர்

இவை தவிர சிலர் தமது தனிப்பட்ட ஆளுமை, செயற்திறன் என்பவற்றின் மூலமாகவும் தலைமைத்துவப் பதவிகளை எட்டுகின்றனர். இவர்களை ''கரிஸ்மற்றிக் தலைவர்'' (Charismatic Leader) என்பர். இங்கு கரிஸ்மா (Charisma) என்னும் பதமானது தெய்வ அனுக்கிரகத்தால் ஒருவருக்குக் கிடைத்த விசேட ஆற்றல் என பொருள்படும். இத்தகைய பண்பு கொண்ட பல தலைவர்களை வரலாற்றில் நாம் காணலாம். உ-ம்

கிட்லர்., சேர்ச்சில், நெப்போலியன்.

*2.1 தலைமைத்துவ வகைகள்*

தலைவரினால் அவரைப் பின் பற்றுபவர்கள் மீது பிரயோகிக்கிப்படும் அதிகாரத்தின் அளவின் அடிப் படையிலும் தலைவருக்கும் பின்பற்றுபவருக்குமிடையிலான தொடர்பின் அடிப்படையிலும் தலைமைத்துவத்தை நாம் பின்வரும் வகைகளாக வகைப்படுத்தி நோக்க முடியும்.

1. அதிகாரத் தலைமைத்துவம் (Autocratic Leadership)
2. ஜனநாயகத் தலைமைத்துவம் (Democratic Leadership)
3. தலையீடற்ற தலைமைத்துவம் (Laissez faire Leadership)

இங்குஅதிகாரத் தலைமைத்து வத்தில் தலைவரினால் அதிகளவு அதிகாரம் பிரயோகிக்கப்படுவதுடன்; தலைவர் தன்னைப் பின்பற்றுபவர்களது கருத்துக்கள், ஆலோசனைகளை கவனத்திலெடுக்காது தீர்மானங்களை மேற்கொள்வார். தலைவரால் மேற் கொள்ளப்படும் தீர்மானங்களை பின் பற்றுவர்கள் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும் என்ற பிடிவாதப் போக்கு தலைவரிடத்தில் காணப்படும். தலைவரின் கட்டளைகள், தீர்மானங்களை நிறைவேற்றத் தவறுபவர்களுக்குத் தண்டனை வழங்கும் நிலைமை காணப்படும். இதனால் பின்பற்றுபவர்கள் ஒருவித அச்ச உணர்வினை அனுபவிப்பவர் களாக இருப்பர்.

ஜனநாயகத் தலைமைத்துவத்திலே ஓரளவு அதிகாரங்கள் பின்பற்றுபவர்களுக்கு வழங்கப் பட்டிருக்கும் அதாவது தலைரானவர் தன்னைப் பின்பற்றுபவர்களது கருத்துக்கள், ஆலோசனைகள் விருப்பு வெறுப்புகளைக் கேட்டறிந்து அவற்றின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வர். பின்பற்றுபவர்களது மனப் போக்குகளும் மனவொருமைப்பாடுகளும் தலைவரின் செயற்பாடுகளில் பிரதிபலிக்கப்படுவதனை இங்கு காணலாம். பின்பற்றுபவர்களுக் கிடையே ஏற்படக்கூடிய கருத்து வேற்றுமைகளை உடனேயே களைந்து விடுவதில் தலைவர் அதிக அக்கறை காட்டுவார். இத்தகைய நிலைமையில் பின்பற்றுபவர்கள் தலைவர் மீது அதிக விசுவாசம் கொண்டவர்களாக இருப்பர்.

தலையீடற்ற தலைமைத்து வத்தில் தலைவர் என்பவர் தலைமைத்துவத்தை அடையாளப் படுத்துகின்றதொரு சின்னம் போலவே காணப்படுவார். அதாவது தலைவர் என்பவர் எதுவித அதிகாரங்களுமற்ற பார்வையாளர் போன்று காணப்படுவார். இங்கு பின்பற்றுபவர்களே தீர்மானங்களை மேற்கொண்டு தமது செயற்பாடுகளை மேற்கொள்வர். அவற்றில் தலைவர் எதுவித தலையீட்டையும் மேற் கொள்ளமாட்டார்.

*3.0 கரவெட்டியின் தலைமைத்துவம் – அறிமுகம்*

கரவெட்டிக் கிராமமானது யாழ்ப்பாண மாவட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலகபிரிவின் கீழ் அடங்குகின்ற ஒரு பெரிய நிலப்பரப்பினை உள்ளடக்கும் கிராமம் ஆகும். இக் கிராமமானது நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளின் தாக்கத்திற்கு

உட்பட்டிருப்பினும் கூட பாரம்பரிய ரீதியான சமூகக் கட்டுமானங்கள் குலையாத ஒரு கிராமமாக விளங்குகின்றது. இக்கிராம மக்களின் பிரதான தொழிலாக ஆரம்ப காலங்களில் விவசாயம் விளங்கி யுள்ளது. குறிப்பாக இக் கிராமத்தின் தெற்குப் பக்கமாக பெருமளவு வயல் நிலங்கள் காணப்படுவதுடன் அவற்றில் பெரும்பகுதி இக்கிராம மக்களின் உடமையாகக் காணப்படுகின்றது. காலவோட்டத்தில் கணிசமான தொகையினர் விவசாயத்திலிருந்து விலகி அரச தொழில் வாய்ப்புக்களையும் பிற தொழில்களையும் நாடிச் சென்ற காரணத்தினால் முழு நேரத் தொழிலாக விவசாயத்தை மேற் கொள்பவர்களது எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும் இன்றும் கூட கணிசமான எண்ணிக்கையானோர் முழுநேர விவசாயத்தை மேற்கொள்கின்றனர் அத்துடன் அரச தொழில்கள் மற்றும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ளவர் களில் பெரும் எண்ணிக்கையானங்கள் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் நெற் செய்கையில் ஈடுபடுவது குறிப்பிடததக்கதாகும். இத்தகைய பண்புகளையுடைய இக்கிராமத்தின் சமூக தலை மைத்துவப்போக்குகளை இக்கட்டுரை குறிப்பிடுகின்றது.

### *3.1 கரவெட்டியின் முன்னைய தலைமைத்துவப் போக்குகள்*

கரவெட்டியினது சமூக தலைமைத்துவப் போக்குகளை நாம் ஆராயும் போது காலத்துக்குக் காலம் பலர் பல்வேறுபட்ட வழிகளில் தமது தலைமைத்துவத்தை வெளிக்காட்டி வழங்கியிருந்தமையை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இவர்களில் ஆரம்ப காலத்தில் மணியகாரர் என்ற பதவியினூடாக தமக்குக் கிடைத்த சமூக தலைமைத்துவப் பதவியை திரு. சிற்றம்பலம் மற்றும் திரு.பொன்னையா ஆகிய இருவரும் சிறப்பாக அலங்கரித் திருந்தமையைக் காணமுடிகிறது. இவர்கள் இருவருமே மக்கள் மீது நேர்ச் செல்வாக்குச் செலுத்துவதில் மிகுந்த வெற்றி கண்டு அதனூடாக சிறந்த தலைவர்களாக விளங்கி யுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக இவர்களை அறிந்த இன்றும் வாழும் முதியவர்களுடன் இவர்களைப் பற்றி உரையாடும் போது அம்முதியவர்கள் இவர்களிருவரினதும் செயல்கள், நடத்தைகள் என்பனவற்றை மிகவும், உணர்வு பூர்வமாக விவரிப்பதனை அவதானிக்க முடிகின்றது. அவ் வகையில் இவர்கள் தலைவர் என்ற பதவிக்கு மேலாகச் சென்று கரவை மக்களினது ஆதர்ஷ புருஷர்களாக விளங்கியுள்ளார்கள் என்பதனை அறிய முடிகின்றது. இதனை நாம் மற்றவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் சிறந்த தலைவர்களாதல் என்பதற்கு உதாரணமாகக் கூட குறிப்பிட முடியும். இன்று கரவெட்டியில் கல்விப் பயிர்வளர்க்கும் யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் திரு. சிற்றம்பலம் அவர்களினதும் யா/விக்கினேஸ்வரக் கல்லூரி திரு. பொன்னையா அவர்களினதும் தலைமைத்துவ ஆற்றல்களின் அறுவடைகளாக உள்ளன.

இவர்கள் இருவரும் சில குறிப்பிடத்தக்க சந்தர்ப்பங்களில்

அதிகாரரீதியான தலைமைத்துவப் போக்குகளை பின்பற்றியிருப்பதனை சில சம்பவங்கள் எடுத்துக்காட்டு கின்றன. ஆயினும் அப்போதைய வாழ்க்கை முறை, மக்களின் கல்வியறிவு மட்டம் என்பவற்றினடிப படையில் நோக்கும் போது இது ஓரளவு ஏற்புடையதாகின்றது.

மேலும் சிற்றம்பலம் மணியகாரர் அவர்களினது மகன் திரு. முருகேசு அவர்களும் உடையார் பதவி வகித்ததன் மூலமாக தலைமைத்துவத்தை வழங்கி யுள்ளார்.இவரது தலைமைத்துவ அணுகுமுறைகளும் ஏறத்தாழ தந்தையினுடைய அணுகுமுறையை ஒத்ததாகக் காணப்படுகின்றது.

இவர்களைத் தொடர்ந்து திரு. முருகேசு அவர்களினது மகன் கரவெட்டிக்கு மட்டுமன்றி தமிழினத்துக்கே தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார். அவர் அண்மையில் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்றுள்ள திரு. சிவசிதம்பரம் ஆவார். இவர் குறிப்பாக தெரிவின் மூலமாக அரசியற்பாற்பட்ட தலைமைத்துவப் பதவியை அடைந்துள்ளார். ஒரு சிறந்த தலைவருக்கு இருக்க வேண்டிய முக்கிய பண்புகளான சிறந்த பேச்சாற்றல், வசீகரம், கம்பீரமான தோற்றம் என்பன இவருக்கு இயல்பாகவே வாய்த்திருந்தமையால் மற்றையவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவது இவருக்கு எளிதாயிற்று.

கரவெட்டியினுடைய தலைமைத்துவத்தை ஆராயும் போது; ஒரே குடும்ப வழித்தோன்றல்களான மேற்குறிப்பிடப்பட்ட மூன்று தலைமுறையினரதும் தலைமைத்துவங்களைக் குறிப்பிட்டு ஆராய்வது தவிர்க்க முடியாததாகும். இக்குடும்ப உறுப்பினர்களுக்கு இயல்பாக அமைந்திருந்த கல்வியறிவு, ஆளுமை, செல்வநிலைமை என்பன இவர்களது தலைமைத்துவ ஆற்றல்களுக்கு வலுச் சேர்த்தன. இவர்கள் தவிர. திரு. பொன் கந்தையா போன்ற தலைவர்களும் இக்குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களைப் போன்று மேலும் பலரும் சிறந்த சமூகத் தலைவர்களாக விளங்கியுள்ளனர். இவர்களில் திரு. கந்தவனம், திரு. சின்னத்தம்பி போன்ற பலரும் குறிப்பிடத் தக்கவர்கள். திரு.சின்னத்தம்பி அவர்கள் சமய அடிப்படையிலான தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார்.

இவை ஒருபுறமிருக்க கரவெட்டியில் இன்னமும் குலையாது காணப்படும் சாதி அடிப்படையிலான சமூகக் கட்டுமானங்களும் கணிசமான அளவில் சமூக தலைமைத்துவ ஆற்றல்களின் வளர்ச்சிக்குத் துணை போயுள்ளன. இங்கு பல்வேறு சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள் என்பன சாதியை மையமாகக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். இவ்வகையில் இச்சனசமூக நிலையங்கள், கழகங்கள் என்பனவும் பல்வேறுபட்ட தனிநபர்களது தலைமைத்துவ ஆற்றல்களின் மேம்பாட்டுக்கு களம் அமைத்துக் கொடுத்திருப்பதனைக் காணமுடிகிறது.

இது தவிர சமூக தலைமைத்து

வத்துக்கான களத்தையும் வாய்ப்பையும் வழங்குவதில் ஆலயங்களின் பங்களிப்பும் பிரதானமானதாகும். தச்சை சிந்தாமணி விநாயகர் ஆலயம், வெல்லன் விநாயகர் ஆலயம், யார்க்கரு விநாயகர் ஆலயம், கிழவி தோட்டம் விநாயகர் ஆலயம் போன்ற இப்பகுதியிலுள்ள ஆலயங்கள் சமூக தலைமைத்துவ வளர்ச்சிக்கான களங்களை வழங்கியுள்ளன. ஆயினும் இவ் ஆலயங்களிலும் திருவிழாக்கள் சாதி அடிப்படையிலேயே பெருமளவுக்கு வகைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இதனால் ஒவ்வொரு திருவிழாக்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள திருவிழாச் சபைகளும் சாதி அடிப்படையிலான சமூகத் தலைமைத்துவத்தின் மேம்பாட்டுக்கு உதவியுள்ளன.

கரவெட்டிக் கிராமத்தில் வாழ்ந்த வேறுபலரும் சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டிருந்தமை அவதானிக் கப்பட்டுள்ளது. ஆயினும் அவர்களது தலைமைத்துவமானது நிறுவனத் தலைமைத்துவம் போன்ற தலைமைத்துவத்தின் பிற வகைகளுக்குள் உள்ளடக்கப்படுவதுடன் இக்கட்டுரையானது சமூகத் தலைமைத்துவப் போக்குகள் மட்டும் குறிப்பிடுவதனால் அத்தகையோரை இங்கு சுட்டிக்காட்டவில்லை

### *3. 2 கரவெட்டியின் இன்றைய தலைமைத்துவப் போக்கு*

கரவெட்டிக் கிராமத்தின் இன்றைய சமூக தலைமைத்துவ நிலையை ஆராயும் போது அனேகமான பொது அமைப்புகளிலும் பொது நிகழ்வுகளிலும் இளைஞர்களின் சமூகதலைமைத்துவப் பங்களிப்பு கவனிக்கப்பட வேண்டியதாக உள்ளது. சில அமைப்புகளில் இளைஞர்களின் சமூக தலைமைத்துவப் பங்களிப்பு கணிசமான அளவு காணப்படினும் கூட; தொகுத்து நோக்கும் போது இளைஞர்களின் சமூக தலைமைத்துவப் பங்களிப்பு குறைவாகவே உள்ளது. இன்று இக்கிராமத்தில் இருக்கும இளைஞர்களின் எண்ணிக்கை குறைவு இதற்கு ஒரு காரணமாக இருப்பினும் கூட இளைஞர்களது தலைமைத்துவ ஆற்றல்களின் வெளிப்பாடுகளும் குறைவாகவே அவதானிக்கப் பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட நிலைமைக்கு பல காரணங்களை அறிய முடிகின்றது. இன்றைய இளைஞர்களில் பலர் தலைவனாக இருப்பதிலும் பார்க்க தொண்டனாகவே இருக்க விரும்புகின்றனர். அதாவது அவர்கள் தலைமைத்துவப் பொறுப்புக் களை ஏற்பதற்கு தயக்கமானவர் களாக உள்ளனர். அத்துடன் தம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொறுப்புக் களைத் தாம் சரிவர நிறைவேற்றத் தவறும் போது எழக்கூடிய விமர்சனங்களுககு அச்சமுடையவர்களாக உள்ளனர். இதற்கு அடிப்படையாக அமைவது இளைஞர்கள் மத்தியிலுள்ள தன் நம்பிக்கைக் குறைவே ஆகும்.

கரவெட்டிக் கிராமத்தினது எதிர்காலத் தலைமைத்துவத்தை சிறப்பாகப் பேணும்பொருட்டு எமது இளைய தலைமுறையினர் மத்தியில் தலைமைத்துவம் பற்றிய

விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமானதாகும். குறிப்பாக ஒவ்வொரு இளைஞர்களும் தமது சுய ஆளுமை விருத்தியில் அதிக அக்கறை கொள்ளுதல் வேண்டும். அத்துடன் இளைஞர்கள் தமது நேரத்தில் ஒரு பகுதியினை சமூகப் பணிகளுக்கு பயன்படுத்துவது சிறப்பானதாகும்.

இக்கிராமத்திலுள்ள இன்றைய இளைஞர் சந்ததியினருக்கும் முதியவர்களுக்குமிடையில் ஓர் இடைவெளி இருப்பதுவும் அவதானிக்கப்பட்டுள்ளது. இதுவும் இளைஞர்களின் தலைமைத்துவ ஆற்றல்களின் வெளிப்பாட்டுக்கு தடையாக உள்ள ஒரு அம்சமாகும். உண்மையில் சமூகப் பணிகள் யாவும் இவ்வேறுபாடுகளின்றி ஒன்றுபட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட வேண்டும். அத்துடன் இளைஞர்களுக்குத் தலைமைத்துவ ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்து ஊக்கப்படுத்துவதுடன் முதியவர்கள் அவர்களை நெறிப் படுத்துவது சிறப்பானதாகும். அதே போன்று முதியவர்களின் அனுபவங் களை இளைஞர்கள் தமது ஆளுமை விருத்திக்கான பாடங்களாகக் கொள்ள வேண்டும். எனவே இளமையும் முதுமையும் ஒன்றுடன் ஒன்று இணைவாக இருப்பதே இக்கிராமத்தின் எதிர்கால தலைமைத்துவ வளர்ச்சிக்கு உறுதுணையானதாகும்.

இவை தவிர எமது இளைய தலைமுறையினருக்கு தலைமைத்துவம் பற்றிய தெளிவான அறிவும் விளக்கமும் வழங்கப்பட வேண்டியது அவசியமானதாகும். இந்த அடிப்படையிலான பல கருத்தரங்குகள் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவினால் அண்மைக்காலங்களில் நடாத்தப்படுகின்றன. இவை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதுடன் இக் கிராமத்திலுள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புகளும் இவ்வகைக் கருத்தரங்குகளை நடாத்தலாம்.

*முடிவுரை*

மேற்கூறப்பட்டவகைகளில் நாம் தொகுத்து நோக்கும் பொழுது கல்வியிலும் மற்றும் தலைமைத்துவப் பண்புகளிலும் சிறந்து விளங்கியிருந்த கரவைக் கிராமத்தில் இன்று சமூகத் தலைமைத்துவமானது வளர்த்தெடுக்கப்பட வேண்டிய நிலையிலிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இதற்கு இளைஞர் சமுதாயத்தின் பங்களிப்பு அவசியமான தாகும் தலைமைத்துவம் பற்றிய விழிப்புணர்வை நாம் இளைஞர் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலமாக சிறந்த சமூக தலைமைத்துவ நிலைமைகளை கரவெட்டியில் ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் இது கரவையின் எதிர்கால நிலைமையை மேம்படுத்த மேலும் உதவும் எனலாம்.

*உசாவியவை*


1. Daver S. Rustom - The Management Process - 1984

2. Koonty and odnnel - The principles of Management - 1986

3. நேர் காணல்கள்:-
   அ). திரு. மன்னவன் கந்தப்பு
   ஆ). திரு. ஐ. கணேஸ்

# கூட்டுறவு

கூட்டு உழைப்பு கூட்டு உறவு, கூடி வாழ்தல், பொதுவாக மனித வாழ்விலும் குறிப்பாகத் தமிழர் பண்பாட்டிலும் ஊறிய செயற்பாடுகள் ஆகும். இதனையே நம் முன்னோர்கள் 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்றும் 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' யென்றும் கூறி வந்துள்ளார்கள். கூட்டுறவின் அடையாளமாகக் 'கைப்பிடித்தல்' உம், அதன் சின்னமாக ஒளியிலுள்ள ஏழு வர்ணம் கொண்ட கொடியும் திகழ்கின்றது.

ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியைத் தொடர்ந்து மனித வாழ்வு முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. அதன் அடிப்படையில் மூன்று வகையான பொருளாதார முறைமைகள் உருவாக்கம் பெற்றன. முதலாளித்துவ பொருளாதாரம் தனி மனிதனை மையமாகக் கொண்டும் மூலதனத் துக்கு முதலிடம் கொடுத்தும் செயற்படுகிறது. இதன் தத்துவார்த்தத் தந்தையாக 'அடம் ஸ்மித்' கருதப்படுகிறார். இம் முதலாளித்துவ அமைப்பில் மூலதனம், உழைப்பைச் சுரண்டி தனிமனிதனை வளப்படுத்துவதாக உணரப்பட்டது. இதன் பேறாகவே உழைப்பையும், உழைப்பாளர்களையும் மையப் படுத்திப் பொதுவுடைமைச் சித்தாந்தம் தலைதூக்கியது. இதன் தத்துவார்த்தங்களாக 'கார்ல்மார்க்ஸ்' உம் தலைமகனாக, முன்னோடியாக, 'லெனின்' உம் கணிக்கப்படுகிறார்கள். மேற்கூறிய இரு பொருளாதார அமைப்புக்களும் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டன. முதலாளித்துவ சிந்தனைக்கும் பொதுவுடைமைச் சிந்தனைக்கும் சமரசம் காணும் முறையாகவும் நல்லனவற்றை ஏற்கும் வகையாகவும் கூட்டுறவு இயக்கம் ஆரம்பமானது. இதன் முன்னோடியாக 'றொபேட்ஓவன்' நினைவு கூறப்படுகிறார். அனைவரும் ஒருவருக்குக்கென்பது. முதலாளித்துவம்; ஒவ்வொருவரும் அனைவருக்கும்


**த. சிதம்பரப்பிள்ளை ஆசிரியர்,**
*தலைவர், கட்.நெல்.ப.நோ.கூ.சங்கம்*

என்பது பொதுவுடமை; ஒவ்வொரு வரும் அனைவருக்கும் அனைவரும் ஒவ் வொருக்கென்பதே கூட்டுறவு. அதாவது தனி மனிதப் போட்டி என்ற நிலையிலிருந்து கூட்டுழைப்பில் தனித்துவம் என்ற நிலைக்கு மனித முயற்சியை நெறிப்படுத்துவது கூட்டுறவு. ஒருவன் சுரண்டப்படாமல் அதே நேரத்தில் மற்றவர்களைச் சுரண்டாமல் முறை கூட்டுறவாகிறது. கூட்டுறவின் முக்கியத்துவத்தை, பொதுவுடைமையின் காவலனாகிய "லெனின்" "முதலாளித்துவ முறையில் கூட்டுறவு ஒன்று தான் நல்ல அமைப்பு; அதை எப்பாடுபட்டாவது அப்படியே கட்டிக் காக்க வேண்டும்." என்று கூறியுள்ளமை மனம் கொள்ளத் தக்கது.

'றொபேர்ட் ஓவன்' இன் சிந்தனையைப் பின்பற்றி 1844ம் ஆண்டு இங்கிலாந்தில் 'றொச்டேல்' முன்னோடிகள் ஒரு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்தனர். இவர்களே கூட்டுறவுக் கொள்கை களை முதலில் வகுத்தனர். இக் கொள்கைகள் சமூக வளர்ச்சிக் கேற்பவும் காலத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்டும் காலத்துக் காலம் மாற்றமடைந்து வந்தன. உலக ரீதியான கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியின் சின்னமாக 1895 இல் அனைத்துலகக் கூட்டுறவு நிறுவனம் உருவானது. இந்நிறுவனமே 1896 இலும் 1934 இலும் 1966 இலும் இறுதியாக 1995 இலும் கூட்டுறவுக் கொள்கைகளை மறுசீரமைத்தது. இதன் பேறாக உடன் காசுக்கு விற்பனை பங்குக்கு மட்டுப்படுத்தப்பட்ட வட்டி என்ற கொள்ளைகள் நீக்கப்பட்டு கூட்டுறவில் சுயாதீனம், பொருளாதாரப் பங்களிப்பு, சமூகமேம்பாடு என்ற கொள்கைகள் முக்கிய இடம் பெற்றன. உறுப்பினர்க்கே உரியதென்று கோட்பாடு அனைத்து மக்களுக்குரிய தென்று உணரவைக்கப்பட்டது. இன்று பிரகடனப்படுத்தப்பட்ட அனைத்துலகக் கூட்டுறவு கொள்கைகளாவன.

1 தன் விருப்பார்த்த தடையற்ற உறுப்புரிமை.
2. ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும் நிர்வாகமும்.
3. அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு
4. சுதந்திரமாகவும், சுயமாகவும் தொழிற்படல்.
5. கல்வி, பயிற்சி, தகவல்
6. கூட்டுறவுச் சங்கங்களிடையே ஒத்துழைப்பு.
7. சமூக மேம்பாடு

உலகில் பல நாடுகளில் கூட்டுறவு இயக்கம நிலை கொண்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளிலும்; இஸ்ரேல், பங்களாதேஸ், யப்பான் போன்ற நாடுகளிலும் கூட்டுறவுத்துறை சுயாதீனமாக இயங்கிப் பல சாதனைளைப் படைத்து வருகிறது. இந்தியா உட்பட இலங்கை போன்ற வளரும் நாடுகளில்

கூட்டுறவுத் துறை அரசின் தயவிலேயே இயங்கும் நிலை உள்ளன. எனினும் இந்தியாவிலும் மற்றும் சில நாடுகளிலும் கிராமிய அபிவிருத்தியிலும் நாட்டின் பொருளாதாரத்திலும் கூட்டுறவுத் துறை கணிசமான பங்கை வகித்து வருகிறது. இதனால் கூட்டுறவு நாட்டுயர்வாகக் கொள்ளப்படுகிறது.

இலங்கையில் கூட்டுறவு முறை பாரம்பரியமான வாழ்வு முறையாகவிருந்தாலும் 1911 இல் இருந்தே அமைப்பு முறை பெற்று கூட்டுறவுத்துறை செயற்பட ஆரம்பித்தது. ஐக்கிய நாணய சங்கங்களாக ஆரம்பித்து, ஒவ்வொரு நோக்குக்கும் வெவ்வேறு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இலங்கையில் முதல் ஐக்கிய நாணயசங்கம் கரவெட்டியில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் நிர்வாகிகளாக கரவை மாணிக்கவாசகர் வித்தியாலயச் சமூகத்தைச் சேர்ந்தவர்களே செயற்பட்டார்கள். என்பது குறிப்பிடத்தக்கது சங்கங்கள் பொருள் விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் இரண்டாம் மகாயுத்தம் (1939 - 1945) ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து அரசு பொருள் விநியோகத்தை கூட்டுறவுச் சங்கங்களிடமே ஒப்படைத்தது. இச் செயற்பாட்டால் கூட்டுறவுச் சங்கங்கள் 'கூப்பன்' கடை என்று மக்களால் கருதும் நிலை ஏற்பட்டன. 150க்கு மேற்பட்ட பொருட்களை விநியோகிக்கும் ஏகபோகம் கூட்டுறவுச் சங்கங்களிடமே இருந்தது. விநியோகத்தை ஒழுங்குபடுத்தப் 'பங்கீட்டு அட்டை' முறை அறிமுகப் படுத்தப்பட்டன. இன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு எந்தப் பொருளிலும் ஏகபோகமில்லாத நிலையிலும் பங்கீட்டு அட்டை பயன் படுத்தப்படுகிறது.

1956 இல் கூட்டுறவுச் சங்கங்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்பட்டன இதனால் கூட்டுறவுச் சங்கம் தான் விரும்பும் எச் சேவையிலும் ஈடுபட பங்களிப்பு வாய்ப்பு உண்டானது. ப.நோ.கூ.சங்கங்களின் சமாசங்கள் பிராந்திய ரீதியாகக் கூட்டுறவு வங்கிகளை ஆரம்பித்தன. இவ் வங்கிகள் அனைத்தும் 1961இல் ஆரம்பித்த மக்கள் வங்கியுடன் இணைக்கப்பட்டன. இக் கால கட்டத்தில் நாட்டில் உள்ள பெரும் பான்மையான ப. நோ.கூட்சங்கங்கள் நிர்வாகச் சீர்கேட்டாலும் நிதிப் பற்றாக்குறையாலும் தொடர்ந்து இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. இயங்கிய சங்கங்களும் அதிகாரப்பலம் கொண்ட ஒரு சிலரின் உடமையாகக் காணப்பட்டன.

கூட்டுறவுத் துறையிலும் ப.நோ. கூ. சங்க அமைப்பு முறையிலும் உள்ள குறைபாடுகளை நீக்கி மக்கிளின் தேவையைப்

பூரணப்படுத்தும் முகமாக 1970 இல் பதவி எற்ற அரசாங்கம் கூட்டுறவுத் துறையைப் புனரமைத்தது. அரசின் 1972ம் ஆண்டு 05 இலக்கச் சட்டத்தின்படியும் அதன் கீழான விதி, உபவிதி, நடைமுறைவிதிகளின்படியும் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. இந்த வகையில் இலங்கை முழுவதுமுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 271 ஆரம்ப சங்கங்களாகப் பதியப்பட்டன. இதற்கமைய யாழ் மாவட்டத்தின் 23 ஆரம்ப சங்கங்கள் பதியப்பட்டன. இந்த முறையில், அன்றைய கட்டைவேலி கிராம சபை, நெல்லியடி பட்டின சபை எல்லைக்கள் அமைந்த 17 ப.நோ.கூ.சங்கங்கள் ஒன்றிணைக்கப் பட்டு கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் என பெயரிடப்பட்டது.

ஒவ்வொரு ஆரம்ப ப.நோ.கூ. சங்கமும் மக்கள் வங்கியின் அனுசரனையுடன் தமக்கெனக் கிராமிய வங்கிகளை ஆரம்பித்து சேமிப்பையும், கடன் வழங்கல் சேவைகளையும. செய்து வருகின்றது. இன்று கட்டைவேலி - நெல்லியடி கிராமிய வங்கியில் ரூபா 100 இலட்சத்திற்கு மேல் சேமிப்பாக உள்ளது ரூபா 90 இலட்சம் அளவில் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

அரசினால் 1978 இல் திறந்த பொருளாதாரக் கொள்கை அமுலாக்கப்பட்டது. இதனால் பொருளாதார வலுபெற்ற அதிகாரம் கொண்ட தனியாருடன் கூட்டுறவுத்துறை போட்டியாகச் செயற்பட நேர்ந்தது. இந்நிலையிலும கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் 60 நிலையங்களுக்கூடாகப் பல்வகை சேவைகளையும மக்களுக்கு வழங்கி வருகிறது. இச் சங்க வளர்ச்சி 1950 களில் சிறப்பாக இருந்தபோதும 1960 களில் பெரும் வீழ்ச்சி கண்டு இயங்கமுடியாதிருந்தது. இந் நிலமையை மாற்றி இயங்க வைத்த பெருமை அன்றும் இன்றும் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவருமாகிய திரு.மு.சிவசிதம்பரம் அவர்களையே சாரும். அதனைத் தொடர்ந்து வித்துவான் க. நடராசா அவர்கள் முன்னும் பின்னும் சங்கத்தில் தலைவராகவிருந்த ஆற்றிய சேவைகளும் அளப்பரியதாகும் புனரமைப்பின் (1970) பின்னும இச் சங்கம் மாணிக்க வாசகர் வித்தியாலய பழைய மாணவர்கள் தலைமையில் இயங்கி வருவது இவ் வித்தியாலய சமூகத்துக்கு பெருமை சேர்ப்பதாக அமைகிறது.

"கூட்டுறவே நாட்டுயர்வு"

# கரவைப் பண்பாட்டின் சின்னம்

ச. விநாயகமூர்த்தி
சிரேஷ்ட போதனாசிரியர்
(யாழ் பல்கலைக்கழகம்)

முறையான தமிழ்ப்புலமைக்கும் சைவ பாரம்பரியத்துக்கும் பெயர் பெற்ற பகுதி வடமராட்சி. வடமராட்சியிலும் கரவைப் பதிக்கு அதிவிசேடமான தனிச்சிறப்புண்டு. பொதுவாக ஆன்மீகத்தை அடிநாதமாகக் கொண்டே நம்முன்னோரின் கல்விசார் நடவடிக்கைகளும் அமைந்திருந்தன என்பது யாவரும் அறிந்ததே. பொதுவாகத் தமிழ்ப்பாரம்பரியத்தையும் சிறப்பாகச் சைவபாரம்பரியத்தையும் பல்லாண்டுகளாகப் பேணி வந்துள்ள கிராமம் கரவெட்டி. சைவ பாரம்பரியத்தையே தமிழ்ப் பாரம்பரியமெனக் கொண்டு வாழ்ந்து ஆயிரக் கணக்கான மாணவர்களை அவ்வழியே நெறிப் படுத்திய தமிழ்ச் சைவாசிரிய மரபு தனித்துவமான சிறப்போடு செழித்தோங்கிய பகுதி என்ற நியாயமான பெருமையும் கரவைப் பதிக்கு உண்டென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. சைவாகம நெறிமுறையில் இயங்குகின்ற சைவாலயங்களும் அவற்றின் சூழலில் அமைந்துள்ள பாடசாலைகளும் கரவைவாசிகளின் பண்பாட்டுப் பரம்பலில் பிரதான பங்கினை வகித்து வந்திருக்கின்றன.

மாணிக்கவாசக வித்தியாசாலை கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தனிச் சிறப்போடு இயங்கி வருகின்றது. இப்பகுதியின் புகழ்பூத்த கல்விமான்களும், கலைஞர்களும், பல்துறைசார் விற்பன்னர்களும், சைவசார சீலர்களும் இக்கல்விக் கூட்டத்திலேயே இளமையில் பயின்றவர்கள். இன்றும் தாம் இங்கு பயின்ற காலத்துப் பசுமையான நினைவுகளை மகிழ்வோடும் பெருமையோடும் பகிர்ந்து கொள்பவர்கள். இவ்வித்தியாலய நிறுவுநர் போன்ற பெருமக்கள் கல்வியின் நோக்கும் போக்கும் முடிந்த பயனும் இறையுணர்வே என்பதை வாழ்வியலறமாகவே கொண்டு செயற்பட்டவர்கள். தமது எதிர்காலச் சந்ததியினர் மேலே சுட்டப்பட்ட விழுமியங்களை உணர்ந்து பின்பற்ற வேண்டுமென்ற பெருநோக்கோடு, தொலைநோக்கோடு செயற்பட்டவர்கள். எனவே வித்தியாலயங்களை அமைக்கும் இடங்களையும் அவற்றின் பெயர்களையும் தமது நோக்குக் கேற்பவே தெரிந்து கொண்டனர். சைவாலயங்களுக்கு அருகிலேயே வித்தியாலயங்களை அமைத்தனர். அவ்வித்தியாலயங்களுக்குச் சைவத்தோடொட்டிய பெயர்களையே சூட்டினர். கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப அவர்களது நோக்கங்களை எய்தும் மார்க்கங்களும் பயனும் சற்றுக் குறைந்துவந்திருப்பினும் இன்று கூட ஒப்பீட்டடிப்படையில்

மாணிக்கவாசக வித்தியாசாலை தனித்துவம் மிக்கதொரு கல்விக் கூடமாக அமைந்துள்ளதென்பது இப்பகுதி வாழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்று. நிறுவுநரும், ஆரம்பகாலத்தில் வித்தியாலயத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களும் வெல்லன் விநாயகராலயத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந் தவர்கள். கரவைப்பதியிலே விநாய கராலயங்களுக்கு விசேட சிறப்புண்டு. பெரும்பாலான விநாயகராலயங் களிலே ஆண்டுதோறும் மஹோற்சவங் களும், விநாயக விரதம், திருவெம் பாவை, கந்தசஷ்டி போன்ற காலங் களில் விசேட உற்சவங்களும் நிகழ்ந்து வருகின்றன. ஆலயங்களிலே இடங்கொண்டு செழித்து வளர்ந்த புராணபடன மரபு தற்போதும் ஓரளவுக்கேனும் பேணப்படுகிறது. பல ஆலயங்களிலே ஆண்டுதோறும் கந்தபுராண திருவாத வூரடிகள் புராணபடனம் இடம்பெறுகின்றது. மஹோற்சவ தினங்களிலே சைவப் பிரசங்கங்கள், கூட்டுப் பிரார்த்தனை போன்றவை இடம்பெறுவது வழக்கம். இவற்றில் இங்கே பயிலும் மாணவர் களும், பெற்றோர்களும், ஆசிரி யர்களும் தத்தமக்கு ஏற்ற முறையில் கலந்து கொள்வர்.

ஆகமோக்தமான கிரியை களுக்குப் பெயர் பெற்ற தச்சைச் சிந்தாமணி விநாயகராலயத்தின் மேற் குத் திருவீதியை ஒட்டியே வித்தியால யம் அமைந்துள்ளது. மஹோற்சவ காலங்களிலே பகற்போதிலே சுவாமி திருவீதி உலா வரும் போது இவ்வித் தியாலயத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் ஆசிரியர்களின் நெறிப் படுத்தலில் வந்து கூட்டு வழி பாடாக திருமுறைகளைப் பாராயணம் செய் வதும் வெள்ளிக்கிழமைகளில் மாலைப் பூசைக்கு முன்னர் கூட்டுப் பிரார்த்தனை யில் ஈடுபடுவதும் ஆலயத்தைச் சார்ந்தவர்களால் நன்கு மதிக்கப்படும் நிகழ்ச்சிகள், மேலும் ஆலயம் சார்ந்த தொண்டுகளில் மாணவர்களும் ஆசிரியர்களும் ஈடுபட்டு தமக்கும் கரவைப் பதிக்கும் பெருமை சேர்க்கின் றனர். சுருங்கக் கூறின் கரவைப் பண்பாடாகிய தமிழ்ச் சைவ பாரம்பரி யத்தின் சின்னமாக மாணிக்க வாசக வித்தியாசாலை விளங்குகிறது.

பாடசாலை சூழலின் ஒழுங்கமைப்பும், பாதுகாப்பும், மனிதநேயமும், மாணவரின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாயமையும், விலை மதிக்க வொன்னா ஏடாகும்.

# மாணவர் கல்வியில் விழுமியங்களின் அவசியம்

**செல்வி. மங்களேஸ்வரி சண்முகநாதன்** B.A.
ஆசிரியர்,
மாணிக்கவாசகர் வித்தியாலயம்

மனம் உள்ளவன் மனிதன் ஆறறிவு படைத்த மனிதனுக்குத்தான் மனமும் இருக்கிறது. இது பொறியில்லாத புலன். எனினும் ஐம்பொறிகளுக்கில்லாத, ஐம்புலனுக்கில்லாத ஆற்றல் கொண்டது அது. மனது மனிதனை வழிநடத்துகிறது. அது மனிதனை உயர் நிலைக்கும் கொண்டு செல்லலாம். நடு நிலைக்கும் வைத்திருக்கலாம். கீழ் நிலைக்கும் தள்ளிவிடலாம். இந்த நிலையற்ற தன்மையினால் மனதை ஒரு குரங்கு என்றும் சொல்வார்கள். இவ்விதம் நிலையற்ற தன்மையில் இல்லாமல் நிலையான ஒரு நல்ல வழியில் அதனை இட்டுச் செல்வதற்குத்தான் நமக்கு கல்வி அறிவும், கேள்வி அறிவும், நல்லோர் இணக்கமும் தேவைப்படுகிறது. அப்போதுதான் நாம் வையத்துள் வாழ்வாங்கு வாழவும், உலக நடை முறைக்கேற்ப வாழவும் முடிகிறது. இவ்வாறான வாழ்வுதான் விழுமியங்களுடன் கூடிய வாழ்க்கையாகும்.

"இளமையிற் கல்" "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றெல்லாம் சான்றோர் வாசகங்கள் இளமையின் பெருமையைப் பறை சாற்றுகின்றன. இளமைப் பருவம், மாணவப் பருவம் இப் பருவத்தில் கற்பவை யாவும் பசுமரத்தாணி போல பதியும், பண்பாடுகள் வளர்க்கப்பட வேண்டியதும் இம் மாணவ நிலையிலேதான் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பதற்கிணங்க இம் மாணவ நிலையே வளையும் தன்மையது. எனவே இப்பருவத்தின் படிப்போடு பல்துறைகளிலும் பிள்ளைகள் பயிற்சி பெற்றவர்களாகத் திகழக்கூடிய வாய்ப்பையும் வளங்களையும் வழங்க வேண்டும். இவற்றிற்கு மேலாக தெய்வீக சிந்தனையுள்ளவர்களாக, நேர்மையானவராக வாழக் கூடிய கல்வி அவர்களுக்கு வழங்க வேண்டும்.

ஒரு நாட்டினுடைய வளமான எதிர்கால குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வியிலேயே தங்கியுள்ளது. இன்றைய கல்வியமைப்பிலே மனித விழுமியங்கள் பற்றிய சிந்தனைகள் பல்வேறு மட்டத்திலும் பல அறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. இன்று இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளின் கல்விக் கொள்கைகளையும் ஆராய்கின்றபோது பல நாடுகளிலே இந்த விழுமியக் கல்வியின் தேவை உணரப்பட்டு, நடைமுறைப் படுத்தப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகெங்குமே சட்டம், ஒழுங்கு, நீதி என்பன புறக்கணிக்கப்பட்டு போராட்டங்கள் உருவெடுத்துள்ளதனால் மனி

தன் மனநிம்மதியை இழந்து தவிக்கின்றான். சமூக ஒழுங்கு, சமூகநீதி என்பவற்றை எப்படி நிலைநாட்டுவது என்பதனைச் சரிவரத் தெரியாமல் அரசாங்கங்கள் கூடத் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையிலிருந்து விடுபடுவதற்கு பேரறிஞர்களால் முன்வைக்கப்பட்டது. "மனித மேம்பாட்டுக் கல்வி" என்னும் புதிய கல்வி முறையாகும்.

மனித வாழ்வின் சிறப்பிற்கும் உயர்ச்சிக்கும் உறுதுணையாக அமையும் மனிதவிழுமியங்கள் பற்றிய அறிவும், விளக்கமும் குழந்தைப் பருவத்தில் இருந்து ஊட்டும் வகையில் கலைத் திட்டம் அமைய வேண்டும். கல்வி என்பது ஒருவரது நுண்மதியாற்றலையும் திறன்களையும் விருத்தி செய்வ தோடு நின்றுவிடாது அவரது உலக நோக்கை விருத்தி செய்தல் வேண்டும். சமூகத்திற்கும், பரந்த உலகத்திற்கும் அவரது பணிகள் பயன்படும் வண்ணம் கல்வி நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். பௌதிக விஞ்ஞானக் கல்வியுடன் இணைந்த வகையில் மனதைப் பண்படுத்தி மேம்படுத்துவதன் வாயிலாக இது சாத்தியப்படும். அறக் கல்வியும், தெய்வீகக் கல்வியும் ஒழுக்கமுள்ள வாழ்க்கையை நோக்கி ஒருவர் செல்வதற்குரிய பயிற்சியைத் தரும். தற்கட்டுப்பாட்டை ஏற்படுத்தாத கல்வி உண்மைக் கல்வியாக மாட்டாது. உண்மைக்கல்வி என்பது ஒரு மனிதனைக் கருணையும் மானுடப் பண்பும் உள்ளனவாக்குதல் வேண்டும்.

மாதவமாகவும், குறுகிய நோக்கிலும் அது அவனைச் சிந்திக்க வைக்கலாகாது. நன்கு கற்ற ஒருவனது உள்ளத்திலிருந்து அனைவரையும் மதிக்கும் பண்பும், நித்தியமான புரிந்துணர்வும் ஊற்றெடுத்தல் வேண்டும். சமூகத்திற்கு பணிசெய்யும் ஆற்றல் முனைப்படைதல் வேண்டும்.

கௌதம புத்தர், இயேசு பிரான், இராம கிருஷ்ண பரமஹம்சர், நபிகள் நாயகம், காந்தி மகான், பாரதியார், சாராதாதேவி அம்மையார், ஔவையார், விவேகானந்தர் போன்றோர்களால் போதிக்கப்பட்ட கருத்துக்களை மாணவர்களுக்கு விளங்கும் வகையில் பாட்டுக்கள் மூலமோ, நாடகங்கள் மற்றும் விளையாட்டுக்கள் மூலமோ அல்லது வேறு பல செயற்பாடுகள் மூலம் கற்பிப்பதனால் அக் கல்வியில் அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட வழிவகுக்கும். இதனால் விழுமியங்கள் பற்றிய மனப்பதிவு ஏற்படுவதுடன் உதாரணபுருஷர்கள் போல வாழவும் முற்படுவர்.

மனம் போன போக்கில் போகிறவன் மனிதன், கால் போன போக்கில் போகிறவை கால் நடைகள் என்று ஒரு பகிடி சொல்லுவார்கள். ஆயினும் எல்லா வழியிலும் மனம் போன போக்கின்படி மனிதன் போகத் தொடங்கினால் பின்பு மனிதனுக்கும் கால் நடைகளுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய் விடும். இதனாலேதான் உலக நீதி

சொல்ல வந்த உலகநாதப் புலவர் "மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்'' என்று ஓர் எச்சரிக்கை செய்திருக்கிறார். ஆகவே நாம் கற்ற கல்வி அறிவைக் கொண்டும் உலகில் பெற்ற அனுபவத்தைக் கொண்டும் நமது மனதைப் பண்படுத்தி சமுதாயத் தோடு நம்மையும் இணைத்து வாழ விழுமியக்கல்வி அவசியமாகும். இதனை விடுத்து தன்பாட்டிலே ஒருவன் வாழ்ந்து மடிந்தான் என்றால், "நின்றான், இருந்தான், கிடந்தான் தன் கேள் அலறச் சென்றான் எனப்படும்'' என்று நாலடியார் கூறுவது போல ஆகி விடும்.

அறிவும் ஆற்றலும் இருந்தாலும் மக்கட் பண்பு இல்லாது போனால் சமுதாயம் சீரழிந்து போகும். இதனையே வள்ளுவனார்,

"அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர்''

என்று குறிப்பிடுகின்றார். அன்பும், பண்பும், அறமும், அமைதியும் உடையவர்கள் வாழ்வதனால் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது அன்றேல் அது மண்ணோடு மண்ணாய் போய்விடும் என்றும் கூறுகிறார்.

"பண்புடையார் பட்டுண்டு உலகம்
அதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்''

பண்புடைய மக்களின் தேவை பற்றிப் புறநானூற்றுப் புலவர் பின்வரும் நிகழ்வு ஒன்றைக் கூறுகின்றார்.

வயது முதிர்ந்தவரான பிசிராந் தையார் என்ற பெரியார் ஒருவர் தனது நண்பனான கோப்பெருஞ்சோழனைச் சந்திக்க வருகிறார். சோழ மன்னன் சபையில் கூடியிருந்தவர்கள் அவர் பிசிராந்தையார் என அறிவித்ததும் ஆச் சரியமுற்று இத்தனை வயதிலும் தங்களுக்கு நரை தோன்றாது இருக்க காரணம் என்ன என்று கேட்க அவர் சொல்லுகின்றார்,

"யாண்டு பலவாக நரையிலவாகுதல்
யாங்கு ஆகியது என வினவுதின் ஆயின்
மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினா
யான்கண் டனையர் என் இளையரும்;
வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன் தலை
ஆன்ற விந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே''.

என் மனைவி நல்லவள், நாம் பெற்றெடுத்த குழந்தைகளும் சிறந்தவர்கள், எனக்கு இளையவரும் என் சொல்லுக்கேற்ப நடப்பவர்கள். எமது அரசனோ என்றால் எந்த இடையூறுமின்றி என்னைக் காப்பான். எல்லாவற்றிற்கும் மேலாக அறிவிற் சிறந்த பண்புள்ள பெரியோர் பலர் எமது ஊரில் இருக்கின்றார்கள். இவர் கள் எல்லோரும் பாடறிந்து ஒழுகும் பண்பினராக இருப்பதையே புறநானூற் றுப் புலவர் எமக்குக் காட்டுகிறார். இக் கூற்றிலிருந்து பண்பின் சிறப்பு வலியுறுத் தப்படுகின்றது. எனவே பண்படுத்தப் படும் பருவம் மாணவப் பருவமாகை யால், அவர்களுக்கு போதிக்கப்படும்

கல்வி பண்புடன் கூடிய கல்வியாக அமைதல் அவசியமாகும்.

மனித வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைவது தூய நூற்கல்வியே என்று திருமூலர் கூறுகின்றார். ஆகவே கல்வி சிறப்பாக அமைகின்ற போது பல விடயங்கள் மாணவர் மனதில் பசுமரத்தாணி போல இலகுவில் பதிந்து விடுகின்றன. அத்துடன் அவர்கள் மத்தியில் காணப்படும் பொறுமையின்மை, அமைதியின்மை, சகிப்புத்தன்மை, இன்மை, கட்டுப்பாடின்மை, ஒழுக்கக் குறைவு, ஒத் துழைப்பு மனப்பான்மையின்மை போன்றவைகள் இக்கல்வி போதிக்கப்படுவதன் மூலம் குறைக்கப்பட்டு பல நற்குணங்கள் வளர வாய்ப்புண்டு.

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் அதீத வளர்ச்சியடைந்து வரும் இன்றைய உலகத்திலே மனித விழுமியங்களும், அறமும் வீழ்ச்சியடைந்து வரும் நிலையிலே, மனிதன் தன்னையும், முழு உலகத்தையும் அழிக்க முற்படும் துன்பச் சூழலே மாணவர் கல்வியில் மனித மேம்பாட்டு விழுமிய்ங்கள் எதிர்காலத்திற்குரிய நம்பிக்கை ஒளியாகி நிற்கின்றன. இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்ற வகையில் சிறந்த மனப்பாங்குகளை, விழுமியங்களை இளமைப்பருவந் தொட்டே வளர்க்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களின் கையில் உள்ளது. இவ்வாறான கல்வித் திட்டங்களின் மூலம் பிள்ளைகள் வழிப்படுத்தப்பட்டால் எதிர்காலத்தில் நற்பிரஜைகள் உருவாக வாய்ப்புண்டு.

தான் விரும்பியவாறு உருவங்களை வடித்தெடுக்கக் கூடிய சிற்பிக்குக் கிடைத்த பளிங்குக்கல் போன்று மாணவர்கள் விளங்குகின்றனர். அவர்களை மெருகூட்டும் சிற்பிகளாக பெற்றோரும், ஆசிரியர்களும் விளங்க வேண்டும். இவர்கள் மாணவர் கல்வியில் அக்கறையுடன் செயற்படுவார்களானால் அவர்கள் தன்னியக்கமாகவே உயர் நிலையடைந்து நாட்டுக்குப் பெருமை தேடித் தருவார்கள்.

இன்று நாம் நுண்மதித் திறனுக்கே முதன்மை அளிக்கின்றோம். இது தவறானது. ஒழுக்கத்திற்கே முதன்மை தரல் வேண்டும். நல்லொழுக்கம் தராத கல்வி விழுமிய மேம்பாடு தராத கல்வியாகும். இதனை சிறு உதாரணத்தின் மூலம் விளங்கிக் கொள்ளலாம். (பத்துப்பரப்பு பயனற்ற நிலத்தை வைத்திருப்பதை விட ஒரு சிறிய வளம் மிக்க நலம் பயன் தரக்கூடியது) இத்தகைய கல்விமூலம் அறிவு, திறன், மனப்பாங்கை மாணவருக்கு வழங்குதல் வேண்டும். அன்பு வளர்க்கப்பட வேண்டும். அன்பிலா ஒரு மனிதன் நாட்டில் திரியும் கொடிய விலங்குகளை விட மோசமானவன். விலங்குகள், பறவைகள், மரஞ்செடிகள் கூட தம்மால் இயன்ற சேவையை மக்களுக்கு வழங்குகின்றன. ஆனால் தன்னலத்

துடன் வாழும் மனிதன் எதுவித சேவை யும் செய்யாதிருப்பதுடன் பிறருக்குத் தீங்கும் செய்கிறான். கல்லாத வர்களிலும் பார்க்க கற்றவர்கள் இவ் விடயத்தில் அதிக பாபம் செய்தவர் களாகின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணம் பண்பாட்டுக்கல்வி அளிக்கப் படாமையே ஆகும்.

பெருமைக்குரிய சாயி பகவான் அவர்கள் தற்போதைய கல்வியைப் பற்றிக் கூறும்போது,

"இறைவன் மீது கொண்ட நம்பிக்கை
தளர்கின்றது
பக்தியுணர்வு தள்ளுபடியாகின்றது
இறைமறுப்புணர்வு தீவிரமடைகின்றது
ஆசிரியர் மீதுள்ள கணிப்பு அகல்கின்றது
இறை பூஜைக்கு இடமில்லை
பாரம்பரிய பண்பாடு புறக்கணிக்கப்படுகின்றது
கடவுளுக்குரிய உன்னதமதிப்புச்
சென்றுவிடுகின்றது

இதுவே இன்றைய எமது கல்வி என்கின்றார்.

கல்வி என்பது வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்வதற்கும், அறிவைப் பயன்படுத்துவதற்கும் உதவுதல் வேண்டும். சமூக முன்னேற் றத்திற்கும், நலனுக்கும் உழைத்தல் ஒவ்வொருவரதும் கடமையாகும். இவ்வுணர்வுகளை வளர்ப்பதற்காக பணிவு, பயபக்தி, இரக்கம், சகிப்புத் தன்மை, தியாகம், தற்கட்டுப்பாடு ஆகிய பண்புகள் கல்வியின் வெளிப்பாடுகளா யிருத்தல் வேண்டும்.

இதனை விடுத்து இன்றைய கல்வி யில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், வியத்தகு முன்னேற்றத்தை அடைந்துள் ளன. மனிதப் பண்புகள் கீழ் நோக்கிச் செல்கின்றன. இதனால் ஒழுக்கமில்லாத மனித சமுதாயம், நன்றியில்லாத நட்பு, நீதியும், அறமும் இல்லாத சமூகம் உருவாக வழிவகுக்கும். மனித ஒழுக்கம் அருகி வருவதனால் வன்செயலும், வெறுப்புணர்வும் வளரும். கெடுதியான செயல்களும், கொடுமை யான பழக்கங்களும் அதிகரித்துச் செல்ல வாய்ப்புண்டு.

மனிதர் தமக்குரிய உரிமைகள் பற்றியே தனித்துக் கவனம் செலுத்து கிறார்களேயன்றி தமக்குரிய கடமைகள், பொறுப்புகள் பற்றிய கரிசனை இல்லாதவர்களாக உள்ளனர். இன்றைய பல்கலைக்கழகங்கள் பட்டங்களை கொடுத்து அனுப்பும் தொழிற்சாலைகளாக இருக்கின்றனவே ஒழிய, உண்மையான அறிவின் மையங்களாக விளங்குவதில்லை. தளரா உறுதியும், நேரிய நோக்கும் கொண்ட விழுமியக் கல்வியில் கவனம் செலுத்துவதில்லை.

ஒருவர் எத்தகைய புலமையைக் கொண்டிருப்பினும் எத்தகைய அந்தஸ்தை அல்லது புகழைக் கொண்டிருப்பினும் சரியான நடத்தை அவரிடம் இல்லாதவிடத்து பெயரும், புகழும் பொருளற்று விடுகின்றன. எனவே உள்ளத்தைப் புத்தக உள்ள

டக்கத்தால் நிரப்புதலும், பரீட்சை மண்டபத்தில் அவற்றை வெளியேற்றி விடுவதும், பின்பு வெற்று உள்ளத்தோடு திரும்புதலுமாகிய கல்வி முறை அமையக்கூடாது. மாறாக அன்பு, அறம், கருணை, இரக்கம், பணிவு, பண்பாடு போன்ற உயர்ந்த விழுமியங்களை உள்ளடக்கிய விதத்தில் பாடங்கள் போதிக்கப்படும்போது மாணவர்களின் குணநலச் செயற்பாடுகளும் நல்ல முறையில் திசை திருப்பப்படுகின்றன.

கல்வி கற்பிக்கப்படும் முறை மிகவும் பிரதானமான தொன்றாகும். தாம் கற்கும் கல்வியில் ஆர்வம் ஏற்படுவதற்கும், வெறுப்பதற்கும் கற்பிக்கப்படும் முறையே காரணமாக அமைகின்றது. சிறு வயதில் விழுமியக் கல்வி கற்பிப்பதற்குக் கதைகள் சிறந்த ஊடகமாக அமைகின்றன. விளையாட்டுக்கள் மூலம் சிறந்த உடல், உளப், பலம் ஏற்படுத்தப்படுகின்றது. விளையாட்டின் போது கூட்டுறவு, தலைமைத்துவம், சகோதரத்துவம், சமத்துவம், பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, பொறுப்புக்களை பகிர்ந்து ஏற்றுக்கொள்ளும் பண்பு, உதவி செய்யும் மன உணர்வு, நன்றி செலுத்தும் தன்மை போன்ற உயர் விழுமியங்கள் மாணவர்மத்தியில் வளர்க்கப்படுகின்றன. அத்துடன் மனோவளர்ச்சிக்குரிய சிறந்ததொரு பொழுதுபோக்காகவும் விளையாட்டுக்கள் அமைந்து விடுகின்றன.

கல்வி ஒருவனைச் சிறந்த சமூக இயல்பினனாக்கும் வகையில் அமைதல் வேண்டும் ஒரு குழந்தை தன் பெற்றோர், அயலவர், சமூகம் என்ற வகையில் தொடர்புகொண்டு பின் பள்ளிகூடங்களுக்கு வரும்வேளையில் மற்றவர்களைப் புரிந்து அவர்களோடு சேர்ந்து வாழும் மனப்பாங்கைக் கல்வி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாணவர்கள் தம்மிடம் குடிகொண்டுள்ள தீய அம்சங்களைத் தவிர்த்து மானிடப் பண்பைப் பெற்று வாழ்வதற்கான விழுமியக்கல்வி அளிக்கப்பட வேண்டும். கல்வியின் மூலம் ஒருவனிடம் சிறந்த பணிவுத்தன்மை ஏற்படுத்தப்பட வேண்டும். இதனை வலியுறுத்தும் சுவாமி விவேகானந்தர்,

"முதலில் வேலைக்காரனாக இருக்கக்
கற்றுக்கொள்
அப்போது எஜமானாகும் தகுதி தானாகவே
உனக்கு வந்து சேரும்" என்கிறார்.

ஒவ்வொருவரும் அறவழி நின்று ஒழுக்கத்தையும் ஒப்புரவையும் பேணும் வகையில் கல்வி செயலாற்ற வேண்டும். இதனால், வெறுப்பு, பொறாமை, அகம்பாவம் போன்ற கெட்ட பண்புகள் அழிக்கப்படுகின்றது.

ஒரு சிறிய வீட்டுக்கும் அத்திபாரம் அவசியம், அது போன்று ஒரு மரம் உறுதியாயிருக்க வேர்கள் அவசியம். வேரில்லாவிடில் மரமும், அத்திபாரம் இல்லாவிடில் வீடும் காற்றுக்கு விழும் நிலைமை ஏற்படும். அவ்வாறே நற்பிரஜைகள் உருவாக்குவதற்கும் உறுதியான அத்திபாரம் அமைத்துக் கொள்ளப்படல் வேண்டும். உறுதியான அத்திபாரம் என்பது அறம், ஒழுக்கம்,

தெய்வீகம் ஆகியவை சார்ந்து அறிவையும் அனுபவத்தையும் வளர்த்தலாகும்.

மாணவர் பண்பாட்டுக்கல்வியில் ஆசிரியர் பணி மகத்தானது. ஆசிரியர்கள் தாம் ஒழுக்கமுள்ளவர்களாகவும், நல்ல பழக்கங்களைப் பின்பற்றுபவராகவும் இருக்கும் பட்சத்தில் அவர்களது மாணவர்களும் இலட்சிய மனிதர்களாகவும், பிரஜைகளாகவும் தம்மை ஆக்கிக் கொள்ள முடியும். ஆசிரியர் கெட்ட நடத்தை, கெட்ட சகவாசம் ஆகியவற்றைக் கொண்டிருந்தால் மாணவர்களும் எளிதாக கெட்ட வழிகளுக்கு இழுக்கப்படுவர். ஆகவே உலகை உய்விக்க வேண்டிய பணி ஆசிரியர்களுக்குரியது. ஆசிரியர்கள் நன்நடத்தை உள்ளவராக இருந்து நற்பண்புகள் வளர உதவ வேண்டும்.

நோயினால் உடல் வீங்கும் ஒரு குழந்தையைக் கண்டு அதன் தாயார் தனது குழந்தை பலம் பெறுகின்றது என எண்ணும் நிலை போன்று பண்பாடு இன்றி பட்டம் பதவியுடையவர்களை நாம் கண்டு பெருமிதமடைகின்றோம். ஆனால் நோய் முற்றி குழந்தைக்கு அழிவு ஏற்படுவது போல பண்பாடுகளற்ற இவர்களது உயர்வால் சமுதாயத்திற்கு அழிவே ஏற்படும். ஒழுக்கமில்லாது விட்டால் மனிதன், அசையும் ஒவ்வொரு காற்றுக்கும் சலனப் பொருளாகி விடுவான். கயிறறுந்த பட்டமாகி விடுவான். அல்லது ஒருவருக்கு பயன்படாது சுற்றிச் சுழலும் போலியான நாணயமாகி விடுவான்.

பண்பற்ற கல்வி கற்ற மனிதர்களிடையே பணிவு தாழ்மை, பகுத்துணரும் தன்மை, பிறருக்கு சேவை செய்யும் விருப்பு, பயபக்தி, துறவு ஆகிய சீரிய பண்புகள் இல்லை, விட்டுக் கொடுப்பதற்கு எவரும் தயார் நிலையில் இல்லை. பற்றிப் பிடிப்பதற்கே ஒவ்வொரு வரும் அவாவுறுகின்றனர்.

எனவே கல்வி என்பது மாணவரிடையே பணிவையும், ஒழுக்க நெறியையும் வளர்த்தல் வேண்டும். 'வித்யா' என்பதிலுள்ள 'வித்' என்பது ஒளியாகும். 'யா' என்பது தருதலைக் குறிக்கும் ஆகவே கல்வி அல்லது வித்யா என்பது மனதில் உள்ள கரும் புள்ளிகள் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சி ஒளிரச்செய்தல் வேண்டும். மாணவர்கள் எதிர்காலத்தில் அறிவுத் தீபத்தை ஏற்றி வைக்கும் சுடர்களாகத் திகழ வேண்டும். இதுவே வகுப்பறைகளினதும், கலைத்திட்டத்தினதும் உள்ளார்ந்த இலக்காக இருத்தல் வேண்டும். குறுகிய நோக்கங்களை ஒழித்து சொல்லிலும் செயலிலும் அகன்ற உள்ளார்ந்த சிந்தனைகளை வளர்த்தல் வேண்டும்.

> "கற்க கசடற கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ வழிவகுக்க வேண்டும். எனவே பயனற்ற கல்வியைப் கற்பிக்காது பண்புள்ள கல்வியைப் போதித்து தனக்கும், குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், தன்நாட்டிற்கும், உலகத்திற்கும், அர்ப்பணிப்புள்ள நல் மனிதனை உருவாக்க கல்வி உதவ வேண்டும்.

# வழக்கிழந்து வரும் கரவெட்டி வட்டார வழக்கு சொற்கள்

ஆக்கம்:-
**ச. இராகவன்** (B.B.A [H.R.M.Spl] Jaf)
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

**1) அறிமுகம்**

ஒவ்வொரு பிரதேசத்திற்குமுரிய அல்லது வட்டாரத்திற்குமுரிய வழக்குச் சொற்கள் அவ்வட்டாரத்தின் தனித்துவத்தைப் பேணுவதில் முக்கியத்துவம் வாய்ந்ததொரு பங்களிப்பினை வழங்கி வருவதனை மிகத்தெளிவாக அவதானிக்கலாம். நவீன இலக்கியங்கள் எனக் கொள்ளப்படும் புதுக்கவிதை, சிறுகதை, நாவல் --- என்பவற்றில் கூட இவ்வட்டார வழக்கு சொற்கள் செல்வாக்கு செலுத்தி வருவதுடன் அவ்விலக் கியங்களின் கனதிக்கும் பங்களிப்பு செய்வதனை அவதானிக்க முடிகிறது. அத்தோடு அவ்வட்டார வழக்கு சொற்களைக் கொண்டு தமது இலக்கியங்களைக் கட்டியெழுப்பும் படைப்பாளிகள் அதனடிப்படையிலேயே தமதிருப்பை வெளிப்படுத்திக் கொள்வதும் அவதானிப்பிற்குரியதாகும். எடுத்துக் காட்டாக கி. ராஜநாராயணன் (கோபல்லபுரத்து மக்கள்) சுந்தர ராமசாமி (குழந்தைகள், பெண்கள், ஆண்கள்) தெளிவத்தை ஜோசப் (காலங்கள் சாவதில்லை) டானியல் (கானல்...) தெணியான் (பொற்சிறையில் வாடும் புனிதர்கள்) செ. கதிர்காமநாதன் (கொட்டும்பனி) என நீண்ட தொரு பட்டியலை முன்வைக்க முடியும். எனினும் இன்றைய சமூக பொருளாதார, கலாசார, தொழில்நுட்ப மாற்றங்களினால் இவ்வட்டார வழக்கு சொற்கள் வழக்கிழந்து செல்வதது வருத்தத்திற்குரியதாகும். இந்த அடிப்படையில் கரவெட்டி வட்டாரத்திற்குரிய வழக்கிழந்து வரும் வழக்கு சொற்களை அவ்வட்டாரத்தின் தனித்துவத்தைப் பேணுவகையில் ஆவணப்படுத்தி நினைவு கூர்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**2. வட்டார வழக்கு சொற்களின் முக்கியத்துவம்.**

வட்டாரவழக்குச் சொற்கள் அவ்வட்டாரத்தின் தனித்துவத்தைப் பேணுதல் என்பது மேலாக இன்னும் சில முக்கியத்து வத்தை நோக்க முடியும்.

வட்டார வழக்கு சொற்கள் என்பவை எந்தவொரு வட்டாரத்தினதும் ஆளுமை மற்றும் சமூக பொருளாதார, கலாசார விழுமியங்களைவெளிப்படுத்தி நிற்கும் சொற்களாகும். இந்தவகையில் நோக்குகையில் ஒரு வட்டாரம் தொடர்பான வரலாற்று ரீதியான ஆவணப்படுத்தல் ஒரு பாகமாக அமைதல்.

* அந்த வட்டாரத்தின் ஆளுமை, மற்றும் சமூக, பொருளாதார, கலாசார விழுமியங்களை வெளிப்படுத்தி நிற்றல்.
* ஒவ்வொரு வட்டாரத்தையும் தெளிவாக வெளிக்காட்டி நிற்றல். போன்ற வகைகளில் இச் சொற்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன.

**3) வட்டார வழக்குச் சொற்கள் ஏன் வழக்கிழந்து வருகின்றன?**

இன்றைய காலகட்டத்தில் வட்டார வழக்குச் சொற்களில் பெரும்பகுதியானவை வழக்கிழந்து போய்விட்டன. இந்த வழக்கிழப்பின் பகைப்புலத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

**(3.1) வட்டாரங்களின் ஆளுமை மாற்றம்:~**

வட்டாரங்களின் ஆளுமை மாற்றம் என்பதும் வட்டார வழக்குச் சொற்களின் வழக்கிழப்புக்கு காரணமாகின்றன. எவ்வாறெனின் ஒரு வட்டாரத்தின் ஆளுமை என்பது மேம்பட்ட நிலையில் ஆளுமையில் மேம்பட்டு நிற்போர் இச்சொற்களை பாவிப்பதை ஆளுமையைக் குறைக்கும் ஓர் அம்சமாகவே கருதுகின்றனர். இதனால் தமது ஆளுமையைப் பேணும் வகையில் வேறு சொற்களைப் பதிவீடு செய்து மொழியைக் கையாளுகின்றனர். இந்தப் பதிலீட்டில் ஆங்கிலச் சொற்கள் அதி முக்கியத்துவம் பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

எடுத்துக்காட்டாக புறம்புக்குப் போதல் என்ற வழக்குச் சொல்லுக்குப் பதிலாக Toilet எனும் பதம் காணப்படுகிறது.

ஆளுமை குறைந்ததொரு சமூகத்தில் வட்டார வழக்கு சொற்கள் செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காணலாம்.

**(3.2) சமூகரீதியான மாற்றம்:~**

சமூகரீதியான மாற்றம் என்பதும் இங்கே செல்வாக்கு செலுத்தும் காரணங்களில் ஒன்றாய் அமைகின்றது. குறித்தவொரு சமூகம் அபிவிருத்தியடைந்து செல்கையில் வட்டார வழக்குச் சொற்களின் பலம் குன்றிவிடுகிறது.

**(3.3) கலாசார ரீதியான மாற்றம்:~**

குறித்தவொரு சமூகத்தை பிறிதொரு கலாசாரம் ஆக்கிரமிக்கின்ற போது அந்த கலாசாரத்திற்குரிய சொற்களும் முழுவீச்சுடன் குறித்த சமூகத்தை ஆக்கிரமிக்கின்றது. இத்தகைய சந்தர்ப்பத்தில் வட்டார வழக்கில் சொற்கள் என்பவை தன்னி யக்கமாகவே செல்வாக்கிழந்து போகின்றன.

**(3.4) பொருளாதார ரீதியான தாக்கம்:~**

ஒரு வட்டாரத்தின் மீது ஏற்படும் பொருளாதார ரீதியான தாக்கமும் அதன் வழக்கு சொற்களின் மீது தாக்கம் செலுத்துகின்றது. ஒரு வட்டாரத்தின் வழக்கைத்தரம் உயர்வடைந்து செல்கையில் அவ்வட்டாரத்திற்குரிய வழக்குச் சொற்கள் வழக்கிழந்து போவது இயல்பானதொரு மாற்றமாகும்.

**(3.5) புலம் பெயர்தல்:~**

ஒரு வட்டாரத்திலுள்ள மக்கள் ஏதோவொரு காரணம்கருதி தமது தாய்நாட்டை விட்டு அந்நிய நாடொன்றிற்கு புலம்பெயர்ந்து செல்கையில் அவ்வட்டார மக்களினால் உருவாக்கப



மெய்வன்மை போட்டி - 2002



மெய்வன்மை போட்டி - 2002



பரிசளிப்பு விழா - 2000



மெய்வன்மை போட்டி - 2002

படும் வட்டார வழக்கு சொற்களை முற்றிலும் மறந்துவிடும் சாத்தியம் அதிகமானதா கவேயுள்ளது.

### (3.6) வட்டார வழக்கு சொற்களை ஆவணப்படுத்துவதிலான ஆர்வம்:~

வட்டாரத்திலுள்ளோர் தமது வட்டாரத்தின் தனித்துவத்தை பேணுவ தற்காக வழக்கு சொற்களை ஆவணப் படுத்துவதற்கான முயற்சியை ஆர்வத் துடன் தொடர்ந்து பேணி அடுத்த தலைமுறைக்கும் கடத்தும் நோக்குடன் தொழிற்படின் அவ்வட்டார வழக்கு சொற்கள் தொடர்ந்து வழக்கிலிருக்க முடியும். இல்லையெனில் மிகத்துரித மாகவே அவை வழக்கிழந்து போகும் தன்மை அதிகமாகவே இருக்கும்.

### (3.7) துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் தொழில் நுட்பம்:~

தொழில் நுட்பத்தின் அதிவேக மான வளர்ச்சியினால் தொழில்நுட்ப ரீதியான பதங்கள் இன்று அதிகளவில் கையாளப்படுகின்றன. இவைகூட அதிகளவில் வட்டார வழக்கு சொற் களின் வழக்கிழப்புக்கு பங்களிப்பு செய்யும் காரணியாகவே அமை கின்றன.

## 4. கரவெட்டி வட்டார வழக்குச் சொற்கள்

ஒவ்வொரு வட்டாரத்தினதும் தனித்துவத்தினை வெளிப்படுத்தும் வழக்குச் சொற்கள் என்ற அடிப்படையில் கரவெட்டி வட்டாரத்தின் தனித்துவத்தினை வெளிப்படுத்தி நிற்கும் அதேநேரம் வழக்கிழந்து வரும் வழக்குச் சொற்கள் சிலவற்றை நோக்குவோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| அம்மாச்சி | அம்மையா | அப்புஆத்தை | அப்பையா | அப்பாச்சி |
| அறுப்பான் | அறுப்பு | அறளையறுப்பான் | அண்டாடு | அடிச்சல்லி |
| அடுக்களை | அரிதடுக்கு | அவிச்சோர்கள்ளன் | அடுக்கணியம் | அயத்துமறந்து |
| அறுத்துறுத்து | அம்பிட்டு | அங்கினை | அந்து | அத்து |
| அம்மான் | அவடம் | அதுக்கை | அதுக்குள்ளை | அடிச்சுப்பிடிச்சு |
| அந்தரம் | அதோட | அங்காலை | அதுக்காலை | அலைச்சல் |
| ஆத்தை | ஆக்கினை | ஆடுகால் | ஆவலாதி | ஆளடுக்கு |
| ஆசறுதி | ஆகடியம் | ஆசமசம் | ஆள்பிடிப்பு | ஆட்காட்டல் |
| ஆத்தையப்பு | ஆச்சி | ஆச்சிப்பிள்ளை | ஆச்சியப்பு | ஆசையப்பு |
| ஆசையம்மான் | இட்டொட்டு | இயத்து | இளந்தளிர் | இளம்பெட்டை |
| இறயித்தார் | இடியார் | இழவுவிழுவான் | இட்டல்இடைஞ்சல் | இவடம் |
| இஞ்சை | இங்கினை | இக்கணம் | இஞ்சாலை | இப்பெப்பன் |
| இன்னொண்டு | இதுக்குள்ளை | இதுக்காலை | இதோட | இளிப்பு |
| இளிச்சல் | ஈச்சான் | ஈச்சாப்பிணி | ஈசி | உண்ணானை |
| உமல் | உவடம் | உங்கினை | உத்தரிப்பு | உவத்திரவம் |
| உலாந்தா | உலாத்து | உருப்படி | உறிவாய் | உறுக்கல் |
| ஊர்உலாத்து | ஊதாரிப்பயல் | ஊத்தையன் | ஊரி | ஊகி |
| எளியவன் | எளியபரியலங்கள் | எளியபடை | என்னத்தை | என்னத்துக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| எவடம் | எங்கினை | எக்கச்சக்கம் | எங்கலான் | எங்காலை |
| ஏக்கிலாசி | ஏதடை | ஏமலாந்தி | ஏலாவாளி | ஏலாது |
| ஒறுத்துவாய் | ஒத்தாப்பு | ஒருக்கால் | ஒத்துமேவி | ஓசட்டை |
| ஓராவது | ஓலைவாரி | ஓலை | கஞ்சலி | கரப்பு |
| கண்டி | கரப்புக்குத்து | கஞ்சல்கறுப்பு | கடப்பு | கண்டாயம் |
| கண்டபாட்டுக்கு | கண்மண் | கிளைக்காலி | கிரந்தம் | கிழண்டி |
| கிழடன் | கிழடி | கீச்சிட்டான் | குஞ்சி | குஞ்சியாத்தை |
| குஞ்சியம்மா | குஞ்சுப்பிள்ளை | குடுக்கிறகுடுவை | கும்பம் | குஞ்சுப்பெட்டை |
| குஞ்சுகுருமன் | குஞ்சு | குத்தல் | குல்லம் | குறுக்காலை போவான் |
| குஞ்சியையா | குஞ்சியப்பா | குஞ்சுத்தம்பி | கூசா | கெதியா |
| கெப்பர் | கைமண்டை | கைவியளம் | கொய்யா | கொட்டைப்பெட்டி |
| கொப்பா | கொப்பர் | கொத்தான் | கொம்பர் | கொத்து |
| கொம்மான் | கொண்டோடி | கொழுவல் | கொதிகுடலன் | கொதியன் |
| கொன்னை | கொதி | கோதாரி | கோதாரிவிழுவான் | கோத்தை |
| சமசியம் | சருகுக்கை | சத்தார் | சாரிவாரி | சன்னி |
| சத்தகம் | சட்டாப்பாய் | சட்டம்பியார் | சாய்ப்பு | சாய் |
| சார்வு | சால்வை | சாக்கு | சாக்கன் | சாக்கி |
| சாட்டு | சாமான்கட்டு | சின்னன் | சின்னமேளம் | சிக்கு |
| சீலம்பாய் | சுறுக்கன் | சுறுக்கு | சுத்து | சுத்துமாத்து |
| சுணக்கம் | செக்கு | சேட்டை | சேங்கு | சேங்கன் |
| கொச்சம் | சொல்லுப்பறைச்சல் | சொல்லுவளிபறைவளி | சொத்தை | சோக்கு |
| தகடுகுடுக்கவேண்டும் | தலைமைவாத்தி | தட்டுவம் | தட்டுவம்காவி | தரவழி |
| தட்டுப்பெட்டி | தடுக்கு | தவண்டை | தவனம் | தாவரம் |
| தாலியக்கட்டு | தாலியறுப்பு | தாயம் | திண்ணை | திட்டை |
| தீபம் | துரவு | தூசி | தெத்தல் | தெல்லி |
| தேப்பன் | தேள்வை | தேட்டம் | தைலாய்ப்பெட்டி | தொக்கை |
| தொந்தரவு | தொளவாரம் | தொக்கடி | தொப்பிக்கட்டு | தொண்டையமுகி |
| தொண்டை | தோலங்குத்தி | தோது | நஞ்சுநசுக்கை | நட்டம்நயம் |
| நாசமறுப்பான் | நாசங்கட்டு | நித்தம் | நிதம் | நீத்துப்பெட்டி |
| நுகம் | நுள்ளு | நெட்டி | நெடுவால் | பத்திக்கொண்டு |
| நையாண்டி | நொன்னை | நொட்டை | நோஞ்சான் | பத்திக்கொண்டு |
| பஞ்சி | பச்சம் | பரியாரி | பன்னாங்கு | பணியாரம் |
| பாத்துப்பாராமை | பன்னைவடி | பிறந்தகூட்டுக்கை | பிசாண் | பினாட்டு |
| பிறத்தி பிரண்டு போவான் | பின்னை | பீலிப்பட்டை | பீலி | புசத்து |
| பூராயம் | பெரியையா | பெய்ஞ்சு | பெரியாத்தை | பெட்டை |
| பெரிசு | பெருப்பம் | பேயன் | பேய்க்குஞ்சு | பேந்து |
| பேச்சுக்கல் | பெட்டையன் | பெட்டி | பொக்கணை | பொன்னுகிராம்பெட்டி |
| போக்கன் | போடு | போச்சி | பௌத்திரம் | மதியம்திரும்பி |
| மணியகாரன் | மினக்கெடு | முசுப்பாத்தி | முடக்கு | முட்டி |
| முனியடிப்பான் | மூடல் | மூட்டம் | மூக்குப்பேணி | மூக்குமின்னி |
| மெய்யே | மெத்த | மைம்மல் | மொக்கன் | மோடன் |
| வல்லுவம் | வலவை | வக்கு | வாத்தி | வாரப்பாடு |
| விண்ணா | வில்லங்கம் | | | |

5) முடிவுரை

வட்டார வழக்கு சொற்கள் என்பவை அவ்வட்டாரத்தின் தனித்துவத்தை பேணுவது மட்டுமன்றி அதனது சமூக, பொருளாதார, கலாசார விழுமியங்களை வெளிக்காட்டி நிற்கும் முக்கிய சொற்களை ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறைக்கு இட்டுச்செல்லுவதன் மூலம் அவ் வட்டாரத்தின் பண்புகள் பற்றிய ஆய்வுகளையும் செம்மையான முறையில் முன்னெடுக்க முடியும். இந்த வகையிலேயே நமது கரவெட்டி வட்டாரத்திற்குரிய வழக்கிழந்து வரும் சொற்களை ஆவணப்படுத்துவதன் மூலம் அடுத்த தலைமுறைக்கு இட்டுச்செல்வது முக்கியமானதொரு கடப்பாடாகவேயுள்ளது.

## 1950ம் ஆண்டு தொடக்கம் மாணவர் தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1950 | 208 | 1972 | 340 | 1994 | 358 |
| 1951 | 218 | 1973 | 303 | 1995 | 281 |
| 1952 | 230 | 1974 | 294 | 1996 | 256 |
| 1953 | 220 | 1975 | 276 | 1997 | 236 |
| 1954 | 213 | 1976 | 272 | 1998 | 198 |
| 1955 | 234 | 1977 | 302 | 1999 | 196 |
| 1956 | 252 | 1978 | 380 | 2000 | 233 |
| 1957 | 220 | 1979 | 372 | 2001 | 251 |
| 1958 | 210 | 1980 | 402 | | |
| 1959 | 203 | 1981 | 404 | | |
| 1960 | 189 | 1982 | 435 | | |
| 1961 | 180 | 1983 | 485 | | |
| 1962 | 190 | 1984 | 495 | | |
| 1963 | 170 | 1985 | 508 | | |
| 1964 | 180 | 1986 | 538 | | |
| 1965 | 195 | 1987 | 538 | | |
| 1966 | 229 | 1988 | 541 | | |
| 1967 | 240 | 1989 | 535 | | |
| 1968 | 530 | 1990 | 525 | | |
| 1969 | 565 | 1991 | 515 | | |
| 1970 | 570 | 1992 | 457 | | |
| 1971 | 542 | 1993 | 387 | | |

# தெய்வீகக் கலைக்கோயில்

# நீருவாழி

செஞ்சாலி யினம்வானம் தவித்து நோக்கச்
செல்லினங்கள் நெகிழ்ந்து மழை பொழிந்த பாங்கில்
துஞ்சாமல் துஞ்சியிளஞ் சிறார்கள் கல்விச்
சூழலின்றி வாடிவதங் கியகாலத்தே
நெஞ்சார்ந்த வண்மையுடன் ஆண்க ளுக்கும்
நீலமயிற் சாயலிள மகளிருக்கும்
தஞ்சார்புப் படிசமயந் தமிழ்கற் றோங்கத்
தாபிதஞ்செய் தனர்கழனிக் கரவை மேலோர். 1.

அனமளித்தும் தனமளித்தும் நல்கூர்ந் தாரை
ஆதரிக்கும் உதாரகுண இதயங் கொண்டார்
பனையெனுங்கற் பகம்பயனைப் பிறர்க்கே ஈயும்
பண்பினிலே தன்முதுசொ மூலங்கொண்டு
வினையுடமை அறிவுநலம் உயர்கு றிக்கோள்
மேவப்பெற் றுயர்தருமம் வித்யா தானம்
எனவுணர்ந்த வேள்நல்ல தம்பி நாமன்
இதயசுத்தி யுடன்நின்னை நிறுவி னானால். 2.

தச்சைச்சிந் தாமணிவேள் அருட்கடாட்சம்
சந்ததமுங் கிடைக்கவென அயலி லேசா
யுச்சநிலை பெற்றதிரு வாத வூரர்
ஒளிர்நாமம் பள்ளிக்கு மகிழச் சூட்டிக்
கச்சிதமாய் நிருவகிக்கும் பணியைச் சால்பு
கனிந்தசிற்றம் பலமணிய மிடத்தேயுய்க்க
இச்சகத்து வித்தியா விநோத ரெல்லாம்
இறும்பூதெய் தப்பேணி வளர்க்க வாழ்ந்தாய். 3

புதுப்பெயலின் வரவுகண்டு விளைநிலங்கள்
பூரித்த வகையினில்மா ணாக்கர் சைவ
நதிப்பெருக்காம் கலைப்பிரவா கத்தின் மூழ்கி
ஞானவமு துட்கொண்டு நாளோர் வண்ணம்
விதியொழுக்கம் வழுவாநல் லாசான் மார்தம்
வித்தையெனுங் குன்றுதரும் அருவி மூழ்கி
மதிவளர்ச்சி போலறிவு முதிர்ச்சி மேவி
மனிதகுலம் வியக்கவுயர்ந் தார்நின் சீரால். 4.

பொதிகைமலை யுறுகுறுமா முனியை நேரும்
போதமிகும் அறுமுகநா வலர்பி ரானின்
துதிபெறுமா ணவர்மரபில் வந்து தித்த
துகளறுகேள் விச்சைவப் புலவ னான
மதியணிசெஞ் சடைப்பெருமான் மலர்த்தா ளென்றும்
மறவாத பொன்னம்ப லப்பே ராசான்
முதலபெருங் கணக்காயர் சேவை தன்னால்
முழுமதிபோல் பிரபையுடன் திகழ நின்றாய் 5.

வளமருவு தச்சைச்சிந் தாம ணிப்பேர்
வள்ளல்பிள் ளைத்தமிழ்முத் தள்ளி வீசும்
எழிலலைவாய் இலகுசெந்திற் பதியில் மேவும்
இளமுருகன் மணிமாலைத் தமிழ்ப்பா கந்தக்
குழற்குறமின் மணவாளன் சந்நி திக்கோர்
குமரன்பால் மான்விடுதூ தொன்றும் செய்த
இளம்புலவன் பண்டிதமா மணிக்கோர் தோழன்
ஏந்தல்சின் னத்தம்பி இதயம் வாழ்ந்தாய். 6.

ஈடில்லாப் புலமையாளன் இலக்க ணத்தும்
இறையனார் அகப்பொருள்தொல் காப்பியத்தும்
நாடறிந்த வியற்கவிஞன் தமிழ கத்தே
நகர்தஞ்சைக் கழகத்தும் ஆய்வு செய்தோன்
பீடுறுசெந் தமிழ்வளர்க்கும் விருப்பில் வாணிப்
பேர்விளங்கு கழகமமைத் திட்ட சான்றோன்
நீடுபுகழ்ப் பண்டிதன்வீ ரகத்தித் தோன்றல்
நின்னிலத்தில் வளர்ந்தசெழுந் தமிழாஞ் சாலி. 7.

இச்சகம்போற் றுங்கந்த புராணத் துள்ள
எழில்யுத்த காண்டத்துக் குரையுங் கண்டோன்
தச்சைச்சி லேடைவெண்பா செவ்வனே வைகும்
தனிசெந்தூர்ச் சிலேடைவெண்பா தந்தான் என்றே
நிச்சைமலர் பண்டிதமா மணியி னாலே
வியக்குசிலே டைக்கவிமா மணிப்பேர் பெற்றோன்
மெச்சுமணி வாசகனார் வாழ்க்கை யாய்ந்த
வேள்கணப திப்பிள்ளை தனையுந் தந்தாய். 8.

முச்சங்கத் தமிழில்நா டகம்ந வீனம்
மொழியாய்வொப் பியல்கவிதை விழுப்பங் காணல்
பச்சிளம்பா லகர்முதல்பா வலரீ றாகப்
பயனுகரும் வகைபழகு தமிழ்ப டைக்கும்
கச்சிதவிற் பனன்பன்னூல் படைத்தோன் யாழ்பல்
கலைக்கழகத் தமிழ்ப்பேரா சிரிய னாய்
மெச்சதுல அறிவுநிறை சிவத்தம் பிப்பேர்
விபுலனுவப் புறவணைத்து வித்தை யீந்தாய். 9

வித்வசனர் புகழ்வித்வான் நடரா சப்பேர்
வேந்தனோடே ஆசிரியப் பயிற்சி மன்றில்
உத்தமமாம் விரிவுரைகள் தந்த நம்பி
ஓங்குபுகழ்க் கந்தப்புத் தோன்றல் மேலும்
புத்தமுதக் கவிபடைத்த தலைமை ஆசான்
புனிதன்வேற் பிள்ளையெனும் மைந்தர் தாமும்
நித்தியமும் நின்மடியில் தவழ்ந்து வந்தே
நீடுபுகழ் படைத்துயர்ந்த செல்வர் தாமே. 10.

ஆசுமது ரஞ்சரம மிறையென் றின்ன
அனைத்துவகைப் பாவினமும் பாட வல்லான்
பேசுகையிற் சொல்லுக்குச் சொல்சி லேடை
பிறங்குநகை அங்கதங்கள் மிளிரப் பேசும்
வாசியுடை யானெந்த விடத்துங் கம்பன்
வரகவிபா ரதிபாவின் வேந்தன் என்னும்
தேசுடைய கவிர்களின் சிறப்பே பேசும்
சீர்த்தியினான் மன்னவனும் நின்றன் சேயே. 11.

அங்கிலப்போ தனைப்பகுதிக் கமைந்த கல்வி
அதிகாரி யாய்மன்னார் முதல னேக
துங்கமுறு மாவட்டங் களிலே சேவை
துலக்குகலா நிதிசின்னத் தம்பி மேலும்
பங்கமில்சீர் நுண்கணித வாசா னாகிப்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பேணும்
திங்களொளி பொங்குசிதம் பரப்பிள் ளைச்சேய்
தெவிட்டாத நினைக்கலைப்பால் பருகி னோரே. 12.

இன்னபல நல்லறிஞர் போல வின்னும்
எத்தனையோ மூதறிஞர் தந்த அன்னாய்
தன்னுதுறை களிற்சேவை யாற்ற வல்ல
தொழிற் கலைகள் வல்லுநராய்த் துலங்கற் கேற்ற
பன்னரிய சிறார்க்குமுத நிலையில் வேண்டும்
பாடறிந்து கற்குமுறை முறையாய் நல்கி
என்னிலைய லுங்கலங்கா அறிவு மோர்ப்பும்
இயல்வகையில் மாணவர்க்கேற் றம்வ குத்தாய். 13.

ஆண்களெழிற் பள்ளியெனும் பெயருக் கேற்ப
ஆண்மையுடன் ஆள்வினையு முடைய ராகித்
தூண்போலும் தோள்வலியும் சமூகம் நாடும்
சுடரறிவும் சால்பொழுக்கும் துலங்கும் வண்ணம்
மாண்புடைய கரவையுளார் மலர என்றும்
வற்றாத தமிழமுத சுரபி யாகச்
சேண்புகழார் மாணிக்க வாச கப்போர்த்
தெய்வீகக் கலைக்கோயில் நீடு வாழி. 14.

**பிள்ளைக்கவி.**

## 26-05-2002 அன்று
## நூற்றாண்டு நிறைவு மண்டபத் திறப்பு விழாவுக்கு
## முன்னாள் அதிபர்
## பொ. பாலச்சந்திரன் அவர்கள் அனுப்பிய செய்தி

மாணிக்கவாசகர் இன்று நூற்றாண்டு நிறைவு மண்டபம் திறப்பு விழாவை கொண்டாடும் நல் நாளிலே அதன் நிலைமையை யான் பின் நோக்கிப் பார்க்கின்றேன். 1958ஆம் ஆண்டு நான் ஆசிரியராக கால் பதித்த போது மேற்குப் புறத்திலே இரண்டு பழைய கட்டடம். அதன் தெற்குப்புறத்தே தெருவோடு ஒட்டிய ஓர் ஓலைக் கொட்டில். அதுதான் தலைமை ஆசிரியருடைய அலுவலகமும் பாடசாலை ஆவணவைப்பிடமும் இதைச் சுற்றி பனம் சலாகை அடிக்கப் பட்டிருந்தது. திரு. வ. சின்னையா தலைமையாசிரியர் இப்போதும் இருக் கிற்றார். அந்தக் கொட்டிலில் நல்ல பொலிவோடும் திருநீற்றுப் பட்டைப் பூச் சோடும் பூவோடும் பொட்டோடும் அமர்ந்திருப்பார். அவரொடு இணைந்து சைவப் பண்பாட்டையும் தமிழையும் வளர்த்த காலஞ்சென்ற திரு. வை. சின்னத்தம்பி திரு. சி. செல்லையா ஆசிரியர்களையும் நாம் மறக்க முடியாது. பல ஆண்டுகளாக 25 வருடங்களுக்கு மேல் அறிவொளி பரப்பியவர்கள், இவர்களை கரவெட்டி மக்கள் நன்கு அறிவர். எத்தனையோ புத்தி ஜீவிகளை உருவாக்கிய மாணிக்கவாசகர் எனது காலத்திலே கிழக்குப்புறமாக மேலும் இரு கட்டடங் களைப் பெற்றது. இப்போது நூற் றாண்டு மண்டபத்தையும் பெற்றுப் பொலிவுற்றிருப்பதைக் காணும்போது எனது மனம் பூரிப்படைகிறது. உளமார மகிழ்கின்றேன் இதன் வளர்ச்சிக்கு தச்சை விநாயகரின் ஆசியும் உண்டு. ஏனெனில் இரு ஆலயங்களும் சமகாலத்தில் வளர்ச்சி பெற்றிருப்பதை நாம் காண்கின்றோம். களிக்கின்றோம். இதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற பழைய மாணவர்கள் ஆசிரியர் கள் அதிபர்கள் கல்விக்கந்தோர் உத்தி யோகத்தவர்கள் ஆகியோரை நான் அறிவேன். அவர்களை பாராட்டு கின்றேன். தானங்களில் சிறந்தது வித்தியாதானம் என்பார்கள். அவர்கள் செய்த பணிக்கு அவர்களுக்கு நற் பயன் கிடைக்கும் இதில் ஐயம் இல்லை. மாணிக்கவாசகர் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் இவ்வாண்டிலே நாம் எல்லோரும் அதனோடு இணைந்து வாழ்த்து வோமாக.

நன்றி
வணக்கம்

## நூற்றாண்டு நிறைவு மண்டப நிகழ்வுகள்



அடிக்கல் நாட்டுவிழா



அடிக்கல் நாட்டுவிழா



திறப்பு விழா நிகழ்வு



திறப்பு விழா நிகழ்வு



திறப்பு விழா நிகழ்வு



வலய கல்விப் பணிப்பாளர் திறந்து வைக்கிறார்




பாடசாலை வளைவை திறந்து வைத்த பின்



திறப்பு விழாவில் வரவேற்பு



கட்டடகலைஞருக்கு பொன்னாடை போர்த்தல்

## நூற்றாண்டு நினைவு மண்டபத் திறப்பு விழாவில் விருந்தினர்களுடன் ஆசிரியர் குழாம்.



இருப்பவர்கள் (இ—வ):— திரு.வே.குணசிங்கம் (செயளாலர்), திரு.த.சிதம்பரப்பிள்ளை (தலைவர், க.நெ. ப.நோ.கூ.ச.), திரு.த.இரவீந்திரதாஸ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), திரு.வே.தி.செல்வரட்ணம் (வலயக்கல்விப் பணிப்பாளர்), திரு.சி.சிவராஜா (மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்), திரு.செ.ஸ்ரீனிவாசன் (பிரதேச செயலர்), திரு.க.அம்பலவாணர் (கோட்டக்கல்வி அதிகாரி), திரு.இ.இராகவன் (அதிபர்)

நிற்பவர்கள் (இ—வ):— திரு.மு.இரத்தினசிங்கம் (கூரைவேலை), திருமதி.ரே.யோகலிங்கம், செல்வி.ஆ.கந்தசாமி, செல்வி.ம.சண்முகநாதன், செல்வி.ந.சாந்தினி, திருமதி.பு.சேகர், செல்வி.வி.சுப்பிரமணியம், திருமதி.சு.மகேஸ்வரன், திருமதி.ஜெ.தேவநேசன், திருமதி.மா.துரைசிங்கம், திரு.எஸ்.சீவரெத்தினம் (தலைமைக் கொத்தனார்), திரு.சீ.ஜீவன் (கொத்தனார்).

05-06-2002 அமரரான கரவைப் புதல்வன் சிவா மறைவுக்கு எமது பழைய மாணவர் பேராசிரியர் வரைந்த மடல்

# சிவசிதம்பரம் அவர்களுக்கு

இந்தியாவிலிருந்து திரும்பி வந்து போன் செய்கிறேன் என்ற உங்கள் சிவத்தம்பி எழுதுகிறேன்.

நீங்கள் எதிர்பார்த்தேயிராத, ஆனால், பெரிதும் விரும்பிய சூழலில் உங்கள் இறுதிப் பயணம் நடக்கிறது.

அண்ணா எனவா, சேர் எனவா, இரண்டுமே சொல்லியிருக்கிறேன். ஆனால் பெரும்பாலும் தோன்றா எழுவாய் தான்.

நீங்கள் விரும்பியபடியே நடக்கிறது. சோனப்புவில் எரிய வேண்டும். அந்த அத்துவான வெளியில், காலம் சிதைக்காத கம்பீரத்துடன் நிற்கும் ஆலமரங்களுக்கு கீழே அந்த மண்ணோடு, மண்ணின் துகளோடு வயல் வெளியிலிருந்து வரும் காற்றோடு....

இந்த விருப்பம் கரவெட்டியில் பிறந்து அந்த மண்ணை நேசிக்கும் எல்லோருமே அடிமனதில் தேக்கி வைப்பதுதான்.

கொள்ளி வைத்து முடிய மௌனமாக நடந்து போய் முருகையன் கோவில் குளத்தில் தோய்ந்து குளித்துவிட்டு, இறந்தவரைப் பற்றிப் பேசிக் கொண்டே தத்தம் வீட்டுப் படலைகளைத் திறக்கின்ற அந்த பாரம்பரியம் இறந்த பின்னரும் கூட நாங்கள் தவறவிட விரும்பாத பாரம்பரியம்.

ஆனால், நீங்களொரு சராசரிக் கரவெட்டியானா? அப்படி நினைக்கவே மனம் கூசுகிறது. நீங்கள் கரவெட்டி வழியாக ஈழத்திற்கு, தமிழ் உலகிற்கு கிடைத்த ஒரு பெரும் சொத்து.

இந்த ஞாயிறு தமிழ் பேசும் உலகத்தின் கண்கள் சோனப்பை நோக்கி திரும்பு கின்றன. நீங்கள் இந்த நாட்டின் தலைவர் களில் ஒருவர். தமிழ்த் தலைவர்களில் ஒருவர். கரவெட்டி செய்ததெல்லாம் உங்களைத் தயாரித்து உடுப்பிட்டிக்கு அளித்ததுதான்.

பின்னர் உடுப்பிட்டியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு உலகின் கவனத்தை ஈர்த்து தமிழ்க் குறைகள் பற்றிய குரலை எழுப்பி அந்தக் குரலோடு இலங்கையின் வரலாற்றில் நீங்கள் பதிவானீர்கள்.

கரவெட்டியின் இந்த அளிக்கை இலை மறைகாயான ஒன்றில்லையே...

கரவெட்டி சித்தமணியத்தின் (சிற்றம்பல முதலியார்) பேரன், முருகேசு உடையாரின் மகன், பொன்னையா மணியத்தின் தாய்வழிப்

பேரன். இது ஒரு சிறிய 'பிதுரார்ஜிதம்' அல்ல.

நில மானியத்தின் காவலர்களாக இருக்கவேண்டிய உங்கள் பேரனும் தந்தையாரும் காட்டிய நெகிழ்வுகள் மறக்கக் கூடியவை அல்ல. சித்தமணியம் இல்லாவிட்டால் தேவரையாளிச் சூரனுக்கு பாடசாலை கட்டுகிற துணிவே வந்திராது.

சாதி இறுக்கம் கொண்ட கரவெட்டியினூடே உடையாரின் நெஞ்சுரம் ஒரு மௌன சமூக புரட்சியையே உருவாக்கியது.

தாராண்மை வாதம் உங்கள் இரத்தத்தில் ஓடியது. அதனால் தான் உங்கள் அரசியலின் ஆரம்பம் இடதுசாரித் தன்மையுடன் இருந்தது. அது வெறும் சம்பிரதாயமானதல்ல. சண்முகதாசன் ஒரு தடவை உங்களுக்கு ஆபத்து ஏற்பட்ட போது தனது இளம் தோழர்களுக்கு இதுபற்றி கூறியிருக்கிறார்.

தேர்தல் அரசியலில் எப்பொழுதுமே கொள்கை/ஆள்நிலை அசௌகரியங்கள் ஏற்படுவது வழக்கம். நீங்கள் கூட அதிலிருந்து தப்பவில்லை. ஆனால் காங்கிரஸிலிருந்து நீங்கள் தமிழர் கூட்டணி வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்ட பின்னர் மாறவேயில்லை.

1970-77 காலம் உங்களுக்கும், அமிர்தலிங்கத்திற்கும் தமிழ் இளைஞர்களுக்கும் நெருக்கடியான காலம். பாதி, கொழும்பு பாதி, யாழ்ப்பாணம், பாதி மட்டக்களப்பு என்றிருந்த அரசியல் தலைமை வடக்கு, கிழக்கின் மண்ணிற்கே வந்தது. இராஜதுரையின் பாதை சிக்கற்பட நீங்களும் அமிர்தலிங்கமும் சக தலைவர்கள் ஆனீர்கள். அந்தக் கட்டத்தில் தான் உங்கள் அரசியல் தியாகங்கள் ஆரம்பமாயின.

தமிழ்த் தலைமையின் ஒருமைப்பாட்டிற்காக உங்கள் விட்டுக் கொடுப்புகள் அநேகம். பலர் இதை உங்கள் பலவீனம் என்றார்கள். நன்கு தெரிந்தவர்கள் நேரிற் கூட சொன்னார்கள்.

பலவீனம் தான். தன்னை முனைப்புப்படுத்தாத பலவீனம், தமிழ் ஒருமையைக் காட்டிக் கொடுக்காத பலவீனம்.

உங்களிடம் ஒரு மகோன்னதம் இருந்தது. பொது அரங்குகளில் நியாயத்தை எடுத்துக் கூறுவதில் இணையற்ற சாதுரியமும் அதிர்வுறும் குரல் வளமும் கொண்ட நீங்கள், அரைவாக்கியங்களோடும், உதட்டுப் புன்னகையோடும் எத்தனை பேரை மன்னித்திருக்கிறீர்கள். எத்தனை பேருக்கு விட்டுக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் தமிழர் ஒருமைக்கு ஒரு விட்டுக் கொடுப்பும் ஏற்படவில்லை. அதில் மிக கவனமாக இருந்திருக்கிறீர்கள்.

'பெயக்கண்டும் நஞ்சுண்டு அமையும்' உங்கள் ஆள்நிலை நாக

ரிகம் வார்த்தைகளுள் அடங்காது. வரலாறு மறக்காது.

நீங்கள் ஆசையில்லாதவர், எதிலும் மோகமில்லாதவர். அது ஒவ்வொரு நாளும் நீங்கள், உங்களுக் கென வைத்துக் கொண்டிருந்த காலை வழிபாட்டின் வழிவந்த மனத்திடம். மனத்திட்பம் என்றே கருதுகிறேன்.

பெருமை என்பது மற்றவர் களுக்கு இருந்தது போல், உங்களுக்கு நீங்கள் காட்டிக் கொள்ள வேண்டிய தொன்றாக இருக்கவில்லை. உங்கள் குடும்ப வழியால் வந்தது. சொல்லாண்மையால் வந்தது. தொழிற் சிறப்பால் வந்தது. அது உங்களிடம் குடிகொண்டிருந்தது. நீங்கள்தான் அதை விரட்டி விரட்டிக் கொண்டிருந் தீர்கள்.

அரசியலுக்கு வந்தால் மற்றவர் களுக்கு சொத்து சுகம் சேரும். அவர்களும் சேர்ப்பார்கள். தலைமுறை தலைமுறைக்கு சேர்ப்பார்கள்.

ஆனால் உங்கள் அரசியலோ, தலைமுறை தலைமுறையாய் இருந்த சொத்தை இழக்கச் செய்தது. உங் களுக்காக 'ஜே' போட்டவர்களே உங்கள் காணிகளை அடாவிலைக்கு வாங்கியது எங்களுக்குத் தெரியும். கொழும்பு வீடு போனதும், அதை நீங்கள் மீளக்கட்டவும் விரும்பவில்லை. உண்மையில் கட்டவும் முடியவில்லை. இந்த நேர்மை கண்டு நாங்கள் சிலிர்த்தோம்.

பலர் நம்பவேயில்லை. நீர் நிறைந்த தடாகம் போல சலன ஆர்ப்பரிப்புகள் எதுவுமில்லாமல் நீங்கள் சிரித்துக் கொண்டேயிருந்தீர்கள்.

இந்த வீரம் உங்களுக்கு எப்படி வந்தது? இந்தத் தன்மை உங்களிடம் எப்படி குடி கொண்டது? இந்த ஆசை யின்மை எங்கிருந்து ஊற்றெடுத்தன?

நீதியின் இருப்பிற்காகவும், நியாயத்தின் விஸ்தரிப்பிற்காகவும் நீங்கள் கொடுத்த குரலில் கம்பீரம் எங்கிருந்து வந்ததோ அங்கிருந்துதான் இந்த பணிவுடைமையும் வந்தது.

அரசியல் எடுத்துரைப்பில் காட்டிய விவேகத்தினுள்ளே தான் இந்த பாரிய அவை அடக்கமும் இருந்தது.

உடுப்பிட்டி முதல் நல்லூர் வரை யிலான பயணம் இருக்கிறதே, அது எழுதப்படும் போது தான் உங்கள் தியாக வரலாற்றின் உண்மைகள் வெளிவரும். இந்த ஊற்று அது எங்களின் ஊரினுடையது.

''பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே'' என்ற புறநானூற்று வரிகளை எங்கள் பெண்கள் 'சித்திரை யென்று சிறுப்பதுமில்லை, பங்குனி யென்று பருப்பதுமில்லை' என்று சிந்த னைச் சம தர்மத்தையே உருவாக்கி யுள்ளனர்.

'மரியாதை கேட்டுப் பெறப்படு வதில்லை, பார்த்துக் கொடுக்கப்படுவது'

என்ற தமிழ்ப் பண்பாட்டில் தோய்ந்து போயுள்ள எங்கள் கிராமம் தன் ஊற்றை உங்களிடம் பகிர்ந்து கொண்டது.

எங்கள் பாடசாலைகள் இதை எங்களுக்குச் சொல்லித் தந்தன. கரவெட்டியின் பெரும்பாலான பாடசாலைகள் உங்கள் குடும்பத்தவர் சம்பந்தமில்லாமல் தொடங்கவுமில்லை, நடக்கவுமில்லை.

நீங்கள் அந்த மண்ணின் மகன், தச்சன் தோட்டத்து வீதியும், வெல்லனின் வாசலும் உங்கள் கால்களை எதிர்பார்க்கின்றன. விக்னேஸ்வராக் கல்லூரியின் கேற்றும், அதிபர் கந்தோரின் கதவும் உங்களை வரவேற்பதற்காக காத்துக் கிடக்கின்றன. பெரிய தோட்டத்து வீடு உங்கள் மேனியின் கமழ்வை கேட்கிறது.

ஓய்வில் நீங்கள் காட்டிய உயர்வு தான் உங்களை மேலும் உழைப்பிற்காக அழைத்தது. இந்த உழைப்பு பூர்த்தியாக வேண்டிய நேரத்தில் நீங்கள் மீண்டும் ஒதுங்கிக் கொண்டு விட்டீர்கள். இதுதான் உங்கள் முத்திரைப் பண்பு.

எந்த வெற்றியையும் நீங்கள் உங்களது என்று கோரியதில்லை. அதனால் தான் அண்மைக்காலத்தில் 'நான் ஒரு தொண்டனே' என்று கூறினீர்கள்.

அண்ணா,

கரவெட்டி, தான் வெளியுலகிற்கு தந்த மிகப் பெருமையான மனிதர்களுள் ஒருவரை மீண்டும் வரவேற்கிறது.

நீங்கள் வெறுங்காலுடன் நடந்த வீதிப்படலைகளைத் தாண்டி உங்கள் உடல் சோனப்பிற்குக் கொண்டு செல்லப்பட்டு அந்த அனலில் கலக்குகின்ற போது நாங்கள்....

எனக்கு உண்மையில் தெரியவில்லை. எங்கள் சோகம் மிகப்பெரியது. அது உங்களை இழந்ததனால் மாத்திரமல்ல, உங்கள் பெருமையை சரிவர புரியாததினாலும் நெஞ்சு தலை தாழ்ந்து நிற்கிறது. **உங்களைப் போற்ற வேண்டிய வகையிலே போற்றவில்லை** என்பதுதாலும் நாங்கள் விக்கித்து நிற் கின்றோம்.

நாங்கள் எங்கள் கடமையைச் செய்யாமல் விட்ட வேளையில் கூட நீங்களோ இந்த மண்ணிலேயே கலக்க வேண்டுமென்கிறீர்கள். உங்களின் இந்த வருகை எங்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பு.

உங்கள் புகழ் - அது எங்கள் கிராமத்தின் நிரந்தர இருப்பாகிவிட்டது. நீங்கள் விளையாடிய தெருக்கள் , நீங்கள் படித்த பாடசாலை, நீங்கள் கையெடுத்த கோயில்கள் எல்லாம் உங்கள் பெயரைச் சொல்லும். மறக்காமல் சொல்லும், விடாமற் சொல்லும். இது சத்தியம்.

எல்லா வேளைகளிலும் அரசியல் வேற்றுமைகள் கூர்மையாக இருந்த காலங்களில் கூட புலமைப் ஷபணியை நீங்கள் தொடர்ந்து உற்சாகப்படுத்திய **உங்கள் சிவத்தம்பி.** எங்கள் ஊரின் குரலாகவும், நாங்கள் படித்த பாடசாலையின் குரலாகவும்.

அன்புடன் பாந்தவியத்துடன்

***உங்கள் சிவத்தம்பி***

நன்றி.

தினக்குரல்

# விழுமியம் - மறுவார்ப்பு பற்றிய சிந்தனை

*எம் சிறீபதி* BA. Hons
SLPS I SLEAS

பகுத்தறிவுக்கு உட்படாத கண்கெட்ட அதிநுகர்வு வாதம், பல்முனைப்பட்ட தொடர்பு ஊடகங்கள் ஆகியனவும் அரசியில் ரீதியான பல்வேறு மாற்றங்களும் 20ம் நூற்றாண்டின் பனிப்போருக்குக் காரணமாக இருந்த பெரும் வல்லரசுகளில் ஷோவியத் யூனியன் உடைந்து போயினமையும், தேசியத்தொழில் சாரா சர்வதேசத் தொழில் மயம் எமது தேசிய மரபுகளை உடைத்தெறிந்து பல பக்க விளைவுகளை உருவாக்கும் அணுகுண்டுகளாகச் செயற் படும் நெறியும், மனித குர வரலாற்றில் என்றும் இல்லாதவாறு மனிதன் வாழ்வாங்கு வாழும் முறையியல் பல தாக்கங்களை விளைவித் தன. இத்தாக்கங்களிலொன்று மனித விழுமியம் Value பெரும் சிக்கலுக்குகக் கேள்விக்குறிக்கு உரியதாகி விட்டது. முன்னவர்கள் பின்னவர்களைப் பார்த்து எல்லாமே போய்விட்டது என்ற தோரணையில் பேசுவதை நாம் அவதானிக்கலாம். இதில் உண்மை இல்லாமலும் இல்லை. 1990ம் ஆண்டு இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் 'விழுமியங்கள்' என்ற ஒரு அத்தியாயம் இடம்பெற்றுள்ளது. விழுமியங்கள் நெருக்கடிக்குள்ளாயுள்ளன என்பது அவர்களது துணிவு.

அவ் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அடுத்து இலங்கை கல்வியலாளர், சிந்தனையாளர் மத்தியில் விழுமியங்கள் சம்பந்தமான சிந்தனைகள் பலமாக உருப்பெற்றன என்பது உண்மை. விழுமியக் கல்வி விழுமியத்தை மாணவர் மத்தியில் சிறப்புற அமைக்க வேண்டும் என்பதற்காக வாழ்க்கைத் தகமை என்ற பாடம் இலக்கியம், வரலாறு, சமயம் ஆகியனவற்றுக்கு மேலதிகமாக கலைத்திட்டத்திலே புகுத்தப்பட்டமையை பலரும் அறிவர்.

பல்கலைக்கழக மட்டங்களிலும், சிந்தனையாளர் மட்டத்திலும் விழுமியம் பற்றிய நோக்குகள் ஆய்வு, 'கேள்வி' பாணியில் உருவாகத் தொடங்கின. விழுமியம் சம்பந்தமான சிந்தனை இன்று எம்மவர் மத்தியில் உருவாகி உள்ளது என்பது ஐயமில்லை.

விழுமியம் என்றால் என்ன? அதன் பண்புகள் எவ்வகையானவை? அவற்றை எவ்வகையில் வகைப்படுத்தலாம்? இன்றும், நாளையும் உருவாகிய உருவாகுகின்ற இளம் சமுதா யத்தினர் எவற்றைக் கூடுதலாகப் பின்பற்ற வேண்டும் என்பன பற்றிய கருத்துக்களை முன் மொழிவதே இச்சிறு சிந்தனை ஓட்டத்தின் நோக்கங்களாகும்.

விழுமியம் என்ற தமிழ்ச்சொல் மிகவும் அறுதியான ஒரு சொல்லாகும். இச்சொற்குரிய பொருள் மிகுந்த கட்டுத்திட்பம் உடையது போல் காணப்படுகிறது. இச்சொல்லின் அடிச்சொல் 'வீழ்' இதிலிருந்து விழுப்பம், விழுமம் போன்ற சொற்கள் தமிழிலே பயன்பட்டு வருகிறது. விழுமம் என்பது துன்பம் என்ற பொருளையும், விழுப்பம் என்பது உயர்வு என்ற பொருளையும் தருகின்றன.

மனித துன்பங்களை நீக்குகின்ற உயர்வான நடத்தைகளின் தொகுப்பே விழுமியம் என மேலெழுந்த வாரியாக வரையறுக்கலாம். விழுமியம் என்ற தமிழ்ச்சொல்லுக்கு நிகரானசொல் அச்சொல்லேயாகும். கம்பன் உயர்வுடைய மனிதனை விழுமியன் எனக் குறித்துச்செல்வது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலத்தில் Value என்பதற்கு ஒத்த நிலையில் அமையும் பல சொற்கள் உள்ளன. Moral, Ethics, Standards, Norms ஆகியன இவ்வழிவரும் சொற்கள். தமிழிலும் தார்மீகம், நியமம், நெறிமுறைகள் எனச்சொற்கள் வழக்காற்றில் உள்ளன. எனினும் விழுமியம் என்ற சொல் தரும் உயர்ந்த ஒரு நிலையினை இச்சொற்கள் தருவதில்லை.

'இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையும் நீதி நெறி கடவான்'

என்ற கல்வியிற் பெரியன் கம்பனது பாடலடிகளை நின்று நிதானித்து நோக்கின் விழுப்பம்பொருந்திய சொற்கள் யாவும் விழுமியம் என்ற சொல்லுக்குள் அடக்கம் பெற்று விடுகின்றமை தெளிவு.

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்'

என்றார் வள்ளுவர். இவ்வழி நோக்கும்போது விழுமியம் என்ற உணர்வு மனப்பாங்கு சார்ந்த ஒரு விடயம் என்பது தெளிவாகிறது. மனப்பாங்கில் ஏற்படும் அதிசிறந்த உயர் நிலையே விழுமியம் ஆகும்.

அறிவு, திறன், உணர்ச்சி ஆகியனவற்றை மிகுந்த கட்டுப்பாட்டோடு பயிற்சிக்குள் கொண்டு வரும் அதி உன்னதமான உழைப்பின் பெறுபேறாக வடிந்து, உறைந்து, மிளிர்ந்து காணப்படும் இயல்பே விழுமியம் ஆகும். மனிதன் தன்சக மனிதனுள் தொடர்பு கொள்ளும் பொழுதான் சமுதாய வாழ்வு மலர்கின்றது. மனிதனது செயல்கள் மற்றைய மனிதர்களுடன் ஆரம்பமாகும் போதுதான் விழுமியம் உருவாகின்றது. 'தேவைகள் இன்றி வாழ்பவன் ஒரு விலங்காகவோ அல்லது தெய்வமாகவோ மதிக்கப்படுவான்' என்ற அரிஸ்டாட்டில் கூற்று இவ்விடத்து சற்று நிதானித்து சிந்திக்கத்தக்கது.

சுருங்கச்சொல்லின் வாழ்வின் நோக்கங்களை நன்குணர்ந்து அதனைச் செம்மையாகக் கடைப்பிடித்து வாழும் ஒழுங்கு முறையின் தொகுதி தான் விழுமியம்.

வள்ளுவன்,

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்'

என்று குறிப்பிட்ட சாராம்சத்தின் அடிப்படை தான் விழுமி யத்தின் பண்பும் பயனும் எனலாம்.

விழுமியம் என்ற கருத்தை நாம் வரலாற்று ரீதியாக ஆராய்வதை விட தத்துவ ரீதியாக மேற்கண்டவாறு வரையறை செய்வது இலகுவான காரியமாகும். ஏனென்றால் வரலாற்று ரீதியாக இச்சொல்லின் அர்த்தங்களை விளங்கிக் கொள்ள முற்படும்போது தவிர்க்க முடியாதபடி நாம் இலக்கியங்களை சென்று சேர வேண்டிய அவசியம் காணப்படுகிறது.

குறிப்பாகத் தமிழ் இலக்கியத்தினை எடுத்துக்கொண்டால் தமிழ் இலக்கியத்தின் காலம் தெளிவான விமர்சன பூர்வமான நெறியிலே வரலாற்று எழுதியல் அடிப்படையில் எழுதப்பட்டது எனக் கூற முடியாது.

தமிழ் இலக்கிய காலங்களை வரையறை செய்வதில் தமிழ் அறிஞர் மத்தியில் பலத்த கருத்து வேறுபாடுகள் உள்ளமையை யாவரும் அறிவார்கள். குறிப்பாகத் திருக்குறள் எந்தக்காலத்திற்குரிய நூல் என்பதை பாகுபடுத்துவதில் அறிஞர் இடையேயுள்ள கருத்து வேறுபாடு கிட்டத்தட்ட 1000ஆண்டு கொண்டதாகக் காணப்படுகிறது. தொன்மைவாதம், கற்பனாவாதம், ஐதீகவாதம் ஆகியன எம் இலக்கிய வரலாற்றினை அல்லல் உறுத்துகின்றன. பகுத்தறிவு, விஞ்ஞான ஆராயும் என்பன விடுபட்டுப் போகின்றன என்பது கவனிக்கப்படத்தக்கன.

இந்நிலையில் அத்தகைய இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு விழுமியம் பற்றிய தோற்றத்தையும் அதற்குரிய கால ஓட்டத்தினையும் சிந்திப்பது விரும்பத்தக்க விடயமல்ல. அதனாலேதான் வரலாற்று ரீதியாக ஆராய்வதை விட அர்த்தங்கள் ரீதியாக அதனை ஆராய்வது பொருத்தமாக இருக்கும்.

கல்வியின் பயன்பாடு பற்றி எண்ணுகின்றபோது பலரும் வலியுறுத்துகின்ற மிக முக்கியமான விடயம் நல்ல பிரஜையாக நேர்க்கணியக் கற்பனையோடு கூடிய மனிதனாக சிறந்த விழுமியங்களைக் கொண்ட உலக மனிதனாக வாழ வேண்டும் என்பதாகும்.

இந்த விழுமியங்களை உருவாக்குவதுதான் கல்வியின் பிரதான இலக்கு ஆகும். எல்லாவகைத் தத்துவங்களுக்கும் கல்வியே ஆதாரமாக விளங்குவது போல கல்வியின் உறுதுணையாக இருப்பது விழுமியம் ஆகும்.

நல்ல மனிதப் பண்புகளை இயல்பாக வளர்த்தல்; அப்பண்புகள் பகுத்தறிவுக்கும் விஞ்ஞானத்திற்கும் ஏற்புடையதாக அமைதல், மனித குல முன்னேற்றத்திற்கு உறுதுணையாக அமையும் தார்மீகக் கொள்கையை தாரக மந்திரமாகக் கொள்ளல் ஆகியனவற்றை உள்ளீடாகக் கொண்ட விழுமியம் வகையறாக்களாக கொள்ளப்பட்டு வகுக்கப்படுவதும் உண்டு. இப்பாகுபாடு வசதி கருதி ஆற்றப்படுவது போலத் தெரிகின்றது.

ஆன்மீகம் அரசியல், பொருளாதாரம், கலை பண்பாடு, அறிவியல், அறவியல் என அமைவதும் உண்டு. ஆசிரியத்துவம், மருத்துவம் என வாண்மைத்துவ பகுப்புக்கள் நோக்கி உருவாக்கிக் கொள்ளும் முறையும் உண்டு. நடத்தைக்கோவைகள் தொழில் தர்மம் என்பன போன்ற சொற்கோலங்களால் இவை சுட்டப்படுவதும் உண்டு.

தனிமனித வாழ்வு குடும்பவாழ்வு சமுதாய வாழ்வு, நாட்டு வாழ்வு, உலக வாழ்வு என வாழ்வின் வளர்வு நிலை கருதி சீர்மையான முன்னேற்றம் எண்ணி அவற்றின் அடிப்படையிலே பகுப்புக்கள் ஆகலாம்.

அன்பு, பணிவு, தர்மம், அர்ப்பணிப்பு, சாந்தம் போன்ற நெறியிலே நேர்க்கணிய விழுமியங்களாகவும் அறியப்படலாம். வன்சொல், பொறாமை, வன்முறை, அழிப்பு என எதிர்கணிய விழுமியங்களாகவும் தரப்படலாம்.

விழுமியங்களின் வகைப்படுகள் பற்றி சிந்திக்கப்படுவது ஆய்வு நிலைக்கு உகந்ததே. அது போலவே அதன் இயல்புகளும் துணியப்படுவதும் பகுப்பியலாளர்களின் கடமையாக நேர்வதும் உண்டு. அன்பு, நீதி, தர்மம், அருள், கருணை, சகோதரத்துவம், நேர்மை, மனச்சாட்சி, வாக்குச் சுத்தம், உரிமை, நாட்டம், அறியாமை அகற்றல் என மனித இயல்புகளில் நிலைகளைச் சுட்டுவர்.

உண்மை, நன்மை, அழகு என்ற முப்பெரும் குணக்குன்றுகளுக்கும் அவை அடங்கிப் போவதாக வாதிடுவோரும் உளர்.

விழுமியத்தின் வகை, இயல்பு என்பன பற்றி ஆய்வாளர் கூறிக்கொண்டாலும் விழுமியம் மாறும் இயல்பு உடையது என்பதும் கவனிக்கத்தக்கது. சமூக வாழ்வே சமூக உணர்வுக்கு அடிப்படை, சமூக உணர்வே ஆன்மீக சித்தாந்த கலாசார வாழ்வு, மதநம்பிக்கை, அரசியல், அறவியல், அறிவியல் யாவற்றுக்கும் ஊற்றுக்கண். மனிதனது இருப்பு மாறும் பொழுது சமுதாய

உணர்வு மாற்றம் உறும். ஆதலால் விழுமியத் தன்மையும் மாற்றம் அடையும் என்க. ஆதலால் விழுமியம் காலங்களில் சார்பு நிலையிலேதான் தங்கியுள்ளது.

முந்திய வடிவங்களை மறுக்காத வளர்ச்சி எந்தத் துறையிலும் ஏற்பட முடியாது என்பது சமூக உடைமைவாத மாதிரியின் அடிப்படை எடுகோள் என்பதை யாவரும் அறிவர். "பொய்மையும் வாய்மையிடத்து" என்ற பொதுமறை வாசகம் நினைந்து நோக்கத்தக்கது.

அரசியலே அடக்குமுறை தோன்ற, அதிருப்பதி, நம்பிக்கை, வறட்சி முடியாத சோகம் முளைவிடும். இவை நடைமுறையிலே அநுட்டானம் பெற்ற விழுமிய முறைகளை தலைகீழ் நிலைக்கு மாற்றி விடும். புதிய விழுமியங்கள் பழைய விழுமியங்களுக்குப் புதிய அர்த்தப்பரிமானங்கள் ஆகியன வழங்கப்படும். அடக்குமுறை, மனித உரிமைப்பறிப்பு விழுமியங்களுக்கு எதிரான நச்சுக்கொல்லிகள்.

நம்பிவந்த விழுமியங்களால் காணாமல் போய்விட்டன. விழித்திருக்கும் போதே எமது விழிகள் விட்ட அவல நிலை. விழுமியங்கள் அற்ற வெறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்ட கொடூரநிலை. மனிதனது உள் உறுப்புக்கள் அவனுக்குத் தெரியாது கொள்ளையடிக்கப்படும் கொடூரமான முறையிலே மருத்துவ தர்மம் தொலைந்து போயிற்று. இவற்றுக்கு எவை காரணம் ஆயின.

பாடசாலையிலே குழந்தைகள் கவனிக்கப்படாது போன துன்பநிலை பாடங்கள் கற்றல் அனுபவங்களாக மாற்றப்படாது திணிக்கப்படும் துயர நிலை. சான்றிதழ் கல்வி கொடூர போட்டிக்கல்வி ஆகியன கல்வியின் ஆதார சுருதிகளை அழித்து விட்ட துயரநிலை.

ஜனநாயகத்தின் சிறந்த குறிகாட்டியான தேர்தல் காலங்களிலே இடம்பெறும் வன்முறை, கள்ளவாக்கு, வாக்களிக்க மறுக்கப்படுதல், மனிதனின் சாராம்சத்தை குழிதோண்டிப் புதைத்து விட்டமை. இவை செம்மணிப் புதைகுழிகளை விட மோசமான குழிகள்.

அரசின் பொதுத்துறைகளிலே Yes Men (ஆமாம் சாமி போடுவோர்) பெரும் செல்வாக்குப் பெறும் நிலை.

சர்வதேச தொழில் மயம் எமது தேசிய மரபுகளை உடைத்து முறித்து இல்லாமல் ஆக்கும் இயல்பு நிலை.

பொதுச்சேவை, இலஞ்சம், ஊழல், மோசடி, தகாத செல்வாக்கு ஆகியனவற்றுக்கு உட்பட்ட நிலை.

அச்சம், கொண்ட குடியல் வாழ்வு இயல்பாகிப் போன அசாதாரண வாழ்வு நிலை.

வளரும் விஞ்ஞானம் எமது உலகை எமக்கு இல்லாது ஆக்கிவிடும் சுற்றுப்புற சூழல் அழிவு பெருகிவரும் நிலை.

நாம் ஜனநாயகத்தை சொல் அளவிலே பெற்றிருந்தாலும் ஜனநாயகக் கலாசாரம் எமக்கு உரிமையாக 'வாய்த்துப்' போகாத இரண்டும் கெட்டான் அரசியல் நிலை.

வீடு பிள்ளைகளுக்கு நடத்தையைப் பயிற்றுவிக்கும் பயிற்சிப் பட்டறையாக அமைய முடியாமை. பாடசாலையிலே 'நச்சு விழுமியச் சூழல்' ஒன்று உருவாகின்றது.

ஆசிரியர்கள் Loco Parentis என்ற இலத்தீன் பதம் விளக்குவது போல பெற்றோரைப் போன்றவர்கள். ஆதலால் பிள்ளை மீது செலுத்தும் நம்பிக்கையான கவனத்தை ஒத்ததாக ஆசிரியர்களின் செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

பாடசாலை குறிப்பாக விழுமியங்களின் பயிற்சிப் பாசறையாகும். ஒவ்வொரு சிறு சிறு விடயங்களும் மிக நுண்ணியதாக திட்டமிடப்பட்டு நல்லெண்ணையைக் கண்ணுக்குள் விட்ட நிலைபோல மிக்க கவனத்துடன் அவை பயிற்றுவிக்கப்பட வேண்டும். பின்னூட்டல் செய்யப்பட வேண்டும்.

விதித்தன எவை, அவை ஏன், எவ்வாறு ஆற்றப்படின் அதன் பயனளிப்பு என்ன என்பது போன்ற விடயங்கள் மிக நுண்ணியதாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும விலக்கப்பட்டனவை பிள்ளைகளாலே ஆற்றப்படும் போது ஏற்படும் தீமைகள் இவ்வாறே எடுத்துப் பயிற்றுவிக்கப்படுதல் வேண்டும். வாழ்க்கைத் தகைமை, செயற்பாட்டறைக்கல்வி என்பன இன்றைய கல்வித் திட்டத்தினது விழுமியத்தை உருவாக்கும் மேலதிகப்பாடக் கோலங்கள் ஆகும். அப்பாட ஆசிரியர்களுக்குகுரியவை இவை என குறித்துரைக்கப்படாது சகல பாட ஆசிரியர்களும் இதிலே கருத்துடன் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

பாடசாலை, மதகுரு, ஊடகங்கள் பொதுச்சேவை ஆகிய நான்கு தர்மத்துடன் நியாயத்துடன், விழுமியத்துடன் செயற்பட வேண்டும் என்பர். இதில் முதலிடத்தில் இருப்பது பாடசாலை. பாடசாலை பிழைத்தால் எல்லாமே பிழைத்துவிடும்.

பாடசாலை இயங்கி விழுமியங்களைப் பகிர்ந்து செயற்படல், கூட்டு முயற்சியின விளைதிறனைப் பாடசாலைச் சமுதாயம் உணர வித்திடும் என்க. 'பள்ளித்தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்' என்ற தொடரிலே 'செய்குவோம்' நாம் என்ற உளப்பாட்டு பன்மைத் தன்மைப் பெயரை எழுவாய் ஆகக்கொண்ட நிலை அவதானிக் கத்தக்கது.

இரண்டாம் உலகயுத்தம் முடிவடைந்த பொழுது யப்பானிலே மனித சமுதாயத்திலே காணப்படக் கூடாத அளவு அவலங்கள் மலிந்து காணப்பட்டன. வறுமை, விபச்சாரம், கொள்ளை, பொதுச்சேவை ஊழல், பிச்சை, அதார்மீகம் என சகல அசுரப்பாம்புகளும் எங்கும் எந்த மூலையிலும் ஆட்சி செலுத்தி வந்தன. 'கொடுமையே அறமாகித் தீர்ந்தகாலம்'. ஆனால் யப்பான் மக்களிலே நம்பிக்கை வைத்தது. மக்களே சிறந்த சொத்து, மிகப் பெரும் சக்தி மக்கள் சக்தியே, மக்களது மனங்கள் புரட்சிகரமாக மீள்கட்டுமானம் செய்யப்பட்டன. மனப் புரட்சி இன்றைய யப்பானின் வளர்ச்சிக்கு ஆதாரம்.

விழுமியங்கள் கேள்விக் குறியாக உள்ள இன்றைய சமுதாயம் மீள அமைப்புப் பெற வேண்டும். மனித உரிமைகள், ஜனநாயகம், சிவில் சமூகம், சட்ட ஆட்சி ஆகியனவற்றில் பண்புசார் விழுமியங்கள் வளர நாம் கடினமாக முயன்று உழைப்போம்.

நாளைய உலகம் என்போம்.

"சிறந்த குறிக்கோளக்காக அர்ப்பணம் செய்வதென்பது கடுமையாக உழைத்து கஷ்டப்படுவதாகும்."

# எமது கிராமத்தில் மரபுவழிச் சீர்மியம்

எமது கிராமத்தின் வாழ்வையும் வளத்தையும் எண்ணும் பொழுது எம் முன் பரந்து விரிந்து தெரிவது கல்விப் பாரம்பரியமும் நாட்டார் வாழக்காற்றியற் கூறுகளுமேயெனலாம். இவ்விரண்டு தளங்களும் பெரும்பாலும் ஒன்றுபட்டும், ஒரேவிடயங்களில் வேறுபட்டும் எம் கிராமத்தின் வாழ்வியற் கோலங்களாயின. கல்விப்பாரம்பரியம் பற்றிய ஆய்வுகள் சில அவ்வப்போது செய்யப்பட்டுள்ளன. நாட்டார் வழக்காற்றியற் கூறுகள் பற்றிக் குறிப்பிடக்கூடிய தேடல் தொகுத்தல் முயற்சிகள் நடைபெற்றதாகத் தெரியவில்லை.


**கலாநிதி.**
**எஸ். சிவலிங்கராஜா**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ் பல்கலைக்கழகம்.


யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குப் பொதுவாக உள்ள கல்விப்பாரம்பரியமும் நாட்டார் வழக்கியற் கூறுகளுமே எமது கிராமத்திற்கும் உரியதாகக் கொள்ளப்படுவது உண்மையே எனினும், சிற்சில கூறுகளிலே சிறப்புத் தன்மையை அல்லது தனித்தன்மையையும் காணமுடிகின்றது.

எமது கிராமத்தின் வாழ்வியல் அண்மைக் காலம் வரை கிராமியக் கட்டமைப்பினுட் பேணப்பட்டமையால் நாட்டார் வழக்காற்றியற் கூறுகளும் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தே பயின்று வந்தது.

மொழிவழக்கு, வாய்மொழி இலக்கிய மரபுகள், நம்பிக்கைகள், சடங்குகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், விடுகதைகள் எனப்பல்வேறு தளங்களிலே ஆய்வுக் களங்களைத் தன்னகத்தே கொண்டதாக எமது கிராமத்து வாழ்வியல் காணப்படு கின்றது. இவற்றைத் தேடலும் தொகுத்தலும் ஆய்வு செய்தலும் மிகவும் அவசியமாகும். சமூகவியல் நோக்கில், மானுடவியற் பின்னணியில் இனி வருந்தலைமுறையினர் ஆய்வு செய்ய இம்முயற்சி மேற் கொள்ளப்படுவது அவசியமாகும்.

நாட்டார் வழக்காற்றியற் கூறுகளின் ஒரு அமிசமான மரபுவழிச் சீர்மியம் (Traditional Counselling) பற்றியே இச் சிறுகட்டுரை அமைகின்றது.

(Counselling) கவுன்சிலிங் என்ற ஆங்கிலப் பதத்திற்குச் சீர்மியம் என்ற சொல்லினையே இன்று பெரும்பாலான உளவியலாளர்கள் பயன்படுத்துகின்றனர். உளவளத்துணை எனவும் குறிப்பிடுகின்றனர். எமது சமூகத்தில் பண்டுதொட்டே சீர்மியச் செயற்பாடுகள் நடைபெற்று வந்துள்ளன. சங்க இலக்கியங்களிலே இதற்குச் சான்றுகள் உள.

சீர்மியம் என்பது உளவியல் சார்ந்த ஒரு செயற்பாடு. அடிமன அவசங்களைச் சீர்செய்வதற்குக் கையா ளப்படும் ஒருவகையான உளவியல் மருத்துவம் என்றும் இதனைச் சொல்ல லாம். மன அவசங்களால் உளவியல் ரீதியில் பாதிப்புற்றோருக்கு உதவவென நமது பண்பாட்டிலே மரபுவழிச் சீர்மி யச் செயற்பாடுகள் பல உள்ளன. இவற்றிற் பெரும்பாலானவை இன்று வழக்கொழிந்து போயுள்ளன. சிறி தளவில் இன்றும் பேணப்படும் முறை மைகளும் சமூக பொருளாதார மேனிலையாக்கத்திற்கேற்ப வகை யிலும் வடிவிலும் மாற்றம் பெற்றுள் ளன.

மரபுவழிச் சீர்மியம் சமயகரண நடவடிக்கைகளோடு தொடர்புபட்டு எமது பண்பாட்டின் பலமான ஒரு கூறாகவே கருதப்பட்டு வந்தது. சமயத்திற்கும், சடங்காசாரங்களுக்கும் பண்பாட்டு அமிசங்களுக்கும் ஏற்பச் சீர்மியச் செயற்பாடுகள் வழங்கி வந்த போதிலும் இவற்றையும் கடந்து வேறுபட்டும், மாறுபட்டும் வழங்குவதும் உண்டு.

உளநலப் பாதிப்புக்கு உள்ளான ஒருவருக்கு எமது கிராமத்தில் வழங் கப்படும் மரபுவழிச் சீர்மியச் செயற்பாடு களைப் பின்வருமாறு வகைப்படுத்த லாம்.

பெரியவர் ஒருவர் புத்திமதி கூறுதல்

வீபூதி போடுதல்
நூல் கட்டுதல்
தண்ணீர் ஓதுதல்
} பார்வைபார்த்தல்

நாவூற்றுக்குத் துடைத்தல்
கழிப்புக் கழித்தல்
மருந்து விழுத்துதல்

இவ்வாறு பலவகை யின.

எனது அனுபவத்திற்கு உட்பட்ட நிலையில் நினைவுக்கு எட்டியவற றையே இங்கு குறிப்பிட்டுள்ளேன். இன்னும் பல சீர்மியச் செயற்பாடுகள் இருக்கலாம். மேலே குறிப்பிட்ட சீர்மியச் செயற்பாடுகளுக்கும் சமயகரண நம் பிக்கைகளுக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு என்பதை ஏலவே குறிப் பிட்டுள்ளேன்.

மனித மனத்தின் அடிமனச் செயற்பாடுகளை, நனவிலிச் செயற்பாடு களை இனங்கண்டு எமது மரபுவழிச் சீர்மியச் செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

**புத்திமதி கூறுதல்:-**

உளநலப்பாதிப்பு ஏற்பட்டவருக் குக் குடும்பச் சூழலில் குடும்பத்தின் பெரியவர் அல்லது நன்மதிப்புக்குரிய வர் அன்பு காட்டிப் புத்திமதி சொல்வது, ஆறுதல் சொல்வது வழக்கமாகும். புராண இதிகாசக் கதைகளையோ, செவிவழிக் கதைகளையோ, முன்னு தாரணச் சம்பவங்களையோ சுட்டிக் காட்டி மனநிலையைச் சீராக்கும் வழக் காறு மிக நீண்டகாலமாகவே எமது கிராமத்தில் வழக்காறாக உள்ளது. "அரிச்சந்திரனுக்கு வராத துன்பமா" "நளமகாராசன் அடையாத துயரமா" என்பன போன்ற தொடர்களைப் பெரிய வர்கள் அடிக்கடி பொருத்தமான இடத்

திலே கையாண்டு மனநிலையைச் சீர்ப்படுத்த முயல்வர். நகைச்சுவைக் கதைகளையும் கையாளுவர். ஆறுதலும் தேறுதலும் என்ற வகையில் உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் ஆரம்ப நிலையில் தேறுதலடைய இச் சீர்மியமுறை பயன்பட்டது. இன்று இதன் வளர்ச்சிப் போக்கினைக் காண முடிகின்றது.

**விபூதி போடுதல்:-**

விபூதிபோடுதல், நூல்கட்டுதல், பார்வைபார்த்தல் முதலான சீர்மியச் செயற்பாடுகள் சமயஞ் சார்ந்த நம்பிக் கைகளுடன் தொடர்புபட்டவை. ஊரி லுள்ள பூசாரியார் கடவுள் வழிபாட்டு டன் தம்மை முற்றாக இணைத்துக் கொண்ட பக்திமான்கள், கோயில் குருக்கள் முதலியோர் இச்சீர்மிச் செயற்பாட்டினை முன்னெடுப்ப வர்களாகக் காணப்பட்டனர். அடிமனதில் ஊறியிருக்கும் சமய நம்பிக்கையும், வீபூதிபோடுபவர் மேலுள்ள நன்மதிப்பும் இச் செயற்பாடு சிறப்புற அமைய வழிவகுக்கும். விபூதியை மந்திரித்து 'ஓம் சுவாஜா' என்று மூன்று முறை கூறி விபூதியைத் தலையிலும் நெற்றியிலும் எறிந்தும் பூசியும் உள நலப்பாதிப்புற்றோருக்குத் தெம்பினை ஏற்படுத்துவர். இவ்வாறே பார்வைபார்த் தலும், வேப்பிலையினால் தலையிலே அடித்தலும் (குழைக்கடித்தல்) நூல் கட்டுவதும் மரபுவழிச் சீர்மியச் செயற் பாடுகளாக வழங்கிவந்தன. மிக நீண்ட காலமாக வழங்கிவரும் இச்சீர்மியச் செயற்பாடு இன்றும் சிறிதளவுக்குப் பயன்பாட்டில் உள்ளமையை அவதா னிக்கலாம்.

**தண்ணீர் ஓதுதல்:-**

நீண்டகாலமாக எமது பகுதியில் நிலவிவரும் மரபுவழிச் சீர்மியச் செயற்பாடுகளிலே தண்ணீர் ஓதுதல் என்னும் முறை மிகுந்த பயனுள்ளதாக அமைந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பக்திமான் ஒருவர் உளநலம் பாதிக்கப்பட்டவரைத் தனக்கு முன் னாலே இருத்தி இருவருக்கும் இடை யிலே நீர் நிறைந்த செம்பினை வைத்துப் பாக்குவெட்டிக் காம்பினாலே அல்லது சத்தகக் காம்பினாலே செம்பிலுள்ள தண்ணீரைக் கலக்கி (ஏதோ எழுதுவதுபோல) நீண்ட நேரமாக வாயாலே முணுமுத்துத் தண்ணீரை ஓதுவார். பெரும்பாலும் தண்ணீர் ஓதுபவர் மிகவும் வயது முதிர்ந்தவராகவே இருப்பர். இதனால் இவர்களுக்கு 'அப்பர்' என்ற (முதியவர் என்ற பொருளில்) அடை சேர்த்தே அழைப்பர். உதாரணமாக இராமப்பா, வேலப்பா, கந்தப்பா என்பவர்களைக் குறிப்பிடலாம். தண்ணீர் ஓதி முடித்ததும் அந்தத் தண்ணீரை எடுத்து உளநலம் பாதிக்கப்பட்டவர் மேலே தெளித்து, மூன்று சிறங்கை (உள்ளங்கை பிரமாணம்) குடிக்கக் கொடுத்து அந்தத் தண்ணீரைக் கொண்டு போய் கால் முகம் கழுவும்படி கொடுத்து அனுப்பு வர். இதனால் உளநலம் பாதிக்கப் பட்டவருக்குத் தெம்பு பிறப்பதும் வழக்க

மாகும். ஓரளவுக்கு நாவூற்றுக்குப் பார்த்தலுக்கும் இதற்கும் நெருக்கமான உறவுண்டு.

**நாவூற்றுக்குத் துடைத்தல்:-**

நாவூற்றுக்குத் துடைத்தல் என்பது இன்று வரை வழக்காற்றில் இருக்கும் ஓர் சீர்மியச் செயற்பாடாகும். அதன் வகையும் வடிவும் காலதேச வர்த்தமானங்களுக்கு அமைய மாறுபட்டுள்ளமையும் உண்மையே. நாவூற்றுக்குத் துடைத்தல் என்பது 'நாவூற்றைத் தொலைத்தல்' என்பதன் திரிபு என்றும் சில முதியவர்கள் கூறுகின்றனர். நாவூற்றைத் துடைக்கும் செயற்பாட்டினை ஆண் பெண் இருபாலரும் மேற்கொள்வது வழக்கமே யெனினும் பெரும்பாலும் பெண்களே இச்சீர்மியச் செயற்பாட்டில் முதன்மை பெறுகின்றனர்.

மூன்றுமிளகாய், மூன்று உப்புக் கல்லு, கூரை ஓலை முதலானவற்றை (சிலர் காலடி மண்ணும் சேர்ப்பது வழக்கம்) ஒருகையில் எடுத்து உளநலம் பாதிக்கப்பட்டவரின் தலையில் இருந்து உள்ளங்கால் வரை மூன்று தடவை சுற்றித்துடைப்பர். துடைக்கும் பொழுது (மெல்லிய) மெதுவாக மந்திரம் ஒன்றையும் ஓதுவர். அப்படி ஓதும் பொழுது பின்வருமாறு கூறப்படும் என்று மூதாட்டி ஒருவர் மூலம் அறிந்தேன்.

''பாம்புக்கண்ணி பார்த்தாளோ
குண்டுமணிக் கண்ணாலே
கொழுந்தறுவாள் பார்த்தாளோ?
நாவூறு கண்ணூறு இறங்கு இறங்கு
காலால் இறங்கு, கண்ணால் இறங்கு
காதால் இறங்கு நாவூறு கண்ணூறு
இறங்கிறங்கு''

என்று மூன்று தடவைகளுக்கு மேற் சொல்லிக் காறித்துப்பியபின் கையில் வைத்திருந்த மிளகாயையும் உப்பையும் முச்சந்திக்கு கொண்டு வந்து பன்னாடை, ஓலை முதலிய வற்றிலே தீமூட்டி அவற்றை எரிப்பர். மிளகாய் மணக்காமலும், உப்பு வெடிக்காமலும் இருந்தால் சரியான நாவூறு என்று கூறி எரித்த மிளகாயைத் தூள் செய்து மனநலம்பாதிக்கப் பட்டவரின் நெற்றியிலே பொட்டாகப் (திலகமாக) போடுவர். மாலை வேளையிலேதான் (பொழுது கருகும் பொழுது) நாவூற்றுக்குத் துடைக்க வேண்டும் என்ற நம்பிக்கையும் உண்டு. மூன்று நாளைக்கு இவ்வாறு துடைத்தால் நாவூறு முற்றாக நீங்கிவிடும் என உளநலம். பாதிக்கப் பட்டவருக்கு உரைக்கப்படும் மிகச் சிறந்தவோர் மரபுவழிச் சீர்மியமாக இம்முறை பயனளித்து வந்தது.

எமது பண்பாட்டிலே பண்டு தொட்டு நிலவிவந்த மரபுவழிச் சீர்மியச் செயற்பாடுகள் பல இன்று வழக்கிழந்து போயின. கிராமியச் சூழலில் வாழ்வியல் அமிசங்களை நெறிப்படுத்தும் இச்சீர்மிய முறைமை நல்லதோர் உளவளத் துணையாகவே செயற்பட்டு வந்தது.

இந்த வகையில் இன்னும் பல சீர்மிய முறைகள் இருக்கலாம். என் அவதானிப்புக்கு உட்பட்ட நினைவிலே நின்றவற்றையே இங்குகுறிப்பிட்டுள்ளேன். கால அவகாசம் ஏற்படும் பொழுது நாட்டார் வழக்காற்றியற் பின்னணியில் இவை விரிவாக ஆராயப் படும்.

# நூற்றாண்டு விழா குழுவின்
## செயலாளர் அறிக்கை

நூற்றாண்டு விழாவைக் கொண் டாடும் முகமாக குழுவொன்று 1999ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டது. எதிர் பார்த்த அளவிற்கு அவர்களது செயற் பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்பட வில்லை. அதன்காரணமாக பழைய மாணவர்கள், கல்வித் திணைக்களத் தைச் சேர்ந்தவர்களின் அனுசரணை யுடன் பிறிதொரு செயற்குழுவை 2001ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் உருவாக் கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பாடசாலை அதிபர் திரு. இ. இராகவன் அவர்களைத் தலை வராகவும், வே. குண சிங்கம் ஆகிய என் னைச் செயலாளரா கவும், ஆசிரியை செல்வி. விமலரதி சுப்பிரமணியம் அவர்களைப் பொருளாளராகவும் கொண்டும் அமைக் கப்பட்ட செயற்குழு நூற்றாண்டு நிறைவு விழா தொடர்பான கருமங்களில் துரித ஈடுபாட்டுடன் செய லாற்ற ஆரம்பித்தது.

எமது பரந்த திட்டங்களின் அடிப் படையில் இது காலவரையில் நிறை வேற்றப்பட்ட அனைத்துக்கும் உதவி ஒத்தாசை, ஆலோசனை வழங்கிய அனைவருக்கும் தற்பொழுது நடை முறையிலுள்ள செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்கிக் கொண்டுள்ள எல்லாத்துறை சார்ந்தவர்களுக்கும் நன்றியை பாடசாலைச் சமூகம் சார் பாக தெரிவிக்கின்றேன். இவ்வேளையில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப் பாளர் திரு. சிவராசா அவர்களுக்கும், வலய கல்விப் பணிப்பாளர் திரு. செல்வரத்தினம் அவர்களுக்கும் எங்கள் பாராட்டுதலும் நன்றியும் உரித்தாகுக.

**பழைய மாணவர்**
**சங்க புனருத்தாரணமும்,**
**அதன் சேமிப்பு**
**வங்கிக் கணக்கும்.**

எதிர்கால செயற்பாடுகளை சிறப் புற அமைப்பதை நோக் கமாகக் கொண்டு புன ருத்தாரணம் செய் யப்பட்ட இப் பாடசா லைப் பழைய மாணவர் சங்கமொன்று ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இப் பாடசாலையைப் பொறுத்த வரையில், பழைய மாணவர்களாகிய அதிபர் திரு. இ. இராகவன் அவர்களைத் தலைவ ராகவும், வே. குணசிங்கம் ஆகிய என்னைச் செயலாளராகவும் ஆசிரியை செல்வி. விமலரதி சுப்பிரமணியம் அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு நெல்லியடி இலங்கை வங்கியில் சேமிப்புக் கணக்கு இல. 11795 ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்களிப்பு**

பழைய மாணவர்களினதும் பெற் றோர்களினதும் மற்றும் நலன் விரும்பி

களினதும் பங்களிப்புகள் கோரப்பட்டுள்ளது. எதிர் பார்த்ததிற்கு மேலாக அவர்களின் பங்களிப்புகள் கிடைத்த வண்ணமே இருக்கின்றது. குறிப்பாக, குறித்த நூற்றாண்டு ஞாபகார்த்த மண்டபம் நிர்மாணிக்க ஆரம்பித்த வேளையில் வட புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு நிதியுதவி தந்து 'காலத்தினால் செய்த உதவி ஞாலத்தின் மானப் பெரிது' பெரிதாகக் கொள்கிறோம். மேலும் கனடா வாழ், கரவை நலன் விரும்பிகளும் பழைய மாணவர்களும். மனமுவந்து நிதியுதவி அளித்துள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதோடு அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

புறச்சூழல் சார்ந்தவற்றை நாம் அனைவரின் உதவியுடனும், கொடுக்க முனையும் வேளையில் மாணவர்களின் கல்வியூட்டல், விளையாட்டுத்துறை சார்ந்தவற்றை ஆசிரியர் குழாம் தன் முனைப்பாக ஈடுபடுவார்களென எதிர் பார்க்கின்றோம். அவர்களுடைய ஆக்கமும், ஊக்கமும் பாடசாலைத் தரத்தை மேலும் உயர்த்த இன்றியமையாததாகும்.

**வே. குணசிங்கம்**

செயலாளர்,
நூற்றாண்டு விழாச்சபை.

**வித்தியாலய அபிவிருத்திக்கு**

மாணிக்கவாசகர் வித்தியாலய பழைய மாணவர் சங்கம்
க.இ. 11795
இலங்கை வங்கி,
நெல்லியடி.

கரவெட்டி எனும் வங்கிக் கணக்கு நிதி அனுப்புவதன் மூலம் எதிர்கால சந்ததியின் கல்வி வளர்ச்சிக்கு உதவுங்கள்.

# நூற்றாண்டு நிகழ்வுகள் அன்பளிப்பு
## கரவை ஒன்றியம்
## ரொரன்ரோ கனடா

| பெயர் | தொகை |
|---|---|
| திரு. வை. சி. பாலசுப்பிரமணியம் | C$ 100/= |
| திரு. சி. சிவராசா | C$ 100/= |
| திரு. க. சண்முகநாதன் | C$ 100/= |
| திரு. க. கந்தசாமி | C$ 100/= |
| திரு. P. செல்வரஞ்சன் + சகோதரி | C$ 80/= |
| திரு. சு. சிவஞானம் | C$ 50/= |
| திரு. க. தனபாலசிங்கம் | C$ 50/= |
| திரு. சி. கிறிஸ்ரி (Christy) | C$ 50/= |
| திரு. ஐ. தர்மலிங்கம் | C$ 50/= |
| திரு. ந. கமலநாதன் | C$ 50/= |
| திரு. சி. துரைராசா | C$ 50/= |
| திரு. சி. அம்பிகாவரன் | C$ 50/= |
| திரு. சி. சுப்பிரமணியம் | C$ 50/= |
| திரு. கே. ஆறுமுகம் | C$ 50/= |
| திரு. எல். ஆறுமுகம் | C$ 50/= |
| திரு. வ. பாலகுமார் | C$ 50/= |
| திரு. வி. வல்லிபுரம் | C$ 50/= |
| திரு. சு. சித்திரசேனன் | C$ 50/= |
| திரு. நடராசா குடும்பம் | C$ 50/= |
| திரு. இராசதுரை குடும்பம் | C$ 50/= |
| திரு. வை. சி. வைரமுத்து குடும்பம் | C$ 50/= |
| திரு. V. கிருஷ்ணபிள்ளை | C$ 50/= |
| திரு. க. தவராசா | C$ 30/= |
| திரு. செல்வநாதன் | C$ 25/= |
| திரு. கணேசன் | C$ 25/= |
| திரு. எஸ். ஸ்ரீதர் | C$ 25/= |
| திரு. எஸ் செல்லத்துரை | C$ 20/= |
| திரு. வ. யோகநாதன் | C$ 20/= |
| திரு. P. பாலசுந்தரம் | C$ 20/= |
| இலங்கை ரூபா | 95050/= |

# நூற்றாண்டு நிகழ்வுகள் அன்பளிப்பு

| பெயர்கள் | விலாசம் | தொகை |
|---|---|---|
| திருமதி. ச. வைஜந்திமாலா -காணி கொள்வனவு | கரவெட்டி மத்தி | 50000 00 |
| திரு. இ. இராகவன் -பாடசாலை பெயர் வளைவு | துன்னாலை கரவெட்டி | 10000 00 |
| திரு. கார்த்திகேசு கருணாகரன் | கரவெட்டி மத்தி | 10000 00 |
| திரு. வே. குணசிங்கம் | கரவெட்டி மத்தி | 5000 00 |
| திரு. பொ. பாலச்சந்திரன் | கரணவாய் கிழக்கு | 3000 00 |
| திருமதி. ஜெயராணிகணநாதன் | கரவை மேற்கு | 3000 00 |
| திருமதி. சி. சுந்தரலிங்கம் | கரவெட்டி கிழக்கு | 2000 00 |
| திரு. ம. இரத்தினராசா | கரவெட்டி மேற்கு | 2000 00 |
| திரு. க. சிவகுருநாதன் | பெரியதோட்டம் | 1000 00 |
| திரு. சி. சிவக்கொழுந்து | பெரியதோட்டம் | 1000 00 |
| திரு. சி. வேலாயுதம் | பெரியதோட்டம் | 1000 00 |
| திரு. ஐ. நடராசா | பெரியதோட்டம் | 1000 00 |
| திரு. சி. நமசிவாயம் | பெரியதோட்டம் | 1000 00 |
| திரு. வ. கிருஷ்ணராசா | பெரியதோட்டம் | 1000 00 |
| திரு. வீ. சுந்தரலிங்கம் | பெரியதோட்டம் | 1000 00 |
| திருமதி. ஆ. வசந்தாதேவி | பெரியதோட்டம் | 1000 00 |
| திருமதி. சி. செல்லம்மா | பெரியதோட்டம் | 1000 00 |
| செல்வி. வி. கோமதி | தச்சந்தோப்பு, கரவெட்டி | 1000 00 |
| திரு. சி. சிதம்பரநாதன் | கரவெட்டிமத்தி | 1000 00 |
| திரு. க. சோமசுந்தரம் | கரவெட்டி மேற்கு | 1000 00 |
| திருமதி. சொ. வசந்தி | மத்தொனி கரவெட்டி | 1000 00 |
| திரு. ப. ஈஸ்வரநாதன் | கரவெட்டி கிழக்கு | 1000 00 |
| திரு. ப. பூபாலசிங்கம் | கரவெட்டி மத்தி | 1000 00 |
| திரு. இ. இரவீந்திரன் | கரவெட்டி மத்தி | 1000 00 |
| திரு. கி. நேசராசா | கரவெட்டி மேற்கு | 1000 00 |
| திரு. ர. சந்திரசேகரன் | கரவெட்டிமத்தி | 1000 00 |
| திருமதி. ந. பூங்கோதை | கரவெட்டி கிழக்கு | 1000 00 |
| திருமதி. பா. மதிவதனி | கரவெட்டி | 1000 00 |
| திருமதி. ஜெ. மாலதி | மத்தொனி, கரவெட்டிமேற்கு | 1000 00 |
| திரு. சி. சிவயோகநாதன் | கரவெட்டி கிழக்கு | 1000 00 |
| திரு. சி. கணபதிப்பிள்ளை | கரவெட்டி மேற்கு | 1000 00 |
| திரு. கா. நல்லதம்பி | கரவெட்டி | 1000 00 |
| திருமதி. சு. சிவலிங்கம் | கரவெட்டி மத்தி | 1000 00 |
| திருமதி. பா. நளாயினி | கரணவாய் கிழக்கு | 1000 00 |
| திரு. தா. கிருஷ்ணபிள்ளை | பெரியதோட்டம் | 500 00 |
| திரு. சி. சிவராசா | தச்சந்தோப்பு | 500 00 |

| பெயர்கள் | விலாசம் | தொகை |
| --- | --- | --- |
| திரு. இ. கந்தசாமி | கரணவாய் கிழக்கு | 500 00 |
| திரு. பா. பாலகாந்தன் | கரவெட்டி மேற்கு | 500 00 |
| திருமதி. வி. இரத்தினேஸ்வரி | கரவெட்டி மத்தி | 500 00 |
| திருமதி. வி. சுமதி | கரவெட்டி கிழக்கு | 500 00 |
| திருமதி. சு. திலகேஸ்வரி | கரவெட்டி கிழக்கு | 500 00 |
| திருமதி. ந. யோகராணி | கரவெட்டி மத்தி | 500 00 |
| ஜெ. ரஞ்சினி | கரவெட்டி கிழக்கு | 500 00 |
| கி. யோகராணி | கரவெட்டி மத்தி | 500 00 |
| திரு. சி. லோகநாதன் | நெல்லியடி | 500 00 |
| திரு. த. கிருபாகரன் | கரவெட்டி மத்தி | 500 00 |
| திரு. க. பாலசுந்தரம் | கரவெட்டி மத்தி | 500 00 |
| திரு. கணேச சபாபதிக்குருக்கள் | கரவெட்டி மத்தி | 500 00 |
| திருமதி. சி. நாகம்மா | கரவெட்டி மேற்கு | 500 00 |
| திரு. க. கணேசலிங்கம் | சரசாலை தெற்கு | 500 00 |
| திருமதி. பா. நளினி | கரவெட்டி மத்தி | 500 00 |

# எமது வித்தியாலயத்தின் நூற்றாண்டுகால ஆசிரியர்கள்

| | |
|---|---|
| திரு. க. பொன்னம்பலம் | கரவெட்டி கிழக்கு |
| திரு. எஸ். வேலுப்பிள்ளை | பெரியதோட்டம், கரவெட்டி |
| திரு. சூ. செல்லையா | கரணவாய் |
| திரு. ஞா. சபாபதிதேசிகர் | கரணவாய் |
| திரு. சிதம்பரப்பிள்ளை | கரவெட்டி கிழக்கு |
| திரு. வி. பொன்னையா | கரவெட்டி மேற்கு |
| திரு. எஸ். வல்லிபுரம் | மத்தொனி |
| புலவர் சின்னத்தம்பி | கரவெட்டி |
| திரு. கந்தப்பு | இலகடி, கரவெட்டி |
| திரு. இராமலிங்கம் | கரவெட்டி மத்தி |
| திரு. சி. கார்த்திகேசு | கரவெட்டி மேற்கு |
| திரு. க. சின்னத்துரை | கரவெட்டி மேற்கு |
| திரு. மா. சுப்பிரமணியம் | பிராமணந்தோட்டம் |
| திரு. ஐ. சிற்றம்பலம் (I.C) | நுகவில் |
| திரு. கி. செல்லையா | கரவெட்டி |
| திரு. சி. ஆழ்வாப்பிள்ளை | தச்சன்தோப்பு, கரவெட்டி |
| திரு. கா. வேலாயுதம் | கரவெட்டி |
| திருமதி. சி. சின்னம்மா | மத்தொனி |
| திரு. வி. சின்னத்தம்பி | கரவெட்டி மேற்கு |
| செல்வி. அ. நல்லதம்பி | கரவெட்டி கிழக்கு |
| திருமதி. க. பத்தினிப்பிள்ளை | |
| திரு. சி. வீரகத்தி | |
| திரு. எஸ். கந்தசாமி | |
| திரு. வி. செல்லையா | |
| திருமதி. இ. கந்தப்பு | கரவெட்டி கிழக்கு |
| திரு. ப. அருளானந்தம் | |
| திரு. ஆ. சின்னத்தம்பி | கரவெட்டி மத்தி |
| திரு. ந. இராசமாணிக்கம் | நெல்லியடி |
| திரு. சி. நமசிவாயம் | கவுந்தில் |
| திரு. செ. துரைராசா | கரவெட்டி கிழக்கு |
| திரு. வே. கனகசபை | மத்தொனி |
| திரு. அ. இளையதம்பி | நெல்லியடி |
| திருமதி. சி. செந்தியா | அரசடி |
| செல்வி. பொ. முருகேசு | கரவெட்டி மேற்கு |

| | |
|---|---|
| திருமதி.வ. கந்தசாமி | கரவெட்டி |
| திருமதி. ஆ. சின்னத்தம்பி | மத்தொனி |
| திருமதி. பு. சபாபதி | மத்தொனி |
| திரு. வே. கந்தப்பு | கரவெட்டிமேற்கு |
| திரு. செ. கந்தவனம் | கரணவாய் தெற்கு |
| திரு. ந. வயித்தியநாதர் | கரணவாய் தெற்கு |
| திருமதி. எல். வேலுப்பிள்ளை | நுகவில் |
| திருமதி. செ. கார்த்திகேசு | கரவெட்டி மேற்கு |
| திரு. கா. நல்லதம்பி | அரசடி |
| திரு. மு. கனகசிங்கம் | நுகவில் |
| திரு. வே. தங்கராசா | நெல்லியடி |
| திருமதி. பொ. தணிகாசலம் | கரவெட்டி மேற்கு |
| திருமதி. சி. மயில்வாகனம் | நெல்லியடி |
| திரு. வி. கந்தசாமி | கரவெட்டி மேற்கு |
| திரு. வி. கந்தையா | |
| திரு. க. சின்னத்தம்பி | கரவெட்டிமத்தி |
| திரு. க. முருகப்பா | பெரியதோட்டம் |
| திரு. அ. சிற்றம்பலம் | |
| திருமதி. எம். நவரட்ணராஜா | |
| திரு. ஸ்ரீ. அந்தோனிமுத்து | நெல்லியடி |
| திருமதி. பா. முருகேசு | கரவெட்டி கிழக்கு |
| திருமதி. அ. சந்திரசேகரம் | கரவெட்டி கிழக்கு |
| திருமதி. வ. கந்தசாமி | கரவெட்டி மேற்கு |
| திருமதி. R.J. யோசெப் | கரவெட்டி வடக்கு |
| திருமதி. செ. மகேந்திரராசா | கரவெட்டி கிழக்கு |
| திரு. கணபதிப்பிள்ளை | கரவெட்டி மேற்கு |
| திரு. பொ. ஐயாத்துரை | அரசடி |
| திருமதி. ஈ. வேலாயுதம் | |
| திரு. ஆ. க. கந்தசாமி | |
| திரு. ம. இரத்தினராசா | கரவெட்டி மேற்கு |
| திரு. சி. மகாலிங்கசிவம் | கவுந்தில் |
| திரு. வீ. வல்லிபுரம் | நிழல்வாடி, கரவெட்டி |
| திருமதி. வ. இளையதம்பி | மத்தொனி |
| திருமதி. சி. நமசிவாயம் | கவுந்தில் |
| திருமதி. யோ. இராசேந்திரம் | கிழவிதோட்டம் |

| | |
|---|---|
| திருமதி. இ. யோகராசா | கிழவிதோட்டம் |
| திருமதி. கு. லோகேஸ்வரன் | கிழவிதோட்டம் |
| செல்வி. என். ஆதிரை | கரவெட்டிகிழக்கு |
| திரு. என். லோகேஸ்வரன் | கரவெட்டி |
| திரு. ஆ. சிதம்பரபப்பிள்ளை | கரவெட்டிமத்தி |
| திரு. க. விநாயகமூர்த்தி | கரவெட்டி |
| செல்வி. ம. சித்ரா | கிழவிதோட்டம் |
| செல்வி. செ. சூரியகலா | துன்னாலைதெற்கு |
| திருமதி. க. சச்சிதானந்தன் | கரவெட்டிமத்தி |
| செல்வி. வி. றஞ்சினி | அரசடி |
| திருமதி. உ. ஜெயக்குமார் | தச்சந்தோப்பு |
| திருமதி. ம. கோபிநாத் | துன்னாலை மத்தி |
| திரு. ஆ. க. தவராசா | கரவெட்டிமேற்கு |
| செல்வி. வி. கோமதி | தச்சந்தோப்பு |
| திரு. யோ. விதுபாகரன் | கிழவிதோட்டம் |
| திரு. நா. பிரபாகரன் | நாவலர்மடம் |
| திருமதி. ரே. ஜீவரத்தினம் | சாவகச்சேரி |
| செல்வி. வி. சியாமளா | மத்தொனி |
| செல்வி. சு. தெய்வநாயகம் | மத்தொனி |
| செல்வி. ந. வசந்தி | கவுந்தில் |
| செல்வி. சி. ரமணி | கரவெட்டிமத்தி |
| செல்வி. பொ. சிவகுமாரி | கரவெட்டி கிழக்கு |
| செல்வி. எஸ். சிவசோதி | கரவெட்டி |
| திருமதி. செ. தவராசா | கரவெட்டி. |








- கருத்துநிறை அட்டைப்பட ஓவியம் தந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்
  திரு. கோ. கைலாசநாதன்
- கரவைப் புலத்தின் மனப்பதிவுகளையும் வித்தியாலய அனுபவங்களையும் பதிவு செய்ய உதவிய
  பேராசிரியர்,
  விரிவுரையாளர்கள்,
  ஆசிரியர்கள்.
- சிறந்த கவிதைகள் வடித்த எமது பழைய மாணவர்கள்,
- மலருக்கான நிழற்படங்களை சிறந்த முறையில் உருவாக்கித் தந்த
  குகன் ஸ்ரூடியோவினர்,
  ஒளியருவி ஸ்தாபனத்தினர்,
- மலர் வெளியீட்டிற்கான நிதி உதவி வழங்கிய
  கனடா கரவை ஒன்றியத்தினர்,
  பழைய மாணவர்கள்,
  பெற்றோர்கள்
- இம்மலருக்கான அட்டைப்படத்தையும், ஏனைய கலர்ப்படங்களையும், சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த
  ''ஜெயா ஓவ்செற் பிறின்ரேஸ்'' - கொழும்பு
- மலரை சிறப்புற வடிவமைத்து தந்த
  ''தமிழ்ப்பூங்கா மல்ரி ஓவ்செற் பதிப்பகம்'' - நெல்லியடி.
- மலர் வெளியீடு சிறப்புற நிகழ உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய
  விருந்தினர்கள், அதிபர், ஆசிரியர்கள்
- மற்றும் அனைவருக்கும் எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றிகள்.

**~ நூற்றாண்டு விழாக்குழு ~**